
# மண்வாசனையில் மூன்று நாடகங்கள்




செல்லையா மெற்றாஸ்மயில், பீ.ஏ.சிறப்பு

அன்பளிப்பு
"E. P. D. P."
யாழ் மாவட்டம்

# மண்வாசனையில்

# மூன்று நாடகங்கள்

# THREE DRAMAS

# With

# A REGIONAL FLAVOUR

செல்லையா மெற்றாஸ்மயில் பீ.ஏ (சிறப்பு) -
இலங்கை

SWAMI ABRAHAM
community centre
MANKAL-MALLAKAM,
Regd. No: J/VC/21/944

வெளியீடு
ஸ்ரீ மீனாட்சி அச்சகம்
315, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்

Title : **MAN VASANAIYIL MOONRU NADAKANGAL** (Three Dramas with regional flavour)

Author : **SELLIAH MADRASMYLE** B.A (Hons) Cey

Publisher : Meenadchi Publication Kachcheri Nallur Road, Jaffna.

Printed by : "Gangai Offset Printers", Jaffna.

Cover Design by : Ramani

Cover Printed : "Guru" Screen Printes Thirunelveli, Jaffna.

Copy Right : Author

First Edition : December - 2000

No of Page : (1-155)+(I - XXVII)= 182

Prize : Rs. 200/=

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின்

# வாழ்த்துரை

எனது அன்பிற்குரிய மாணவன் திரு. செல்லையா மெற்றாஸ்மயில் ஒரு நாடறிந்த கலைஞர். கல்வித்திணைக்களத்தில் பதவி நிலை உத்தியோகத்தராகப் பணிபுரியும் இவர் புவியியல் சிறப்புப் பட்டதாரியாக விளங்கிய போதும் கலை, இலக்கியப் பணிகளில் நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு இத்துறைகளில் சிறப்புற விளங்குகிறார். இவர் பல நாடகங்கள் எழுதியும் இயக்கியும் முன்னணிப் பாத்திரங்களில் நடித்துமுள்ளார். இவர் "வன்னிவள நாட்டார் பாடல்கள்", "இசைநாடககூத்து மூத்தகலைஞர் வரலாறு", "ஆனையை அடக்கி அரிவத்தை" என்னும் நூல்களை ஆக்கியுள்ளார். இவர் ஆக்கிய இசைநாடக — கூத்து மூத்தகலைஞர் வரலாறு நூலுக்கு அண்மையில் அரசின் சாகித்தியப்பரிசு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் பாரம்பரிய கலைகளுடன் தொடர்பான கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்குச் சமூகத்தில் உரிய கௌரவம் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்த உழைக்கும் பெருமைக்குரியவர்.

திரு. மெற்றாஸ்மயில் எமது பிரதேசத்தின் வாழ்வும் வளத்துடன் தொடர்புள்ள மூன்று காலத்துக்குரிய (சோழர், போத்துக்கீசர், ஒல்லாந்தர்) வரலாற்று நாடகங்களைத் தொகுத்து நூல்வடிவில் வெளியிட்டுள்ளார். இந்நாடகங்களின் மூலம் யாழ்ப்பாணத்துப் பிரதேசத்தின் வரலாற்றையும், அவ்வக்காலங்களில் விளங்கிய சமூக பண்பாட்டுக் கோலங்களையும் அறியமுடிகிறது. ஏற்கனவே இந்நாடகங்கள் நூல்வடிவிலும் கையெழுத்துப் பிரதிவடிவிலும், பேச்சுவழக்கிலும் இருக்கின்றதெனினும், கதை, கதாப்பாத்திர அமைப்புக்களில் இவருடைய நூலிலே சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவர் பல வெளிக்கள மற்றும் ஒப்பீட்டு ஆய்வுகளை மேற்கொண்டு சிறப்பான முறையில் இந்நூலை ஆக்கியுள்ளார். இவரது ஆக்கம் இத்துறையில் ஆய்வு செய்ய மேலும் பலரை ஈடுபாடுகொள்ள வழிவகுக்கும்.

திரு. மெற்றாஸ்மயில் மேலும் பல நூல்களை எழுதவேண்டுமென்றும், மற்றும் எமது பாரம்பரியக் கலைவடிவங்களைப் பாதுகாக்கும் முயற்சிகளில் மேலும் ஈடுபாடு காட்டவேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றேன். இவரது பணி சிறக்க என் வாழ்த்துக்கள்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

SWAMI ABRAHAM
community centre
SULAMANKAL-MALLARAM.
Regd. No. J/VC/21/844

# தீவக வலயக்கல்விப் பணிப்பாளர்
## ப. விக்னேஸ்வரன் அவர்களின்
# வாழ்த்துரை

திரு. செல்லையா – மெற்றாஸ்மயில் நாடறிந்த நாட்டுக் கூத்துக் கலைஞர். சிறந்த நாடகத் தயாரிப்பாளர், சிறந்த நாடகக் கலைஞர். பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதில் முன்னறின்று செயற்படுபவர். கலைஞர்களுக்குச் சிறந்த சமூக அந்தஸ்து வழங்கப்படல் வேண்டும் என்று உழைப்பவர். சிறந்த அலுவலக நிர்வாகி. இவரின் அடுத்த வெளியீடாக வர இருக்கும் "மணிவாசனையில் மூன்று நாடகங்கள்" என்ற நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

இந்த நாடகங்களில் மூலம் நாம் எமது கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கம், வீரம், விடாமுயற்சி என்பன பண்டைக்கால மக்களிடம் எவ்வளவு தூரம் இறுக்கமாக பாராட்டத் தக்க வகையில் இருந்தது என்பதை நாடக ஆசிரியர் சிறந்த முறையில் வெளிப்படுத்துகிறார். குறிப்பாக கடலருகில் அமைந்துள்ள நெடுந்தீவு, நயினாதீவு, காரைநகர், திருவடி நிலை, கீரிமலை போன்ற பிரதேசங்களின் முக்கியத்துவத்தினையும் இப் பிரதேசங்கள் அக்காலத்தில் மிகச் செழிப்பாக இருந்த நிலையினையும் நாடக ஆசிரியர் சிறப்பாக வெளிப்படுத்துகிறார்.

இந்த நாடகங்கள் உரிய முறையில் நூலுருவில் ஆக்கி இவற்றை இளைய சந்ததியினர் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை நூலாசிரியர் ஏற்படுத்தியுள்ளார். இந்த நாடகங்கள் பல கிராமங்களில் உள்ள அண்ணாவிமார்களினால் காலத்துக்குக் காலம் மேடையேற்றப்பட்டாலும் இடம்பெயர்வு காரணமாக இன்று அருகி வருவதைக் இந்நாடகப் பிரதிகள் அழியக்கூடிய சூழ்நிலையினையும் நாம் பார்க்கிறோம். நூலாசிரியரின் இந்த முயற்சி பாரம்பரிய நாடகங்களைப் பாதுகாப்பதாக அமைந்துள்ளது. பல அண்ணாவிமாரிடமிருந்து பெறப்பட்ட நாடகப் பிரதிகள் உரிய முறையில் சீராக்கம் செய்யப்பட்டு இவரால் வெளியிடப்படுவது போலவும் இந்நூல் தோன்றுகிறது.

இந்த நாடக நூலை வாசிக்கும் போது இந் நாடகங்களை மேடையில் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகிறது. இந்த நாடகங்களில் விஞ்சி நிற்கும் கதாநாயகர்களின் வீரஞ் செறிந்த செயற்பாடுகள் எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

இந்நூலாசிரியர் ஏற்கனவே பல மாவட்ட, தேசிய விருதுகளைப் பெற்றவர். பாரம்பரியக் கலை பண்பாடுகளைப் பாதுகாக்க ஒரு அமைப்பை ஸ்தாபித்து உழைத்துக் கொண்டிருப்பவர். இவ்வாறு பல்வேறு சிறப்புக்களைப் பெற்ற புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர் எனது அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றுவதையிட்டுப் பெருமையடைகின்றேன். இவருடைய இந்த நாடக நூல் சமூகத்தில் எழுச்சியை ஏற்படுத்துமென எண்ணுகிறேன். இவருடைய இவ்வாறான முயற்சி மேலும் தொடர இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

**தீவகம், வேலணை**
**20.02.2001**

**ப. விக்னேஸ்வரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்.**

# அணிந்துரை

## கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா

யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாடகங்கள் (கூத்துக்கள்) நிகழ்ந்தமைக்கான சான்றுகள் உள. தெல்லிப்பழையிலே நிரந்தரமாக அமைக்கப்பட்டிருந்த கூத்துக்களரிக்கு அருகிலேயே கத்தோலிக்க தேவாலயம் அமைக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கிய கூத்துக்களைப் போத்துக்கேயர் கால மதகுருமார் தமது தேவைக்கேற்ப மாற்றியும், புதுக்கியும், திருத்தியும் அமைத்துக் கொண்டனர் என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

நீண்டநெடும் கூத்துப்பாரம்பரியமுள்ள பிரதேசத்திலே பல கூத்துப்பிரதிகள் வழக்கில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவை காலப்போக்கில் அழிந்தொழிந்து போயின. இவற்றின் அழிவுக்கு எமது பண்பாட்டின் பலவீனங்களே காரணம் ஆயின எனலாம்.

எனினும் ஒல்லாந்தர் காலப்பகுதியை ஒட்டி எழுந்த நாடகப்பிரதிகள் சிலவற்றை இன்றும் காண முடிகின்றது. அவையும் சமூக பொருளாதார, பண்பாட்டுக் காரணிகளால் சிதைந்தும், உருமாறியும் உள்ளன. இவற்றிலே ஈழத்து மக்களோடு, மண்ணோடு தொடர்புடையவை என அடையாளங்காணக் கூடியவை மிக அருந்தலாகவே உள்ளன.

புராண, இதிகாச, ஐதிக வழிவருகின்ற நாடகங்கள் (கூத்துக்கள்) களிப்பையும் ஈடுபாட்டையும் நல்கிய அதேவேளை ஏதோ ஒரு படிப்பினையையும் உள்ளடக்கியே அமைந்திருந்தன.

இன்று மிகத் துரிதமாக வளர்ந்துவரும் கலை சார் துறைகளில் நாடகமும் அரங்கியலும் என்னும் துறை மிகமுக்கியமானதாகும். தருக்க நெறிநின்று புத்திபூர்வமாக விஞ்ஞான ரீதியிலே நாடகத்துறை வளர்ந்து வருகின்ற இக்காலகட்டத்திலேதான் நண்பர் மெற்றாஸ்மயிலின் மூன்று வரலாற்று இலக்கிய நாடகங்கள் வெளிவருகின்றன. இம்மூன்று நாடகங்களும் ஈழத்துத் தமிழ் மக்களோடு பின்னிப்பிணைந்த சம்பவங்கள் பலவற்றை உள்ளடக்கியுள்ளன.

உண்மையோ? பொய்யோ? என்ற வினாவை எழுப்பாது நல்லதொரு நாடகத்தைப் பார்க்கிறோம் என்ற மனப்பாங்கோடு இந்நாடகங்களை மக்கள் பார்த்து இரசிக்கலாம். எமது மண்ணின் குரல் ஏதோ ஒருவகையிலே

இந்நாடகங்களில் ஒலிப்பதாகவே இதனைப் பார்ப்போர் உணர்வர். மேடைக்கென எழுதப்பட்ட இந்நாடகங்களைப் பிரதியாகப்படிப்பதில் சில அசௌகரியங்கள் உண்டாகலாம்.

ஒரு நாடகத்தைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்வு அதைப் படிக்கும்போது உண்டாவதில்லை என்பதை இலகுவாக மறுக்க முடியாது. நண்பர் மெற்றாஸ்மயில் இந்த நாடகங்களை மேடை நோக்கிலே எழுதியுள்ளார். 'நாடகம் போட' அவாவுறுபவர்களுக்கு இந்த நாடகங்கள் நல்விருந்தாக அமையலாம்.

சங்கிலியன், பூதத்தம்பி ஆகியவை பல்வேறு மாற்றங்களுடன் காலங்காலமாக மக்கள் மத்தியிலே பயின்று வருகின்றன. ஆனால் வெடியரசன் நாடகம் மிக அருந்தலாகவேயுள்ளது.

ஈழத்துத் தமிழ்மக்களின் வரலாற்றோடு தொடர்புடைய இந்த நாடகங்களை நண்பர் மெற்றாஸ்மயில் தான் கண்ட 'தரிசனமாகவே' படைத்துள்ளார். அவரின் நோக்குநிலை இந்நாடகங்களினூடு நன்கு தெளிவாகின்றது.

ஒன்றுக்கு மேற்பட்ட நாடகங்களை நூலுருவில் வெளிக்கொணரும்போது எண்ணிக்கையின் படி தலைப்பிடும் வழக்கத்தைப் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை தொடக்கிவைத்த பாரம்பரியம் பின்னர் **நாடகம் நான்கு, ஆறு நாடகங்கள்** எனத் தொடரலாயிற்று.

நண்பர் மெற்றாஸ்மயிலும் இந்த மரபினை உள்வாங்கி "மண்வாசனையில் மூன்று நாடகங்கள்" என மகுடமிட்டுள்ளார். கூத்துக்கலையோடு அத்துவிதமாகியுள்ள நண்பர் நல்ல நடிகர். சிறந்த நெறியாளர், அற்புதமான கூத்தர். இவையெல்லாவற்றையும் உள்வாங்கி இன்று சிறந்த ஒரு நாடகப் பிரதியாக்க கர்த்தாவாகவும் தன்னை இனங்காட்டியுள்ளார். அவரின் ஆர்வமும் அர்ப்பணிப்பும் என்றும் பாராட்டிற்குரியன.

நாட்டார் கலைகளைப் பேணவும், வளர்க்கவும் அவர் தனது உழைப்பையும் நேரத்தையும் செலவிடுவதை யாவரும் அறிவர். சுறுசுறுப்பாக இயங்கும் மெற்றாஸ்மயில் ஈழத்துத் தமிழ் நாடகத்துறையோடு தன்னை இணைத்து வெற்றிகள் பல கண்டவர். அவரின் பணிகள் தொடரவும் வளரவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

கலாநிதி — எஸ். சிவலிங்கராஜா
தலைவர்
தமிழ்த்துறை
யாழ் - பல்கலைக்கழகம்.

# பூதத்தம்பி வரலாற்று நாடகம்
## செங்கை ஆழியானின்
# மதிப்புரை

நண்பர் மெற்றாஸ்மயிலின் "மண்வாசனையில் மூன்று நாடகத்திற்கு மதிப்புரை எழுதுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நாடறிந்த நாடகக் கலைஞரும், எழுத்தாளருமான மெற்றாஸ்மயிலின் கைவண்ணத்தில், யாழ்ப்பாணப் பழந்தமிழ் மக்களின் மூன்று பொக்கிஷங்களை பூதத்தம்பி, வெடியரசன், சங்கிலியன் ஆகிய வரலாற்றோவியங்கள் நாடகவுலகத்தில் வெளிக் கொணரப்பட்டிருக்கின்றமை மகிழ்வை இரட்டிப்பாக்கின்றது. பாரம்பரி கலையியலிற்குப் புத்தூக்கமளித்துவரும் நண்பரின் முயற்சியினால், நமது இருப்பினை அறிந்து கொள்ள இந்த மூன்று நாடகங்களும் பெரிதும் உதவும் என நம்புகின்றேன்.

யாழ்பபாண நாட்டார் மரபில் "பூதத்தம்பி" ஒல்லாந்தர் காலத்திலிருந்து கூத்தாக பலபிரதேசமேடைகளில் ஆடப்பட்டு வந்திருக்கின்றது. பூதத்தம்பி விலாசம் என்ற பெயரில் பல்வேறு கலைஞர்கள் நாடகக் கூத்துக்களை ஆக்கியுள்ள போதிலும், அவையெல்லாவற்றிலும் பல பாடல்கள் ஒருமைப்பாடுடையனவாகவுள்ளன. அவ்வாறான ஒருமைப்பாடு பாடல்களில் மாத்திரம் கதையம்சத்திலும் பாரம்பரியவழக்கியற் கதை அச்சொட்டுமாறாது கையாளப்பட்டு வந்துள்ளது.

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த காலத்தில் நல்லூர் முதலியாராக விளங்கிய பூதத்தம்பிக்கும் அவனது ஆரம்ப நண்பனாக விளங்கிய யாழ்ப்பாண முதலியார் அந்திராசிக்கும், பூதத்தம்பியின் அழகிய மனைவியான அழகவல்லிக்குமிடையிலான கணவன் – கயவன் – மனைவி என்ற முக்கோணத்தில் நடந்தேறிய சோக வரலாறு பூதத்தம்பி வரலாறாகும். மாற்றான் மனைவி அழகவல்லி மேல் கொண்ட மோகத்தால் மதியிழந்த அந்திராசி, நண்பன் பூதத்தம்பியை ஒரு சதியில் மாட்டி கொல்விக்கின்ற சூதினை பூதத்தம்பி விலாசம் புகல்கின்றது.

யாழ்ப்பாண வரலாற்றின் ஒருகால கட்ட நிகழ்வை நாட்டுக்கூத்து கலைஞர்கள் தம் கதைகட்டுந்திறனுடன் பூதத்தம்பி விலாசமாக படைத்தனர். ஆனால் பூதத்தம்பியின் வரலாறு கட்டுக்கதையின்றி யாழ்ப்பாணத்தை

ஒல்லாந்தர் ஆண்ட வேளையில் நல்லூர் இராசவாசல் முதலியாராகப் பூதத்தம்பி இருந்துள்ளான். அக் காலத்தில் பெரிய ஒல்லாந்தர் தளபதி யாழ்ப்பாணத்தின் கட்டளையதிகாரியாகவிருந்துள்ளான்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒல்லாந்தரைக் கலைப்பதற்குக் கோட்டையில் ஒரு பெருஞ்சதி நடந்தது. அச்சதியில் பூதத்தம்பியும் ஒருவனாக விளங்கியுள்ளான். அனைவரும் பிடிபட்ட போது பான்ஸ் கூன்ஸின் தீர்ப்பு பின்வருமாறு அமைந்துள்ளது. "இந்தப் பயங்கரவாதத்துடன் கருத்தண்டனைக்குரியவர்கள். கோட்டையில் படுகொலைகள் புரிந்த பிகாறோவும், றிக்கோவும், கோட்டைக்கு வெளியே பெருஞ்சதிசெய்த சுதேசி திசைவிரசிங்கனும் பெருந்தண்டனைக் குரியவர்கள். இவர்கள் மூவரும் தண்டனை வழங்கும் குறுக்குச் சட்டத்தில் பொருத்தப்பட்டு முதலில் கோடாரியால் தலைதுண்டாக்கப்படுவார்கள். பின்னர் அவர்களின் மார்புகள் பிளக்கப்பட்டு, இருதயங்கள் வெளியில் எடுக்கப்பட்டு, அவர்களின் நம்பிக்கைத்துரோக முகங்களாக வைக்கப்படும். இராசத்துரோகி பூதத்தம்பியின் தலை துண்டிக்கப்படும். ஏனைய பதினொருபேரும் சாகும்வரை தூக்கிலிடப்படுவார்கள்.

பூதத்தம்பியின் உண்மைவரலாற்றை நான் "கடற்கோட்டை" என்ற நவீனமாக 1984 – 1985 களில் ஈழநாட்டில் எழுதியிருந்தேன். பெரும் வரவேற்பினைப் பெற்ற தொடர் இது. நாவுருவில் இரண்டு பதிப்புக்கள் வெளிவந்தது. இந்த நாவலையும் பூதத்தம்பி விலாசத்தையும் ஒருங்கிணைத்து "களம்பல கண்ட கடற்கோட்டை" என குருநகர் சென்றோக் நாடகமன்ற ஜெயராட் மேடையேற்றி பரபரப்பை ஏற்படுத்தினார். இப்பொழுது எனது கடற்கோட்டையையும் ஆதாரமாகக் கொண்டு நண்பர் மெற்றாஸ்மயில் பூதத்தம்பி, நாடகத்தை உருவாக்கி அளித்துள்ளார். பழமையும் புதுமையும் ஒருங்கே சங்கரிக்கின்ற நாடகமாக இதுவுள்ளது. நண்பரின் நீண்டகால நாட்டுக்கூத்து அறிவும், நாடக உருவாக்கத்தின் போது மேடையேற்றுவதற்கும், வாசித்து மகிழ்வதற்கும் ஏற்ற பாங்கிலமைய வைத்துள்ளதென எண்ணுகின்றேன்.

ஒரு காலத்தின் தேவை இந்த மூன்று நாடகங்கள் மூலம் நிறைவுறு கிறதெனக் கூறுவேன்.

| | |
|---|---|
| **பிரதேச செயலாளர்** | **க. குணராசா** |
| **நல்லூர்** | **செங்கை ஆழியான்** |
| 20/12/2000 | |

# சங்கிலியன் வரலாற்று நாடகம்

# ஆய்வுரை

## வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ (சொக்கன்)

யாழ்ப்பாண அரசின் வரலாற்றிலே வசை, இசை ஆகிய இரண்டிற்கும் உரியவனாய்த் திகழ்ந்தவன் செகராசசேகரன் என்ற பட்டப்பெயர் தாங்கிய சங்கிலியன். பரராசசேகரனின் காமக்கிழத்தி மகன், கொடியவன், மதவெறியன், அரசிற்கு உரிமை பெறாதவனாயிருந்தும் சூழ்ச்சியால் அதனைக் கைப்பற்றியவன், தமையனான பரநிருபசிங்கனதும், ஊர்காவற்துறை ஆட்சியாளனாயிருந்த காக்கை வன்னியனதும், அமைச்சன் அப்பாபிள்ளை யினதும், சூழ்ச்சியால் பறங்கியரின் கைதியாகி, அவர்கள் தளபதியான பிறஹறன்சாவால் மரணதண்டனை விதிக்கப்பட்டவன் என்று யாழ்ப்பாண வரலாற்றாசிரியர் பலரும் இவன் மீது வசைபாடியுள்ளனர். இவர்களின் கருத்துக்களுக்கு முரணான வகையில், சங்கிலியனைத் தேசிய வீரனாகவும், அந்நியரான பறங்கியரும் அவரின் அடிவருடிகளான பரநிருபசிங்கன் (தமையன்), காக்கைவன்னியன் (பிரதானி), அப்பாபிள்ளை (அமைச்சன்) முதலியோரும் அவனைத் தொலைத்திட மேற்கொண்ட சூழ்ச்சிகளை முறியடித்து நாட்டின் விடுதலைக்கு முயன்ற தியாகியாகவும் சித்தரிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, வித்துவான் கந்தையா, இவ்வணிந்துரை யின் ஆசிரியர் (சொக்கன்) ஆகியோர் இவ்வகையிலே குறிப்பிடத்தகுந் தவர்கள். சங்கிலியன் கத்தோலிக்க மதப்பரம்பலுக்கு எதிராயிருந்தவன் என்பதனால் அவன்மீது வசைப்பாடும் வகையில் உருவாக்கப்பட்ட நாட்டுக்கூத்து அரங்கேறியதையும் இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும். அந்தக் கூத்தின் ஆசிரியர் கூடத் தமது வசைகளுக்கிடையே சங்கிலியனின் விடுதலைப் போராட்டத்தையும் எடுத்துக் காட்டியிருந்தமையும் பின்வந்த நாடகாசிரியர்களுக்கு அவனைத் தேசிய வீரனாய் வளர்த்தெடுக்க வாய்ப்பளித்ததெனலாம். இன்று சங்கிலியனின் இருண்ட பக்கம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு, அவனை ஈழத்தமிழரின் விடுதலை வேட்கைக்கான குறியீட்டாகக் கொள்வதே மரபாகிவிட்டது. யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியிலே அவனுக்குச் சிலை நாட்டப்பட்டுள்ளதையும் இக்குறியீட்டு முயற்சிக்கு முழுமையான அங்கீகாரம் கிடைத்துள்ளதையே காட்டுகின்றது.

இவ்வகையில் தலைசிறந்த நாட்டுக்கூத்துக்கலைஞரும், நூலாசிரியருமான திரு. செ. மெற்றாஸ்மயில் தமது பங்களிப்பாக 'சங்கிலியன்' நாடகத்தை எழுதி வெளியிடுவதும் சிறப்பித்துக் கூறவேண்டியதே.

வரலாறு காற்பகுதியாகவும் கற்பனை முக்காற் பகுதியாகவும் எழுதப்பட்ட சங்கிலியன் நாடகங்களின் வரிசையிலே, வாழையடி வாழையாகக் கவர்ச்சியும், எழுச்சியும் கொண்ட வசனங்களிலே மெற்றாஸ்மயிலின் 'சங்கிலியன்' உருவாக்கப்பட்டுள்ளது. காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் தமிழுணர்ச்சி, இனஉணர்ச்சி, நாட்டுப்பற்று என்பன கிளர்ந்தெழத்தக்க வகையில் நாடக சம்பவங்கள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

தந்தையினதும், தமையனதும் வற்புறுத்தலாலே யாழ்ப்பாண அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றான் சங்கிலியன். திறமை, வீரம், இராச தந்திரம், துணிவு, நாட்டுப்பற்று, இனப்பற்று, சமயப் பற்று, மொழி, கலாச்சாரக் காப்புணர்ச்சி என்ற பலவும் கொண்டிருந்தும், சேர்ந்திருந்தே குழிபறிக்கும் துரோகக் கும்பலால், உயிராய் நேசித்த அமுதவல்லி என்னும் பண்பார்ந்த மங்கையின் மரணமும், (அந்த மரணத்திற்குத் துரோகியான அவள் தந்தையே காரணம்) அவனை மிகுதியும் பாதிக்கின்றது. தன் தமையனின் மகனான பரராசசிங்கனுக்கு அரசினை அளித்து முடிதுறக்கின்றான். அவனின் முடிதிறப்பினைத் தொடர்ந்து சில காலத்தில் யாழ்ப்பாண அரசு பறங்கியரின் ஆதிக்கத்துக்கு உட்படுகின்றது.

மனைவியின் நச்சரிப்பால் மணிமுடியைச் சங்கிலியனிடமிருந்து பறித்திடச் சூழ்ச்சியிலிறங்கும் பரநிருபன், பறங்கியரதும், சிங்களவரதும் தூண்டுதலினால் தன் நற்பண்புகளைத் துறந்து யாழ்ப்பாண அரசனாய் வரமுற்படும் காக்கை வன்னியன், மகள் அமுதவல்லியைப் பரநிருபன் மகன் பரராசசிங்கனுக்கு மணம் புரிந்து வைப்பதன் மூலம் அரசுரிமையைத் தன் பரம்பரைக்குப் பெற்றளிக்க அவாவும் அப்பா பிள்ளை, முறையால் தனக்கே உரித்தான அரசைத் தந்தை சங்கிலியனுக்கு அளித்த நாள் தொட்டு அதனை உரிமையாக்கிட முனையும் பரராசசிங்கன், இவர்கள் அனைவரையும் தன்வசமாக்கி யாழ்ப்பாணத்தை வீழ்த்தியபின் இவர்களுக்கும் தண்ணீர் காட்டிவிட்டுத் தனது கையகப்படுத்தத்திட்டமிடும் பிரஹன்சா ஆகிய இத்தனை பேரினது பேராசைக்கும், சூழ்ச்சிகளுக்கும் ஈடுகொடுக்கும் சங்கிலியன் ஆகிய பாத்திரங்களினூடாக ஆசிரியர் நாடகத்தை வளர்த்துச் செல்கின்றார். தளபதி இமையாணன், தனிநாயகமுதலி, வீரமாப்பாணன், அரசகேசரி (புலவர்) முதலாம் துணைப்பாத்திரங்களின் மூலமும் வன்னியர்கள்

மூலமும் அன்றைய யாழ்ப்பாண நிலையை, மக்களின் இருமனப்பட்ட போக்கினைச் சித்தரிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் சங்கிலியன் ~ அமுதவல்லி காதல், இராசமாதேவியின் தலையீடு, அவள் பின்பு அமுதவல்லியின் ,நாட்டுப்பற்றினை உணர்ந்து தன் சீற்றத்தைக் கைவிட்டு அமுதவல்லிக்கு அபயமளிக்க முன்வரல், அமுதவல்லியின் தற்கொலை என்பன சுவைபடச் சித்தரிக்கப்படுகின்றன.

1. "புத்திசாலிகளே, பிரிக்கும் வீரம் உங்களிடம் பொங்கித்ததும்பாவிட்டால் தென்னிலங்கை பிணக்காடாகுமோ?"
2. "நிலமடந்தையின் அனுமதியிலா சந்திரன் தன் நிலவைப் பொழிகின்றான்?"
3. "அன்பு இதயத்தோடிருக்கட்டும். ஆனால் கடமை தவறக்கூடாது."
4. பேடிமுன் தலைவணங்குவதை விட வீரனிடம் அடையும் அவமானம் உயர்ந்தது.

இவை போன்ற கருத்தும் கவர்ச்சியும் வாய்ந்த வசனங்கள் ஆங்காங்கே தலைகாட்டி, நாடகத்திற்குச் சுவை சேர்க்கின்றன.

நாடக அரங்கியல் மிகவும் முன்னேறிக்கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் நூல்வடிவிலே வெளியாகும், சங்கிலியனுக்குக் கிடைக்கப் போகும் வரவேற்பு எத்தகையதாக இருக்கும் என்பதைக் காலந்தான் நிர்ணயிக்க வேண்டும்.

நாட்டுக்கூத்துத் துறையிலே சாதனை புரிந்து வரும் நண்பர் மெற்றாஸ்மயில் நவீன நாடகத்துறைக்கும் தமது பங்களிப்பைத் திருப்தி தரத்தக்க வகையில் தமது 'சங்கிலியன்' நாடகமூலமும் செய்துள்ளார் என்பதே என் கணிப்பு. அவருக்கு எனது பாராட்டுக்கள்.

21.12.2000

**வித்துவான் க. சொக்கலிங்கம்**
**எம்.ஏ. (சொக்கன்)**

# வெடியரசன் நாடகம்
## சிறப்புரை

ஈழத்திரு வடமேற்குத் திசையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள சப்த தீவுகளில் நெடுந்தீவும் ஒன்றாகும். இத்தீவின் சிறப்பினை,

"பொற் சீந்திற் கொடி படரும் புதுமை நாடு
புகழேந்திக் கூத்தரெனும் புலவர் காண
சொற்சேர்க்கும் பாவலர்கள் வாழும் நாடு
தொல்புகழின் சரித்திரங்கள் சுமக்கும் நாடு
நற்பசுக்கள் பால்கொடுக்க மனைக ளெல்லாம்
நறுநெய்யில் நீந்திவரும் நல்ல நாடு
அற்புதமாய் வெடியரசன் கோட்டை கட்டி
அந்நாளில் ஆட்சிசெய்த அழகு நாடே"

எனப் பாடினார் கவிஞர்.

நெடுந்தீவின் வரலாறு கி.பி 02ம் நூற்றாண்டளவில் இளங்கோ அடிகளால் இயற்றப்பட்ட "சிலப்பதிகார காவிய"த் தலைவியாகிய கண்ணகியுடன் நெடுந்தீவை ஆட்சிசெய்த வெடியசரன் என்னும் அரசனுடன் தொடர்புடையதாக நம்பப்படுகின்றது. மேலும் வெடியரசன் காலத்தில் இத்தீவில் இருந்து தமிழகத்திலுள்ள சைவ ஆலயங்களுக்கு சிறப்பாக இராமேஸ்வரத்திற்கு பால், தயிர், நெய் போன்ற அபிசேகப் பொருட்கள் சென்றதாகவும், இதன் காரணமாக இத்தீவு பால்தீவு, பசுந்தீவு, அபிசேகத்தீவு எனவும் அழைக்கப்படலாயிற்று.

இராம, இராவண யுத்தத்தின் பொழுது மயக்கமுற்ற இலட்சுமணனையும் ஏனைய போர்வீரர்களையும் மயக்கந் தெளிவிக்க அனுமான் சஞ்சீவி மலையை பெயர்த்தெடுத்து வந்த பொழுது அம்மலையின் ஒரு பகுதி இத்தீவில் விழுந்ததெனக் கூறுவர். இதன் காரணமாக இத்தீவில் கிடைக்கக்கரிய மருந்து மூலிகைகள் அண்மைக்காலம் வரை காணப்பட்டன. யாழ்ப்பாண வைபவ மாலை எனும் நூலில் இத்தீவு "மருந்து மாமலை வனமென" குறிப்பிடப்படுகின்றது.

பழைய சிங்கள ஏடுகளில் "அவுசதலோகய" என அழைத்துள்ளமை அறியமுடிகின்றது. இத்தீவு பற்றி வரலாற்று ஆய்வாளர் டானியல்ஜோன் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"அக்காலத்திலே இந்நாட்டுக் குடிபதிகளாய் இருந்த வெடியரசன் எனும் குகனும், அவன் சகோதரராகிய வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏதிலங்குருவன் என்னும் நால்வரும் சிற்றரசர்களாய் விளங்கினர். இவர்களைக் கிருட்டினன் புத்திரர் என்பர். இவர்களில் வெடியரசன் நெடுந்தீவில் கோட்டை கொத்தலங்களை தீவுப்பற்றுக்களை தனதடிமைப்படுத்தி அரசியலுக்குரிய படைக்கலங்களுடன் இராட்சியம் பண்ணினான். வெடியரசன் கோட்டை தற்காலம் அழிந்து கிடப்பதை அத்தீவின் மேற்குப்பகுதியில் காணலாம்.

நெடுந்தீவை ஆட்சி செய்த வெடியசரனின் வரலாற்றை சிறந்த எழுத்தாளரும் நாடறிந்த கலைஞரும் தீவகக் கல்வி வலயத்தின் நிர்வாக அதிகாரியுமான எம் அன்புக்குரிய திரு. செல்லையா மெற்றாஸ்மயில் அவர்கள் அனைவரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் நாடக நூலாக வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வும் பேருவகையும் அடைகின்றோம்.

"இசைநாடககூத்து மூத்த கலைஞர் வரலாறு" எனும் நூலை எழுதி வெளியிடுவதற்காக நெடுந்தீவுக் கலைஞர்களை சந்திக்க வருகைதந்த திரு.மெற்றாஸ்மயில் அவர்கள் இத்தீவகத்தின் கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும் புராதன சின்னங்களையும் பார்வையிட்டதுடன், இத்தீவகத்தில் நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றுவதற்கு இங்குள்ள அண்ணாவிமார்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தார். இவர் எழுதி வெளியிடும் "வெடியசரன்" எனும் இந்நாடக நூல் தொடக்க முதல் இறுதி வரை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. சிறந்த புவியியல் பட்டதாரியாகிய இவர் மேலும் பல நாடக நூல்களை எழுதி வெளியிட உள்ளதை அறிந்து பெருமகிழ்வு அடைகின்றோம்.

வன்னிவளநாட்டுப் பாடல்கள், ஆனையடக்கிய அரியாத்தை, இசைநாடக கூத்து மூத்த கலைஞர்கள் வரலாறு, ஆகிய நூல்களின் ஆசிரியராக விளங்கும் இவர், தற்பொழுது வெளியிடும் வெடியரசன் நாடக நூலின் மூலம் தமிழ் உலகிற்கு சிறப்பாக ஈழத்தமிழ் இலக்கியத்திற்கு பெரும் பங்களிப்பை நல்கியுள்ளார்.

இவரின் இந்நூல் மூலம் எமது தீவாம் நெடுந்தீவைப் பற்றி பலரும் அறிய பெரும் தொண்டாற்றியுள்ளார்.

எழுத்தாளரும், கலைஞரும் நாடக நடிகருமாகிய திருவாளர் மெற்றாஸ்மயில் அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜி

**புலவர். ஏ.டபிள்யு. அரியநாயகம், ஜே.பி.யு.எம் நெடுந்தீவு**
**முன்னாள் ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)**

# தகவல் கடிதம்

லோடன் வீதி
மானிப்பாய்
20.12.2000

அன்புடையீர்! இந்த நூலின் ஆசிரியர் திரு. மெற்றாஸ்மயில் அவர்கள் என்னை அணுகி, மன்னன் வெடியரசன் வரலாறு பகரும் நாடக நூல் புத்தக உருவில் என்னிடம் உள்ளதாக அறிந்து அதைப் பெற்று அம்மன்னனின் வரலாற்றுச் சான்றுகளை எடுத்துத் தனது நூலில் அச்சிட வந்ததாகக் கூறினார். எனவே வெடியரசன் நாடகநூல் தொடர்பாக எனது நிலைப்பாட்டை உங்கள் முன் வைக்கின்றேன்.

1894ம் ஆண்டு பதிக்கப்பட்ட (வெடியரசன் நாடகம்) என்வசம் இருந்து 1991.04.24 அன்று ஏற்பட்ட ராணுவ நடவடிக்கை காரணமாய் இந்த அரிய ஈழத்தமிழர் வரலாறு பகரும் நூலைக் காரைநகரில் கைவிட்டு வந்துள்ளேன் என் பதை மனவேதனையுடன் தெரிவிப்பதோடு, மேலும் இந்த நூல் 1844ம் ஆண்டு வெடியரசன் மரபில் வந்த நவாலியூர் வைரவி இராமு என்பவரால் ஏட்டு வடிவில் எழுதப் பெற்று 50 ஆண்டுகளின் பின் மானிப்பாய் தெற்கு மு.அப்பாத்துரை என்பவரால் 1894ல் மயிலிட்டி, வச்சிர அச்சக யந்திரசாலையில் அச்சு வாகனமேறி நூல் வடிவில் வெளியாகியது.

> காரைநகரைப்பிறப்பிடமாகக் கொண்ட முத்ததம்பி தேவதாசன், வெடியரசன் நாடகத்தில் மீகாமனாக நடித்து புகழ் பெற்றவர். அவரிடம் தற்பொழுது நாடகப் பிரதி எதுவும் இல்லாதுவிட்டாலும், வெடியரசன் கதை பற்றிய தனது அனுபவத்தை தருகிறார்.

இம் மன்னனின் வரலாற்றை விபரமாய் கூறும் வேறு நூல்கள்

1. யாழ்ப்பாணச் சரித்திரம்: By. Danieal John, M.B American Ceylon Mission Press, Tellippalai, Ceylon 1st பதிப்பு 1878, 2ம் பதிப்பு 1882, 3ம் பதிப்பு 1930.

2. வெடியரசன் கடலோட்டு காதை.

3. கண்ணகி வழக்காடு காதை.

4. யாழ்ப்பாண வைபவமாலை.

5. யாழ்ப்பாணச் சரித்திரம் மயில்வாகனப்புலவர்.

6. மட்டக்களப்பு மான்மியம் F.X.C நடராசா

## யார் இந்த வெடியரசன்?

கிருஸ்ண பரமாத்மாவின் சிருஸ்டி என்று வரலாறு பகர்கின்றது. (வெடியரசன் பிறப்பு வைரவி இராமுவின் நாடக நூலில் கட்டியகாரன் வாயிலாகக் கூறப்படுகின்றது) இவனது மனையாளும் உடன் பிறப்புக்களும் கண்ணனால் சிருஸ்டிக்கப்பட்டதாகவே கூறப்படுகின்றது. இம்மன்னன் இலங்காபுரியின் வடபால் அமைந்த சப்ததீவுகளில் நெடுந்தீவை இராஜதானியாக்கி புகழுடன் ஆண்டான் என்றும் வெடி மன்னன் தம்பிமார், வீரநாராயணன் காரைதீவிலும் (காரைநகர்) விளங்குதேவன் (சம்புக்கோளம்) சம்பில்துறையின் திருவடி நிலையிலும், போர் வீரகண்டன் கீரிமலையிலும், ஏரிளங்குருவன் மயிலிட்டியிலும் தத்தம் பரிவாரங்களோடு ஆண்டிருந்தனர் என்றும் வரலாறு காண்கிறது. அவர்களின் ஆட்சியின் சுவடுகள், எச்சங்கள் அவ்விடங்களில் சான்றாக இப்போதும் காணப்படுகின்றன. வெடியரசன் சிறந்த ஐயனார், விஸ்ணுபக்தனாவான். அவனும் அவனது தம்பிமாரினதும் ஆளுகைப் பிரதேசங்களில் ஐயனார், விஸ்ணு ஆலயங்களும், அம்மன்னனின் குதிரைப்படையின் பின்தோன்றல்களான நெடுந்தீவுக் குதிரைகளும், கோட்டை இடிபாடுகளும், காரைதீவில் வீரநாராயணனின் (எலுமிச்சமலைராசன்) ஆயுதசாலை இருந்த இடத்தில் "கீச்சுக்கிட்ட"மெனும் உலைமுகப் படிகம், மலைபோன்ற மண்திட்டில் ஓங்கிவளர்ந்த எலுமிச்சமரம், அரண்மனை அடிச்சுவடுகள், முருகைக்கல் சிற்பங்கள், 20ம் நூற்றாண்டில் அகழ்வின் போது விலைமதிப்பற்ற இரத்தினங்கள் அடங்கிய கருங்கற் பேழைகள், ஆகியன இம் மன்னனின் ஆட்சிக்கு சான்று பகர்கின்றன.

2000ம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழர் வரலாறு கொண்ட வெடியரசனும் அவனது குகவம்சமும், இந்திய, குறிப்பாகச் சோழனின் (கரிகால் பெருவளத்தான்) ஆக்கிரமிப்பால் தொல்லைக்குள்ளாகி வடக்கிலிருந்து புலம்பெயர்ந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்டனர். அவர்களில் சிலர் வடக்கிலே நிலை கொண்டனர். புலம்பெயர்ந்த வெடிசரனும் குடிகளும் கிழக்கு நோக்கிய கடற்பயணத்தின்போது முதலில் தங்கிய இடம் முந்தல் (சிலாபம்) தொடர்ந்த

பயணத்தின்போது அவர்களின் மரக்கலங்கள் தரைதட்டிய இடம் "மட்டுமட்டடா மட்டக்களப்படா" என்று ஆய்வாளர் துணிபு. இதற்கொப்ப மட்டக்களப்பிலும், உடப்பு சிலாபத்திலும் முற்குகர் செறிந்து காணப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் தேவவளமைச்சட்டம்போல் மட்டக்களப்பில் "முற்குகாஸ்லோ" (Mutkuhar's Low) நடைமுறையில் இருந்தது.

எது எப்படி இருப்பினும் வெடியரசன் என்னும் தமிழ் வீரமறவன் கோவலன் கண்ணகி காலத்தில் தன் வீரவரலாற்றை தடமாகப்பதித்த மூத்த தமிழ் ஈழவேந்தன். அவன் வரலாறு சில காரணங்களுக்காய் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டதும் போல் இல்லாமல் எதிர்காலத்தில் வெடியரசன் வரலாறு வெளிச்சத்திற்குவர வரலாற்று ஆய்வாளர் முற்பட வேண்டுமென்று வேண்டி அவர்களிடமே விட்டுவிடுகின்றேன்.

மூத்ததம்பி தேவதாசன்,
வெடியரசன் வீதி,
காரைநகர்.

## பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராசாவின்

# அறிமுகவுரை

இந்நூலாசிரியர் நண்பர் செல்லையா மெற்றாஸ்மயில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் 1945ம் ஆண்டு பிறந்தவர். இவர் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த.(சா.ப) யில் சித்தியடைந்தபின், யாழ்ப்பாணம் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் உயர்தர வகுப்பு படித்து 1965ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகம் சென்றவர். பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் காலத்தில், புதுக்குடியிருப்பு சமூக கலாச்சார முன்னேற்றக் கழகத்தின் தலைவராக விளங்கி, பல நாடகப் போட்டிகளை நடாத்தி நாட்டார் வழக்கியலிற்குப் புத்துயிர் வழங்கும் முயற்சியிலீடுபட்டார்.

1966ம் ஆண்டு இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவைப் போட்டிப் பரீட்சையில் முதற் தொகுதியில் சித்தியடைந்தார். இதனால் பல்கலைக் கழகப்படிப்பை இடைநிறுத்தி எழுதுவினைஞராக நியமனத்தை ஏற்று கடமை புரிந்தார். இவர் எழுதுவினைஞராக, மாத்தறைக்கச்சேரி, கொழும்பு தேசிய வீடமைப்புத் திணைக்களம், கண்டி தேசிய வீடமைப்புத் திணைக்களம், பேராதனை விவசாயத் திணைக்களம், யாழ் கல்வித் திணைக்களங்களில் கடமையாற்றினார். 1983ம் ஆண்டு முல்லைத்தீவு கல்வித் திணைக்களத்தில் பிரதம எழுதுவினையராக கடமையேற்று, பின் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றினார். 1992ம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டக்கல்விக் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று பதவிநிலை உத்தியோகத்தராக கடமையாற்றியபின், வேலணைக் கோட்டக்கல்விக் காரியாலயத்திலும், யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்துறைக் கோட்டங்களின் ஒன்றிணைக்கப்பட்ட காரியாலயத்திலும் பதவிநிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றியபின், தற்பொழுது தீவக வலயக் கல்விக் காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார்.

நண்பர் மெற்றாஸ்மயில், தனது கடமைகளை திறம்படச் செய்யும் ஆளுமை நிறைந்த சிறந்த நிர்வாகியாவார். இவர் நல்ல ஒழுங்கமைப்பாளர். இவர் கொழும்பு, கண்டி. யாழ்ப்பாணத்தில் எழுதுவினைஞராக கடமையாற்றிய காலத்தில் "கோடீஸ்வரன்" தலைமையிலான அரசாங்க எழுதுவினைஞர்

சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்து தன்னை தொழிற்சங்கப்பணியில் ஈடுபடுத்திய தொழிற்சங்க வாதியுமாவார்.

கண்டியில் கடமையாற்றிய காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தன்னை வெளிவாரி மாணவனாக பதிவு செய்து, புவியியலை விசேட பாடமாகக் கற்று வெளிவாரியாகப் பரீட்சை எடுத்து இலங்கையில் முதல் முதலாக 2ம் வகுப்பில் சித்தியடைந்த சாதனை இவருக்குரியதாகும். இவர் புவியியற் சிறப்புப் பட்டதாரியாகியபின், அப்பொழுது வாழ்ந்து கொண்டிருந்த கண்டிப் பிரதேச ஏழை மாணவர் கல்வி நிலையை உயர்த்துவதற்காக, பேராசிரியர் சு.வித்தியானந்தனைத் தலைவராகக் கொண்டு நண்பர் மெற்றாஸ்மயில் செயலாளராகவும் பதவி வகித்து 'இலவச வகுப்புக்களை' சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பல ஆசிரியர் மூலம், சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக ஏழைமாணவர்களுக்கு கல்வி கற்க உதவி செய்தார். இத்துடன் நின்றுவிடாது கலாச்சார விழாக்களை ஒழுங்கு செய்து கலாச்சார எழுச்சியை ஏற்படுத்த பங்கு கொண்டார்.

1978ம் ஆண்டு, நல்லூரில் திருமணம் செய்துகொண்டார் இவர், தான் பிறந்த வன்னி நாட்டின் மரபு வழி இலக்கியங்கள், கலைகள் வரலாறுகள் அழிந்துசெல்லும் நிலையிலிருந்து காப்பாற்றப்படவேண்டும் என்ற உணர்வினால், சிதிலமான ஏடுகளில் இருந்த நாட்டார் பாடல்களை சேகரித்து, ஒழுங்குபடுத்தி "வன்னிவள நாட்டார் பாடல்" என்னும் நூலுருவில் வெளியிட்டு இருந்தார். இந்நூல் வெளிவர அவர் எடுத்த முயற்சியை இன்னும் தமிழ்கூறும் நல்லுலகம் போற்றிக் கொண்டிருப்பதை என்னால் அறியக்கூடியதாகவுள்ளது.

1983ம் ஆண்டிலிருந்து முல்லைத்தீவில் கடமையாற்றிய காலத்தில், அங்குள்ள கிராமங்களில் ஆடப்படும் கோவலன் கூத்தை கண்டுகளித்து. ரசித்த இவர் இக்கூத்தின் சிறப்பை. ஆட்டமுறையை, வெளியிடங்களிலும் மேடையேற்ற வேண்டுமென அவர் எண்ணினார். தனது 45வது வயதில் இக்கூத்து ஆட்டமுறமைகளை, ஏனைய நடிகர்களாக ஆசிரியர்கள், ஆசிரியைகள், அதிகாரிகள் பலரை சேர்த்து தானே தயாரித்து, அவர்களுக்கும் அண்ணாவியார் மூலம் கூத்தைப் பழக்கி, மேடையேற்றி, முல்லைத்தீவு மாவட்ட மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றார். கொழும்பு ரூபவாகினியிலும் ஒளிப்பதிவு செய்யப்பட்டதுடன், பல அன்றைய தமிழ் அமைச்சர்களினாலும் பாராட்டப்பட்டது.

1992ம் ஆண்டு யாழ்ப்பாணம் இடமாற்றம் பெற்ற பின், யாழ்ப்பாணத்திலுள்ள அசிரியர், ஆசிரியைகளையும், முல்லைத்தீவிலுள்ள ஆசிரியர்கள், ஆசிரியை

களையும் இணைத்து, கோவலன் கூத்தில் முக்கியபாத்திரத்தை ஏற்று, தனது நெறியாள்கையாலும், தயாரிப்பாலும், மேடையேற்றி யாழ் மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் இக்கூத்து மேடையேறியபின், யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் கூத்துக்களில் ஆட்டங்கள் கூடுதலாக இடம் பெறத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

இவர் பிறந்த வன்னி மண்ணின் வீரவரலாறான, ஆனையைக் கட்டிய அரியாத்தையின் வரலாற்றை ஆய்வு செய்து இலக்கியத்தில் அவ்வரலாறு பெறும் சிறப்பை வெளி உலகுக்கு கொண்டு வரும் வகையில் "ஆனையை அடக்கி அரியத்தை" என்னும் நூலை எழுதி 1994ல் நூலுருவில் வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் அழிந்து செல்லும் கிராமியக்கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என அசையாத நிலைப்பாடு கொண்ட இவர் கட்டுவன் "குருசாமி" அண்ணாவியாரிடம் ஒயிலாட்டம் கலையைக் கற்று 1994ம் ஆண்டு மேடையேற்றி பலரினதும் பாராட்டைப் பெற்றார்.

யாழ்ப்பாணம் புனித மரியாள் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பழக்கிய காத்தவராயன் சிந்து நடைக்கூத்து யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்றது இவரின் கலை ஆழத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இடம் பெயர்ந்தபின் யாழ்ப்பாணம் மீளவும் வந்து சேர்ந்த பின் வேழம் படுத்த வீராங்கனை என்னும் நாட்டுக்கூத்தைப் பழக்கி, தயாரித்து, தானும் அரசன் பாத்திரமேற்று நடித்து, பலகுடைய பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். அந்நாடகம் ஒருவருடத்திற்குள் யாழ் மாவட்டத்தில் 23 மேடைகள் வெற்றிகரமாக மேடை ஏறியதுடன் பொன்விழா கொண்டாடும் நாட்களை எட்டி நிற்கின்றது.

தனது 53வது வயதில் இசைத்துறையில் பிரவேசித்து "சத்தியவான் சாவித்திரி" நாடகத்தில் சத்தியவானாக நடிக கலாமணி வ. செல்வரத்தினம் (அரியாலை) கலாவினோதன் சின்னமணி ஆகியோருடன் சேர்ந்து நடித்து பாராட்டுதலைப் பெற்றுள்ளார்.

எனவே தனது இரத்தத்திலேயே ஊறிய கிராமிய உணர்வுகளின் பின்னணியில் பாரம்பரிய கலைகளை, பாதுகாக்க வேண்டிய முயற்சியாலும்,

அக்கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற முயற்சியாலும், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பை அமைத்து அதன் செயலாளராகப் பணிபுரிந்து வருகின்றார்.

நூலாசிரியர் வன்னியின் மைந்தனாக இருந்தாலும். தான் வாழும்கடமை புரியும் பிரதேசங்களில், அவ் அவ் பிரதேசத்தின் மைந்தனாக தன்னை எண்ணி கலைப்பணி, சமூகப்பணி செய்வது இவருடைய சிறந்த நல்லெண்ணத்தைக் காட்டுவனவாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1999ல் வாழ்ந்து கொண்டு இருந்த பெரும்பாலான இசைநாடக கூத்துக்கலைஞர்களின் வரலாற்றைத் தொகுத்து இசை நாடக கூத்து முத்தகலைஞர் வரலாறு என்னும் நூலினை 1999 யூலை மாதம் வெளியிட்டார். 1999ம் ஆண்டுக்கான அரசின் இலக்கியவிருதினை இந்நூல் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இவரைப்பற்றி செங்கை ஆழியன் கூறுவது போல பிரதேசக்கூத்து மரபினைப் பேணுவதற்காக, மூலத்தை முளிபடாது சுருக்கியும், அழுத்தியும் இவரால் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்கள் இவரை ஈழமக்கள் ஆழமாகப் பார்க்க வைத்துள்ளன. இவர் சிறந்த நாட்டுகூத்து இசை நாடக நடிகர், ஆய்வாளர், கிராமியக்கலைஞர், நிர்வாக தெளிவான சிந்தனையும், ஞானமும், பிரத்தியேக தனித்திறமையும், இவரை முழுமையான கலைஞனாக உருவாக்கியுள்ளது.

தமது வாழ்வில் பெரும் பகுதியை கலைக்காக அர்ப்பணித்து, அக்கலையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டு இசைநாடக கூத்துக்கலைஞருடைய வரலாற்றை, தனது பல அர்ப்பணிப்புக்கள் மூலம் வெளிக்கொண்டு வந்து மொத்தமாக தமிழ் சமூகத்திற்கு தொண்டு செய்கிறார்.

அவர் முயற்சிகள் மேலும் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

வைத்திய கலாநிதி
வை. தியாகராசா
இருபாலை.

SWAMI ABRAHAM
community centre
KURAMANKAL-MALLAKAM.
Regd. No. J/VC/21/844

# என்னுரை

எமது இனத்தின் கலாச்சார விழுமியங்கள் அழிந்து கொண்டிருக்கும் வேளையில் மரபுவழிக்கலைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற முனைப்பில், பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். கலாச்சார விழுமியங்கள் என்பது இனத்தின் அடையாளங்களாகும். அடையாளங்கள் இல்லாது விட்டால் இனத்தின் தனித்துவம் நிரூபிக்கப்படாமல் அவ்வினம் அழிந்துபட்டது என்றே எடுத்துக் கொள்ளப்படும். "மொழிவளம் சுருங்கும்! - ஆனால் அழியாது. கலை கருகும் - ஆனால் தேயாது! பண்பாடு சிதறும் - ஆனால் அற்றுப்போகாது!, மதம் பிளவுபடும் - ஆனால் மெய்ப்பொருட்பற்று அழியாது. அசாத்தியம் தாண்டவமாடும் - ஆனால் சத்தியம் மறையாது" எனக் காலத்திற்குக் காலம் கருத்துக்களைக் கூறிக் காலங்கழித்தவர்களின் மிச்சசொச்சமாக, நாடு கொள்ளைக்காடாக மாறி வருகிறது. இந்நேரத்தில் வேதாந்தம் பேசுவதை நிறுத்தி யதார்த்தமாக சிந்தித்து, இருப்பனவற்றை யாவது காப்பாற்ற வேண்டியது இனத்தின் ஒவ்வொருவருடைய கடமையாக இருக்கிறது. அந்த வகையில் மரபுவழிக் கலைகளைப் பாதுகாக்கும் அரிய முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இதே போன்றுதான் மண்ணில் நடந்த சில நிகழ்வுகள், அனர்த்தங்கள் வரலாறாக திகழ்ந்து வருகிறது. அந்த வரலாற்றின் மூலம் இனத்தின் வீரம், ஆண்டபரம்பரை, ஆட்சிப் பரப்பு, அவர்களின் தேசாபிமானம், வீரம் பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்வு முறை ஆகிய நல்லவற்றையும், மாறாக காலம் காலமாக காட்டிக் காட்டிக் கொடுத்து தனது சுயநலத்திற்காக பாடு பட்டவர்களின் திறமையையும், அறியக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் பூதத்தம்பி, சங்கிலியன் வரலாற்றுடன், வெடியரசன் வரலாறும், அறிய வேண்டிய தேவை இருக்கிறது. இவ்வரலாறு அறியக்கூடிய நூல்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. பூதத்தம்பி வரலாற்று நாடகம் தற்பொழுது நூல்வடிவில் இல்லை. சங்கிலியன் வரலாற்று நாடகம் ஒரு சில பிரதிகள் மட்டும் சிலரிடம் உண்டு. வெடியரசன் நாடகப் பிரதி நூல் வடிவில் தற்பொழுது இல்லை. எனவே மண்ணில் நடந்த சம்பவத்தை எதிர்காலத்தில் எமது அடுத்த சந்ததியினர் அறியக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற எனது அடிமனத்திலிருந்த ஒரு ஆசையின் வெளிப்பாடே "மண்வாசனையில் மூன்று நாடகங்கள்" ஆகும்.

வெடியரசன் நாடகத்தினை எழுத ஆரம்பித்தபொழுது எனக்கு நெடுந் தீவிலுள்ள பல அறிஞர்கள் பல தகவல்களைத் தந்தார்கள். கூத்துப் பிரதிகளைத் தந்து உதவினார்கள். நெடுந்தீவு, காரைதீவு சுழிபுரப்பகுதிகளில் மன்னர் ஆட்சியின் எச்சமாகவுள்ள அழிந்துபட்ட கட்டடங்களையும், இடிந்து பட்டுக்கிடக்கின்ற கோட்டைகளையும், அரண்மனைகளையும், புதைபொருள் சின்னங்களையும் காணக்கூடியதாக இருந்தது. பல ஊர்ப் பெயர்களும், தெருப் பெயர்களும் சான்றாக விளங்குகின்றன. வெடியரசன் வரலாற்றை ஓரளவு அறியக்கூடியதாக மு.ச சிவப்பிரகாசம் எழுதிய விஸ்ணு புத்திர வெடியரசன் வரலாறு பெரிதும் உதவியாக இருந்தது. நாம் எழுதிய நாடகத்தின் கதையை அடிப்படையாக வைத்து ஆய்வுகள் செய்து உண்மை வரலாற்றை அறியும் பணி வரலாற்று ஆசிரியருக்குரியதாகும்.

சங்கிலியன் நாடகத்தை எழுதுவதற்கு பலநூல்கள் உதவியாக இருந்தன. செங்கையாழியன் க. குணராசாவின் நந்திக் கடல் நாவல் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. இன்று தேசியவீரனாக அங்கீகரித்து, சிலை எழுப்பி கௌரவிக்கப்பட்ட மாவீரன் சங்கிலியனை "மாவீரனாகவே" (வரலாற்று திரிபில்லாதவாறு) நாடகமாக எழுதியுள்ளேன். இதை பேதமின்றி யாவரும் வரவேற்பார்கள் என்று எண்ணுகின்றேன். இந்த நாடகத்தில் அங்கம் ஆறின் பக்கம் 71 முதல் 73 பக்கம் வரையுள்ளவைகள் யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு. ரதிதரனின் 'பொங்கொலி நகர்' நாடகத்தில் வழங்கப்பட்ட வசனங்களாகும். இவ்வசனங்கள் எனக்குப் பிடித்திருந்ததால் அவருடைய சம்மதத்துடன் சேர்த்துள்ளேன்.

பூதத்தம்பி நாடகத்தை, செங்கையாழியனின் 'கடல்கோட்டை' நாவலில் குறிப்பிட்ட பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கதையை அமைத்து வேறு ஒரு திசையில் திருப்பி கொண்டு சென்றுள்ளேன். பல ஆங்கிலப்புத்தங்களைப்படித்த பொழுது அவர் எழுதிய வரலாறு சரியென எனக்குப்பட்டதால் அந்திராசியை வேறு ஒரு பார்வையில் பார்த்து நாடகத்தை எழுதியுள்ளேன்.

மேலும் செங்கை ஆழியன் அவர்கள் எழுதுவதற்கு, இன்நூலைச்சிறப்பாக, தந்த ஆலோசனைகளுக்கும், உதவிகளுக்கும் எனது நன்றிகள் உரித்தாக வேண்டும்.

இந்நாடகத்தை சிறப்பாக முடிப்பதற்கு கலாபூசணம் வே.க .பாலசிங்கம் அவர்கள் கையளித்த எம். மகாதேவாவின் கையெழுத்துப் பிரதியும் பெரிதும் உதவியாக இருந்தது.

நாடகங்களை எழுதுவதற்கு உசாத்துணை நூல்களைத்தந்த 'புத்தொளி" கவிஞர் சு.துரைசிங்கம், நித்தியானந்தன் ஆகியோருக்கும் நன்றிகள் - நூலினை வெளியிட்டு வைக்கும் மீனாட்சி அச்சகத்தினருக்கும் நன்றிகள்.

பாட்டுக்களை இயற்றும் பொழுது ஆலோசனை வழங்கிய சங்கீத ஆசிரியை திருமதி அன்னலட்சுமி தனபாலசிங்கம் அவர்களுக்கும் நன்றிகள்.

இந்நூலினை எழுதிய பொழுது எனக்கு பல ஆலோசனைகளையும் தந்து, "புறுப்" திருத்தங்களும் செய்து உதவிய யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியரும் நாடக கலைஞருமாகிய நா. விமலநாதன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

இந்நூலினை வெளியிட முனைந்த பொழுது, நூலினை அச்சேற்றி தருவதாக ஒப்புக் கொண்டு குறுகியகாலத்தில் நூலினை அச்சிட்டுத்தந்த "கங்கை ஓ(f)செற் பிறின்டேஸினருக்கு நன்றிகள் கூற கடமைப்பட்டுள்ளேன்.

இப்புத்தகத்திற்கு அழகான அட்டைப்படம் வரைந்து தந்த நண்பன் ரமணி அவர்களுக்கும், அட்டையை மிகவும் கவர்ச்சியான முறையில், எல்லோரும் விரும்பத்தக்க முறையில் அச்சிட்டுத் தந்த "குரு" ஸ்கிறீன் பிறின்டேஸ், 56, ஆடியபாதம்வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம் அவர்களுக்கும் நன்றிகள்.

மேலும் இந்நூலுக்கு வாழ்த்துரை, மதிப்புரை, அணிந்துரை, அறிமுகவுரை, சிறப்புரை, ஆய்வுரை வழங்கிய தந்து என்னைப் பாராட்டிய அறிஞர் பெருமக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

செல்லையா — மெற்றாஸ்மயில்
நூலாசிரியர்

# சமர்ப்பணம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்காக என்னுடன் இணைந்து பல மேம்பாடு களை வெளிக்கொணர உதவிக்கொண்டு செயற்படும் வேளையில், காத்தவராயன் கூத்து நடித்துக்கொண்ட மேடையி லேயே இறைவனடி சேர்ந்த பலாலி அண்ணாவியார் அமரர் திரு. வே.செல்வமணி அவர்களுக்கு எனது சமர்ப்பணம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வெடியரசன் | 01 – 42 |
| 2. | சங்கிலியன் | 43 – 107 |
| 3. | பூதத்தம்பி | 108 - 155 |

SWAMI ABRAHAM
community centre
SULAMANKAL-MALLAKAM
Regd. No: J/VC/21/844

# வெடியரசன்




## வரலாற்று இலக்கிய நாடகம்

SWAMI ABRAHAM
community centre
BULAMANKAL-MALLAKAM,
Regd. No: JIVC/21/844.


# வெடியரசன்

## நாடக மாந்தர்கள்


| | | |
|---|---|---|
| விஸ்ணு | | |
| நாரதர் | | |
| கரிகாற் பெருவளத்தான் | - | சோழராசன் |
| பூங்கோதை | - | சோழன் மனைவி |
| சோழ மன்னன் அமைச்சர் | | |
| மாசாத்தன் | - | சோழநாட்டுச்செட்டி |
| மாநாய்கன் | - | சோழநாட்டுச்செட்டி |
| மீகாமன் | - | சோழ அரசன் தளபதி |
| கண்ணகை அம்மன் | | |
| வெடியரசன் | - | அரசன் |
| நீலகேசி | - | அரசன் மனைவி |
| புலவர் | - | அரசசபை புலவர் |
| தளபதி | - | அரசன் தளபதி |
| சேனாதிபதி | - | அரசன் சேனாதிபதி |
| தோழி | - | நீலகேசியின் தோழி |
| ஒற்றன் | - | அரசபை ஒற்றன் |
| வீரநாராயணன் | - | சிற்றரசன் |
| மந்திரி | - | சிற்றரசன் மந்திரி |
| தளபதி | - | சிற்றரசன் தளபதி |
| போர்வீரகண்டன் | - | சிற்றரசன் |
| ஏரிளங்குருவன் | - | சிற்றரசன் |
| விளங்குதேவன் | - | சிற்றரசன் |
| ஏவலாளர் | | |
| தூதுவன் | | |
| படைவீரர்கள் | | |



வட இலங்கையின் மேல் முகில்களுக்கிடையில்
காட்சி தந்த விஷ்ணு, நாரதருக்கு
வெடியரசன் வரலாற்றைத் தெரிவித்தல்.



நெடுத்தீவில் இன்றும் காணப்படும் அழிந்தநிலையிலான குதிரை 'லாயத்தைப்' படத்தில் காணலாம்



நெடுந்தீவில் அமைந்திருக்கும் வெடியரசன் அரண்மனையின் ஒரு பகுதியைப் படத்தில் காணலாம்.

# வெடியரசன்

## வரலாற்று இலக்கிய நாடகம்

## அங்கம் ~ 1

*பூலோகத்திற்கும் தேவலோகத்திற்கும் இடையில்*

பாத்திரங்கள் :- **விஷ்ணுபெருமான், நாரதர்**

நார:- கரிஓம் நமோ நாராயணா! என்னை இப்பூவுலகில் இலங்கையின் வடக்கே தாங்கள் அழைத்து வந்த காரணத்தைத் தெரிவிப்பீர்களா!

விஸ்:- நாரதரே ஏறத்தாழ பத்து ஆயிரம் வருடங்களுக்கு முன்னே இலங்கையின் வடக்கே என் பக்தர்கள் ஆட்சி செய்த புண்ணியபூமி அதோ தெரிகிறது. மிகவும் சந்தோசமடைகின்றேன்.

நார:- கரி ஓம் நமோ பீதாம்பரனே! எங்களை விட உங்களைக் கவர்ந்த பக்தர்கள் அப்படி யார் இருந்தார்கள்.

விஸ்:- எனது பக்தர்கள் ஐவர் அரசர்களாக இருந்தார்கள். அவர்கள் தான் வெடியரசனும், அவன் தம்பிமார் வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிளங்குருவன் ஆகியோர்..

நார:- கரிஓம் நமோ கருடத்வஜா! அவர்கள் மேல் அப்படி நீங்கள் அளவிலா அன்பு வைப்பதற்கு என்ன செய்தார்கள்?

விஸ்:- இவர்கள் செங்கோல் ஆட்சி சீரும், சிறப்பும் பெற்ற காலத்தில் என்னை வழிபடுவதற்கு பல கோயில்களைக் கட்டி இந்து சமயம் வளர்த்த அவர்கள் பூமியைப் பார்க்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது .அதனால் உன்னையும் அழைத்து வந்தேன்.

நார:- சக்கராயுதா! இப்பிரதேசம் சிறுசிறு தீவுக்கூட்டங்களாகவும், சன சஞ்சாரம் இல்லாத இடங்களாகவும் அல்லவா காட்சி தருகிறது. போயும், போயும் இதைக்காட்டவா என்னைக் கூட்டி வந்தீர்கள்? (ஏளனமாக கூறுவது)

விஸ்:- நாரதா உன் குணத்தைக் காட்டத் தொடங்கி விட்டாயே! குழப்பம் செய்வது உன் தொழிலாயிற்றே.

நார: - இலக்குமிபதியே! நான் கேட்டதில் தப்பிருந்தால் விளக்கமாகத் தெரிவியுங்கள் சுவாமி.

விஸ்: - இப்பூமி புண்ணிய பூமி,நாகமணி, மரகதம், நீலம், பவளம், வச்சிரமம், பதுமராகம், முத்து,கோமேதம்,புருடராகம், வைடூரியம், சங்கு ஆகிய விலை மதிக்க முடியாத திரவியங்கள் கொண்டு விளங்கிய பூமி, அதோ தெரிகிறதே, ஒரு நீண்ட தீவு இன்று நெடுந்தீவு என்று வழங்கப்படுகிறது. அன்று கமலம், புட்பகரம் என்று புகழோடு அழைக்கப்பட்ட பிரதேசமாகும்..

நார: - வைகுண்டநாதா! இப்படியெல்லாம் புகழுகின்றீர்களே, இதற்கு ஏதும் ஆதாரம் உண்டோ!

விஸ்: - நாரதரே! இதோ நெடுந்தீவின் மேற்கே தாமரைப்பூப்போல் அமைந்திருக்கும் கோட்டை எனது பக்தன் வெடியரசன் ஆட்சி செய்த கோட்டையாகும். இக்கோட்டையிலிருந்து கொண்டு எனக்குப்பல கோயில்கள் அமைத்து வழிபட்டான். அதோ மேற்குக்கடற்கரையில் கூட்டம் கூட்டமாக குதிரைகள் காணப்படுகின்றனவே! இவையெல்லாம் வெடியரசனுடைய குதிரைப்படைகளின் எச்சங்களாக நிற்கின்றன. இக்குதிரைகள் கட்டி வளர்த்த 'லாயத்தின் தூண்களை' (கையால் காட்டி) அதோ,தெரிகிறதே! இப்பொழுதும் பார்க்க கூடியதாக இருக்கிறது.

நார: - தாமோதரா! பெருமானே! பார்த்த சாரதியே! எங்கும் நிறைந்து, சகல உயிர்களையும் காத்தருளும் தாங்கள், இந்த வெடியரசன் மீது வைத்த அன்பின் காரணத்தையும், பூமியிலே பிறந்து ஆட்சி செய்த மானுடன் ஒருவன் தேவலோகத்தில் வாழுகின்ற எங்களைக் காட்டிலும் தங்கள் மனதைக் கொள்ளை கொண்ட அவன் வரலாற்றையும், நாம் அறியலாமா சுவாமி!

விஸ்: - நாரதா! எனது பக்தர்கள் ஐவரும் ஒரே நேரத்தில் ஆட்சி செய்த பொழுது என்மேல் அன்பு வைத்து எனக்குப்பணி செய்து வந்த பொழுது சோதனைகளும் ஏற்பட்டன.

நார: - கேசவா! மாதவா! பரந்தாமா!
அந்த வேதனை எப்படி ஏற்பட்டது என்பதை அறியலாமா?

விஸ்: - அக்காலத்தில் வாழ்ந்த தவப்பேருடைய பாண்டிய மன்னன் நெடுமாறன், சிவன்போல் தானும் நெற்றிக்கண் உள்ளவன் எனச் செருக்குற்றிருந்தான். அவன் செருக்கை அடக்குவதற்காக உமாதேவியார் ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார்.

நார: - கோவிந்தா! ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலேயே! சரி எவ்வாறு எனக் கூறுங்கள் சுவாமி!

விஸ்: – பாண்டிய நாட்டில் ஒருவராலும் பறிக்க முடியாத ஓர் அதிசயமான மாங்கனி தோன்றிற்று. அதனை யாராலும் பறிக்க இயலாது போகவே, பாண்டிய மன்னன் ஒரு முனிவரின் ஆலோசனைப்படி அதனை கைகளால் பற்றினான். உடனே அக்கனி அவனின் கைகளில் நெருப்புருண்டையானதும், கனியை கைவிட்டான். நெருப்பின் பயத்தினால் ஏற்பட்ட வியர்வையை மன்னன் அக்கரங்களாத் துடைத்ததும், அவன் நெற்றிக்கண் மறைந்து விட, அத்தீப்பிழம்பும் மாங்கனியாயிற்று அக்கனியை மன்னவன் தன் மனைவியிடம் கொடுக்க அவள் பொன் குடத்தில் வைத்தாள்.

நார: – ஜனார்த்தனா! நான் வெடியரசன் வரலாற்றைக் கேட்க, நீங்கள் மாங்கனி பற்றிக் கூறுகின்றீர்களே!

விஸ்: – நாரதா, நீ எதற்கும் அவசரப்பட்டவனாச்சே! நான் சொல்லுவதை அவதானமாகக் கேட்பாய். அவ்வாறு வைத்த மாங்கனி மூன்றாம் நாள் ஒரு தெய்வீகக் குழந்தையாயிற்று.

நார: – சாரங்கபாணியனே! ஆச்சரியமாகவல்லவா இருக்கிறது.

விஸ்: – தெய்வீகப் பெண் குழந்தையைக் கண்ட மன்னன் சோதிடரை நாடினான் அவர்கள் கூற்றுப்படி குழந்தையை ஓர் பேழையில் வைத்துக் கடலில் விட்டான்.

நார: – அச்சுதா! ஐயய்யோ..... அக்காலத்திலும் பெண் குழந்தைகளை ஆற்றில் போடும் வழக்கம் இருந்திருக்கின்றதா?

விஸ்: – அப்பேழையை குழந்தையில்லாத கண்ஒளி குன்றிய மாநாயகன் என்னும் வணிகன் எடுத்துப் பார்த்த பொழுது அப்பேழையிலிருந்த குழந்தையினால் அவனுக்கு கண் ஒளி கிட்டியது. அதனால் அக் குழந்தைக்கு கண்ணகி என்று பெயரிட்டு செல்லமாக வளர்த்தான்.

விஸ்: – இந்தக் கண்ணகிக்கும்,வெடியரசனுக்கும் மிகவும் தொடர்பான வரலாறு உண்டு. அதாவது கண்ணகிக்கும், மாசாத்தான் வணிகனுடைய மகன் கோவலனுக்கும் திருமணம் நிட்சயமாகி, அவர்கள் கண்ணகியின் காற்சிலம்பிற்கு நாகமணி தேடியபோது, அது வெடியரசனிடமே உள்ளதாக அறிந்து இதைப்பெறுவதற்காக நடைபெற்ற பெரும் போராட்டத்தின் வரலாறே என் பக்தன் வெடியரசன் வரலாறாகும். இவ்வரலாற்றை உனக்குக் கூறுகிறேன் அவதானமாகக்கேள்.

நார: – கரி ஓம் நமோ நாராயணா! ஆதியே! சோதியே! ஐயனே! அருள்வாய் அனந்தனே!

➢ திரை ⮜

# அங்கம் - 2

*சோழராஜன் அரச சபை*

பாத்திரங்கள் : கரிகாற்பெருவளத்தான் சோழராஜன், பூங்கோதை அரசி, அமைச்சர், மாசாத்தன், மாநாயக்கன், ஏவலாளர், மீகாமன்

(அரசசபையில் ஏவலாளர் காவலில் நிற்கின்றார், திரைநீக்கம்)

ஏவலாளர்:- இராசாதிராசன் இராசமார்த்தாண்டன் இராசகம்பீரன் சோழ மகாராசன் கரிகாற்பெருவளத்தான் சபைக்கு வருகின்றார். எச்சரிக்கை! பராக்கு!

(பின்னணி இசையில் பாட, அரசனும், அரசியும், அமைச்சரும் சபைக்கு வருதல், பாடல் முடிய வருகை தந்தோர் சிம்மாசனத்தில் இருத்தல்)

வானவர்கள் சோபன மங்களம் கொண்டாட<br>
மறையவர்கள் மகிழ்ந்து மறைவந்து பாட<br>
தேனொழுகும் மலர்மாரி பதத்தில் தூவத்<br>
தெண்டிசையில் வானரங்கள் தெளிந்து உவகத்<br>
துனலுறு மருப்பேந்தும் கரியிலேறி<br>
குழுகுவென முரசியொலிகள் மீறிப்பாய<br>
மாநகநவமணி மௌலியொலிகள் வாய்ப்ப<br>
மாறிலாச்சோழராஜன் வந்துற்றாரே.

கரிகா :- அமைச்சரே நமது நாட்டின் நாட்டு வளத்தினைத் தெரிவிப்பீராக.

அமைச்சர்:- இமயம் சென்று மீண்ட பேரரசனும், தொண்டை நாட்டை வளம்படுத்தி சோழ ஆட்சியை விரிவு செய்த காரிகாற் பெருவளத்தான் சோழ அரசனுமாகிய தங்களுடைய ஆட்சியில் மக்கள் சீரும் சிறப்புமாக வாழ்கின்றார்கள் அரசே.

கரிகா:- பூங்கோதை ஏதோ கேட்க முனைவது போல தெரிகிறதே

பூங்கோதை (அரசனைக் குழைந்து கேட்டல்)நாதா சித்தம் மகிழ்ந்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வரும் தாங்கள், அண்டை நாடான வட ஈழத்தின் விலை மதிக்க முடியாத மாமணிகளும், முத்துக்களும் பதித்த ஆபரணம் ஒன்றை எனக்கு செய்வித்து தரவேண்டும் நாதனே!

கரிகா:- (அன்பாக) எனது விருப்பத்திற்குரிய நாயகியே உனது ஆசையை நிறைவேற்றச் சித்தமாயுள்ளேன்.
(மந்திரியாரை நோக்கி)

மந்திரியாரே! சோழநாட்டு முத்துக்களிலும் பார்க்க ஈழநாட்டின முத்துக்கள், மணிகள் பெறுமதி மிக்கவைகளாக உள்ளன. அவற்றைப் பெறுவதற்கு ஆவன செய்வீராக.

அமைச்சர்: - அரசே சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வரும் வெடியரசன் புகழ் எண்டிசையும் பரவியதும் சோழ நாட்டவர்களையும், அந்நாட்டவர்களின் செல்வச் சிறப்பும் கவர்ந்ததால் மேல்நாட்டு வணிகர்களும் சோழநாட்டு முத்துக் களை வாங்காது, ஈழநாட்டிலேயே அதிகவிலை கொடுத்துப் பெறு கின்றனர். தற்பொழுது அதற்கு நீங்களும் உடந்தையாகி விட்டீர்கள் அல்லவோ!

கரிகா: - ஏன் அப்படிச் சொல்கிறீர்?

அமைச்சர்: - சோழநாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

கரிகா: - (சற்று வீராவேசத்துடன்) அமைச்சரே! விரிவுபடுத்தப்பட்ட சோழ இராச்சியத்திற்கு ஒரு குறையும் இருப்பதை என்னால் தாங்க முடியாது. சோழ இராச்சியத்தின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்யும் வெடியரசனுடைய அரசை எமக்குக் கீழ் கொண்டு வருவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைக்கு ஆலோசனை கூறுவீராக.
(மாநாய்கனும் மசாத்தனும் வணிகர்கள் சபைக்கு வருதல்)

ஏவலாளர்: - அரசே தங்களைச் சந்திக்க இரண்டு வணிகர்கள் வந்துள்ளார்கள்.

கரிகா: - அவர்களை வரச்சொல்.

வணிகர்கள்: - மக்கள் குறை தீர்க்கும் மாமன்னா வணக்கம்.

கரிகா : - வணிகர்களே நீங்கள் யார்? வந்த விடயத்தைக் கூறுங்கள்.

மாசாத்தன்: - நான் காவிரிப்பூம் பட்டணத்தில் வாணிபம் செய்யும் வணிகன் என் பெயர் மாசாத்தன், எனக்கு கோவலன் என்னும் மகன் இருக்கின்றான்.

மாநாய்கன்: - நானும் அதே பட்டணத்தில் வாணிகனாக உள்ளேன். எனது பெயர் மாநாய்கன் எனக்கு கண்ணகி என்னும் மகள் இருக்கின்றாள்.

கரிகா: - நான் உங்கள் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமெனக் கேட்கின்றீர்களா!

மாநாய்: - இல்லை அரசே!

அரசன்: - அப்படியானால் ..........

மாநாய்: – எமது மகளுக்கும் மாசாத்தானின் மகன் கோவலனுக்கும் திருமணம் நிச்சாயித்தம் செய்து விலையுயர்ந்த அணிகலன்கள் பல செய்துள்ளோம்.

கரிகா: – இதைத் தெரிவிக்கவா இவ்வளவு தூரம் வந்தீர்கள்.?

மாநாய்: – அரசே! ஆனால் காற்சிலம்பு செய்வற்கு வேண்டிய, ஏனையோரால் பெற முடியாத விலையுயர்ந்த நாகமணியானது வட ஈழத்தில் ஆட்சி புரியும் வெடியரசனிடம் தான் உள்ளது என்பதை கப்பற்காரர் மூலம் அறிந்தேன். அதைப்பெற்றுத் தரவேண்டும் மகாராசாவே (அரசன் அமைச்சரைப் பார்த்து தலையை அசைத்துக்கொண்டு)

கரிகா: – தக்க சமயத்தில் தக்கதொரு கோரிக்கை. அமைச்சரே! அந்த நாக மணியை எப்படியாவது பெறவேண்டும்.

அமைச்சர்: – அந்த நாகமணி நாகதீபக்களஞ்சியத்தில் மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன்.

கரிகா: – அப்படியானால் அதை எப்படிப்பெற முடியும்?

அமைச்சர்: – (சற்று யோசித்துவிட்டு) இச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி வெடியரச னுடன் போர் செய்து தான் பெறவேண்டும்.

மாநாய்: – அரசே போர் செய்வதற்கு வேண்டிய கப்பல்கலன் வசதிகளை நானே செய்து தருகின்றேன்.

கரிகா: – நல்ல ஆலோசனை, யாரங்கே! (ஏவலாளர் வருதல்)
உடனே தளபதியை அழைத்து வாருங்கள். (வணிகர்களைப் பார்த்து) நீங்கள் செல்லுங்கள் நாகமணியை எப்படியும் பெற்றுத்தருகின்றேன். (தளபதி மீகாமன் சபைக்கு வருதல்)

மீகாமன்: – வணக்கம் மன்னவா!

காரிகா: – தளபதி மீகாமனே! மாநாய்கன், மாசாத்தன் என்னும் இவ்இரு வணிகர்கள், என்னிடம் வந்து நாகதீபத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கும் நாகமணியைப் பெற்றுத்தரும்படி கேட்டார்கள். எப்படியேனும் பெற்றுத் தருவதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். ஆதலால் நீ வெடியரசனிடம் சென்று அதை வாங்கி வரவேண்டும். இது என் கட்டளை.

மீகா: – (தயங்கிக் கொண்டு) ஐயய்யோ, ஐயய்யோ, யானை, குதிரை, லட்சம் காலால்படைகளைக் கொண்ட வெடியரசன் சேனை முன்பு,தாங்கள் பல படைகள் தந்து என்னை அனுப்பினாலும் என் உயிர்ப்பலி எடுத்திடுவான் அரசே!

கரிகா: – சோழ அரசனுக்கு இப்படிப்பட்ட கோழைத்தளபதி வெட்கம்! வெட்கம் !

மீகா: – அப்படிச் சொல்லாதீர்கள். நாகங்கள் அக்கம் பக்கம் சூழ்ந்து நாகமணிக்கு காவல் இருப்பதை அறிவீர்கள்.

கரிகா: – அப்படியானால் நான் வணிகர்களுக்கு கொடுத்த வாக்குறுதி?

மீகா: – தாயைப்போல தயை காட்டி என்னை ரட்சித்து வரும் ராசனே! மிகுந்த பாக்கியத்தையுடைய செட்டிகள் பேச்சை மறுத்துப் பேசாமல் அனுசரித்துக் கொண்டீர். கொடிய பராக்கிரம சாலியான வெடியரசனிடம் என்னை அனுப்புவது தர்மமல்ல. அடியேன் மீது கிருபை கொள்ள வேண்டும் அரசே. (மீகாமன் கெஞ்சிக் கேட்கிறான்)

கரிகா: – (சற்று கோபம் தணிந்த தொனியில்) மீகாமனே! நீ வெடியரசனிடம் போய் அவனை நமஸ்காரம் செய்தாவது அல்லது யுத்தம் செய்தாவது நாகமணியைக்கொண்டு வருவாயானால், எனது முடியை உனக்கே சூட்டி சகல வரிசைகளுடன் இராசாதிபதியாக்குவேன். அழுத பிள்ளைக்கு பால் சுரக்கும் என்பது பொய் வார்த்தையல்லவே.

மீகா: – (தயக்கத்துடன் ) தேங்காய்க்குள் இளநீர் எவ்வாறு அமைந்ததோ அது போல எம்மிற் பலவிதமான அன்பற்றவராக என்னை ஆக்கி வெடியரசனிடம் அனுப்புகின்றீர். பிரம்மதேவன் விதித்த விதிபோல நடக்கும். அல்லாமலும் யாது செயற்பாலது. நான் செல்வதற்கு வேண்டிய கப்பல் அணி என்பவற்றை தந்தருளுவீர் அரசே.

கரிகா: – (சற்று சந்தோசத்துடன்) மீகாமனே! எங்கும் கிடைக்காத நல்லினத் தேக்குகளும், பெறுமதி வாய்ந்த கப்பல் செய்யப் பொருத்தமான மரவகைகளும், தென்னிலங்கை அரசனிடமே உண்டு. தென்னிலங்கை அரசர்களுக்கு வரிசைப் பொருட்கள் தருகின்றேன். நீ சென்று வென்று வருவாயாக.

மீகா: – அப்படியே! அரசே!

SWAMI ABRAHAM
community centre
GURUMANKAL-MALLAKAM.
Regd. No: J/VC/21/844.

➢திரை➣

# அங்கம் ~ 3

## *அம்மன் கோவில்*

**பாத்திரங்கள்:- கண்ணகி அம்மன், மீகாமன்**

(அம்மன் விக்கிரகத்தின் முன் மீகாமன் வணங்குதல்)

மீகா:- அம்மா தாயே! நான் எத்தனையோ விடயங்களைச் சொல்லியும் அரசன் கேட்கின்றார் இல்லை. மலையுடன் மோதும்படி இந்த மடுவையல்லவா அனுப்புகின்றான். தாயே! நீதான் அனுக்கிரகம் செய்ய வேண்டுமம்மா. (மீகாமன் படியில் தலையை வைத்து அழுது கொண்டிருக்கின்றான்) (கண்ணகி அம்மன் அவன் முன் எழுந்தருளுகின்றார்) (மீகாமன் தலையை சற்றுத்தூக்கி கண்ணைக் கசக்கி எழுந்து பார்க்கின்றான்)

மீகா: தாயே! கண்ணகையே நான் காண்பது நிசந்தனா! (பதறுகின்றான்)

கண்: மகனே எதற்காக கலங்குகின்றாய்?

மீகா: ஒன்றுமறியாத என் உயிரைப் போக்குவதற்கு சோழ அரசன் வெடியரசனுடன் போரிடச்சொல்கிறான் தாயே.

கண்: விபரமாகக் கூறு மகனே.

மீகா: தாயே, பூலோகத்திலுள்ள ராசாக்களினால் துதிக்கும் வெடியரசன் முன்பாக, சிவன் என்றாலும் சண்டை செய்வதற்கு சற்றும் பயப்படாத அரசன் முன்பாக, நாம் சண்டை செய்யப்போவது எம்மாத்திரம்.

கண்:- மீகாமனே வற்றாத சமுத்திரத்தால் ஆழ்ந்த பூலோகத்தை ஆட்டுகின்ற வெடியரசனுடைய சேனைகள் உன்னைச் சுற்றி வளைத்து வேல் முதலான படைக்கலங்களை ஏவுவார்கள் உனது சேனைத் தொகை கொன்று குவிக்கப்படலாம்.

மீகா:- (பதறிக்கொண்டு) தாயே தங்கள் அனுக்கிரகம் வேண்டுமம்மா அல்லாமலும் எனக்கு யாதொரு இடையூறும் வராமல் காப்பாற்ற வேண்டும் தாயே.

கண்:- எனது அனுக்கிரகம் உனக்கு எப்பொழுதும் உண்டு. என்னை நீ நினைக்கும் பொழுது உனக்கு அனுக்கிரகம் தருவேன். வெற்றி பெற என் மிகுதியான வரங்களைத் தந்தேன் மகனே.
(மீகாமன் சந்தோச மிகுதியால்)

மீகா: அம்மா தாயே ..........
(கண்ணகி அம்மன் மறைதல்)

மீகா: கண்ணகை அம்மன் எனக்கு வரம் தந்து விட்டார் போருக்குச் செல்ல அஞ்சினேன். அரசன் சினம் கண்டு அவனைக் கெஞ்சினேன். எனினும் அவன் என்னை மிஞ்சினான். இன்று அம்மனை நான் தஞ்சனானேன். துணிவுடன் போருக்குச் செல்ல ஆயத்தங்களைச் செய்வோம்.

➢ திரை ≺

# அங்கம் ~ 4

*வெடியரசன் அரண்மனை*

**பாத்திரங்கள் : வெடியரசன், புலவர், ஏவலாளர்**

(அரச சபையில் ஏவலாளர் காவல் புரிந்து கொண்டு இருக்க திரை நீக்கம் புலவர் அரசசபைக்கு வருகிறார்)

ஏவலாளர்: - அரசசபைப்புலவர் அவர்களே தாங்கள் வந்த காரணம் யாது எனத் தெரிவிப்பீரா?

புலவர்: நான் எம் மன்னவன் வெடியரசனை சந்தித்து வாழ்த்திவிட்டுப் போகலாம் என வந்தேன்.

ஏவலர்: நீங்கள் ஆசனத்தில் அமருங்கள். அரசனிடம் செய்தி சொல்லி அழைத்து வருகின்றேன்.
(ஏவலாளன் செல்லல், பின்பு அரசனுடன் வருதல்.. அரசன் வரும் பொழுது எழுந்து நின்று வாழ்த்துகின்றார்) (வாழ்த்தும் பொழுது அரசன் தன் தலையை அசைத்து தனது கம்பீரத்தை வெளிப்படுத்துகின்றார்)

'பூதலத்து வேந்தரெல்லாம் போற்றும் சிங்கம்
பொங்கரவ மணியுலவு புனித சிங்கம்
மாதவர்கள் புகழ்ந்து கலையோதும் சிங்கம்
மாட்சி பெறு மறையறிந்த நாதசிங்கம்
ஆதவனை நிகழ்த்து முடியணிந்த சிங்கம்
அடர்ந்து வலம்புரிமுழங்க வடருஞ்சிங்கம்
வேதனுமோர் துணையாக விளங்கு சிங்கம்
வெடியரசனான சிங்கம்
எங்கள் புட்பகரத்தின் சிங்கம்'

வெடி: - (சிம்மாசனத்தில் சென்று அமருதல்) புலவரே அமருங்கள். தென்றல் காற்று வீசும் இந்நேரத்தில் தங்கள் சிந்தனைச் சிறகுகள் சிறகடித்து கற்பனை வெள்ளத்தினூடாக கவி வடிவில் என்னை கனிந்துரைத்த காரணமென்னவாக இருக்குமோ?

புலவ: - அப்படியேதும் இல்லை அரசே.

வெடி: - அப்படியானால் தாங்கள் திடீரென்று என்னைப் புகழ்ந்துரைக்க காரண மென்னவோ!

புலவ: - தங்களை நினைவு கூர்ந்த நான் மிகுதியாகக் கூறப்போனால், சேரநாட்டு நெடுஞ்சேரலாதனும், சோழநாட்டு கரிகால் வளவனும், பாண்டி நாட்டு நெடுமாறனும் ஆட்சி செய்யும் காலமான இக்கால கட்டத்தில், கிழக்குலகின் கிளர்மணியென நடுநின்று நிலைத்த ஈழத்திருநாடாம் இலங்காபுரியின் வட நிலத்தில் தென் தமிழ்மொழியில் தேர்ந்த தமிழ்சங்கப் புலவர்கள் வழிவந்த நாகர் இன மரபினரின் முக்கிய குகன் குலத் தலைவனாகவும், தேவநாராயணனும் விஸ்ணுவினால் விளக்கமடைந்து சிருஷ்டிக்கப்பட்ட அதிபதியாகவும், சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வரும் தங்களை திருகோண நட்சத்திர நன்னாளான இன்று வாழ்த்த வேண்டுமென்று ஓர் ஆசை ஏற்பட்டது அரசே! நீ வாழ்க! நின் கொற்றம் வாழ்க!

வெடி: - நல்லது. நல்ல நினைவுகள் மீளும்பொழுது நல்லவைகள் கனிவடைவது வழக்கம் தானே.

புலவ: - அரசே! நான் தங்கள் ஆட்சிக்குட்பட்ட வடபுலம் யாவும் சுற்றி வந்தேன். நான் கண்டவை கேட்டவை, ரசித்தவை, அனைத்தும் அபாரம்! அபாரம்!

வெடி: அப்படியென்ன கண்டீர், கேட்டீர், ரசித்தீர் புலவரே!

புலவ: நெடுந்தீவில் தங்கள் ஆட்சிக்கோட்டையை ஆரியரின் கெடு பிடிகளாலும், மாறி மாறி நடந்த சேர சோழ பாண்டிய மன்னர்களின் ஆட்சிப் போர்களினாலும், தங்கள் படைப்பலத்தினால் வலுப்படுத்தி பகைவர்கள் அணுக முடியாதபடி ஆக்கினீர்கள். காரைதீவில் அரசமாளிகை அமைத்ததைக் கண்டேன். சதுரங்க மணல் பொன்னகரில் சமயல்கோட்டை அமைத்ததைக்கண்டேன். வட்டுடை அணிந்த போர்வீரர்களை வட்டுக்கோட்டையிலும், யானைப்படைகளை ஆனைக் கோட்டையிலும் கண்டேன். இது மட்டுமா, நாகதீபத்தில் நாகமணி, மரகதம், நீலம், பவளம், வச்சிரமம், பதுமராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வைடூரியங்களுடைய நவரத்தினக் களஞ்சியக்கோட்டை மிக மிக அபாரம், அரசே.

வெடி: - எல்லாவற்றையும் கூறினீர்கள் எனது படைப்பலம் எப்படியுள்ளது புலவரே?

புல : மயிலிட்டி கீரிமலை, திருவடிநிலைப் பகுதிகளிலும் பெரும்படைகளையும், கொத்தளங்களையும் அமைத்து பகைவர்கள் எப்பகுதியாலும் தீண்டா வண்ணம் பெரும் ஆட்சிபுரியும் உங்கள் பலத்தை என்னால் புகழாமல் இருக்க முடியுமா!

வெடி: புலவரே இங்குள்ள வலம்புரிச் சங்குகளும், முத்துக்களும், ஏனைய கடல்திரவியங்களும், ஒருங்கே கிடைக்கப் பெற்றதனால் தான் இவற்றை நான் செய்யக்கூடியதாக இருந்தது. அதனால் தான் விருப்பம் போல், மக்கள் ஆதரவுடன் செயற்பட்டு வருகின்றேன்.

புல: அரசே! நான் கேட்டவைகளின் படி ஏனைய அரசர்களின் கண்ணெறிக்கு உட்பட்டவராய் இருக்கின்றீர்கள் அரசே.

வெடி: என்மேல் எதற்காக அவர்கள் ஆத்திரப்படவேண்டும். அவர்கள் ஆட்சிக் கெதிராக போர் தொடுத்தேனா? களவாடினேனா? வேறு பங்கம் செய்தேனா?

புல: நான் அப்படிச் சொல்ல வரவில்லை அரசே! கடலோடும் வணிகர்களும், பெரும் கப்பலோட்டிகளும், உன் புகழையும் கடல்படு திரவியங்களையும் அறிந்துவிட ஈழம் வருவதற்கு நாட்டம் கொள்கின்றனர்.

வெடி: அது என் நாட்டின் அழகின் ஈர்ப்பு. ஏன் கிரேக்கரும், றோமரும், அரேபியரும் வரவில்லையா? எமது வளங்களைப் பெறவில்லையா?

புல: ஆம் அரசே கிரேக்கரும், றோமரும், அரேபியரும் மற்றும் மேலைத் தேசத்தவரும் நயினாதீவு, ஊர்காவற்றுறை, கொழும்புத்துறை, காங்கேசன்துறை, மாந்தை போன்ற துறைமுகங்களில் வந்து இக்கடல் வளங்களையும், முத்துக்களையும், சங்கில் அறுத்த வளையல்களையும், மாணிக்கக்கற்களையும்,நாகமணிகளையும், யானைத்தந்தங்களையும் பெற்று அதற்கு பண்டமாற்றாக பொன், இரும்பு, மட்பாண்டங்கள், வெள்ளி நாணயங்கள், உயரக மதுபானங்கள், ஈயம், தகரம், விளையாட்டுப் பொருட்களையும் கொடுத்துச் செல்கிறார்கள், அவ்வாறான ஏற்றுமதி, இறக்குமதி மூலம் உலகளாவிய வணிகம் செய்வித்து பெரும் செல்வம் செழித்த அரசனாகவல்லவோ திகழ்கின்றாய்.

வெடி: ஆம் புலவரே, சென்ற மாதமும் பர்மா, மலேசியா, சீனா இந்தோனேசியா வணிகரும், ரோமாபுரி வணிகரும், சீமாட்டிகளும், முத்துக்களைப் பெருமளவில் விலை கொடுத்து வாங்கி எமது நாட்டிற்கு பெருஞ் செல்வத்தை அள்ளித்தந்தார்கள்.

புல: இதனால்தான் அண்டை நாட்டிலுள்ள சேர,சோழ,பாண்டியர்கள் தங்களுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைவதாக எண்ணுகிறார்கள். அவர்களின் கண்ணெறிக்கு உட்பட்டவனாக தாங்கள் ஆட்சி செய்து வருகின்றீர்கள்.

வெடி: எனது மக்களின் ஆதரவும், நாட்டின் செல்வமும் என்னை எப்பொழுதும் நல்ல செங்கோல் ஆற்ற உதவி செய்யும்.

புல: ஆம் அரசரே! சீரும் சிறப்பும் பெறுவதற்கு தங்கள் நல்லாட்சியும் தங்கள் வீர தீர செயற்பாடும் தம்பிமாரின் ஒத்துழைப்பும் போற்றப்பட வேண்டியவை தான் (புலவர் எழுந்து சற்றுக்காலடி வைத்துவிட்டு) ஆனால்.... (புலவர் தயங்குகின்றார்)

வெடி: (புலவரின் அருகே வந்து நின்று) சும்மா இருந்த என்னை சுழற்றிக் கொண்டு வந்து விட்டு ஆனால் ... என்று குண்டு ஒன்றைப் போடுகின்றீரே. (சற்று விலகிச்சென்று) எனக்குத்தெரியும் என்னைப் புகழும் போது ஏதோ ஒன்றை இல்லை .... இல்லை .. மறைத்த பொருளை வெளிக்காட்ட முயல்கின்றீர் என எண்ணினேன். (சற்று உரத்த தொனியில் )

புல: அப்படிச்செல்லாதீர்கள் ...ஆனால் .... சொல்லத்தயக்கமாக இருக்கிறது.

வெடி: சிங்கம் போல் சீறிய நீங்கள் சிறுத்தை போல் நின்று தடுமாறுவது ஏனோ?

புல: அரசே ஒரு குறைபாடு .................

வெடி: (வீர ஆவேசத்துடன்) மூவுலகில் உள்ள அரசர்களும் முக்கித் தத்தளிக்கும் இச்சமுத்திரத்தில் குறைபாடா? என் வளமான நாட்டில் எந்த உயிருக்கும், உயிரில்லாத சடலத்திற்கும் எந்தக் குறையுமில்லாத என் ஆட்சியில் குறையா! கற்றோரும் மற்றோரும் போற்றும் கண்ணிய நல்லாட்சியால் குறையா! இப்படிக் கூறுவது முறையா! புலவரே தயக்கமின்றி உடனே தெரிவியுங்கள்.

புல: - (சற்று தெளிந்த நிலையில்) அரசரே புல்லாங்குழலிசையோ, நாதஸ்வர இசையையோ கேட்டு அதில் இன்புறாதவனை எவ்வாறு அழைக்கலாம்?

வெடி: அவன் வெறும் சடலம்.

புல: அழகிய றோஜாமலரைக்கண்டு ரசிக்கத் தெரியாதவனை எவ்வாறு அழைக்கலாம்?

வெடி: அவனும் வெறும் சடலம் தான்.

புல: மயில் அழகாக ஆடும் போதும், குயில் இனிமையாக பாடும்போதும், அதைக்கண்டு, கேட்டு களிப்புறாதவனை எவ்வாறு அழைக்கலாம்?

வெடி: அவனும் வெறும் சடலம் தான்.

புல: நல்லது, அப்படியாயின் மயில்போல் தோகையுடைய கூந்தலும் குயிலின் குரல்போல் குரலும், தங்க மேனியும் கொண்ட மெல்லிடையாள் ஒருத்தி நாடிவரும் பொழுது, அழகும், இளமையும், வீரமும் மிக்க ஒருவன் விலகிப் போவதை என்னவென்று சொல்லலாம்.

வெடி: (தன்கையை பிசைந்து கொண்டு, கண்ணையும் உருட்டியவாறு) அது .... அது ............ புலவரே (சற்று அங்கும் இங்கும் போய் வந்து சுற்றிச்சுழன்று விட்டு) நீர் எங்கோ வந்து விட்டீர்.

புல: (சாந்தமாக) ஆம் அரசே, என்மேல் ஆத்திரப்படாதீர்கள் இவ்வளவு சீரும், சிறப்பும் பெற்று வருகின்ற நீங்கள், தங்கள் பக்கத்தில் ஒரு இளவரசியை தேர்ந்தெடுத்து பட்டமகிஷியாக ஆக்கிக் கொண்டு வாழாத குறைதான் நான சொல்லவந்த குறை மன்னா!

வெடி: (ஆ ............... ஆ ............. (சிரிப்பு) முக்கிய இடத்திற்கு வந்துவிட்டீர். இதைத் தான் மறைத்து, மறுத்துச் சொல்வதற்கு தாமதித்தீர் அதையும் விரைவில் நிவர்த்தி செய்து விடுகின்றேன்.

புல: (ஆனந்தக்களிப்புடன்) அரசே! சிறப்புப்பொருந்திய குகன் குலத்தவர்கள் வாழுகின்ற சோழநாட்டிலே சேதுபதி மகாராசாவின் மகள் இளவரசி நீலகேசியை நான் கண்டேன். வடித்த சுடருடைய வேற்கண்ணை உடையவளும். சுடர்செந்நெருப்பின் கூர்மையை ஒத்த கயல் விழிகளைக் கொண்ட வளும்......................

வெடி: தாங்கள் புலவராச்சே தங்கள் வர்ணனைகள் அபாரம், ம் ..... தொடரட்டும்

புல: துடிபோன்ற இடையழகுடன் மென்மையான இடைநிலை மேனியை உடையவளுமான பூங்குழல் நீலகேசி தங்களுக்கு மிகவும் பொருத்தமானவள் அரசே.

வெடி: (புலவரைப்பார்த்து புன்முறுவலுடன்)நீர் ஆரம்பத்தில் என் நாட்டைப்பற்றிப் புகழ்ந்தீர். என் செல்வத்தைப் பற்றிப் புகழ்ந்தீர். ஆட்சியைப்பற்றி புகழ்ந்தீர். என்னைப்பற்றிப் புகழ்ந்தீர். இதற்கெல்லாம் ஏதோ காரணம் இருக்கத்தான் வேண்டும் என்று எண்ணினேன் அது சரி ஆகிவிட்டது.

புல: அரசே என்னைத்தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் உங்கள் மீது வைத்த என் அன்பினால் தான் சொன்னேன்.

வெடி: அதனால் தானே என் அரசசபைப் புலவராக தங்களை வைத்திருக்கின்றேன். சரி என் தம்பிமார்களுடன் கலந்தாலோசித்து நல்ல முடிவினை எடுத்துக்கொள் கின்றேன்.

**(திருமண நாதஸ்வர ஓசை இசைக்கப்படுகிறது)**

**➤திரை➤**

SWAMI ABRAHAM
community centre
KULAMANKAL-MALLAKAM.
Regd. No: J/VC/21/344

# அங்கம் - 5

*சிற்றரசன் வீரநாராயணன் அரசசபை*

பாத்திரங்கள்: வீரநாராயணன்,மந்திரி,தளபதி

(சபையில் மந்திரியும், தளபதியும் இருக்கும் பொழுது வீர நாராயணன் சபைக்கு வருதல்)

தளபதி :- (எழுந்து நின்று) வெடியரசன் தம்பி வீரநாராயணன் வீரவேந்தே வருக! இராட்சதப்பன்றியை வென்று வெற்றி வாகை சூடிய மாவீரனே வருக! வருக! (வீரநாராயணன் சிம்மாசனத்தில் அமர்தல்)

வீரநா: (மந்திரியைப் பார்த்து) மந்திரியாரே எமது இராசதானியாகிய தொல்புரத்தில் நாம் இன்று கூடி இருக்கின்றோம். எமது இராசதானி நிலைபற்றிக் கூறுவீராக.

மந்திரி: எமது இராசதானியைச் சுற்றிய மையக்கோட்டையும் கிழக்கில் யானைப்படைக்கோட்டையும், தெற்கே வட்டுடை அணிந்த போர்வீரகள் அடங்கிய கோட்டையும், மேற்கே வேரப் பிட்டியில் மண் வீரர்கள் அடங்கிய புழுதிமணற் பிட்டிக் கோட்டையும், வடக்கே நெல்லியானில் நெற்களஞ்சியக் கோட்டையும் சிறப்பாக அமைத்து நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது அரசே. அத்துடன் மாந்தை நகர் உட்பட அல்லி ராணியின் ராச்சியமாம், சிலாபம் வரை படை ஆதிக்கமும், படைப் பலமும் சிறப்பாக உள்ளது அரசே.

வீரநா: மிக்க நல்லது மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

மந்திரி: ஆனால் .......

வீரநா: ஆனால் ...............ஆனால் ........ ஆனால் ............ மாவீரன் வெடியரசன் தம்பி வீரநாராயணனின் ஆட்சியில் என்ன குறையுள்ளது? (சற்று உரத்த குரலில்)

மந்திரி: அல்லிராணியின் ஆட்சிப்பிரதேசமான புத்தளம், அரிப்பு, சிலாபம் பகுதிகளில் சேர, சோழ,பாண்டிய நாட்டவர்கள் வந்து திருட்டுத்தனமாக முத்துக் குளிக்கின்றார்கள்.

வீராநா: (தளபதியைப்பார்த்து)தளபதி உடனே மாந்தை நகர் படையுடன் சென்று முத்துக்குளிப்போரையும் யானை பிடிப்போரையும் கொன்று எமது ஆதிக்கத்தை நிலை நாட்ட உடனே புறப்படுவோம்.

தளபதி: அப்படியே புறப்படுவோம்.

➢திரை⮜

# அங்கம் - 6

*அருவி ஆற்றோரங்கரையில்*

பாத்திரங்கள் : தளபதி வீரநாராயணன்

போர் செய்த உடையுடன் தளபதியும், வீரநாராயணனும்

**தளபதி:** - நாம் கண்டியரசர்களின் வீரர்களை விரட்டி அடித்து விட்டோம். களவாக முத்துக் குளிப்போரையும் விரட்டியடித்து விட்டோம். அரசே அதோ அருவியாறு சல சலவென ஓடுகின்றது. அங்கே நீராடிச்செல்வோமா!

**வீரநா:** - ஆம் தளபதியே நல்ல யோசனைதான். உதய சூரியன் ஒளிவிட ஆரம்பிக்கின்றான். இந்நேரத்தில் நாம் நீராடுவது நல்லதுதான் அப்படியே செய்வோம்.

(தளபதியும், வீரநாராயணனும் சற்று முன் நடத்தல் வீரநாராயணன் திடீரென அசையாமல் நிற்றல்) தளபதி, அவனின் பின்புறமாக வீரநாரயணன் நோக்கிய இடத்தை நோக்கிவிட்டு புன்சிரிப்புடன் பின்நோக்குதல்)

(வீர நாராயணன் எண்ணுவதை பின்னணியில்)

இவள் பொற்சிலையோ! (தன் கண்ணைக் கசக்குகின்றான்) ஆகா எழில் அழகு ததும்பும் வட்டமுகம், எத்தனை அழகு. எத்தனை இன்பம், ஆற்றில் துள்ளித் திரியும் கயல் மீன்களிலும் இவள் கருங்கயல்விழிகள் பிரகாசமாகவுள்ளதே. அவள் தோழிகளுடன் சிரிக்கும் போது இளஞ்செந்நிற உதடுகளின் நடுவே உள்ள முத்துப்பற்கள் பிரகாசிப்பது என்னைக் கொல்கின்றதே. (நாராயணன் ஒவ்வொரு வசனத்திற்கும் அசைவைக் காட்டுகின்றான்) இவளை நான் கருமலர்க் குழலாள், தோகையின் முகத்தாள், கருமேகத்தில் வட்டமிட்ட மதியென்றல்லவா கற்பனைச்சிறகால் கூறவேண்டும்போல் இருக்கிறது. நீராடும் துகிலிடையில் விண்மிசைப் பரந்த மார்பு, புடை பெகர்ந்துவனப் பளித்துச் சிறந்த முத்து இரண்டு முனைக் கோட்டின் பிரகாசங்களை அள்ளி வீசுவது போல் தனம் இரண்டும் என்னை மயக்குகின்றன. அதோ நீராடிவிட்டு எழுந்து நடுநின்ற செந்தாமரைபோல் அல்லவா நின்றாடுகின்றாள். இவள் பூமகளோ அல்லது நாமகளோ, அல்லது பூவுலகத்தேவதையோ. என் இமைகள் வேறு இடம் பார்க்க மறுக்கின்றதே. அதோ நீராடிவிட்டு என்னைக்கண்டு கடைக் கண்ணால் பார்த்து விட்டு செல்கின்றாளே.

**வீரநா:** தளபதி இங்கே ஓடிவா .... ஓடிவா (தளபதி அருகில் வருதல்)

**வீரநா:** அதோ பார் அந்த அருவியாற்றில் நீராடி விட்டு செல்கின்றாளே அவள் ஒரு அரச குமாரியாகத்தான் இருக்க வேண்டும் யாராக இருப்பாள்?

**தளப:** அவள் யாராக இருந்தாலும் எமக்கென்ன நாம் போவோம்.



வீரநாராயணன் அல்லிராணி வழித்தோன்றலான சந்திரவதனாவை எதிர்பாராமல் கண்டு மையல் கொள்ளும் காட்சி.

வீர: அதோ ஆற்றைப்பார் மீனினங்கள் துள்ளிக் குதிக்கின்றன பாடும்மீன்கள் நாத மிசைக்கின்றன. கடற்பறவைகள் இன்னொலி எழுப்புகின்றன. கடற்றாழைகள் மொட்டவிழ்ந்து நறுமணம் வீசுகின்றன. நித்திரை கொண்ட அலைகளும் சிறு இரைச்சலுடன் பேரிரைச்சல் பெருஅலைகளாக மாற எத்தனிக்கின்றன. இத்தனையும் அதோ அவள் குளிக்கும் பொழுது சந்தோசத்தால் எதிரொலித்த நிகழ்வாக இருக்கும்பொழுது நான் மட்டும் ...... அவள் உருவெளித் தோற்றத்தை கண்டு நிலை தளருகின்றேனே. உருவெளியை தொட்டுத்தடவ இல்லை இல்லை அவள் அருகே செல்ல முடியாதிருக்கின்றதே. இவள் யாராக இருப்பாள்.

தளப: இவள்தான் அல்லிராணி வழித்தோன்றலான இளவரசி சந்திரவதனா.

வீரநா: இவள் தான் அந்த சந்திரவதனாவா! இவளைப்பற்றிக் கேள்விப் பட்டிருக் கின்றேன். இன்று இவளைச் சந்தித்தது எனது அதிஸ்டமாகத் தான் இருக்க வேண்டும் தளபதியாரே. அவள் அரண்மனைக்குச் சென்று என்னை அறிமுகப்படுத்தி அவள் சம்மதத்தைக் கேட்டு வருவாயாக.

தளபதி:அப்படியே சென்று வருகின்றேன்.

(வீர நாராயணன் இயற்கையை ரசித்துக்கொண்டு, அவளை நினைத்து பாடுவது)

இராகம் :- ஆபேரி தாளம் :- ஆதி

### பாட்டு

1) ஆரணங்கே, என் ஆருயிரே!
அலை பாய்ந்திடுதே மனம் ஏங்கிடுதே!

உன் பூரண சந்திர எழில் வதனம்
எனை வாட்டிடுதே! ஆசை ' ஊட்டிடுதே!

2) மோகம் கொள்ள வைக்கும் மோகனாங்கி
சாகஸம் புரிந்திடும் சரஸாங்கி
வேகமாக நீ ஏகியதேனோ?
வேளையறிந்தே வந்திடுவாய்
(உன் பூரண)

3) கானகம் தனிலே காதலியே உனைக்
கண்டநாள் முதலாய் - கொண்டேனே தாபம்
காத்திருப்பேனே சுந்தராங்கி - கயல்விழியே
ஒரு கனி மொழி தாராய்
(உன் பூரண)

(தளபதி வருவதைக்கண்ட வீரநாராயணன் ஓடிச்சென்று அவனை அணுகி)

வீரந: முடிவு என்ன வாயிற்று?

தளப: வெற்றி! வெற்றி! யானை வேட்டை ஆடியவர்களைத்துரத்திவிட்டு மான் வேட்டையிலும் வெற்றி பெற்று விட்டீர்கள்.

வீர: (மிகவும் அவசரமாக) என்ன சம்மதம் தெரிவித்து விட்டாளா?

தள: ஆம் அரசே! அவள் தங்களைக் கண்டவுடன், அவளும் உங்கள் மேல்,உங்களைப்போல் தான்.......

வீர: உனக்கு எப்பொழுதும் பகிடிதான்,சரி எதற்கும் என் அண்ணன் வெடியரசனின் சம்மதம் பெறவேண்டும். (யோசிக்கின்றான்)

தள: ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் அண்ணி நீலகேசி மூலமாக விடயத்தை தெரிவிப்போம்.

வீர: சரி எமது இராசதானிக்குச் செல்வோம்

➢திரை≺

# அங்கம் ~ 7

*வெடியரசன் மாளிகை அந்தப்புரம்*

பாத்திரங்கள்: நீலகேசி, வெடியரசன், தோழி, வீரநாராயணன்

(வெடியரசனும் நீலகேசியும் அந்தப்புரத்தில் இனிமையாக தமது நேரத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றார்கள்)

நீல: நாதா! அதோ பாருங்கள் இந்த நிலவு எவ்வளவு அழகாக இருக்கின்றது?


வெடி: அந்த நிலவு அழகாக இருக்கக் காரணம் நீயல்லவோ!

நீல: அப்படியெல்லாம் ஏன் சொல்கிறீர்கள்.

வெடி: நீலகேசி நீ இந்த குளிர்மையான ஒளிவீசும் முத்துக்களைக் கொண்ட விலை மதிக்க முடியாத பஞ்சணைமெத்தையில் இருந்துகொண்டு நிலாவைப்பார்க்க உன் முகத்திலிருந்து அல்லவா அந்த நிலா ஒளி பெற்று அழகாக காட்சி தருகிறது.

நீல : நீங்கள் என்னை நன்றாகத்தான் புகழுகின்றீர்கள்.

அன்பளிப்பு
"E. P. D. P."
யாழ் மாவட்டம்



வெடியரசன் தன் மனைவி நீலகேசியுடன் அந்தப்புர
அரண்மனையில் மகிழ்வுறும் காட்சி.

வெடி: இல்லை நீலகேசி நீ ஒரு பொற்சிலை, நீ எனக்காகப்பிறந்து என்னுடன் இணைந்து என்னை அழகு செய்கின்றாய்.

நீல: நீங்கள் மட்டும் என்ன குறைவா! நாகமணி முத்துக்கள் தங்கள் மார்பெங்கும் ஒளிவீச முத்துப் பவளத்தால் அலங்கரிக்கப்பட்ட இந்த முத்துக்கட்டிலில் தாங்களும் இருக்க தேவலோகத்தில் இருப்பது போல் அல்லவா இருக்கிறது.

வெடி: இப்படி மாறி, மாறி எங்கள் அழகை வர்ணித்துக் கொண்டிருந்தால் போதுமா? எப்பொழுது எமக்கு சின்ன வெடியரசன் (நீலகேசி வெடியரசனின் வாயைப்பொத்துகின்றாள்).............

நீல : எல்லாவற்றிற்கும் அவசரப்படக்கூடாது. அதுசரி நான் உங்களிடம் ஒரு விடயம் கேட்கலாமா?

வெடி: என் அன்பே! என்னிடம் கேட்பதற்கு அனுமதி பெறவேண்டுமா?

நீல : உங்கள் தம்பி வீரநாராயணனுக்கு வயது வந்து விட்டது அவன் ஒரு பெண்ணை ....

வெடி: அது எப்படி உனக்குத் தெரியும்

நீல: அவசரப்படாதீர்கள். உங்கள் தம்பி அல்லிராணியின் ஆட்சிப்பிரதேசத்தில் முத்துக்கள் களவாடப்படுவதாக கேள்விப்பட்டு அங்கு சென்று கள்வர்களைத் துரத்திவிட்டு வரும் வழியில்

வெடி: வரும் வழியில் ......

நீல: அருவியாற்றில் குளித்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணணங்கை கண்டுவிட்டார்.

வெடி: யார் அந்தப்பெண்?

நீல: அல்லிராணி வழித்தோன்றலான சந்திரவதனா என்பவள். அவள் பேரழகு படைத்தவள்.

வெடி: உன்னைவிடவா?

நீல: உங்களுக்கு எப்பொழுதும் கேலிதான் ......
தங்கள் தம்பி வீரநாராயணன் அவள் அழகிலே மயங்கி .............

வெடி: மயங்கி .............

நீல: தங்கள் அனுமதியுடன் அவளைத் திருமணம் செய்ய விரும்புகிறார் போலும்...

வெடி: இவையெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?

நீல: வீரநாராயணின் தளபதி மூலம் அறிந்தேன்.

வெடி: எனக்குத் தெரியும் என் தம்பிமார்கள் நான் போட்ட கோட்டை தாண்டமாட்டார்கள் என்று (தோழி மறைவில் நின்று கொண்டு)

தோழி: அம்மா! வீரநாராயணன் அவர்கள் அரசரைச் சந்திக்க வந்திருக்கின்றார்.

நீல: நாங்கள் போய் அவர் வந்த விடயத்தை அறிவோமே.
(இருவரும் அந்தப்புரத்தை விட்டு அரச மாளிகைக்குச் செல்லல்)

வெடி: வீரநாராயணா! மிகவும் அவசரமாக வந்திருக்கிறீர். நாட்டில் காவல் பிழைத்ததா? எதிரிகள் நாட்டில் புகுந்தார்களா? அல்லது தங்களின் அவசர அலுவல்கள் ஏதுமுண்டோ?
(படிப்படியாக சத்தம் குறைந்து செல்லல்)
(வீரநாராயணன் மௌனமாக நிற்றல்)

வெடி: மௌனத்திற்குப் பின் புதுக்கதை பிறப்பது நியதி. அப்படியானால் வேட்டைக்குச்சென்ற பொழுது மான் ஒன்று சிக்கிவிட்டது போலும்.
(வீரநாராயணன் வெட்கத்துடன் நீலகேசியைப்பார்த்தல்)

வீர: எல்லாம் அண்ணி சொல்லி இருப்பார் தானே! (மெதுவாகச் சொல்லுதல்)

வெடி: எனக்கு இப்படி ஒரு அண்ணி இருந்திருந்தால் நான் எவ்வளவு பாக்கியம் செய்தவனாக இருந்திருப்பேன். ... என்ன நீலகேசி ...
(நீலகேசி புன் சிரிப்பு சிரித்தல்)
என்னை நேரடியாகக்கேளாமல் புத்திசாலித் தனமாக அண்ணி மூலமாக காரியத்தை சாதிக்கலாம் என எண்ணினாய் ....... என்ன ....... (வீர நாராயணன் மீண்டும் நீலகேசியை பயத்துடன் பார்த்தல்)

நீல: நாதா!

வெடி: சற்றுப்பொறு நீலகேசி

வீரநாராயணா! கொள்ளைக்காரனைத் தண்டிக்கப்போனாய், ஊர்க்காவல் செய்யப்போனாய், இராட்சசப்பன்றியைக் கொன்றாய். வீரதீரச்செயல் புரிந்ததற்காக விருதும் பெற்றாய். இப்போது சந்திரவதனாவின் உள்ளத்தையும் கொள்ளை யிட்டாய். இதற்காக உனக்கு என்ன தண்டனை தெரியுமா?
(நாராயணனும், நீலகேசியும், அவள் தோழியும் ஏங்கி நிற்கிறார்கள்)

நீல: நாதா! அப்படி தண்டனை எதுவும் கொடுத்து விடாதீர்கள்.
( கெஞ்சிக்கேட்கிறாள்)

**வெடி:** (புன் முறுவலுடன், வீரநாராயணனை அரவணைத்து கட்டித்தழுவி) என்வீரத்தம்பிக்கு நன்முகூர்த்தத்தில் ஊரார், உறவினர், அரசர்கள் வாழ்த்த முறைப்படி சந்திரவதனாவை திருமணம் செய்வித்து இல்வாழ்க்கை எனும் இன்பக்கோட்டைக்குள் இருவரையும் சிறைவைக்கப் போகின்றேன். இது தான் நான் தரும் தண்டனை. என்ன சந்தோஷம் தானே. நீ அவளைத்திருமணம் செய்து பதினாறும் பெற்று ஆழியும் மலையும் போல வாழ வாழ்த்துகின்றேன்.
(எல்லோரும் ஆனந்தப்படுகின்றனர்)

**வீரநா:** அண்ணா! அண்ணா ... (வெடியரசனை ஆரத்தழுவுதல்)
(திருமண நாதஸ்வர இசை ஒலித்தல்)

➢ திரை ≺

# அங்கம் ~ 8

*வெடியரசன் அரசசபை*

**பாத்திரங்கள் : வெடியரசன், மந்திரி, பிரதம அந்தணர், நீலகேசி, ஏவலர், ஒற்றன், வீரநாராயணன், போர்வீரகண்டன், ஏரிளங்குருவன், விளங்குதேவன், தளபதி**

**(வெடியரசன், மந்திரி, பிரதம அந்தணர் சபையில் இருத்தல்)**

**வெடி:** கேளும் மந்திரி தேவலோக பட்டினத்திற்கு சமீபமான என் நாகபுரத்தின் சீர் சிறப்புக்களை இந்த இராசசபையில் கூறுவீராக.

**மந்:** வீர வேந்தன், மாமன்னன் வெடியரசன் மன்னரே! மன்னவர்க்கு மன்னவா! மாதம் மும்மாரி மழை பெய்து நாடு செழித்து, மக்களுக்கு ஏதும் குறைவில்லாது இறைவரிகள் சரியாகப் பெற்று தங்கள் செங்கோலாட்சி செழிப்பாக உள்ளது அரசே.

**வெடி:** தொடர்பசுவும், புலியும் ஒன்றாய் துயிலும் என் நாட்டில் பௌத்த சமயம் அறுகுபோல் எங்கும் பரவுவதைத் தடுக்க என்னால் செய்யப்பட்டவைகள் போதுமா அந்தணரே!

**பி.அந்:** அரசே! அரசியார் நீலகேசியினூடாக சேதுபதி மகாராசாக்களிடமிருந்து சிறந்த வைஷ்ணவ, சைவக் குருக்களையும் தருவித்து நித்திய பூசைகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. அரசே! இதனால் மக்கள் பிற சமயத்தை நாடாது இருக்க சைவம் தழைக்கின்றது அரசே.

வெடி: என் மனைவி நீலகேசியினதும், குடிமக்களின் ஆசையை நிறைவேற்று முகமாக நான் இட்ட கட்டளைகள் யாவும் நிறைவேறியுள்ளதா மந்திரியே!

மந்தி: வியாவில் இடத்தில் ஏழு வீதிகளை உடைய ஏழு நிலைமாட ஐயப்பனார் ஆலயத்தை உங்கள் விருப்பப்படி நிறுவியுள்ளோம். சிறந்த சிற்ப வேலைகளும், தூபிகளும் ஒருங்கே அமைந்தவாறு வானளாவும் பிரமாண்டமான ராஜகோபுரத்தை அமைக்க வழிசமைத்த உங்கள் பணி சிறப்பானது என மக்கள் போற்றுகின்றார்கள் அரசே.

வெடி: நிறுவிய கோவில்களில் அந்தணர்கள் பற்றியும் அவர்களுக்குரிய சன்மானங்கள் பற்றியும் அறியலாமா பிரதம குருவே!

பிரதம: உங்கள் பணிப்பின்படி சுவாமிக்கு பூசை செய்ய அதி உத்தம குருவாக திருவுத்தர கோசமங்கையில் இருந்து வேத வல்லபக் குருக்களையும், வேண்டிய சிஷ்யர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும், சிறந்த ஓதுவார்களையும், சித்தாந்த வித்தகர்களையும், அழைப்பித்து அவர்களுக்கு வேண்டிய பொன்னும்' மணியும், முத்தும் பொருளும் வழங்கப்படுகிறது அரசே!

வெடி: அவர்களுக்கு இருப்பிட வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளதா மந்திரியே!

மந்: வீடுகளையும், மண்டபங்களையும், கோவில் மன்றங்களிலும், ஆலயச் சுற்றாடலிலும் அமைத்து இருப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நித்திய நைமித்திய பூசைகள் ஒழுங்கு முறைப்படி நேரம் தவறாது நடைபெறுகிறது. அரசே! இதனால் பௌத்த சமயத்தவர்கள் எட்டியும் பார்க்க முடியாத அளவிற்கு இந்து சமயம் வலுப்பெற்றுள்ளது. மிகுந்த செல்வங்களாலும், சிறந்த படையமைப்பாலும், பிற தேசத்தவரின் வணிக விருத்தியுடனும் சேர சோழ பாண்டிய அரசர்களின் மனதில் கண்பட்டவராய் இருக்கின்றீர்கள் அரசே?

வெடி: மந்திரியாரே இன்றைய நாள் எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. இன்று அந்தணர்களுக்கும், இரவலர்களுக்கும், புலவர்களுக்கும், முத்து, மணிகள், சன்மானம் செய்து தான தர்மம் செய்ய நடவடிக்கை எடுப்பீராக.

மந்: அப்படியே செய்கின்றேன் அரசே!
(அரசசபையில் வந்து)

ஏவ: அரசே! அரசியார் சபைக்கு வந்துள்ளார்.

வெடி: உள்ளே வரச்சொல்லும்.

(நீலகேசி மிகவும் அவசரமாகவும், விம்மி... விம்மி ... அழுது கொண்டும் வந்து அரசர்க்கு பக்கத்தில் வந்திருத்தலும், அரசன் நீலகேசியை உற்றுப்பார்த்து விடயம் வினாவுதலும்)

(மிகவும் அனுதாபத்தோடு)

வெடி: கறைகள் ஏதுமில்லா வெண்புறாவே! என் மனதில் என்றும் இனியவை தந்து மகிழ்விக்கும் மதிமுகத்தாளே! உன் கயல்விழிகளில் இருந்து வரும் நீர் எதற்காக? ஏன் விம்மி விம்மி அழுகிறாய்.

நீல: நாதா என்பிரிய நாயகரே எனது தோழிமாருடன் நான் நித்திரை செய்கின்ற வேளை தன்னில் .... ம் ... (விம்முகிறாள்)

வெடி: ஏன் தயங்குகின்றாய் .... கனியிடை ஏறிய சுவையும், காய்ச்சும் பாலிடை ஏறிய ருசியும், நிலவிடை ஏறிய குளிரும், செந்தேனினுடைய இனிப்பும் போல் உள்ளத்தில் இருந்து வரும் வார்த்தைகள், நெருப்பும் ஒளியும் போல், பூவும் மணமும்போல் காதிற்கினிய ரீங்காரம் பேசும் உன் சொற்கள் இன்று ஏன் தடுமாறுகின்றன. (வெடியரசன், இனிமையாக, எளிமையாக கேட்டல்)

நீல: நாதரே! கண்துயிலும் வேளையில் பின்னிரவில் நான் கனவொன்று கண்டேன்.

வெடி: ஆகா .... இராஜகுமாரி கனவு கண்டு விட்டு
அழுவதா? .............. (ஏளனமாக கேட்கின்றான்)

நீல: வானத்தில் இருந்து நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுந்தன. உலகெங்கும் பேரிருள் மயமாக இருந்து அக்கினி மயமாய் தோன்றிற்கு அப்போது சமுத்திரம் போல் முழங்க சங்குகள் ஒலியெழுப்ப ஒரு சிங்கத்தை முயற் கூட்டங்கள் வளைத்துக்கொண்டது போல் ஒரு தீயகனாக் கண்டேன் நாதரே! (அழுகிறாள்)

வெடி: கனாக் கண்டு அழுகின்றாய்,கோழை! (சற்றுக் கோபத்துடன்)

நீல: பின்னிரவில் கண்ட கனவு பலிக்கும் என்று சொல்வார்களே. அது தான் எனக்குப்பயமாக இருக்கின்றது.

வெடி: நீலகேசி புஜபலபராக்கிரமந் தங்கிய ராசாக்கள் வந்து என்னை வளைத்துப்போர் செய்தாலும் அவர்கள் வீர சொர்க்கமடையும் படி அஸ்திரப்பிரயோகஞ் செய்வேன். கற்றூணைக் கறையான் அரிக்குமோ?

நீல: நீங்கள் விளையாட்டாகப் பேசுகின்றீர்கள் நாதா!

வெடி: சீ ... சீ .. என் வல்லமையை நீ முற்றும் அறிந்திலை போலும், என்னை வெல்ல வல்லார் மூவுலகிலும் இல்லை என்பதை மறந்து விட்டாய். நீ வீணாக எண்ணி அஞ்சி நடுங்க வேண்டாம்.

நீல: எனக்குப்பயமாக இருக்கிறது. அஞ்சுவது அஞ்சாமை பேதமையல்லவா!

வெடி: பயப்படுவதற்கு என்ன இருக்கிறது. முத்துக்கள், சிப்பிகள் சங்குகள் போன்ற விலை மதிக்கமுடியாத பொருட்களும் மேலும் வலிமை பொருந்திய கடற்படைப்

பலங்கள் என்னிடம் உள்ளதாலும், எதிரிகள் யாவரும் என்மடியில் மடிவர் கனவைக்கண்டு கதி கலங்குகிறாய்.
(அப்பொழுது ஒற்றன் சபைக்குள் பிரவேசிக்கின்றான்)

ஒற்: அரசே சோழநாட்டு அரசன் தங்கள் மீது பொறாமை கொண்டு அவன் தளபதி மீகாமனை போருக்கு அனுப்ப இருப்பதாக அறிந்துள்ளேன்.

வெடி: புலிக்கூட்டத்திற்குள் மான் கூட்டங்கள் நுழைகின்றனவா, அவனையும், அரசனுடைய படையையும் அழித்துவிடுகின்றேன்.

நீல: நான் கண்ட கனவுக்கும், இப்படையெடுப்புக்கும் ஏதும் ........

வெடி: நீலகேசி ... நீலகேசி .. என் வல்லமையை நீ முற்றாக அறியாதவள் போல் அல்லவா உளறுகிறாய் ........
ஏவலாளர்களே! எனது சிற்றரசர்களான எனது தம்பிகள், வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீரகண்டான், ஏரிளங்குருவனை அழைத்து வருவீர்களாக.

ஏவ: அப்படியே செய்கின்றேன்.

வெடி: ஏவலாளரே தளபதியை வரச் சொல்லும்.

ஏவ: அப்படியே யாகுக.
(தளபதி வருதல்)

தள: தாங்கள் அழைத்த காரணம் என்ன பிரபு!

வெடி தளபதியே, வடமுனையிலுள்ள காராளி கடற்கரைக்காவல் அரண்மனையை வலுப்படுத்தி, கடல் எல்லையில் எதிரிகள் வருகின்றார்களா என்பதையும் கண்காணிக்கவும். இது என் அவசர கட்டளை.

தள: அப்படியே செய்கின்றேன்.

ஏவ: தங்கள் தம்பிமார் நால்வரும் வருகை தந்துள்ளார்கள் அரசே!

வீரநா: அண்ணா எங்களை அவசரமாக அழைத்ததற்கான காரணத்தை அறியலாமா?

வெடி: நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் சிற்றரசுக்குட்பட்ட எல்லையின் நாட்டு வளப்பத்தினைத் தெரிவியுங்கள்.
(சிற்றரசர்கள் நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்)

வீர: அண்ணா! தொல்புரத்தை இராசதானியாகக் கொண்ட எனது இராசதானியின் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு மையக் கோட்டைகள் ஸ்திரப் படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தொல்புரம், வட்டுக்கோட்டை,

கோட்டையாவத்தை, ஆனைக்கோட்டை, பொன்னகர் ஆகிய இடங்களையும், மாந்தைநகர் உட்பட அல்லிராணியின் இராச்சியமாம் சிலாபம் வரை படை ஆதிக்கத்தையும் படைப்படலங்களையும் கண் காணித்து வருகின்றேன்.

நாட்டில் மக்கள் ஒருகுறையுமின்றி வாழுகின்றார்கள். பொன்னகர் விஸ்ணு மூர்த்திக்கு ஏழுநிலை மாடக் கோபுரத்தை அமைத்தும், அண்ணி நீலகேசியினூடாக சேதுபதி மகாராஜாக்களிடமிருந்து சிறந்த வைஷ்ணவ சைவக் குருக்களையும் தருவித்து நித்திய பூஜைகளையும், திருவிழாக்களையும் ஏற்படுத்தி, பிற சமயத்தை மக்கள் நாடாதவாறு சைவத்தையும் வளர்த்து வருகின்றேன் அண்ணா!

**வெடி:** மிக்க நல்லது வீரநாராயணா, எனது தம்பியல்லவா!

**வெடி:** விளங்கு தேவா! உனது சிற்றரசுக் குட்பட்ட எல்லைக்குள் நாட்டு நடப்பினைத் தெரிவிப்பாய்.

**விள:** அண்ணா! சுழிபுரத்தின் வடபகுதியிலுள்ள 'திருவடினிலை' என்னும் திருவாரூரில் கடற்படைக்கோட்டை அமைத்து வட சுழிபுரம், திருவடிநிலை, புளியாந்துறை ஆகிய சிற்றூர்களைக் கண்காணித்து வருகின்றேன். பௌத்த சமயம் பரவாமல் பார்த்தும், சேர,சோழ,பாண்டியர் பக்தர்களுக்கெல்லாம் உணவு சத்திரங்கள் வழங்கியும் வருகின்றேன். பொன்னாலை வரதராசப்பெருமாளின் அருளினால் எல்லாம் சரியாக நடக்கிறது.

**வெடி:** போர் வீரகண்டா! உனது சிற்றரசுக்குட்பட்ட எல்லையின் நாட்டு வளத்தைத் தெரிவிப்பாயாக.

**போர்வீ:** கீரிமலை, மயிலிட்டிப்பகுதிகளில் கோட்டை அமைத்து, சீரும் சிறப்புடனும் அரசு செய்கின்றேன் அண்ணா! இப்பகுதியில் கிடைக்கும் முத்துக்களும், திரவியங்களும் நல்ல வருமானத்தைத் தருவதினால் தான தருமங்கள் செய்து சைவசமயத்தையும் வளர்க்கின்றேன் அண்ணா!

**வெடி:** ஏரிளங்குருவா! உனது சிற்றரசுக்குட்பட்ட எல்லைக்குள் நாட்டு வளப்பத்தினைத் தெரிவிப்பாயாக.

**ஏரிள:** அண்ணா! காங்கேசன்துறையில் அமைத்த கோட்டை மூலம் எனது சிற்றரசுக்குட்பட்ட பகுதியைக் கண்காணித்து வருகின்றேன்.

நானும் எனது தம்பி போர்வீரகண்டனும் இணைந்து, திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி, கதிரையாண்டவர் ஆலயங்களை புனருத்தாரணம் செய்து சைவத்தையும் வளர்த்து வருகின்றோம்.
எனது படைகளும் உசார் நிலையில் உள்ளன அண்ணா!

***வெடி:*** (உசாராக சந்தோசத்துடன்) 'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்னும் முதுமொழி பொய்த்து விடுமா! சிரசோடு சிரசாக, தோளோடு தோளாக உடலோடு

உடலாக, என்னைப்பின்பற்றி நின்று, என்தம்பிமார் ஆட்சி செய்யும் இந்த வீரச்சிங்கங்களின் பிரதேசத்தில் எதிரிகள் படை எடுப்பாம் தம்பிமார்களே! சோழராசன் என்மீது படையெடுக்க,தனது தளபதி மீகாமனை அனுப்பியுள்ளானென ஒற்றர் மூலம் அறிந்தேன் (நான்கு தம்பிமாரும் தமது ஆவேசத்தை அசைவுகள் மூலம் காட்டுதல்)

**வீரநா:** அப்படியொரு படையெடுப்பா அண்ணா! இப்பொழுதே எனக்குக் கட்டளை யிடுங்கள் அவன் படைகளை சுக்கு நூறாக்கிவிட்டு வருகின்றேன்.

**வெடி:** வீரநாராயணா! ஆத்திரப்படாதே, அண்ணி நீலகேசி தீயகனாவொன்று கண்டு கவலைப்பட்டுக்கொண்டு இருக்கின்றாள்.

(தனது தம்பிமார்களைப் பார்த்து)
என் அருமைத்தம்பிமார்களே நீங்கள் உங்கள் இராசதானிக்குச் சென்று நாற்படைகளையும் உசார் செய்து எந்த நேரமும் போருக்கு தயாராக இருப்பீர்களாக.

நான்கு
சிற்றரசர்கள்: அப்படியே செய்கின்றோம்.

➢திரை➣

SWAMI ABRAHAM
community centre
KUDAMANKAL-MALLAKAM.
Regd. No: J/VC/21/844.

# அங்கம் ~ 9

*வெடியரசன் அரண்மனை*

**பாத்திரங்கள் : நீலகேசி, வெடியரசன், தளபதி**

**வெடி:** –நீலகேசி நீ இன்னும் கனவிலிருந்து விடுபடவில்லையா?

**நீல:** எப்படி விடுபடுவது நாதா? தூக்கம் வரமறுக்கிறது.

**வெடி:** நீலகேசி பெண்களுடைய மனம் பிஞ்சு உள்ளம் என்பார்களே! நீயும் அப்பிடித்தான் நம்குல தெய்வமாகிய பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளைச் செய்து, அந்தணருக்கும் இரவலர்க்கும் மிகையாகப் பொன்னையும், பொருளையும் வழங்கி, ஏனையோர்க்கு தான தர்மங்களையும் செய்வீர். நம் வரதராஜப்பெருமாள் நமக்கு ஒரு குறையும் விட மாட்டார்.

**நீல:** நல்ல யோசனைதான் நான் அப்படியே செய்ய விடை தாருங்கள்.

வெடி: நீ இன்று சோர்வடைந்திருக்கிறாய் நாளை சென்று பணியைச் செய்விப்பாய்.
(தளபதி அவசரமாக வருதல்)

தள: அரசே காவல் அரண்களிலிருந்த காவலர்கள், தூரத்திலே பல கப்பல்களின் பாய் முனைகள் தெரிவதாகத் தெரிவித்தனர். எனவே மீகாமன் படையெடுத்து வருகிறான் போல இருக்கிறது.

வெடி: சிங்கக் கூட்டத்தை எதிர்த்து நரிக்கூட்டம் உள்ளே வருகின்றதா? சோழராசன் பாம்புகளுடன் விளையாடுகின்றான்.அவர்களைச் சும்மா விடக்கூடாது. கடற்படைவீரர்கள் அனைவரையும் ஆயத்தம் செய்யும்படி உத்தரவிடும். கடற்படை வீரர்களுக்கு ஆறுமாதங்களுக்கு வேண்டிய உணவு, உடை, படைக்கலத்தைக்கொடுக்க ஆவன செய்யும், உடனே புறப்பட்டு போர்க்கப்பலில் ஏறுங்கள்.

நீல: தங்கள் யோசனை ...

வெடி: இதோ நானும் போருக்குப் புறப்படுகின்றேன். (நீலகேசி ஏங்குகிறாள்) உண்ண பாலடிசிலையும், உன் திருக்கரங்களினால் உறைவாளையும் தருவதற்கு ஆயத்தம்செய். நான் போர்அணி தரித்து வருகின்றேன். (வெடியரசன் செல்ல தொடர்ந்து நீலகேசியும் பின்செல்லல்)

➢திரை⮜

# அங்கம் ~ 10

*போர் இடம் பெறும் கடற்கரையும், கடலும்*

பாத்திரங்கள் : வெடியரசன், சேனாதிபதி, மீகாமன், படைவீரர்கள்
(கடல் இரச்சல் வாத்தியத்தில்)

வெடி: கீரிமலையில் நாங்கள் நிற்பதைக்கண்டு அதோ எம்மை நோக்கி படைகள் நகர்ந்து வருகின்றன. நானே கப்பலை முன்னோக்கிச் செலுத்துகின்றேன் கடற்படைவீரர் யாவரும் என்னைத்தொடர்ந்து வாருங்கள்.

சேனா: அதோ மீகாமன் படைகள் நெருங்கி வருகின்றன மன்னா!

வெடி: (கடுங்கோபத்துடன்) அவனுக்கு எவ்வளவு துணிச்சல். அட்டதிக்கு அரசர்களையும் வெற்றி கொண்ட என் வீரத்தை அறியாத கோழையாக இவன் படையுடன் வருகின்றான். அனுமதியில்லாமல் என் எல்லைக்குள் ஏன் படையுடன் வருகின்றாய் எனக் கேட்டு விடுவோம்..

மீகா: படைவீரர்களே அதோ கீரிமலையிலிருந்த வெடியரசன் படைஅணி எம்மை நோக்கி வருகின்றன. நாம் சண்டை செய்வதற்கு முன் வந்த நோக்கத்தை சமாதானமாக கூறிவிடுவோமே!

வெடி: சோழ அரசனின் கோடரிக்காம்பே! என் எல்லைக்குள் ஏன் அனுமதியின்றி எதற்காக பிரவேசிக்கின்றாய்.

மீகா: தேனாறு பாயும் திருநாக நாட்டில் செங்கோல் செலுத்தும் அரசே! மாணாக்கன் செட்டி மகள் கண்ணகிக்கு மறுகாட் சிலம்பு செய்ய இங்கே மாநாகமணியை வாங்கி வரும்படி என்னைச் சோழராசன் அனுப்பி வைத்தான்.

வெடி: மாநாகமணி பெறுவதற்கு இத்தனை ஆயிரங்கப்பல்களும் படைவீரர்களும் எதற்கு மீகாமா?

மீகா: இக்கப்பல்கள் மாநாய்கன் வணிகனுடையது. தனது பெயரையும், மரபையும் உணர்த்தி இந்நாகமணி தந்தால் பெறுமதியைக்கொடுத்து வாங்கி வரச்சொன்னார்கள். அல்லவேல் ........

வெடி: அல்லவேல் ......

மீகா: போர் செய்தாவது நாகமணியைப் பெற்று வரும்படி என்னை அனுப்பி வைத்தார். இது அரசன் கட்டளை.

வெடி: போர் .... போர் .... போர் (அகங்காரமாக கத்துகின்றான்)

வருமுறைபோல வந்து மணியது கேட்பீரானால், அருமையாய் வந்தாயென்று அவமொழி கூற மாட்டேன். கருகலாய் மனதிலெண்ணிக் கப்பல் சேனைகள் கொணர்ந்தாய், பொருதி நீ வெற்றி பெற்றுப்பெருமணி எடுத்துச் செல்வாய்.

மீகாமா! சண்ட மாருதம் போலச் சீறிவரும் எனது சேனைகளையழித்து என்னையும் கொல்வாயானால் நாகரத்தினத்தை எடுத்துக்கொள்ளலாம். அப்படியானால் குற்றமும் சொல்ல மாட்டேன்.

மீகா: போர் என்றால் போர் அதற்கும் நானும் அஞ்சமாட்டேன். அரசே கண்ணகைத் தாய்க்காக பொறுத்துக்கொண்டு உமது பாதம் பணிந்தேன். ஆனால் நீரோ வில்வித்தை போன்ற சேனைகளுடன் வந்து போராடுவேன் என்று வீர வார்த்தை பேசுகிறீர். நான் மாண்டு போவது நிச்சயமானாலும், நாளைக்குப் போரை ஆரம்பிக்கலாம். தலைக்குமேல் வெள்ளம் வந்தால் சாணென்ன முழமென்ன?

வெடி: சேனாதிபதியே அண்டத்தை எடுத்து கையில் வைத்து ஆட்டுகின்ற என்னுடன் இந்தச் சுண்டங்காய் போர்தொடுக்க வந்திருக்கின்றான். பாசறையில் நான் இருக்கின்றேன். முதலில் நீயே படையை நகர்த்தி மீகாமனை வென்று வருவாயாக.

சேனா: சரி அப்படியே செய்கின்றேன்
(மீகாமனும், சேனாதிபதியும் போர்செய்தல்)

சேனா: மீகாமா! இத்தனை காலமாக நாங்கள் அரசு புரிந்து வந்தோம். எமது சேனைகளை வென்று நாகரத்தினத்தை கொண்டு போகப்பாக்கிறாய் பித்தம் பிடித்தவனே. உன் எண்ணத்தைக் கடலில் தள்ளிவிட்டு ஓடிப்போ! எத்தனை நாளாகப் பிட மிட்டாலும் இரும்பு பசும் பொன்னாய் வருமா சொல்லு?

மீகா: சேனாதிபதியே! உங்கள் சேனை மடிந்தால் எனக்கு நாகரத்தினம் கிடைக்கும். அதனாலே அதிக லாபமில்லை. இரத்தினத்தாலே மேலும் செல்வம் பெருகும். அல்லாமலும் ஒரு யானை விழுந்தால் பெரிய கொம்பும், புலி விழுந்தால் தண்டையும் அகப்படுமென்பர்.

சேனா: அடம்பிடித்தவனே உனதாண்மையை அடக்கி, நாவடக்கி, வில்லாலுனை அடித்து வளைத்து, விலாவெலும்புகளை நொருக்கி, இன்று நின்று கொன்றுவுன் உடலை நண்டு, நரி, கழுகுக்கு உணவாக்குகின்றேன் பாரடா!
(வில்லால் அம்பு விடுதல்)

மீகா: உனது கர்வத்தை அடக்குகின்றேன் பாரடா! கொடிகள் முடிகள் தன்னை நொடியில் வீழ்த்தி என்னிடம் மடிதல் செய்திடுவேன் பாரடா!
(பின்னணியில்) (போர் நடைபெறுகிறது சேனாதிபதியின் படைகள் அழிந்து கொண்டிருக்கிறது இதைப் பார்த்த வெடியரசன் போருக்கு வருகின்றான்)

வெடி: மீகாமா! எனது படைகள் வீணான சமராடி ஒழிகின்றதில் பிரயோசனமில்லை மந்திர மலைக்கும் சரியான உனது தோளினை பூமியில் அரிந்து வீழ்த்த தனிப்போர் செய்கின்றேன் வருவாயா.....?

மீகா: மலையைச் செயித்துப் போட்டேனென்று மண்ணைப்பார்த்து யாரேனும் சொல்வார்களா? உமது வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசுகின்றேனென்று கோபிக்க வேண்டாம். என்னை எதிர்த்து வந்த உன்சேனைகள் கொன்று குவிக்கப்படுகின்றன. அதனால் நீர் அபசெயமடைதலே திண்ணம். வறுத்த வித்து முளைக்குமோ?

வெடி: முருங்கைமரம் பருத்தால் பெருந்தூணாகி விடுமோ! மீகாமா? புலிவேட்டை எலியாடுமா! மின்மினிப்பூச்சி பொழுதுக்கு முன்னே நாடுமோ! பருந்தைப் பாம்புகள் கொல்லுமோ! சிங்கக் குகைக்குள் பாய்ந்து நரி வெல்லுமோ! மூர்க்கா! முட்டுதற்கு கிட்ட வந்த உன்னை, சினங்கொண்டு சிரசுகையெடுத்து, முரசு அறைந்து, உனது அரசு தந்த அத்தனையையும் அழித்து விடுகின்றேன் பார்.

மீகா: ஐயோ ... வெடியரசன் படையினரின் அம்பு, ஈட்டி, சக்கரம், ஆயுதங்களின் முன் எம்மவரின் ஆயுதம் நின்று பிடிக்கவில்லையே! என்படையினர் கையிழந்து, காலிழந்து, தலையிழந்து உடலெல்லாம் வெட்டுக் காயங்களுடன் பிணமாகி இரத்தக்கடலில் மிதக்கின்றனரே வெடியரசனின் முன் என்னால் நிற்க முடிய வில்லையே ஐயோ .. (கீழே விழுந்தான்)

**வெடி:** ஆ.... ஆ..... (அகங்காரச்சிரிப்புடன்) நரிக் கூட்டங்கள் புலிக்கோட்டைக்குள் புக வந்ததோ...

(கண்ணகை அம்மன் நினைந்து மீகாமன்)

**மீகா:** கண்ணகை அம்மனே உன் அனுக்கிரகத்தை எனக்குத்தருவாயாக உன் பெயரால் இதோ இச்சக்கராயுதத்தை வெடியரசன் படைமேல் ஏவுகின்றேன் .. (சக்கராயுதத்தை ஏவுதல் வெடியரசன் படை அழிதல்)

**வெடி:** மீகாமன் கண்ணகை அம்மனின் அருள் பெற்று என்னை நிராயுதபாணி ஆக்கிவிட்டான். என் உயிர் தப்பிவிட்டது. எல்லாம் என் மனைவி எம் பெருமானுக்கு செய்யும் பூஜைகளாலும், அர்ச்சனைகளாலும், தான தர்மத்தினாலும் தான் என என் சிந்தையில் தெரிகிறது.

**மீகா:** தானாதிபதிகளே! நாகநாட்டின் தலைவன் வெடியரசனைக் கண்ணகையம்மன் கிருபா கடாட்சத்தால் வென்று விட்டேன். அவனை சிறைவைத்து காவல் புரிவீராக.

**சேனா:** அப்படியே செய்கின்றேன்.
(மீகாமன் கோபம் தணிந்து வெடியரசன் பக்கம் வந்து)

**மிகா:** சிங்கம் போல் சீறிய நீ என் கூட்டில் பாம்புபோல் வளைந்து கிடக்கின்றாய். அரசனே! கொல்வதாயின் இப்பொழுதே கொன்று தீர்த்திருப்பேன். நான் உன்னையோ உன் சேனையையோ அழிப்பதற்கு இங்கு வரவில்லை என்பதை நினைவூட்டுகின்றேன். கண்ணகை தெய்வத்தின் குழந்தை. அவளுக்கு நாகரத்தினம் பெறுவதற்காகத்தான் வந்தேன். எனது கண்ணகை அம்மனின்அருளினால் தான் உன்னை வென்றேன். ஆகையால் கண்ணகை அமமனின் கோபத்தை நீடிக்காது அந்த நாகரத்தினத்தை தந்தால் நான் திரும்பிப்போய் விடுவேன்.

**வெடி:** (சற்று யோசித்துவிட்டு) சரி நாகதீபம் சென்று நாகராசாவிடம் கேட்டுப் பெற்றுத்தருகின்றேன் அங்கு செல்வோம்.

(கப்பலில் மீகாமன் வெடியரசன் படையினருடன் கப்பலில் செல்லல்)
ஏலோ லோம் - ஏலை ஏலோம் - தத்தெய்தாம்
ஏலைலோம் - ஏலை ஏலோம்
(நாகதீபக்கடலை அடைதல்)

**மீகா:** சரி நாகதீப துறைமுகத்தில் வந்து சேர்ந்து விட்டோம் இறங்கிச்செல்வோம்.

**வெடி:** நாகராசன் தங்கி இருக்கும் களஞ்சியத்திற்கு செல்வோம். இதோ இவ்வழியாகச் செல்லுங்கள். நில்லுங்கள் இதுதான் நாகராசன் தங்கியுள்ள களஞ்சியம்.
(வெடியரசன் உள்ளே சென்று நாகராசனை வழிபட்டு விட்டு)

வெடி: நாகராசனே இந்த மீகாமன் என்னுடன் போர் செய்ய வந்தவனல்ல, செட்டியும், சோழனும் அனுப்பியதால் இரத்தினத்திற்காக இத்தூரம் அலைந்து விட்டான், தெய்வீகக் குழந்தை கண்ணகைக்கு சிலம்பு செய்வதற்காக இவன் கையில் இரத்தினத்தை ஈன்று அருள் செய்வீர் நாகராசனே!

மீகா: நல்லது நாகரத்தினம் எனக்குக்கிடைத்து விட்டது சரி வெடியரசனே நாம் செல்வோம்.
(சற்று நடந்து வரல்)

மீகா: அதோ கப்பல்கள் நிற்கின்றன. ஏறிச்செல்வோம். (படகில் செல்லல்)

ஏலோ லோம் - ஏலைஏலோம் - தத்தெய்தாம்
ஏலை அம்மா - ஏலைஏலோ .....

➢திரை➣

# அங்கம் ~ 11

*வீர நாராயணன் அரச சபை*

பாத்திரங்கள் :- வீரநாராயணன், ஏவலாளன், தூதுவன், சேனாதிபதி

(வீரநாராயணன், சேனாதிபதி அரசசபையில் இருக்கும் பொழுது ஏவலாளன் சபையில் உள் வருதல்)

ஏவ: தங்களைக் காண்பதற்கு தங்கள் அண்ணி நீலகேசி கொடுத்த ஓலையுடன் தூதுவன் ஒருவன் வந்திருக்கின்றான்.

வீரநா: அவனை உள்ளே வரச்சொல்

ஏவல: அப்படியே அரசே ....

(ஏவலாளன் தூதுவனுடன் சபைக்குள் வருதல்)

தூது: வணக்கம் அரசே

வீரநா: வந்த விடயம் என்ன?

தூது: தங்கள் அண்ணி நீலகேசி அவசரமாக ஓலை தந்து அனுப்பியுள்ளார் (ஓலையைக்கொடுத்தவுடன், அவசரமாக பிரித்து வீரநாராயணன் வாசித்தல்)

(வீர நாராயணன் கடிதத்தை வாசிப்பது போல் பார்க்க நீலகேசியின் குரலில் பின்னணி)

தங்கள் அண்ணன் எனது அன்பின் கணவன் எனது கனவின் பயனையும் சொல்லையும் பொருட்படுத்தாது மாற்றானிடத்திற் சென்று பிணிப்புண்பட்டு சிறைப்பட்டு விட்டார். மண்டியிடாத என் கணவன் பூவணையில் துயிலாமல், நேராகப் போர் வீரமுள்ள பெருஞ் சிங்கமாக கர்ச்சிக்காது, நேராகப்போர் புரியாமல் நெட்டூரம் செய்த மீகாமனுடன் போர் செய்து சிறைப்பட்டு விட்டார். உடனே அவரை மீட்க போரிலே வல்லவனான நீ பெரும்படையுடன் புறப்படுவாயாக.

இப்படிக்கு
நீலகேசி அண்ணி

(வீரநாராயணன் கடிதம் வாசிக்கும் பொழுது அதிர்ச்சி அடைதலும், வீராவேசம் கொள்ளலும்,அழுதலும்)

வீரநா: அண்ணா சிறைப்பட்டுவிட்டாயா, வாசுகி, அனந்தன், தக்கன், சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்கோடன் ஆகிய அட்டதிக்கு நாக அரசர்கட்கும் தலைவனான என் தலைவன், மீகாமனிடம் அடங்கினானா! அரசனுக்கு அரசனாய், தந்தைக்குத் தந்தையாய், தாய்க்குத் தாயாக எம்மை வளர்த்த என் அண்ணா! நானும் போருக்கு வருகின்றேன் என்றதும் 'போர் அறம் போதித்து'என்னைத்தடுத்துப்போருக்குச்சென்றீரே என் அண்ணா! அட்டதிக்குப் பாலகர்களான, இந்திரன், அக்கினி, இயமன், வருணன், வாயுதேவன், நிருதி, குபேரன், ஈசானன் ஆகியோர் உனக்கு அடங்குவன் என்பாயே! தேவாதி தேவர்களின் வரங்களையும் பெற்று நாராயணனன் வலது காலில் உதித்த அண்ணன் ஒரு பட்டணத்து மீகாமனிடம் மண்டியிட்டானா! சீ .... சீ ...என்ன கொடுமை கொடுமையிலும் கொடுமை. ஒரு நொடிப்பொழுதில் (வீராவேசத்துடன்) அவனைக் கொன்றிலனேல் நான் மாவேந்தன் வெடியரசன் தம்பியல்லேன் ... சேனாதிபதியே ... ஒலிக்கட்டும் வீர சங்குநாதம் ,அறையட்டும் நம் வீரமுரசு புறப்படுங்கள் போர் ... போர் ... போர் ...

சேனா: அப்படியே, உடனே ஆயத்தம் செய்கின்றேன்.

➢திரை➣

# அங்கம் ~ 12

## *போர்முனை*

பாத்திரங்கள் : வீரநாராயணன், மீகாமன், வெடியரசன், படைவீரர்கள்

(கப்பலில் வெடியசன், படைவீரர் நாகதீபத்திலிருந்து நாகரத்தினத்துடன் கப்பலில் வருதல்)

ஏலோ லோம் – ஏலை எலோம் – தத்தெய்தாம்
ஏலோ அம்மா – ஏலை ஏலோ

வீரநா: அதோ மீகாமன் கப்பலும் படை வீரர்களும் ஏழாற்றுப் பிரிவு வழியாகச்சென்று கடற்காரைதீவு தென்மேற்பகுதியண்டி வருகின்றார்கள். எமது நாடெல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து என் அண்ணரைச் சிறைப்பிடித்தவனைக் கொல்லு கின்றேன் பார்! (கர்ச்சிக்கின்றான்)

மீகா: அதோ ஆயிரமாயிரம் கப்பல்களில் பல்லாயிரக்கணக்கான போர்வீரர்கள் சகிதம் எம்மை எதிர்கொண்டு வருகிறார்கள் அதன் நடுவில் நின்ற சேனையை தலைமை வகித்து வருகிறவன் யாராக இருக்கலாம் வெடியரசன் அரசே!

வெடி: அவன் தான் என் வீரத்தம்பி வீரநாராயணன்.

மீகா: உமது தம்பியை சமாதானப்படுத்தி அனுப்பி விடும். அப்படி அனுப்பினால் உம்மை எனது தோழனாக ஏற்று மாநாயகனிடமும், சோழ அரசனிடமும் அழைத்துச்சென்று வேண்டிய பொன், பொருள் தந்து உறவு கொண்டாடி மீண்டும் உமது நாட்டிற்கு அனுப்பி வைப்பேன்.

வெடி: (வெடியரசன் ஓலையில் அவசரமாக எழுதி அம்பில் குத்தி வீரநாராயணன் பக்கம் எய்கின்றான்)

அதை வீரநாராயணன் எடுத்து வாசிக்கின்றான்.

தம்பி வீரநாராயணா! மீகாமன் சமாதானத்தை விரும்புகின்றான் உன்னைத் திருப்பி அனுப்பும் படி கேட்கின்றான்.

இப்படிக்கு அண்ணன் வெடியரசன்.

வீர: என் அண்ணனைச் சிறைப்பிடித்து வைத்து கட்டாயக் கையெழுத்துக் கடிதமா! என் அண்ணனைச் சிறைப்பிடித்தவனுடன் சமாதானமா! அவனை இதோ கொல்கின்றேன். சேனாதிபதியே போரை ஆரம்பிப்பாயாக ...
(போர் இடம் பெறுகிறது)

மீகா: வீரநாராயணா கப்பல்கள் நகர முடியாதபடி சேனைகள் வீணாக இறந்து மிதக்கின்றன. எனவே ஒன்றுமறியாத படைவீரரைத் தவிர்த்து நாம் இருவரும் போரிடுவதே தர்மம், சம்மதிப்பாயா!

வீரநா: கர்ச்சிக்கும் சிங்கத்திற்கு முன் எலியென்றாலென்ன, நரியென்றாலென்ன தர்மத்தைப்பற்றிப் பேசுகின்றாய், தர்மத்தின் பெயரை இழுத்தபடியால், சரி நாம் இருவரும் போரிடச் சம்மதிக்கின்றேன்.
(மீண்டும் இருவரும் போர்)

வீரநா: அயல்நாட்டு அந்நியனே! அச்சமின்றியே இங்கு வந்தாயோ, என் அண்ணனைச் சிறைப்பிடித்தாயோ, வில்லு, சில்லுப்போக்கி பல்லு உடைத்து எமன் புரத்துக்கு அனுப்புவேண்டா, கத்தி கத்தி வெருளாதே மீகாமா! தலை தத்தித் தத்தியுருளுதே சற்று நேரத்தில், இரும், பாரும் கண நேரத்தில் பாணம் தொடுக்கின்றேன். எல்லோரும் வசை பேசும்படி நாணச்செய்கின்றேன்.

மீகா: கொல்வேன், பதவாளினால் உன்னையே, கொக்கரித்து நீ குதிக்கிறாயடா, அற்பகுணம் கொண்டவன் போலவே ஆத்திரமாய் பேசினாயடா, சத்தம் வைத்து சும்மா கத்திடாதே. என்னைத்தர்க்கமிட்டு சும்மா பிசத்திடாதே. குத்துவேன் உன்னைக் குருதியே எடுப்பேன். கத்துமே காக்கை கழுகிடம் கொடுப்பேன். காலும், தலை, மார்பும் புவி வீழும்படி என் சக்கராயுதத்தை ஏவுகின்றேன், இப்போது.

வீரநா: ஈட்டியால் உன்னை இடித்திடுவேன் நாட்டுவோம் வீரவாகையை, காட்டுவோம் நாங்கள் களத்தினில் வெற்றி நாட்டுவோம். சொந்த நகரிலே விட்டுவிட்டுப் படை ஓடச் செய்கின்றேன். அடே! என் கணை தொட்டுத்தொட்டு உன் உடல் கிழிக்குதே பாரடா என் பாணத்தை விடுகின்றேன்.

மீகா: கண்ணகைத் தாயே! நான் இறந்து விடுவேன் போல் இருக்கிறது. இதோ கடைசியாக உன்னை நினைந்து உன் அனுக்கிரகம் கிடைக்குமென்று இந்த சூர பாணத்தை வீரநாராயணன் மேல் விடுகின்றேன்.
(சூரபாணம் வீடுதல் வீரநாராயணன் மேல்பட்டு அவன் இறத்தல்)

மீகா: வீரநாராயணதேவனே நீ என்னை யுத்த களத்தில் வெட்டிக் கொல்ல நினைத்தாய். இல்லை ...இல்லை நான் தெய்வக் குழந்தை கண்ணகைக்காக வந்தவன் தானே. அதனால் கண்ணகை அம்மன் கிருபையால் பிழைத்தேன். உடையவன் கண்ணாயிருந்தால் பயிரழியுமோ?
(மீகாமன் வீரநாராயணன் உடலை வெடியரசன் முன் கொண்டு வந்து போடல்)

வெடி: (அழுது கொண்டு) வீரநாராயணா என்னைக்காப்பாற்ற வந்து உன் உயிரைப் போக்கி விட்டாயே! சந்திரவதனா இதையறிந்தால் என்ன செய்வாளோ! தெய்வத்துடன் போரிடுகின்றேன் என்பதை அறிந்து சமாதானமாகத் திரும்பிப்போ என்றேனே! நீ ....... இல்லை ... இல்லை .... வெடியரசன் தம்பியல்லவா. புறமுதுகு காட்டாத வீர பரம்பரையல்லவோ (ரோசத்துடன்) ஐயோ .... ஐயோ .... யாரிட்ட சாபமோ! .....

➢திரை≺

# அங்கம் ~ 13

*போர்முனை*

**பாத்திரங்கள்: விளங்குதேவன், போர்வீரகண்டன், எரிளங்குருவன், வெடியரசன், மீகாமன்,படைவீரர்கள்**

(போருக்குக்கப்பலில் செல்கின்றனர்.)

**வி.தே:** தம்பி போர்வீரகண்டா! திருத்தம்பலேஸ்வரர், ஈஸ்வரி,கதிரையாண்டான், பொன்னாலை ஆலயங்களில் விசேட பூசை ஆரம்பித்து மணி ஓசைகள் கேட்கின்றன.

**போ.வீ:** அண்ணா! பெரிய அண்ணன் வெடியரசனுக்கு எதுவும் நடைபெறக்கூடாது என்பதற்காகவும், வீர மரணமடைந்த அண்ணன் வீரநாராயணன் நினைவாகவும், இன்று நான் தர்மம் செய்ய வேண்டிய ஒழுங்குகள் செய்து விட்டு வந்துள்ளேன். விளங்குதேவன் அண்ணா

**எரிள:** எமது படைவீரர்கள் முரசொலி, சங்குநாதம் முழுங்குகின்றார்கள். போர்க்குப் புறப்படுவோம்.

**போ.வீ:** விளங்குதேவன் அண்ணா! அதோ மீகாமன் படைக்கப்பல்கள், காவற்றுறையைக் கடந்து கடற்காரைதீவும் கடந்தோடிக்கொண்டு செல்கின்றன. இவர்களைச் சும்மா விடக்க கூடாது கப்பல்களை விரைவாக ஓட்டுங்கள்.

**எரிள:** எல்லோரும் சக்கரங்கள், ஈட்டிகள்,அம்புகள், எடுத்து ஆயத்தமாகி போர்முரசு கொட்டுங்கள்.

வெடி: மீகாமா! அதோ நெருங்கி வரும் போர்வீரர்கள் என் இளைய தம்பிமார்கள் விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிளங்குமரன், ஆகியோர். வீரநாராயணன் இறந்தது போல் இம்மூவரும் இறந்தால் நான் தனித்து விடுவேன்.

மீகா: அவர்கள் உயிரைப் பெரிதென மதிக்கும் நீர், அவர்களைத் திரும்பிப் போகச் சொல்வீர் (வெடியரசன் மௌனம் சாதித்தல்)

மீகா: நான் உன் தம்பிமார் மூவரையும் சிறைப்பிடித்து, அநுமன் இந்திர சித்துவைச்சிறைப்பிடித்து கட்டி வைத்தது போல் அவர்களையும் கட்டி மாநாயகனிடம் கொடுக்கின்றேன் பார். வெடியரசனின் தம்பிமாரே! போரை விரும்புகின்றீர்களா! சமாதானத்தை விரும்புகிறீர்களா!

விள: புலிக்கெதிராக மான் சென்றால் ......

போ.வீ: மான்தான் நடுக்கமுறும்.

ஏ.கு: நாய் முன்னே நாய் சென்றால் ..

போ.வீ: அவற்றைக் கட்டியிருக்கும் சங்கிலிதான் நடுங்கும்.
(மூவரும் அகங்காரச் சிரிப்பு)

ஏரி: இவனென்னவென்றால் எங்களைச் சரணடையச் சொல்கின்றான் ...

விள: டேய் மீகாமா! உன் படையினரை நேரே சமர் புரியச்சொல்வாய்.

மீகா: வீணாக படைவீரர்கள் இறந்து கடலே சிவப்பாக ஓடுகிறது. இந்த யுத்தத்தை தனித்துப் புரிவோம். நான் வென்றால் நாகமணியுடன் நம்நாடு செல்ல விடை தரவேண்டும். அன்றேல் விளங்குதேவனான நீ வென்றால் இறந்தோரின் நஷ்ட ஈட்டை தருவதுடன் நாகமணியையும் விட்டுவிட்டுச் செல்கின்றேன்.

விள: சரி அப்படியே போர் செய்வோம்.

(விளங்குதேவனும், மீகாமனும் வாள் சண்டை செய்கின்றனர். பின் எரிளங்க தேவனுடன் சண்டை செய்தல். ஏரிளங்கதேவனுடன் போர் செய்ய முடியாது மீகாமன் அவதிப்படல், வெடியரசன் போர்க்கப்பலுக்குள் புகுந்து மீகாமனையும், தம்பிமாரையும் விலக்குதல்)

வெடி: (மீகாமனைப் பார்த்து) இவனோ கண்ணகித் தாயின் தூதுவன் - இவனைக் கொல்வது பாவம். இவனை என் சகோதரனாக நினைந்து இவனிடம் இச்சிறு நாகமணியை கொண்டு செல்ல அனுமதித்து விடுங்கள்.

ஏரிள: அண்ணா! (கோபத்துடன்) எட்டுத்திக்குப் பாலகர்களும் அண்ணன் வீரநாராயணனுக்கு அடங்குவர். நாக அரசர்கள் எண்மரும் உங்கட்கு தலைவணங்கி நாகமணி கொடுப்பார். அப்படி இருக்க என் அண்ணனைக் கொன்றவனை நான் உயிருடன் விடுவேனா?

(நிதானமாக இரக்கத்துடன்)

வெடி: ஏரிளங்கா! நீ கடைக்குட்டி உனக்கு ரோசம் கூடத்தான் இருக்கும். நாம் தெய்வத்தின் தூதுவனுடன் போரிட்டு வெல்ல முடியாது. நீ அந்த நாகமணியைக் கொடுத்து அவனை அனுப்புவாயாக.

ஏரிள: மீகாமா! நீ வந்த வேளை நல்ல வேளையாயிற்று, இதுவரை அண்ணனின் சொல் மீறாத நான் இன்று மீறுவதா? - இல்லை ... இல்லை ... மீற மாட்டேன். (தன்னை அடக்கிக் கொண்டு) (நாகமணியைக்கையில் எடுத்து) 'இந்த அற்ப நாகமணிக்காக என் நாட்டைச் சின்னாபின்னமாக்கினாய். அதே போல் இம்மணியை ஆபரணமாக அணிபவளின் கணவனும், என் அண்ணன் மடிந்ததுபோல் உயிர் துறப்பான்' இது என் சபதம், இது என் சபதம். (ஆவேசத்துடன் கூறுதல்)

ஏரிள: மீகாமா நாகரத்தினத்தை நான் வைக்கின்றேன். நீ என் அண்ணனைக் கொன்ற துரோகி. என் கால்களுக்குக் கீழால் நுழைந்து எடுத்துக்கொண்டு உன் நாடு செல்வாயாக. என்முன் நின்று எனக்கு ஆத்திரத்தை ஊட்டாதே எட்டிப்போய்விடு.

ஏரிள: அண்ணா நாங்கள் எமது இருப்பிடத்திற்கு சென்றடைய கப்பல்கள் ஆயத்தமாக உள்ளன.
(வெடியரசனும் மற்றும் தம்பிமார் மூவரும் கப்பலில் செல்கின்றனர்)


ஏல ஏலோ - தத்தைதாம் ஏலவலோ
ஏல அம்மா - தத்தைதாம் ஏலவலோ

➢திரை⮜

## துணை ஆதாரங்கள்:-

1) வெடியரசன் நாட்டுக்கூத்து - கையெழுத்துப்பிரதி நெடுந்தீவு நா.சங்கரப்பிள்ளை.
2) 'விஸ்ணுபுத்திரர்கள்' நூல் மு.க சிவப்பிரகாசம்.
3) நெடுந்தீவு புலவர் அரியநாயகம் (வாய்மொழி தகவல்)
4) காரைநகர் தேவதாசன் (வாய்மொழித்தகவல்)

# சங்கிலியன்



## வரலாற்று நாடகம்

# சங்கிலியன்
# நாடக மாந்தர்கள்

| | |
|---|---|
| பரராசசிங்கன் | - யாழ்ப்பாணத்தரசன் |
| பரநிருபசிங்கன் | - சங்கிலியன் அண்ணன் |
| வள்ளியம்மை | - பரராசசிங்கன் மனைவி |
| சங்கிலியன் | - பரராசசேகரன் மகன் யாழ்ப்பாணத்தரசன் |
| பரவை | - சங்கிலியன் தங்கை |
| அப்பாமுதலி | - மந்திரி - அமுதவல்லியன் தகப்பன் |
| தனிநாயகமுதலி | - முதன் மந்திரி |
| அரசகேசரி | - அவைக்களத்துப் புலவர் |
| இமையாணன் | - தளபதி |
| மணியகாரன் | - மணியகாரன் |
| மழுவராயர் மாப்பாணர் | - நெடுந்தீவு மாப்பாணமுதலியார் |
| உரசிங்கன் | - மன்னார் பகுதி தலைவன் |
| பிறகன்சா | - பறங்கியர் தளபதி |
| வண மன்சிலாசு<br>வண சபேரியார் | - போர்த்துக்கேய மதகுரு |
| அமுதவல்லி | - அப்பாமுதலி மகள், சங்கிலியன் காதலி |
| வடிவழகி | - அமுதவல்லியின் தோழி |
| இராசமாதேவி | - சங்கிலியன் மனைவி |
| செங்கமலம் | - இராசமாதேவியின் தோழி |
| சின்னவர், தம்பையர்<br>கணபதி, சங்கரப்பிள்ளை | -யாழ்ப்பாண பிரசைகள் |
| அடியார்க்கு நல்லான் | - மந்திரி |
| வீரமாப்பாணன் | - சங்கிலியன் மெய்க்காப்பாளன் |
| காக்கைவன்னியன் | - ஊர்காவற்றுறைத்தலைவன் |
| சிங்களமுதலியார் | - சிங்களப்பிரதிநிதி |

SWAMI ABRAHAM
community centre
SULAMANKAL-MALLAKAM.
Regd. No: J/VC/21/844



மாவீரன் சங்கிலியரசன் தோன்றும் காட்சி.



பரநிருபசிங்கனின் மந்திரிமனையின் இன்றைய தோற்றம்.
01.12.2000

# அங்கம் ~ 1

*பரராசசேகரனின் படுக்கைஅறை*

பாத்திரங்கள்: பரராசசேகரன், வள்ளியம்மைதேவி, பரநிருபசிங்கன்

(அரசர் பரராசசேகரர் மலர் மஞ்சத்தில் சாய்ந்திருக்கிறார் வள்ளியம்மை தேவியார் மன்னரது காலடியில் அமர்ந்திருக்கிறார். அப்பொழுது பரநிருபசிங்கன் வருகிறார்)

பரநிரு: தந்தையே! என் அருமை அண்ணன் பண்டாரத்தை இழந்த நினைவிலிருந்து என்னால் மீள முடியாமலிருக்கின்றது. அவரது உடலைக்காணக்கூட எனக்குக் கொடுத்து வைக்கவில்லை.
(பரராசசிங்கம்,வள்ளியம்மையும் சேர்ந்து மௌனமாக விம்மி, விம்மி கண்ணீர் விடுகிறார்கள்)

பரநிரு: (தன்னைத்திடப்படுத்திக்கொண்டு) என் மூத்த அண்ணன் சிங்கபாகுவை நஞ்சூட்டிக் கொன்றார்கள். இப்பொழுது அண்ணா பண்டாரத்தைக்கொலை செய்தார்கள் இன்னும் யார் யாரைக் கொல்லவிருக்கிறார்களோ! சிறுவயதிலேயே தங்கள் தந்தை கனகசூரிய சிங்கை பாரியச் சக்கரவர்த்தியோடு போர்க்களத்தில் புகுந்து உங்கள் வீரத்தை நிலைநாட்டிய தங்கள் ஆட்சியில் இப்படிக் கொடுமைகள் நடக்கிறதைத் தங்களால் தடுக்க முடியாதா?

பரராச: எம்படைகள் விழிப்புடன் தான் இருக்கின்றனர். ஆனால் மர்மமாக இக்கொலைகளை செய்தவர்களைக் கண்டுபிடிக்க, நிரூபிக்கத்தக்க போதிய ஆதாரங்கள் இல்லாமல் இருக்கிறது.. கோவலனைக் கொல்லுவித்த நீதி தவறிய பாண்டியனுக்கு என்ன நடந்ததென்று உனக்குத்தெரியும் தானே!

பரநிரு: நீதி தவறி உங்களை நடக்கச்சொல்லவில்லையே. அநீதி செய்பவர்களைக் கண்டுபிடித்து நீதி வழங்கவேண்டுமன்றல்லவா நான் கூறினேன்.

பரராச: காலம் பதில் சொல்லும். சரி கண்டி அரசன் மனைவியின் உயிரைக் காப்பாற்ற வைத்தியம் செய்வதற்குச் சென்றாய் அவள் பிழைத்தாளா? பிழைத்தாளா?

பரநிரு: உங்கள் மகனின் வைத்தியத்தில் தங்களுக்கு நம்பிக்கையில்லையா?

பரராச: நம்பிக்கையில்லாமலா நான் உன்னை அனுப்பி வைத்தேன் நான் நிகழ்காலத்தையல்லவா கேட்டேன்.

பரநிரு: தந்தையே! நான் இனிமேல் 'பரநிருபசிங்க வைத்திய இராசேந்திரன்'. என் அண்ணன் பண்டாராவுக்கு இதைக் கூறி சந்தோசப்பட இருந்தேன் சட்டநாதா நீயும் விரும்பவில்லையா?

பரராச: இடைக்கிடை அவன் நினைவை ஊட்டுவதால் நானும் எங்கே எங்கே எல்லாம் சென்று விடுகிறேன்.

பரநிரு: தந்தையே! 'இவ்விலங்கையிலும், தென்னாட்டிலும் உள்ள வைத்திய சிரோன் மணிகளையெல்லாம் தலைகுனியவைத்த இக்கொடிய சூலை நோயைத் தீர்த்து உனது சாமர்த்தியத்தால் என் தேவி உயிர் பிழைத்தாள். இது மெச்சத்தக்கது' எனக் கூறி பட்டத்தையும் சூட்டி கௌரவித்த கண்டியரசன் அனேக வரிசைகளும், யானைகளும், திரவியங்களும் கொடுத்து அனுப்பினான். இவற்றையெல்லாம் கொண்டு வந்த எனக்கு மங்கள வாத்தியங்களுடன் வரவேற்பு கிடைப்பதற்கு பதிலாக அண்ணனினதும், பெரியதாயாரினதும் சாவு அறிவித்தல் ஒலி பரப்ப அமங்கல வாத்திய ஒலியுடன் வந்து சேர்ந்தேன்.

பரராச: பரநிருபா! இரு மைந்தர்களையும் உன் பெரிய தாயாரையும் இழந்து விட்டதனால் கண்களை இழந்தவனைப் போல பரிதவிக்கின்றேன்.. அமைதியாக இராச்சியத்தைப் பரிபாலிக்க வேண்டுமென்ற ஆசை, சதி, கொலை, சூழ்ச்சி, என்பவற்றினால் மண்ணோடு மண்ணாகி விட்ட ..... (அரசன் அமைதியான குரலில், வள்ளியம்மை தண்ணீர் செம்பைத்தா? (தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கிறார்)

பரநிரு: தந்தையே! நான் கண்டிக்குப்போய் வரும் வழியில் வன்னியர்களின் தலைவனான காக்கை வன்னியனும் அவன் சுற்றமும் என்னை வரவேற்றனர்.

பரராச: நீ ஏற்றுக் கொண்டாயா?

பரநிரு: எனக்கு விருப்பமில்லாத பொழுதும் மறுக்க முடியாது அவனது மாளிகைக்குச் சென்றேன் நான் அதிகம் பேசாது மௌனமாக இருந்தேன்.

பரராச: அப்போது அவன் என்ன செய்தான்?

பரநிரு: 'எங்களது வரவேற்பு தங்களுக்குப் பிடிக்கவில்லையா, சிங்கபாகுவின் மரணத்திற்குப்பிறகு யாழ்ப்பாணஅரசு ஏனோ துவேசம் பாராட்டுகிறது' என்று காக்க வன்னியன் என்னிடம் கேட்டான் பக்கத்து அரசினை நேசிக்கத் தெரியாத உங்களது வரவேற்பு எனக்குத் திருப்தியைத் தரும், என எதிர்பார்க்கிறீர்களா' என்று பதில் கூறினேன். அதற்கு உங்கள் தமையனார், வன்னியர்களின் சதிக்கே பலியானவர் என்பதற்கு என்ன அத்தாட்சி என்று கேட்டான்.

பரராச: நீங்கள் எங்களுக்கு உரிமையான நெடுந்தீவு போன்ற தீவுகளிலுள்ள மாடுகளை இரகசியமாகக் கொள்ளையிட்டீர்கள். இதையும் மறக்கிறீர்களா' என்று கேட்டிருக்கலாமே?

பரநிரு: நீங்கள் சொன்னபடி நான் கேட்டேன். அவன் எல்லாவற்றையும் மறுத்து விட்டான். 'உங்கள் சகோதரனைக் கொல்வதனால் எங்களுக்கு என்ன பயன் இளவரசே என்று கேட்கிறான். நாங்கள் உங்களுக்கு இற்றைவரை விசுவாசமாக இருந்து

வருகிறோம். தேவையில்லாத 'சந்தேகங்களை எங்கள் மீது கொண்டு வீண் பழிகளை எம்மீது சுமத்தி எம்மை வெறுப்படையச் செய்து வருகின்றீர்கள்' என்றான். வன்னியன் ஒருவன் தான் நஞ்சூட்டிக் கொன்றதாகப் பிடி பட்டிருக்கின்றானே எனக் கேட்டேன். 'உங்கள் இராச்சியத்தில் இடம் பெறும் சோகக்கதைகளுக்கும் எனக்கும் ஒருவித தொடர்பும் கிடையாது. ஆனால் .. ஒன்று மட்டும் சொல்கின்றேன். எங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத சில வன்னியர்கள் எங்களுக்குத் தெரியாமலே துரோக வேலைகளில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கின்றேன். நெடுந்தீவில் மாடு கடத்தியவர்கள் அப்படியான ஒரு கூட்டமே அவர்களைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்கியுள்ளேன். எனவே வன்னியர்கள் செய்யும் துரோக நடவடிக்கைக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் கிடையாது நம்புங்கள்' என்று கேட்டுக் கொண்டான் ஆகையால் அவன் கூறுவதிலும் உண்மைகள் இருக்கலாம்.

பரராச: எதற்கும் காத்திருந்து தான் பார்க்க வேண்டும். பரநிருபா வன்னியர்களின் தொல்லை இப்படியிருக்க கோட்டை இராச்சியத்தைப் பிடித்த பறங்கியரின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. வடக்கே எமது இராச்சியத்தில் கண் வைத்துக்கொண்டிருக்கின்றனர். நாட்டுப்பற்றில்லா சுயநலச் சிங்களப்பிரிவு பறங்கியருக்கு இடங்கொடுத்து அவர்களும் எமக்கு அச்சுறுத்திக்கொண்டிருக்கின்றனர், எமது இராச்சியத்தில் சதிக்கொலைகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன, இந்த நிலையில் எமது யாழ்ப்பாண இராச்சியம், தனது கொலுவிழக்காது. கொற்றவன் கொடி தாழாது, தொடர்ந்து சுதந்திரமாக தன் செங்கோலை நாட்டக் கூடிய தலைவன் ஒருவன் காலத்தின் தேவையாகவுள்ளது. எனவே என் சொல்லை நீ கேட்பாயா?

பரநிரு: தந்தையே! இது என்ன பேச்சு, கட்டளையிடுங்கள் நிறைவேற்றுகின்றேன்.

பரராச: எனது ஈமக்கடன்களைச் செய்ய நீயாவது உயிருடன் இருக்க வேண்டும் என விரும்புகின்றேன் ஆதலால் ...

வள்ளி: (தனது காதுகளைப்பொத்திக்கொண்டு) இது என்ன பேச்சு?

பரநிரு: ஏன் இவ்வாறெல்லாம் பேசுகிறீர்கள்?

பரராச: பரநிருபா ...............

பரநி: தந்தையே! நீங்கள் எதை விரும்பினாலும் தயங்காது கேளுங்கள் ... நான் நிச்சயமாக செய்வேன்.

பரராச: பரநிருபா! இந்த இராச்சியம் உனக்கு வேண்டாம் நீ உயிரோடு வாழ வேண்டும். எனக்கு ஈமக்கடன்களைச் செய்ய நீ இருக்க வேண்டும் மகனே. இந்நாட்டின் முடி உனக்கு வேண்டாம். உன்னிடம் இந்தப் பிச்சையை யாசிக்கின்றேன் பரநிருபா? (அரசனின் கண்களிலிருந்து கண்ணீர் சொரியக்கேட்டல்)

பரநிரு: கட்டளையிட வேண்டிய நீங்கள் என்னிடம் எதற்காக யாசிக்கின்றீர்கள்? நீங்கள் கட்டளையிட்டால் நான் செய்வேன் தானே? உங்கள் கட்டளை எனக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருந்தாலும் சரி, தீமையே பயப்பதாயினும் சரி, உங்கள் விருப்பப்படி யாழ்ப்பாண அரசின் மணிமுடி எனக்கு வேண்டாம் நீங்கள் கொடுக்க விரும்புகிறவருக்குக் கொடுங்கள். உண்மையாகவே எனக்கு மண்ணாளவேண்டும் என்ற ஆசையில்லை. என் சிறிய தந்தை செய்த அதே வைத்திய சேவையை மக்களுக்குச் செய்து வாழுகின்றேன். அதுதான் நான் விரும்புவதுமாகும்.

பரராச: (மகனை அணைத்து) பரநிருபா இவ்வாறு சுலபமாக நீ இணங்குவாயென நான் எண்ணவில்லை.

பரநிரு: தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற பொன்மொழிக்கேற்ப வாழ விரும்புகின்றேன்.

வள்ளி: நாதா! எதற்காக இப்படியான ஒரு முடிவு எடுத்தீர்கள்?

பரரா: வள்ளி! அடுத்து யாழ்ப்பாணத்தின் முடியை ஏற்பவன் எந்த எதிர்ப்பையும் தாங்கி வெற்றி கொள்ளக் கூடியவனாகவிருக்க வேண்டும். இராச்சியத்தின் நன்மை ஒன்றிற்காகவே தனது சக்தி யாவற்றையும் செலவிடக் கூடியவனாகவும் இருக்க வேண்டும்.

வள்ளி: அதற்கு என் மகன் பரநிருபன் ஏற்றவனில்லையா சுவாமி?
(பரநிருபனை நோக்கி)

பரராச: பரநிருபா நீ வீரன், உன் வீரத்தை நான் நன்கு அறிவேன் உன்னிடம் ஒரு குறைபாடுள்ளது. வைத்திய சோதனைகளில் உன் மனதை நீ செலுத்தி விட்டாயானால், ஊண், உறக்கத்தைக்கூட மறந்து விடுவாய் அப்படியே இராச்சியத்தையும் மறந்து விடலாமல்லவா? இந்த ஒரு குறைபாட்டிற்காக மட்டும் இந்த அரசை இல்லாது செய்யவில்லை வேறு சில காரணங்களுமுள.

பரநி: அவற்றைக் கூறக் கூடாதா தந்தையே!

பரரா: அவற்றை என்னிடம் கேட்காதே! பல காரணங்கள் இருப்பதனாலேயே உனக்கு இந்த முடிவேண்டாம் என்கின்றேன். காலம் வரும் போது பலவற்றையும் நீயே உணர்ந்து கொள்வாய். ஒன்றை மட்டும் திடமாக நம்பு – பரநிருபா உனக்கு நான் துரோகம் செய்யவில்லை. உனக்கு உரிமையான அரசைப் பறிக்க வேண்டும் என்ற எண்ணமும் எனக்கில்லை.

பரநிரு: ஆனால் தந்தையே! என் உயிருக்கு ஆபத்து என்பதற்காக இந்த அரசை வேண்டாம் என்று கூறவில்லை. அவ்வாறு கூறவும் மாட்டேன். உங்களது கட்டளையை மீறக் கூடாது என்பதற்காகவும், எனக்கு விருப்ப மில்லாதிருப்பதனாலும் இந்த இராச்சியத்தை வேண்டாம் என்கின்றேன். நான் மனம் வருந்தவில்லை முடி ஏற்பவன் யார் என்று கூறினால் மட்டும் போதுமானது.

பரராச: யாழ்ப்பாண இராச்சியத்தின் உள்ளும் வெளியேயும் உள்ள சதி எதிர்ப்பைச் சமாளித்து எமது இராச்சியத்தின் நிலைகளைத் தளராது நிலை நிறுத்தக் கூடிய பல சாதனைகளைச் செய்த உன் தம்பி சங்கிலியனே (வள்ளியம்மை திக்கு முக்காடுகிறாள்)

பரநி: தந்தையே! தங்களின் அறிவு, அனுபவம், முதிர்ச்சிக்கேற்ற நல்ல ஒரு முடிவை எடுத்துள்ளீர்கள். நானும் அவனையே எண்ணியிருந்தேன். அவன் இந்நாட்டின் அரசன் மட்டுமல்ல நல்ல சேனாதிபதி நல்ல வீரத்தளபதி கூட ஆனால் ஒரு சந்தேகம்.

பரரா: சந்தேகம் உடனே தீர்க்கப்பட வேண்டியது.

பரநி: அவனது உயிருக்கு ஆபத்தில்லை என்பதை எப்படி நம்ப முடியும்?

பரரா: பரநிருபா அவன் தான் சிறந்த வீரன் எனச் சற்று முன் கூறினாயே?

பரநி: என் அண்ணன்மார்களும் சிறந்த வீரர்கள் தானே?

பரர: உன் அண்ணன்மார்களிலும் சிறந்த வீரன் சங்கிலியன் என்பதை ஒப்புக் கொள்வாய். சங்கிலியன் பெயரைக்கேட்டால் எதிரிகள் நடுங்குவர் என்பது உனக்குத் தெரியும் அவன் உயிருக்கு எந்த விதமான ஊறும் வரமாட்டாது என்பதைத்திடமாகக் கூறுவேன்.

பரநி: தந்தையே சிறிது படுத்து ஓய்வெடுங்கள் மிகுதியை நாளை பேசுவோம்.

பரரா: நாளை இருக்கிறேனோ இல்லையோ தெரியாது. இன்றே பேசி முடித்து விடுவோம் சங்கிலியன் வீரனாகிலும் இளம்கன்று. அவனுக்கும் அறிவுக்கூர்மையிலும் பார்க்க உணர்ச்சிக் கூர்மை கூட. புத்திமதி கூறித்தக்க வழியில் நடத்துவது உன்கடமை.

பரநிரு: அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள் ஐயா! நாளையே மந்திரிச் சுற்றத்தாருக்கு அறிவித்து முடிசூட்டு விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யட்டுமா?

பரரா: அவசரப்படாதே பரநிருபா, சங்கிலியனிடம் அவனது சம்மதத்தைக்கேட்க வேண்டாமா?

பரநிரு: அவனைச் சம்மதிக்க வைப்பது என்பொறுப்பு நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படாதீர்கள் நாங்கள் சங்கிலியனிடம் செல்வோம்.

திரை

# அங்கம் ~ 2

*அரண்மனை ஆலோசனை மண்டம்*

(பாத்திரங்கள்: பரராசசேகரன், பரநிருபன், ஆலோசனை மண்டபத்தில் அமர்ந்திருக்கின்றனர், சங்கிலியனும், பரவையும் சேர்ந்து வருகின்றனர்)

சங்கி: தந்தையே! அண்ணாவுடன் அவசரமாக என்னை அழைத்ததன் காரணத்தை தெரிவிக்கலாமா? தெற்கிலிருந்து வன்னியன் குழப்பம் செய்தானா? வடக்கிலிருந்து நாகன் வந்து இறங்கினானா? பதுங்கியிருந்து பறங்கியன் சிங்களவனுடன் சேர்ந்து பிதற்றிக் கொண்டானா? அடக்குவதற்குப் புறப்பட வேண்டுமா?

பரரா: வெறும் வாளுடனும், அம்புடனும் புறப்படக் கூடாது முடியுடன் நீ புறப்படவேண்டும்.

சங்கி: விளங்கவில்லையே?

பரரா: யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனுக்கு வயது வந்து விட்டது. இராச்சியப் பாரத்தை ஏற்று முடியையும் நீயே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சங்கி: மூத்த பட்டத்திளவரசர் இருக்க, இளையவனுக்குப்பட்டம் சூட்டுவதென்பது கதைகளிலும், காவியங்களிலும் நயமாகப்படித்த விடயம் நனவாக நடை பெற்றதில்லையே உரிமையுடன் என் அண்ணன் இருக்க எனக்கு முடியா? கோரிக்கையை வைத்து அபாயத்தைப்பெருக்கும் வழியை தேடப் போகின்றீர்களோ?

பரரா: குமாரா! நாட்டினது நிலையை நீ நன்கறிவாய்? யாழ்ப்பாணத்திற்கு இன்று தேவையானது மன்னனல்லன் அரசைச் சூழ்ந்து வரும் அபாயக் கார் மேகங்களினின்றும் காக்கக் கூடிய திறமை படைத்த ஒரு வீரனே தேவை?

சங்கி: வீரன் தானே வேண்டும்? என் அண்ணனுக்கு என்ன குறை!

பரநி: தம்பி, என்னிலும் ஆற்றலும் இராஜதந்திரமும் படைத்தவன் நீ என்பதை நாடறியும். மேலும் தம்பி, மன்னனாகும் ஆசையோ எனக்கில்லை. மக்களது நோய்களைத் தீர்ப்பதன் மூலம் ஆனந்தப்படவே ஆசைப்படுகின்றேன் தம்பி எங்கள் வார்த்தைகளைத் தட்டாதே. நாம் சொல்வதைக்கேள் யாழ்ப்பாணத்தின் மகுடத்தை நீ ஏற்கத்தான் வேண்டும்.

சங்கி: அண்ணா 'அண்ணனின் முடியை அபகரித்த பாவி தம்பி சங்கிலியன்' என்ற கறை வரலாற்றில் இடம் பெற நான் அனுமதியேன் நீங்கள் என்ன கூறினாலும் என்னால் இம்முடியை ஏற்க முடியாது. அடுத்த முடிபதியாகி சிம்மாசனத்தை அலங்கரிக்க வேண்டியவர் நீங்கள். தம்பி முடி சூடுவது நாட்டு மக்களால் விரும்பக்கூடியதுமில்லை.

பரநிரு: தம்பி நீ என்ன கூறினாலும் என்னால் இம்முடியை இனிமேல் ஏற்க முடியாது அடுத்த மன்னனென்ற உரிமை பெற்ற நானே இம்முடியை உனக்கு அளிக்கும் போது மக்கள் என்ன குறை கூற முடியும்? நாட்டின் இன்றைய சூழ்நிலையை உணர்ந்த எவனும் நீ மன்னனாவதையே விரும்புவான் தம்பி! ஏற்றுக்கொள்.
(சங்கிலிகுமாரன் அங்கிமிங்கும் திரிந்து யோசிக்கிறான்)

பரவை: (பரநிருபரைப்பார்த்து) அண்ணா! நான் ஒன்று சொல்லலாமா?

பரநிரு: என்ன தங்கச்சி ............

பரவை: உங்களுக்கு முடிசூட விருப்பமில்லை என்றால் அடுத்த பட்டத்திற்குரியவர் யார்?

பரநிரு: தம்பி தானம்மா!

பரவை: இல்லை ... அண்ணா! தந்தைக்குப்பின் அரசனாவது மகன் தானே! அது தானே இருந்து வரும் முறை

பரநிரு: ஆமாம்

பரவை: நீங்கள் முடியை ஏற்க முடியவில்லை என்றால், உங்களது மகன் பரராசசிங்கன் தான் உரிமையுடையவன்.

பரநிரு: பரவை, உன் பேச்சில் உண்மை உண்டு தான் ஆனால் பரராசசிங்கன் பத்தொன்பதே வயது நிரம்பிய சிறுவன். அரசபாரம் தாங்குவதற்கு எந்தத் தகுதியும் இல்லாதவன். இன்றைய அரசின் சூழ்நிலையில் திறன் மிக்க வீரனே மன்னனாகத்தேவை. பரராசசிங்கனால் அது முடியாது, அரச முறைகளையோ. வழக்கங்களையோ இன்றைய நிலைமையிற் கவனிக்க முடியாது. நான் விரும்பி என் பட்டத்தைத் தம்பிக்கு அளிக்கும் போது யார் தடுக்க முடியும்.
(தலை நிமிர்ந்து பரவை சங்கிலியனைப் பார்க்கிறாள்)

சங்கி: இவ்வாறு செய்தாலென்ன?

பரநிரு: எவ்வாறு தம்பி ...... .............

சங்கி: நீங்கள் முடியைச் சூட்டி மன்னனாகுங்கள் உங்களுக்கு உதவியாக வலக்கை போல நானுதவுகின்றேன்.

பரநிரு: தம்பி! என்னை நீ முற்றாகப் புரிந்து கொள்ளவில்லை பிணிகளைத் தீர்த்து அவர்களது மகிழ்வில் இன்பம் காண நான் ஆசைப்படுகின்றேன். மன்னனென்ற உருவில் ஒருவன் இருக்கும் போது, உன் வீரமும் திறனும் மழுங்கவே செய்யும். உன் எண்ணப்படி ஆளும் போது தான் நாடு நன்கு முன்னேற முடியும் தம்பி!

சங்கி: கூறுவது திருப்பி கூறுவதெனினும் மூத்தவன் இருக்க நான் முடி சூடுவது அழகல்ல.

பரநிரு: மூத்தவன் இருக்கத்தானே முடிசூட்டக் கூடாது தம்பி! என்னுயிரிலும் வீர சுதந்திரம் தான் பெரிது நாட்டைக்காக்கும் திறன் படைத்த தேசிய உணர்வு மிக்க வீரனுக்கு இடம் கொடுப்பதற்காக நான் இல்லாது போனால்.
(சங்கிலியன் பரநிருபனின் வாயைப் பொத்துகின்றான்)

சங்கி: என்ன வார்த்தைகளை கக்குகின்றீர்கள் அண்ணா? அரவணைப்பதற்கு அண்ணா என்ற உறவில் உங்களைத் தவிர வேறு யார் உண்டு?

பரநிரு: அந்த உறவு நிலைக்க வேண்டுமென்றால், தந்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதி நிறைவேற வேண்டுமானால், இம்முடியை நீ ஏற்றே ஆகவேண்டும்.

சங்கி: தந்தையின் பாசத்திற்கும், சகோதரரின் பாசத்திற்கும் நடுவில் நிற்கும் என்னை இரத்தப்பாசம் சோதிக்கிறது. அண்ணா என்னை இக்கட்டான நிலையில் நிறுத்துகிறீர்கள் மன்னனாகக் கூடிய தகுதி எனக்குண்டா?

பரநிரு: உண்டு தம்பி உண்டு.

சங்கி: எனக்குச் சிந்திக்க அவகாசம் தாருங்கள்.

பரராச: சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது குமாரா? நாங்கள் முடிவினைக் கூறுவதை நீ ஏற்றேயாக வேண்டும் ஒப்புக்கொள் குமாரா?

சங்கி: இது என்ன கனவா? நனவா? மதுரைக்கு வந்த சோதனை போல் அல்லவா உள்ளது. உங்கள் கட்டளையை ஏற்காமலும் விட முடியவில்லையே அண்ணா எப்படியானால் நன்மையிலும், தீமையிலும் வழிகாட்டியாய் இருப்பதாக வாக்குறுதி தந்தால் தான் மட்டும் அரச பொறுப்பை ஏற்றுக் கொள்வேன்.

பரநிரு: அண்ணனுக்குத் தம்பியாகவும், துணைவனுக்கு துணைவனாகவும், மந்திரிக்கு மந்திரியாகவும், இருந்து எல்லாவற்றையும் நானே வழிகாட்டுவேன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே. என் சொல்லைத் தட்டாதே ஏற்றுக்கொள்.

சங்கி: (தலையை ஒருவாறு அசைத்து) சரி எற்றுக்கொள்கின்றேன்.

(பரநிருப சிங்கனும், பரராசசிங்கன், பரவை மூவரும் சந்தோசத்தால் சிரிக்கிறார்கள்.)

பரரா: உடனடியாக அரச சபையைக் கூட்டி அரசசபை அங்கீகாரத்துடன் சங்கிலியனுக்கு முடிசூட்டி பட்டத்து விழாவை நடத்தி எனது பொறுப்பிலிருந்து நீங்கிக் கொள்கின்றேன்.

திரை

# அங்கம் ~ 3

## *நல்லூர் அரசன் அவைக்களம்*

**(பாத்திரங்கள்: : சங்கிலி, அப்பாமுதலி, தனிநாயகமுதலி,பரநிருபசிங்கம், அரசசேகரி, இமையாணன், மணியகாரன், மழுவராயர் மாப்பாணர், ஒற்றன்)**

ஏவலாளர்: (சபையில் வந்து) இராசதிராசன், இராசமாத்தாண்டன், இராசகம்பீரன், சங்கிலி மகாராசா சபைக்கு வருகிறார். எச்சரிக்கை பராக்கு .............

(சங்கிலியனும், ஏனையோரும் சிம்மாசனத்தில் அமருதல்)
சங்கிலி எல்லோரையும், பார்த்து புன்னகையுடனும், பார்வையசைவுடனும், ஆசனம் நோக்கிச் செல்ல பதவிநிரைகளுக்கேற்ப ஏனையோர் வணக்கம் தெரிவிக்கின்றனர். பரநிருபசிங்கம் வெறுமையான முகத்துடன் தலை தாழ்கிறான். தனிநாயக முதலி, அப்பாமுதலி, வீர யாப்பாணன், மணியகாரன், தலைபாணி, உடையார், என்போர் அதிகம் தலை தாழ்கின்றனர். அரசன் ஆசனத்தில் அமர்கின்றான் ஏனையோர் பின்பு அமர்கின்றனர்.

**சங்கிலி**: அவைக்களத்துப் பெரியோர்களே, யாழ்ப்பாண இராச்சியத்தை அமைத்து முடிசூடி அரசாண்ட முன்னோர் சிங்கையாரியச் சக்கரவர்த்தி இருந்து செங்கோலாற்றிய சிம்மாசனமிது,, இலங்கை மன்னன் புவனேகபாகுவைப் புறமுதுகிடச்செய்து புத்தரது புனித தந்தத்தை அவனிடமிருந்து கவர்ந்ததோடு, திறை அரசனாக்கித் திறைபெற்ற பெருமன்னன் ஜயவீரசிங்கையாரியர் சக்கரவர்த்தி ஆண்ட சிம்மாசனமிது, தென்பகுதி மன்னன் ஆளும் பராக்கிரம பாகுவின் மேல்கடலிலும், தரையிலும் தண்டெடுத்து, சேனாதிபதி அழகேஸ்வரனோடு போராடித் தனது வீரத்தை நிலைநாட்டிய ஆரியச் சக்கரவர்த்தி ஆண்ட இந்த அரியாசனத்தின் மீது சிங்கள மன்னர்களது ஆதிக்கத்தினின்றும் யாழ்ப்பாணத் தமிழரசை மீட்டு, நாட்டின் நன்மைக்காகத் தன்னை அர்ப்பணித்து அரசோங்கிய கனகசூரியசிங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் அழகு சிம்மாசனத்தின் மீது முடிக்குரிய இளவரசன் அண்ணன் பரநிருபன் ஈந்தளித்த இச்சிம்மாசனத்தின் மீது இருந்து பேசுகின்றேன். தொடர்ந்து இச்சிம்மாசனம் மங்களப் புகழுடன் மகிமை பெற வேண்டும் என்பது எனது ஆசை. இன்றுடன் நான் யாழ்ப்பாண அரசனாகி 1வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. நாட்டு விடயங்களை நன்கு அறிந்து கொண்டேன். யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைத்திசைகளிலிருந்தும் போர் முகில்கள் குவியும் இந்த நேரத்தில். உள்நாட்டில் பதவி, அந்தஸ்த்திற்காக சதித்திட்டங்களைத் தீட்டி அரசைக் குழப்பம் விளைவிக்கும் குள்ள நரிக்கூட்டம் மலிந்து வரும் நேரத்தில் இச் சிம்மாசனத்திலிருந்து பேசுகின்றேன்.(அப்பாமுதலி தலை குனிகிறார்) இராச்சியம், கலை, கல்வியில் நேர்மையுற வேண்டும். இதுவே எமது அடிப்படைகள் புனரமைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படவேண்டும். எல்லாப் பிரிவுகளுக்கும் ஒற்றர் நியமிக்கப்பட்டு

பாதுகாப்பு கவனிக்கப்படவேண்டும். நாட்டில் இல்லை என்பார் இன்றி, இரவலர் இன்றி பஞ்சம், பட்டினி, இன்றி, சைவம் வளர்ந்து, நல்லரசு புரிய வேண்டும்.

அரசகேசரி அவர்களே ஏதோ சொல்ல முனைகின்றீர் போல் இருக்கிறது.

அரச: குறுக்கிடுவையிட்டு மன்னிக்கவும். மன்னாதி மன்னா! பல்லாண்டு காலமாகத் தமிழ்க்கலைகளைப் போற்றி வளர்க்கும் நல்லூர்த் தமிழ்ச் சங்கத்தேயுள்ள ஏடுகளைத் தாமிரத்தகடுகளிலும், செப்பேடுகளிலும் வரைய வேண்டியதால் தஞ்சை, மதுரை முதலிய இடங்களிலிருந்து கலைஞர்களை அழைப்பித்துத் தருதல் வேண்டும்.

சங்கிலி: புலவரே! எமது நாட்டின் கண்போன்ற கலைகளைக் கௌரவிக்க வேண்டியது நமது கடமை அதிக விரைவில் தாயகத்திலிருந்து கலைஞர் பலர் நமது நாட்டிற்கு வந்து தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்.

அரசகே: வேந்தே! சங்கப்புலவர்களையும், கலைஞர்களையும் கௌரவிக்கும் கலைஞர் விழா அண்மையில் வருவதால் அவர்கட்கு இரத்தினப் பட்டயம், பொன்னாடை பொற்கிளி முதலியன வழங்கும் பணிகளைச் சிறப்புடன் செய்தல் வேண்டும்.

சங்கிலி: புலவர் பெருமணிகளே! தாயகக் கலைஞர்கள் இவ்விடம் வரும் பொழுது அவர்கள் முன்னிலையிலேயே விழாவை நடத்துவோம்.

அரசகே: தங்களின், கலைகளை வளர்க்க வேண்டும் என்ற தாகத்தை அறிந்து வாழ்த்துகின்றேன்.

சங்கிலி: (தனிநாயகமுதலியாரைப் பார்த்து) முதலியார் அவர்களே! நீங்கள் பேசலாம்.

தனிமு: (ஏட்டுச் சட்டத்தைப் பார்த்து) மறவன்புலவில் நடந்த கொள்ளை, வரி அறவிடுவதில் சங்கடம் நெடுந்தீவில் பசுமாட்டுக்கொள்ளை

சங்கிலி: என்ன மறவன்புலவிற் கொள்ளையா? எமது நாட்டிலும் கொள்ளை என்ற பெயரைக்கேட்கலாமோ? அப்படிக் கொள்ளையடித்தவன் யார்? விளங்கக் கூறுங்கள்.

தனிமு: தென்னிந்தியாவின் இராமநாதபுரத்தில் இருந்து மறவன்புலவில் குடியேறிய மறவர் சிலர் தாங்க முடியாத அளவிற்கு களவில் ஈடுபடுகிறார்கள். பொழுது போக்கு விளையாட்டு, தொழில் எல்லாம் களவுகள் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

சங்கிலி: எமது ஆட்சிப் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்.

தனிமு: அவர்களும் மறவருக்குப் பயந்திருக்கிறார்கள் ஊர்ச்சனங்கள் கலகம் செய்து அடக்க முனைந்தால், அவர்கள் கூரிய இரும்பு ஆயுதத்தால் பயமுறுத்துகிறார்கள். கொலை செய்கிறார்கள். தண்டிக்க வழி செய்ய வேண்டும். என்று ஊர்ச்சனங்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

சங்கிலி: தளபதி, இமையானனே?

இமை: அரசே! (எழுந்து நின்று)

சங்கி: இந்தச் சங்கிலியின் ஆட்சியில், அடம்பிடித்த கூட்டமா? அவர்களுக்கு உடனே தண்டனை வழங்குவீர்.

இமை: நாளை இரவே படைவீரரை அனுப்பி விபரங்களை சமர்ப்பிக்கின்றேன்.

சங்கிலி: முதலியாரே! வரி அறவிடுவதில் என்ன பிரச்சனை?

முதலியா: இனவரி பத்தாகப்பிரித்து ஒரு கூறு தான் கேட்கிறோம். அதையும் பெற முடியாதுள்ளது.

மணியகா: அரசே! மக்களுக்குப் போதிய வருமானமில்லை அவர்கள் ஆகாரத்திற்கே சிரமப்படுகின்றனர்.

சங்கிலி: எதுவானாலும் அரச கட்டளைகளை அனுசரித்துச் செல்லுங்கள் 'இனவரி' முக்கியமானது.

தனிமுத: அரசே! அடுத்த பிரச்சனை நெடுந்தீவில் பசுக்கள் களவாடப்பட்டது. இதுபற்றி நெடுந்தீவிலிருந்து மழுவராயன் மாப்பாண உடையார் விளக்கமாகக் கூறுவார்.

மழுவர: பிரபு! வன்னியர்களின் தொல்லை திரும்பவும் தொடங்கிவிட்டது. கரையோரத்தீவுகளுக்கு இரவு வேளையில் ரகசியமாக வந்து மாடுகளையும், ஆடுகளையும் கவர்வதோடு, பயிர்களையும் நாசமாக்கிச் செல்கின்றனர். நேற்றுக் கூட ............

சங்கிலி: நேற்றுக் கூட .........

மழுவ: நேற்றிரவு நெடுந்தீவிற்கு வந்து பல பசுக்களைக் கவர்ந்து சென்றுள்ளனர்.

சங்கிலி: (ஆவேசத்துடன்) வன்னியன் வந்து வட்டமிடும் போது நீங்கள் வானத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தீர்களா?

மழுவா: இல்லைப் பிரபு! நயினாதீவு அம்பாள் உற்சவத்திற்குச் சென்றிருந்தோம்.

சங்கிலி: மாப்பாணரே, நம் அரசின் இன்றைய சூழ்நிலையை உணர்ந்து நீங்கள் அசட்டையாக இருக்கலாமா? எத்தனை பசுக்கள் கவரப்பட்டன?

மழுவா: சுமார் முப்பது மட்டில் இருக்கும் மேலும் அப்பசுக்கள் யாவும் .......

சங்கிலி: பசுக்கள் யாவும் ......

மழுவா: இராமேஸ்வரம் கோயிலுக்காக வளர்க்கப்பட்டவை.

தனிமு: தெய்வ நிந்தனை செய்து விட்டார்கள்.

மழுவ: அது மட்டுமன்று, கச்சைதீவிலிருந்த மான் வனத்தையும் அழித்து விட்டார்களென நேற்றுமாலை செய்தி வந்தது.

சங்கிலி: (பரநிருபனைப்பார்த்து) அண்ணா! நான் முன்பே வன்னியரை கூண்டோடு அழிக்கவேண்டுமென்று.

பரநிரு: நீ இந்த நாட்டின் மன்னன் உணர்ச்சிகளுக்கு இடங்கொடாது. விவேகமாக நடந்து கொள்ள வேண்டும் தம்பி.

சங்கிலி: அடிக்க அடிக்க குனிவது தான் விவேகமா?

அப்பாமு: அரசே! படையெடுப்பதென்பது நினைத்ததும் செய்யக் கூடியதன்று. தாங்கள் பதவி ஏற்றபின் இராச்சியம், கல்வி, கலை வைத்தியம் எல்லாவற்றிலும் சிறப்பாக வளர்ந்து வரும் நேரத்தில் படையெடுப்பது நல்லதாகாது.

சங்கிலி: எல்லோரும் யுத்தம் என்றால் கோழைகளாக இருக்கிறீர்கள்.

பரநிரு: படைப்பலம் என்றும் குறைந்ததில்லை நம்மரசில், தம்பி எதையும் ஆற அமர யோசித்தே செய்ய வேண்டும் மேலும் வன்னியர்களைப் பகைத்துக் கொள்வதால், தமது இராச்சியத்தின் தென்புற எல்லை பலவீனமடையும். தென்னிலங்கை மன்னர்கள் நம் மீது படையெடுக்க இலகுவாகும்.

தனிமு: வன்னியர்களை வலிமை குறைந்தவர்களாக எண்ணக் கூடாது மீனுக்கு வாலைகாட்டிப் பாம்புக்குத் தலையைக் காட்டி தங்கள் விடயங்களைச் சாமர்த்தியமாக்கி விடுவார்கள். கண்டி இராச்சியம் வலுவடைந்திருந்தால் கண்டி அரசனுக்குத் தாளம் போடுவார்கள். யாழ்ப்பாணத்தரசு வலு வடைந்தால் கண்டி அரசனைக் கைவிட்டு யாழ்ப்பாணத்தரசனை அண்டுவார்கள்.

அப்பாமு: தங்கள் வலிமையால் இம்மென்னும் பொழுது அவர்களை மடக்கி விடலாம்.

(அப்பொழுது வீரமாப்பாணன் அப்பாமுதலியை நிமிர்ந்து பார்க்கிறான் பின்னர் அரசனைப் பார்த்துவிட்டு நாடிக்குக்கையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான்.)

அரசகே: அரசே! எதையும் தீர ஆலோசித்துச் செய்தல் வேண்டும்.

சங்கிலி: புலவரே! தாங்கள் சொல்வது சரிதான் எந்தக்காரியத்தையும் நன்கு ஆராய்ந்து செய்தல் நன்று (தனிநாயகம் முதலியை பார்த்து) வேறு ஏதாவது உண்டோ?

தனிமு: வேறொன்றுமில்லை.

சங்கிலி: இத்துடன் அரசசபை கலைகிறது.

**(மழுவராயர் யாப்பாண உடையார், மணியாகாரன், அரசகேசரி புலவர், ஆகியோர் வெளியேறல்)**

இமையா: நாம் வீரமாளியம்மன் கோயிலுக்குச் சென்ற போது தகவல் கொணர்ந்த ஒற்றனை அழைத்து விடயங்களை ஆரம்பிக்கலாம்.

பரநிரு: (சேகவர்களைநோக்கி) ஒற்றரை அழைத்துவாருங்கள் (சேவகர் ஒற்றரை அழைக்கச்செல்லல்)

சங்கிலி: எமதரசின் மன்னார் தலைவன் உரசிங்கன் நிர்வாகம் சீரற்றுள்ளது.

இமையா: மன்னாரில் முத்துக்குளிப்புத்தொழிலுக்கு ஆபத்து வரலாம் என்பது ஒற்றன் தகவல் மூலம் தெரிய வருகிறது.

பரநிரு: அப்படிச்சொல்வதில் நியாயம் குறைவு என நினைக்கின்றேன் உரசிங்கனிடம் பெரும் படை உண்டு. நிர்வாகத்திற்கு ஏற்பவே அது உள்ளது. குறைகூற (ஒற்றன் அழைத்து வரப்பட கதை நிற்கிறது)

சங்கிலி: ஒற்றரே வருக (ஒற்றன் வணங்குகிறான். ம் .............. நடந்தவற்றை விபரமாகச் சொல்லும்.

ஒற்றன்: சிங்கையாரியன், கங்கை நாடான், சேதுகாவலன் சங்கிலி செகராசசேகரன் மன்னவா! ஏற்கனவே சொல்லியது போல் மன்னார் பரபரப்பாகிறது.. வருங்காலம் எமது கப்பல் வாணிபத்திற்கு பறங்கிகளால் ஆபத்து வரும் ........அங்கு வித்தியாசமான நடமாட்டம் தெரிகிறது..

சங்கிலி: முத்துக்குளிப்பால் என்ன சிக்கல் நடந்தது.?

ஒற்றன்: வழமை போல் ஒரு நாவாயில் ஐந்துபேர் கடல் சென்று, பின்னர் ஒருவனை கற்பாரத்தோடு கட்டி கயிற்றில் தொங்கவிட்டு கடலாழத்துள் இறக்குவர் பின் அவன் மூச்சை அடக்கியபடி இருக்க ஆளைத்தூக்குவர். அவ்வாறு மாறி மாறிச்செய்தனர். நமது படையணிகள் கண்காணிப்பில் இருந்தது. முத்துக் குளிப்பு பகுதியில் வேறு யாரும் நடமாட முடியாது..

த.மு : பின்னர்

ஒற்றர்: அரசுரிமைப்படி எடுத்த முத்தில் அரைவாசி அரசிற்கு அரைவாசி முத்துக் குளித்தவருக்கு.

இமையார்: அது அரச வழமை அதில் என்ன சிக்கல் நேர்ந்தது.?

ஒற்றர்: இல்லை நான் நினைக்கிறேன். முத்துக்குளித்தவர் பெறும் அரைவாசி முத்துக்களையும் ஏதோ விதமாக பறங்கியருக்கு நிறைய இறாவால்களுக்கு விற்று அந்தக்காசு மூலம் வேறு பொருட்களை பறங்கிகளிடம் வாங்கி பறங்கிகளோடு நல்ல தொடர்புமுண்டாம் இப்போ பறங்கியருக்கு ஊரில் கண் விழுந்து விட்டது.

சங்கிலி: மன்னார், முத்தால் வளமான பூமி முன்பு அங்கு சாயவேர்கள் கூட நிறைய விளைந்தன. ம் ம் ..... கண் விழுந்து விட்டதோ? கண்கள் குருடானால் எப்படி முடியும்.

ஒற்றன்: அத்தோடு நான்வரும் போது முழு ஆடை அணிந்த ஒரு சமயப்பிரசங்கியும் வந்திருந்தார். அவருடன் வந்த இரண்டொருவர் துப்பாக்கி சூத்திரமும் வைத்திருந்தனர்.

பரநிரு: அது அவர்களது தற்பாதுகாப்பிற்கு சண்டையிடுவதற்கல்ல முத்துக்களை முன்னர் மக்களிடம் வணிகரும், எமது குறுநில மன்னரும் வாங்கினர். இப்போ பறங்கிகள் வாங்குகின்றனர். அதில் ஒரு அதிசயமுமில்லையே?

இமையா: மன்னிக்கவும். முத்துக்கள் வாங்குதல் விற்றல் அல்லது பண்டமாற்றுச் செய்தல் என்பதல்ல இங்குள்ள பிரச்சனை, நாடு விற்கப்பட முடியாதது என்பது தான் இங்கு பிரச்சனை.

பரநிரு: (சற்று கோபமாக)வீண் சந்தேகம் ....உது சண்டைக்கு வழிகோலும்.

சங்கிலி: அண்ணா உங்கள் பேச்சின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை.

பரநிரு: இதில் நான் எதுவும் மறைத்துப் பேசவில்லை வெளிப்படையாகவே சொல்கிறேன் எங்கள் ஆயுதவலு போதாது. பின்னரேன் தென்னிலங்கையில் கோட்டையை சிங்கள மன்னர் கைவிடவேண்டும்.

சங்கிலி: ஆயுதவலுவை விட மனோவலு முக்கியம் சட்டநாதர் எமக்கு மனோ வலுவைத் தந்திருக்கிறார்.

இமையார்: இல்லை மன்னவா பொறுத்த தருணங்களில் அரசவையில் முரண்பாடு இருக்கக் கூடாது. அது பெரும் பலவீனமல்லாவா?

சங்கிலி: சரி பொறுத்துக்கொள்.

இமையார்: நான் படையாராச்சியத்திற்கு பொறுப்பாக இருக்கமாட்டேன்.

தனிமுத: ஏன்.?

சங்கிலி: சரி இனி முரண்பாடு வேண்டாம்.

பரநிரு: நீர் ஏன் கொதிக்கிறீர்? நான் கருத்துச் சொன்னேன்

இமையா: வேண்டுமென்றால் எனது பதவியை நீரே எற்றுக்கொள்ளும்

தனிமுத: தயவு கூர்ந்து சாந்தி! பொறுங்கோ! பரநிருபசிங்கர் கல்வி கேள்விகளில் சிறந்தவர் வைத்திய சோதிட நூல்களை நன்கு கற்றவர். அறிவாளி. வாள் வெட்டுக்காயங்களுக்கு அவர் செய்த வைத்தியங்கள் என்ன? கண்டிக்குச்சென்று கூட வைத்தியம் செய்தவர் ஆனால் வாள் வலிமையில் கல்வி போல் அவருக்கு அக்கறை இல்லை. அதனால் தானே வாள் வலிமையும், மூளை வலிமையும் உள்ள சங்கிலியை மன்னராக்க அனுமதித்தார்.

(பரநிருபன்சிங்கன் கோபித்துக்கொண்டு )

பரநிருப: நான் வருகிறேன் (போதல்)
(சற்று அமைதிக்குப்பின்)

இமையா: மன்னவா நான் ஒன்று மட்டும் சொல்கிறேன். பரநிருபசிங்கனின் மனம் எதனாலோ சங்சலப்படுகிறது.

தனிமு: அரச கட்டிலேறவா?

இமையமார்: குறிப்பாய் எது என்று தெரியாது.

தனி.மு: ஏதோ ஊர்ச்சனங்கள் சிலரின் பேச்சை அவரும் நம்புகிறார். பரநிருபன் மந்திரியாருக்கு வீட்டில் நெருக்கடியாம், அவருடைய மகனும், மனைவியும் சேர்ந்து மன்னர் பதவியை ஏற்காததாலும், மகனுக்கு உரிமையுடன் கொடுக்காததாலும், பரநிருபனுக்கு வீட்டில் இடம் கொடுக்காமல் இருந்து

கொண்டு திரும்ப சங்கிலியனிடமிருந்து முடியைப் பெற்றுத் தரும்படி இடைஞ்சல் கொடுக்கிறார்களாம். அதன் அதிருப்தியோ?

**சங்கிலி:** நீர் என்ன நினைக்கிறீர்

**தனி.மு:** எனக்குத் தெரியாதா? அரச சபைக்கு மென்மையான மனிதர்களும், கோழைக்குணமும் ஒத்துவராது என்று.

**சங்கிலி:** (மெதுவாகவும், கம்பீரமாகவும் முன்னோக்கி எழுந்து நடந்தபடி) இது தமிழன் இராச்சியம், நமது மூதாதையார் எத்தனை படையெடுப்பு நடந்த போதும் தமது எதிர்ப்பைக்கடமையாகவே காட்டினர். உடன்பட்டு உழன்று தொழுது அடிமை பூண்டிலர். எனது மூதாதையருக்கு நான் துரோகம் இழையேன்! எனது எதிர்காலச் சந்ததியினருக்கு நான் துரோகம் செய்யேன். பறங்கிகள் வந்து பார்க்கட்டுமே! சமயம் மாற்றி ஆட்சியா? (எள்ளல் நகைப்புடன்) சதிகள் கட்டமைக்கப்படுகின்றவா? (வாளை மெதுவாய் உருவி பார்த்தபடி)

இந்த இராச்சியத்தைக் காட்டிக் கொடுப்போரும் ஈனத் தமிழர்களே!

**தனி.மு:** மன்னவா, நாங்கள் திருத்தலங்கள் சகிதம் இருக்கிறோம். இராச்சியத்தைச் சூழ இருக்கும் ஆலயங்கள் கூட எங்கள் காப்பரண்கள். வெயிலுகந்த பிள்ளையார், கைலாயபிள்ளையார் சாலைவிநாயகர் பலபேரும் ஆனைமுக படைகளல்லவா? வீரமாகாளியம்மன் வண்ணைச் சிவன் கண்வீச்சு விட்டு விடுமா? சட்ட நாதேஸ்வரரின் கரங்களே பகைவரைச் சங்கரிக்கும்.

**இமையா:** இனி மிகக் கவனம் தேவை வன்னியர் பகுதியில் பறங்கியர் தளர்வாயேயுள்ளனர். எமது இராச்சியத்தை நோக்கி பறங்கியர் வரின், நடுவில் இருந்தபடி கண்டி இராச்சியத்துடனா? அல்லது யாழ்ப்பாண இராச்சியத்துடனா? அல்லது பறங்கியருடனா? அல்லது நம் பகைவராகவா ஒன்றும் தெரியாது..

**வீரமா:** இல்லை நாங்கள் இதில் கவனமாக இருக்கிறோம். சரியான தகவல் நாம் எடுப்பது போல் அவர்களும் எடுப்பர். எனவே பூங்கா, ஸ்நான மண்டபம், முப்படைக்கூடம், யமுனாநதி தீர்த்த ஏரி, நீதி மண்டபம், யானைப்பந்தி, குதிரை லாயம், சேனாவீரர் இருப்பிடம், எல்லாவற்றையும் மிக எச்சரிக்கையோடு கண்காணிக்க மறை முகமாக ஆட்கள் விடப்பட்டுள்ளனர்.

**சங்கிலி:** கடற்கரை தான் மிக முக்கியம் தரைவழி நகர்வில் தூரத்தே கண்டு நெருங்கித்தாக்கலாம்.. ஆனால் கடற்கரைகள் சூழ கைப்பற்றப்படுமானால் கடல் வாணிபம் கெடும். நாடும் அகப்படும். ஆகையால் கரையோரக் கண் காணிப்பைப் பலப்படுத்தும் கோப்பாய் அரண் எப்படி உள்ளது?

இமையா: அங்கும் சிறு தொகைப்படையும், ஆட்களும் உள்ளனர். (சங்கிலி தலை ஆட்டுதல்)

தனி.முத: பகைகள் கூடும் போதும், சூழ்ந்து வரும் போதும் நமக்குள் மக்கள் ஒற்றுமை வேண்டும். அரசசபையில் தீர்மான இழுபாடு இருந்தால் என்ன செய்வது?

இமையா: நீர் எதைச் சொல்கிறீர்

SWAMI ABRAHAM
community centre
SUBAMANKAL-MALLAKAM
Regd. No: J/VC/21/844

தனி.மு: பரநிருபசிங்க மந்திரியாரை?

இமையா: ஓம் நானும் நினைக்கிறேன்.

தனிமு: இப்போ பரநிருபசிங்கன் எங்கு சென்றுவிட்டார்.

இமையா: மூலிகைத்தோட்டத்திற்கு போயிருப்பார்.

தனிமுத: இப்ப ஏன் மூலிகை தோட்டத்துக்கு ... தோட்டம் என்ற போர்வையில் என்னென்வோ

சங்கிலி: (சிரித்துவிட்டு) அண்ணன் தூர எங்கும் சென்றிருக்க மாட்டார். நமது உரையாடலைக் கேட்கும் தூரத்தில் தான் நிற்பார். அண்ணா ..........(கூப்பிடுதல்) அண்ணா .................... (பரநிருபன் வருதல்)

பரநிரு: ஓமோம் .....என்ன (ஏனையோர் வியர்த்தல்)

சங்கிலி: ஒன்றுமில்லை

பரநிரு: ஒன்றுமில்லை என்றால் ......ஏன்?

இமையா: (சற்று கோபம்) இங்கு நடப்பதென்ன? மந்திராயோசனை மந்திரியாகிய நீங்கள் இல்லை என்றால் ............

பரநிருபா: உமக்கு படையாராச்சி பற்றியே கதை. என்னைப் பற்றியல்ல (தன்பாட்டில்) இடையிட்டு பதவியேறிய பரம்பரை, எனக்கு ஆலோசனை?

இமையா: இவ்விதம் கதைப்பதனால் நான் பங்கு கொள்ளமாட்டேன். (வெளியேற முனைதல்)

சங்கிலி: அண்ணா! தளபதி தயவு! வந்து அமருங்கள். (இமையாணன் கோபத்துடன் தலை குனிந்த படி வந்து இருத்தல்)
அண்ணா! இதுதான் ஆரம்பகாண்டம் இதில் தவறு நடக்கக்கூடாது (அமைதியாக) அரண்மனையை விட்டு சற்று நேரம் வெளியேறி ஆறிவாருங்கள் (பரநிருபன்போதல்) (சங்கிலியன் போய் விட்டாரா என்பது

போல் முகத்தால் கேட்க வீரமாப்பாணரும் முகத்தால் போய்விட்டார் என்பதனை வெளிப்படுத்தல்)

**இமையா:** பார்த்தீர்களா? நாம் கதைத்த அனைத்தையும் கேட்டு நின்றிருக்கிறார்.

**சங்கிலி:** எனக்கு முதலே தெரியும் அண்ணர் அருகில் நிற்பாரென்று ...

**தனிமு:** இது ஒற்றுக்கேட்டல் அல்லவா?

**சங்கிலி:** எனக்கு சந்தேகம் முன்னரே வந்ததால் அவர் செல்லும் இடமெங்கும் ஒரு ஆள் அவரைக்கவனிப்பார்.

**இமையா:** அப்படியெல்லாம் அச்சமில்லை. இது நல்ல அறிகுறி
(சங்கிலி நீண்ட பெருமூச்சு இழப்புடனும் செய்தல்)

திரை

# அங்கம் ~ 4

## *மாந்தை தலைவன் உரசிங்கன் மண்டபம்*

**பாத்திரங்கள்: சங்கிலி, உரசிங்கன், பிறகன்சா, வணமன்சிலாசு**

(சங்கிலி அரசன் மண்டபத்திற்கு வருதலும், எழுந்து வணக்கம் செலுத்தல்)

**சங்கிலி:** எல்லோருக்கும் வணக்கம் ( உரசிங்கனைப் பார்த்து) உரசிங்கனே நாட்டில் என்ன குழப்பம்?

**உரசிங்:** அரசே! கடற்கரையோரங்களில் தங்கி மீன்பிடித்து வியாபாரம் செய்கின்ற பரதவரும், தென்னிலங்கைச் சிங்களவரும் கிறிஸ்தவராக மாறியுள்ளனர். அதோ சிங்களவரும் கிறிஸ்தவராக மாறியுள்ளனர். அதோ (வணமன் சிலேசுவைப் பார்த்து) இருக்கும் வணமன்சிலாசு சேவையிலிருந்து இங்கு வந்து மதபோதனை செய்து வருகிறார்.

**சங்கிலி:** யார் அனுமதியுடன் இங்கு வந்தார்?

**உரசிங்:** எம்மிடம் அனுமதி பெறவில்லை.

**சங்கிலி:** பின்பு

உரசிங்: உள்ளூரில் வாழ்ந்த மக்களைத் தமது மதத்தைத் தழுவும்படி கேட்டதனால் குழப்பமேற்பட்டது.

சங்கிலி: (பிரகன்சாவைக் காட்டி) அதோ அவர் யார்?

உரசிங் : பிரகன்சா என்ற போர்த்துக்கீச தளபதி கோவையிலிருந்து நம் நாட்டிற்கு வந்துள்ளார்.

பிரகன்சா: மகாராசா! நாங்கள் வியாபாரிகள். கோட்டை இராச்சியத்தில் எங்கள் வியாபார இடங்களைக் காவல் செய்ய வந்தோம். கடும் மழை, காற்றுக் காரணமாக இங்கு ஒதுங்கினோம்.

சங்கிலி: வியாபார வேடத்தைத்தாங்கிக் கொண்டு இந்த தீந்தமிழ் யாழ்ப்பாண இராச்சியத்தை நஞ்சூட்டி அடிமையாக்கி பீரங்கிகளை ஆங்காங்கு குவிக்கும் கூட்டத்தின் தலைவன் நீ என்பது எனக்குத்தெரியும்.

பிறகன்சா: அரசே! எங்களை பிழையாக எண்ண வேண்டாம். முகாதியர்களின் கொள்ளையிலிருந்து எம்மைக் காப்பற்றவே சில துவக்குகளை மட்டும் வைத்திருக்கிறோம்.

சங்கிலி: இக் கரையோரங்கள் முத்துக்குளிப்பதற்காக முஸ்லீம் வியாபாரிகட்கே கொடுத்துள்ளோம். அவர்கள் முத்துக்குளிக்கும் போது நீங்கள் முத்துக் களோடு கப்பல்களைக்கடத்திச் சென்றது ஞாபகமிருக்கட்டும்.

பிறகன்சா: தமிழர்களது உதவியோடு முகமதியர் எங்கள் கப்பல்களைக் கொள்ளை அடிக்கிறார்கள். நாங்கள் வியாபாரஞ்செய்து வரும் மிச்சத்தில் மதப் பிரசாரத்துக்குக் கொடுப்போம். களவு கொலை செய்வது எங்கள் வேலையல்ல.

சங்கிலி: மதமென்ற போர்வையால் மக்களை ஏமாற்றி இத்தாய்த் திருநாட்டைப் பிணக்காடாக்க முனையும் வஞ்ச நரிக் கூட்டத்தின் வல்லபமான தலைவன் நீ. ஆனால் இது எம் தாய்த்திருநாடு பெற்றதாயினும் மிக்க பொன்னாடு கறைபடிந்த உங்கள் கால்கள் இப்புனித நாட்டில் தீண்டுவதை நான் கணநேரம் பொறுக்க மாட்டேன்.

பிறகன்சா: மன்னவா! நாங்கள் நாடு பிடிக்கும் கூட்டம் இல்லை. வியாபாரக் கூட்டம் சந்தேகப்பட வேண்டாம்..

சங்கிலி: சந்தேகப்படவில்லை சாதனைகளைக் கூறுகின்றேன். குண்டு பீரங்கிகளைக் கண்டு அஞ்சி ஒடுங்கும் வர்க்கம் வாழும் நாடு இதுவல்ல. (சண்மன்சலாவைப்பார்த்து) சுவாமிகளே! தாங்களும் இத்திருக்கூட்டத்தின் தொண்டர் தானே?

வணமன்: மன்னா! நான் மதகுரு தென்னிலங்கையிலிருந்து இம் மன்னாரில் மீன்பிடித்து வியாபாரஞ் செய்வதற்காக எமது மதத்தைச்சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வேண்டுகோளின் படி வந்தேன்.

சங்கிலி: சுவாமிகளே! நாடு பிடிபடலத்தின் முதற் கண்ணிதான் மதம், தங்கள் திட்டத்தை நிறைவேற்றும் நச்சுக்கோட்டையின் அத்திவாரக்கல்லாக நீங்கள் வந்தீர்கள். தங்கள் பாதுகாப்பாக அதோ தளபதி! கடலிலே போர்க்கப்பல்.

வண்மன்: மதபோதனைக்காகவே நான் வந்தேன்.

சங்கிலி: இன்று மதபோதனை! நாளை அதற்கோர் கோவில், பின்பு கோவில் கோட்டையாகவும், மதகுருமார் போர்வீரர்களாகவும், மதச்சின்னங்கள் போர்க் கருவிகளாகவும் மாறி நாடு அடிமையாகும். உங்கள் சரித்திரத்தின் உரை கல்லாக சிங்கள நாடு விளங்குகிறது. அதே படலத்தை இம்மறத்தமிழ் மண்ணிலும் வாசிக்கலாம் என்பதை மறந்து விடுங்கள்.

பிரகன்சா: அவர் மீது வீண்பழியைச் சுமத்த வேண்டாம்.

சங்கிலி: பழி சுமத்தவில்லை. உங்கள் பண்பைக் கூறுகின்றேன். வாசல் அலங்காரத்தைக் கண்டு மதியிழக்கும் மரபு இங்கில்லை. ஏமாற்றி வாழும் வர்க்கத்தை வாழவைக்கும் நாடும் இதுவல்ல. கடலில் அலைந்து கரைசேர்ந்த உங்களை வாருங்களென வரவேற்றதால் அல்லவா தென்னிலங்கை பிணக்காடாகியது.. இது வட இலங்கை தன் மானத் தமிழினத்தின் செங்கோட்டை நினைவிருக்கட்டும். அமைதியை நாட்டும் மதகுருவின் போதனையால் ஏன் இந்த நாடு கொந்தளிக்க வேண்டும்?

பிரகன்சா: முகமதிய வியாபாரிகள் வேண்டுமென்று செய்த சூது.

சங்கிலி: புத்திசாலிகளே! பிளிர்க்கும் வீரம் உங்களிடம் பொங்கித் ததும்பா விட்டால் தென்னிலங்கை பிணக்காடாகுமோ? முஸ்லீம்களுக்காகத்தான் இந்நாட்டு வியாபார உரிமையைக் கொடுத்துள்ளேன். பிளவுக்கு விதைபோடாது. இக்கணமே இந்நாட்டை விட்டுப் புறப்படுங்கள்.

சுவாமிகளே! தமிழனுக்குத் தனி மதமுண்டு அது தான் அன்பு மதம் இந்த அவனி முழுவதையும் அது கட்டி ஆளும், கலையும் மதமும் கலந்து வாழும் பண்பில் கைதேர்ந்த தமிழ்ப் பெருங்குடி மக்களின் நாகரீகத்தை அதோ தெரியும் கோபுரத்தைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள். எம்மதமும் சம்மதமென்ற உயர்ந்த அறப் பண்போடு வாழும் தமிழரை கருவறுக்க முனைய வேண்டாம்.. பாவிகளுக்காகப் பிரிந்து பாடுபட்டு, இரத்தப்பலி கொடுத்து மேலைத் தேசத்தவர்களின் இரும்பு இதயங்களைத் திறக்கச் செய்த இயேசு கிறிஸ்துவின் போதனைகளை வஞ்சனை விதைகளாக்க வேண்டாம் மதக் கோடரியால் இனக் கோட்டையைப்பிளக்க வேண்டாம்.

நாடு கொந்தளித்துக்கொண்டிருக்கின்றது. என்பதைக் கருத்திலே பதிய வையுங்கள்.

பிரகன்சா: மன்னா! தங்கள் நாட்டை நாம் பார்க்க கூடாது என்று கட்டளை இட்டால் .............

சங்கிலி: தவறான எண்ணம் கொள்ள வேண்டாம். நீங்கள் இத்திருநாட்டைப் பார்க்கக் கூடாது. என யாரும் தடுக்க மாட்டார்கள். கிரேக்கம் தொடக்கம் சீனம் வரையுள்ள எத்தனையோ யாத்திரிகர்கள் - தேசாந்திரிகள் உல்லாசப்பிரயாணிகள் தமிழகத்தின் நாகரீகத்தையும் பண்பையும் வந்து பார்த்தார்கள். பல நூல்களிலே எமது இராச்சியத்தைப் பற்றி வர்ணித்தார்கள். யாராவது தடுத்தார்களா?

பிரகன்சன்: நமக்கு மட்டும் என்ன தடை?

சங்கிலி: வஞ்சகக் கூட்டம் என்பதனாலேவே தடை போடுகின்றேன்.

சங்கிலி: உரசிங்கனே! கரையோரப்பகுதிகளில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உரசி: மன்னா! தங்கள் கட்டளைப்படியே!

சங்கிலி: கரையோரங்களில் வாழும் சிங்கள மீன்பிடியாளரையும், பரதவரையும் கருத்தோடு கவனிப்பதோடு, வன்னியர் படையை மாதோட்டப்படைகளோடு சிறிது காலத்திற்கு நிறுத்திவை. நாம் சென்று வருகிறோம்..(சங்கிலியன் நல்லூர் நோக்கிப் புறப்படுகிறான்)

திரை

# அங்கம் - 5

## *அப்பா முதலி வீட்டுப் பூங்கா*

பாத்திரங்கள்: அமுதவல்லி, வடிவழகி, சங்கிலி, வீரமாப்பாணன், இராசமாதேவி

வடிவழகி: என்ன அமுது ஒரு மாதிரி இருக்கிறாய், பக்கத்தில் இருக்கும் மலர்களின் அழகை கண்ணால் ரசிக்க முடியவில்லையா? வாசனையை மூக்கால் சுவாசிக்க முடியவில்லையா? தேன் வண்டுகளின் ரீங்காரங்கள் காதுகளில் கேட்கவில்லையா? அட அப்பா! அந்த செவ்வந்தி பூவில் இருந்து தேன் குடிக்கும் வண்டைப்பார்த்துக்கொண்டிருக்கிறாய்.

அமுதவ: சும்மா போடி!

வடிவழகி: தேன் இருக்கும் இடத்தில் வண்டுகள் மொய்க்கின்றன. இப்போ அமுது பூ இருக்கும் இடத்தைத் தேடி இப்பொழுது ஒரு வண்டு வரப்போகிறது.. (அமுதவல்லியும் வடிவழகியும் சிரிக்கின்றனர்)

அமுதவல்லி:நேரம் மாலையாகிவிட்டது. மன்னர் எழுதிய ஓலையில் நேரமிட்டு எழுத வில்லையாடி?

வடிவழகி: நேரமிட்டு எழுதுவதற்கு இதென்ன அரச சேவையா? காதலிப்பவர்கள் எத்தனையோ தடைகளைத் தாண்டித்தானே வரவேண்டும் அவர் வருவார்.

அமுதுவல்: மன்னர் முடிசூடிய பின்பு என்னிடம் வருவதைக் குறைத்துக் கொண்டார். என்னை ஏமாற்றிவிடுவாரோ!

வடிவழகி: இராசமாதேவி பட்டத்து இராணியாக இருக்க உன்னை காதல் திருமணம் செய்து இரண்டாவது மனைவியாக வைத்திருப்பதாக உறுதியாகச் சொல்லி விட்டார். இது அரச பரம்பரையில் சகஜம்.

அமுதவல்:: அவர் இளவரசர் பரம்பரை, அவர்களுக்குக் கீழ் சேவை செய்யும் சாதாரண மந்திரி அப்பா முதலியாரின் மகள் என்னைத்திருமணம் செய்ய அரச குடும்பம் சம்மதிக்குமா?

வடிவழகி: நீ வீணாக யோசித்து யோசித்து உன்ர அழகையும் கெடுக்கப்போறாய்.(அப் பொழுது சங்கிலி வீரமாப்பாணனோடு பூங்காவின் படலை அருகில் வருகிறார்)

சங்கிலி: (தன்னுடன் வந்த மெய்க்காப்பாளன் வீரமாப்பாணனை நோக்கி ) அதோ அமுது வடிவழகியுடன் பூப்பறித்துக்கொண்டிருக்கிறாள் நான் கதைத்து விட்டு வருகிறேன்.

வீரமாப்: சரி, செல்கின்றேன்.நீங்கள் கவனமாக வீடு போய்ச்சேருங்கள்.

சங்கிலி: ஏன் அப்படிச்சொல்கிறாய்?

வீரமா: எதற்கும் கவனமாக இருப்பது நல்லது.

சங்கிலி: நீ கூறுவதும் சரி தான். இப்பூஞ்சோலை எனது மாளிகைக்கு அருகில் தானே இருக்கிறது..

வீரமா: சரி போய் வருகிறேன்.
(பெண்கள் இருவரும் இருக்கும் இடத்தை அரசன் அடைகின்றான்)

வடிவழகி: தங்கள் அன்புக்காதலி தங்கள் வரவு தாமதித்து விட்டதாக கோபத்துடன் இருக்கிறார்.

சங்கிலி: நான் முன்பு போல் திடீரென வரமுடியாது என்பது அவளுக்குத் தெரியும். தானே. மன்னனைப்பற்றி வசைபாட எத்தனையோ கண்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறன.

(அமுதவல்லியின் பக்கத்தில் அரசன் செல்லுதல்)

அமுதவல்:: எனினும்?

சங்கிலி: குளிர்ந்தருவும், தருநிழலும், தீஞ்சுவையும், தெண்ணீரும், தென்றலும், வருபுனலும் நிறைந்த இராச்சியத்தின் பந்தலாக நிற்கும் என்மீது மல்லிகைப் பூவெனப்படர்ந்து நிற்கின்றாய் அமுதா?

அமுதவ: நாதா! இன்பமும் துன்பமும் காதலுக்குச்சொந்தமா?

சங்கிலி: துன்பத்திற்கு இடமேயில்லை. துன்பத்தை இன்பமாக்க வேண்டிய காலமிது. மதவாதிகள் சித்தாந்தமல்ல போர் மறவன் இயல்பு. உனக்கு அப்படி என்ன துன்பம் நேருமென பயப்படுகிறாய்.

அமுதவ: நான் உங்களைச் சந்திப்பதை பெற்றோர் அறிந்து விட்டனர். சந்திக்கவேண்டாமென கட்டளை ..........

சங்சிலி: கட்டளை! இந்த இன்ப ரசத்தைப்பருக எனக்குத்தடையா? பருவம் பூத்து, இளமை பொங்கி, ஆட்சியின் சொத்தான அழகுக் குவியலை நான் சந்திக்கத்தடையா! நில மடந்தையின் அனுமதியிலா சந்திரன் தன்னிலவைப் பொழிகின்றான்.

அமுதவல்: வாதும், வஞ்சனையும், சூதும், சாகசமும் ததும்பிய அந்தப்புர வாழ்வின் நடுவே வளர்ந்து ஆட்சியின் பாதுகாப்பிலே அடைக்கலப் பொருளாக இருக்கிறேனென யார் எண்ணினாலும், அதிகாரத்தால் பெண்ணின் காதலை, உங்களைத் தவிர,வேறு ஒருவராலும் என்னிடம் பெற முடியாது

சங்கி: அமுதா கழுகுகளும், பருந்தினமும் வானத்தை வட்டமிடுகின்ற நேரமல்லவா?

அமுத: அதற்கு வானவீதியில் வெண்புறாக்கள் வலம் வரவேண்டும்.

சங்கிலி: உன் பெற்றோர் உனக்கு ஊறு விளைவித்தால், வேறு வழி சமைப்பேன். பயப்படாதே.

அமுதவ: அப்படியென்றால்

சங்கிலி: பருந்து வெண்புறாவைக் கொத்திக்கொண்டுபோய் மாளிகையில் வைத்திருக்கும்.

அமுதவ: பட்டத்துராணியால் சங்கடம் ஏதும் ....

சங்கிலி: நான் பார்த்துக்கொள்வேன். எமது காதலால் ஊரவர் கூறும் வசைவான் வேங்கையின்பூ தீப்பொறிகள். பெற்றோர் உள்ளங்களைத் தவிக்க வைக்கும் நிலையான காதல்..

அமுதா: அன்பும், பண்பும், குலமும், குணமும், பருவமும், உருவமும் ஒன்றியதால் மட்டும் நோக்கு ஒத்துவிடவில்லை. கருத்தொன்றிய கண்களே இதயத்தைத்தொடுகின்றன.

சங்கிலி: கொல்லுகின்ற கூர்விழிகள் பேசும் மொழிகளை உணர்ந்த எனது இதயம் இரும்பல்ல ஆனால் .........

அமுதா: ஆனால் ...........

சங்கிலி: பூத்த வேங்கையையும், சிரிக்கும் முல்லையும் முளைத்தெழுகின்ற தென்றலும், பால்நிலவும் என்கடமை உணர்வைத் துரோகியாக்கினால் வீரம் மாசுபடுமல்லவா?

அமுதவ: கடமை உணர்வில் என்னை மறப்பீர்களா?

சங்கிலி: ஏன் உனக்கு மீண்டும் மீண்டும் சந்தேகம். அமுதா இரு உள்ளங்கள் பிணைந்து வாழ முடியாதபடி இடுக்கண் புகுத்தும் எதிரிகளை சிதறடித்து ஆண்டாண்டு தோறும் ஆயிரமாயிரம் உள்ளங்கள் ஏக்கமற்று வாழ வழி வகுப்பேன்.

அமுதவ: என் காதலன் சங்கிலிவேந்தன் காலத்தில் உருவாகட்டும்.

சங்கிலி: அந்நியர் ஆதிக்கத்தில் 'காதல்' கொலைத்தண்டனை ஆகலாம்.

அமுதவ: அந்நியர் ஆதிக்கத்தில் நாம் உயிருடன் இருந்தாலல்லவா?

சங்கிலி: தற்கொலை செய்வார்க்கு உய்வில்லையே!

அமுதவ: நான் பேடியல்ல போர்க்களத்தே எதிரிகளுடன் செய்யும் போரில் வெற்றி பெறுவேன் அன்றேல் வீர சுவர்க்கம்.

சங்கிலி: அந்தப்புரத்திலே வளர்ந்ததால் வீரம் தொனிக்கிறது.

அமுதவ: வைரத்தை வைரம் தான் வரவேற்கும்.

சங்கிலி: அன்பு இதயத்தோடிருக்கட்டும். ஆனால் கடமை தவறக்கூடாது. வீர சுதந்திரம் வேண்டுமானால்,வாழ்வு மலர வேண்டுமானால் பிரிந்து வாழ வேண்டும் அமுதா .... வருகின்றேன்.
(இருவரும் பூங்காவின் படலையருகே வந்து விட்டனர்)
அப்பொழுது இராசமாதேவியும் தோழியும் அவ்விடத்திற்கு வந்து இருவரையும் காணுதல்)

இராசமா: ஒருவனுக்கு ஒருத்தி என்ற எமது பண்பட்ட வாழ்வில் ஆக்கிரமிப்பா? இது சரியா? இது முறையா? (அரசன் அச்சத்திடனும், அமுதவல்லி தலைகுனிந்தும் நிற்றல்) முக்கிய அரசாங்க வேலையென வந்தது இது தானா? (விம்மி விம்மி அழுத இராசமாதேவி தன்னால் தாங்க முடியாமல் திரும்பிப்போகிறாள். அரசன் தொடர்கிறான். அமுதவல்லி திரும்பிச் செல்கிறாள்)

திரை

# அங்கம் – 6

*தெரு*

பாத்திரங்கள்: சின்னவர், தம்பையா, கணபதி, சங்கரப்பிள்ளை, படைவீரன், ஒருவன்
(இரு பொது மகன் கத்திக் கொண்டு ஓடுகின்றனர்)

பொதுமகன்: பறங்கியன் வந்திட்டாங்களாம். நெடுந்தீவுக்கு வந்திட்டாங்களாம்.
(சின்னவர், தம்பையா, கணபதி என்போர் பயம் கலந்த ஆவலோடு ஒரு திசையை நோக்கி கவனித்தபடி வருகின்றனர்.)

சின்னவர்: பறங்கியக் கப்பலொன்று நெடுந்தீவில் கரையிலுள்ளதாம்.

தம்பையா: அப்ப இனி நாங்கள் கொடுவாக் கத்திகளை நன்றாக தீட்டிக் கூராக்க வேண்டும். வரட்டும்.

சின்னவன்: வாறாங்களாமோ? எங்க ஓடுற, தொலையிற? வர ஒரு வழி பிறக்கும் தானே?

கணபதி: என்ன ஒரு மாதிரி நிற்கிறியள்

தம்பையா: என்ன பறங்கியர் வாறாங்களாம்.

கணபதி: *சீச்சீ* அது செல்வம் எல்லோ வந்திருக்கு.

சின்னவன்: என்ன செல்வம்?

கணபதி: பறங்கியரின்ர கப்பலொன்று நிறையப்பொருள் பண்டங்களோட நெடுந்தீவு கரையில் கரைதட்டி நிற்கிறதாம். கொடி காட்டினவங்களாம். சங்கிலியன்ர, படைகள் கப்பலை சுற்றி வளைக்க வள்ளங்களுடன் நின்றவங்களாம்.

தம்பையா: ஆ ....பிறகென்ன? வீரமாகாளியம்மன் என்ன சும்மாவே பார்த்துக்கொண்டு நிப்பாள். முறையாய் மாட்டிப்போட்டினமாக்கும்.

கணபதி: அதோட கப்பல் தலைவன் பறங்கியும் அரசனை சந்திக்க போயிட்டினம். உங்க வண்டில்களில் கப்பலில் கிடந்த சாமான்களைக் கொண்டு போறாங்கள்.

சின்னவர்: சட்டம் என்டால் சட்டம் தான். சட்டப்படி கப்பல் கரைக்கு வந்தால் பண்டங்கள் முழுவதும் அரசனுக்கு கப்பலை மட்டும் தான் இனி குடுப்பினம்.

தம்பையா: வந்தது பறங்கி எண்ட தால கப்பலையும் குடுக்கிறாங்களோ தெரியாது. (சங்கிலியன் படைவீரர் ஈட்டிகளுடன் வருதல் அதில் ஒருவன் ஒரு வாழைக்குக்குட்டியுடன் வருகிறான்)

கணபதி: படையிட்ட கேட்பமே?

சின்ன: ஓ ... நீர் தான் காணும் கேளும்.

கணபதி: மெய்யே .... சண்டைக்கு வந்த கப்பலோ அல்ல சாப்பாட்டுக்கப்பலோ?

படைவீ: பண்டமேற்றி வந்த வாணிகக்கப்பல்.

தம்பையா: ஆ....ஆ...... என்ன முறையாய் இருக்கினமாம் இக்கணம் வலுவாய் சிக்குப்படப் போகினம்.(படைவீரர் போகப்புறப்படல்)

சின்னவர்: என்ன கையில் இருக்கிற வாழைக்குட்டி?

படைவீ: இது தரை தட்டின கப்பலில் இருந்து எடுத்த வாழைக்குட்டி .......

சின்னவர்: அட அப்ப உதுன்ர பேர் கப்பல் வாழையே ........... சரி சரி குட்டி போட்டால் எனக்கும் ஒண்டு தாருங்கோ .......
(படைவீரர் சிரித்து விட்டுச் செல்லுதல்)

தம்பையா: உந்தக் கப்பல் வாழைப்பழம் தின்னத்தான் வேணும்.

கணபதி: மெய்யே ..... ஒருக்கால் பறங்கியரைப் போய்ப் பாப்பமே. இப்ப சண்டைக்கு வரவில்லைதானே? வாணிபம் தானே வா வா போய்ப் பாரப்பம் .............
(பின் திரை மெதுவாக திறக்கப்படுகிறது)
(ஒருவன் காவுதடியில் இரண்டு பானையுள் பனங்கள்ளுக் காவியபடி வருதல் இடுப்பில் சிவிலிக்கூடு உள்ளது. இவர்களைக் கண்டு சற்று ஒதுங்கிச் செல்ல முற்பட)

சின்னவர்: ஒருக்கா ....ஒருக்கா ...ஒருக்கா நில் எங்க போறாய்?

ஒருவன்: பனங்கட்டி பதனிட பனங்கள்ளு கொண்டு போறனாக்கும்.

சின்னவர்: எங்களுக்கு கொஞ்சம் குடிக்கத்தா ......... (ஒருவன் பாரத்தால் காவு தடியுடன் கீழிருந்துகொண்டு சற்றுக் களைப்பாறி மூச்சுவிட்டபடி)

தம்பையா: அண்டைக்கு உண்ணான குடிக்கமாட்டன் எண்டாய். இண்டைக்கு கள்ளுக்குடிக்கப்போறான் எண்ணுறாய்.

சின்னவர்: ஆ...அது இண்டைக்கு ஓசியிலே தானே! குடிச்சுப்பார்ப்பம்.

தம்பையா: ம் ...........குடிக்கச் சிரட்டை சிரட்டையுமில்லை

கணபதி: (காவுபவனைப்பார்த்து) அதில இரண்டு பிளாக்கோலி வாவன் (பனை ஓலை வெட்டி பிளாக் கோலிக்கொணரந்து கொடுக்க பெரிய பானைக்கள்ளை எல்லோருக்கும் வார்த்து விடுகிறான். இரண்டு பானைகளிலும் சமனாக எடுத்துக்கொள்கின்றான்)

சின்னவர்: ஆ .....அது பிறவு வளவுக்கு வா! பிசகு முடிக்கிறன் (தூக்கிச் செல்கிறான்) பின் திரை மீண்டும் மூடப்படுகிறது)

தப்பையா: என்ன கையும் கணக்கும் சரி எண்டு வருகிறியோ?

சின்னவர்: ச்சா ........ அவன் என்ர குடிமை.........

கணபதி: நீ அவனைக் குடிமை எண்டு சொல் உன்னைப் பறங்கி வந்து குடிமை எண்டு சொல்வான் (மூன்று பேருக்கும் நல்ல வெறி)

தம்பையா: ஒருக்கால் கடற்கரைப்பக்கம் நடந்து போய் பறங்கியரைப் பார்த்தால் என்ன?

சின்னவர்: இல்லை அரண்மனைப் பக்கம் நடந்து போய் ஒருக்கால் பறங்கியரைப் பார்த்தால் என்ன?

கணபதி: பேசாமல் அவரவர் வீட்ட போனால் என்ன?

சங்கரப்பி: என்ன மூன்று பேரும் சுவர்க்கத்திலே நிக்கிறீர்கள் போல

தம்பையா: நாங்கள் பறங்கியரைப் பார்க்கப்போறம்.

சங்கரப்: அவங்கள் ஓடித்தப்பினோம் பிழைத்தோம் எண்டு போட்டாங்களாம்.

கணபதி: எங்கட அரசன் சும்மா விட்டிருக்கமாட்டாரே!

சங்கர: அது பெரிய முசுப்பாத்தியாம்.

சின்ன: அறிஞ்சதைச் சொல்லண்ணை ..

சங்கரி: நான் விபரமாகச்சொல்லுறன் கேளுங்கோ? போத்துக்கீச கப்பல் தலைவன் அப்போன்சேக என்றவனுடன் கொஞ்சப்போர் அரசனிடம் போய், கொண்டு வந்த மற்றச் சாமன்களை விட்டுவிட்டு வெடிமருந்துகள், அது கண்போட்டு வெடிக்க வைக்கிற சூத்திரங்களையும், கப்பலையும் கொண்டு போக அனுமதி கேட்டானாம். எங்கட அரசனைப் பற்றித் தெரியுந்தானே. அவர் சொன்னாராம். கப்பலும் இல்லாது கடல் வழி நீந்திப்போக வேண்டிவரும் என்று அரசன் கர்ச்சிக்க, ஒண்டும் வேண்டாம் எங்களைவிட்டால் போதுமெண்டு புறப்பட்டார்களாம். பிறகு அரசன் மன்னார் முத்துக் களைக்கொண்டஒரு பொட்டளமும் கொடுத்தார்.

கணபதி: அட சக்கயெண்டானாம். அப்ப எங்கட அரசனுக்கு குருசங்குயோகம் எண்டு சொல்லன்.

சங்கரி: ஏன் அப்படிச் சொல்லுகிறீர்.

கணபதி: பறங்கியர் வெடி மருந்தையும், அதைப்போட்டு வெடிவைக்கும் பீரங்கியையும் விட்டு விட்டுப்போட்டாங்கள், வில்லு, அம்புடன் போரிடுகிற.. எங்கட அரசனுக்கு உதுகளும் கிடைச்சால் பிறகு சொல்ல வேண்டுமோ?

சின்ன: அப்ப கணபதி அண்ண நீங்க சொல்லுறதைப் பார்த்தால் ஏதும் வேட்டை விட்டினமோ, குடுத்து வாங்கப்போகினம்.

கணபதி: பின்னயென்ன? பறங்கியரிட்ட எடுத்த பீரங்கிகளினாலே அவங்கட உயிரையே சங்கிலி அரசன் எடுத்திடுவார். ஏதும் நடந்தால் இருந்து பாரன்.

சங்கரப்: இன்னும் புதினமறிய வேணுமென்றால் என்ர பெடியனுக்கு விசயமெல்லாம் தெரியும். வாங்கோபோய் கேட்போம்.

சின்ன: கப்பலிலே உன்ர பண்டங்கள் எல்லாம் அரச சபைக்குத்தானே! உம்மட பெடியனும் கப்பலடிக்கு போனதென்றால் ஏதும் கொண்டு வந்திருப்பான். பறங்கியற்ற பண்டங்களைக்கண்ணால் பார்க்க ஆசையாயிருக்கு.

சங்கர: என்ன மாதிரியோ தெரியவில்லை வாருங்கோவன் வீட்டுப் பக்கம் போய்போகலாம். வாங்க ....

திரை

# அங்கம் ~ 7

*அரச ஆலோசனை மண்டபம்*

**பாத்திரங்கள்:** சங்கிலியன், அப்பாமுதலி, தனிநாயகமுதலி, அரசகேசரி. அடியார்க்கு நல்லார், இமையாணன், வீரமாப்பாணன்.

(அரசன் யோசனையில் இருக்கிறாள். அவன் அருகே அரசகேசரி, வீரமாப்பாணர் இமையாணன், தனி முதலியாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது அப்பாமுதலி அங்கு விரைந்து வருகிறார்)

**அப்.மு:** மன்னரே! மன்னிக்க வேண்டும். சற்று வயிற்றில் குழப்பமேற்பட்டதாலே உடன் வர முடியவில்லை.

**சங்கிலி:** பறவாயில்லை அமருங்கள். சபையோர்களே! எமது ஒற்றர் தலைவன் மன்னாரிலிருந்து சில செய்திகளை கொண்டுவந்திருக்கின்றான்.எமது இராச்சியத் திற்கும், எமது மண்ணிற்கும் துரோகம் செய்யும் துரோகிகளின் உடந்தையோடு மன்னாரின் ஒரு பாகத்தில் பறங்கிகள் தமது முத்திரையை பதித்து விட்டார்களாம்.. ஏற்கனவே மதம் பரப்பிய வண மஞ்சிலாசு என்னால் துரத்தி அனுப்பிவிட புதிதாக வணசவுரினர் என்பவரும் அங்கு வந்து சமயத்தை மாற்றுகின்றார்களாம். அவர்கள் பிரசங்கத்திற்கும், பணத்திற்கும் பலியான பல சைவமக்கள் தமது மதத்தைவிட்டு மதங்கொண்டு மதம் மாறிவிடுகிறார்களாம்.

**தனிமு:** இது ஆரம்பமே இப்படியென்றால் ..........

**சங்கிலி:** ஆரம்பத்தில் இது மட்டுமோ? திருக்கேதீஸ்வர கோயிலின் கல்லுகள், மாதாவின் கோயில்களாகவும், அரண்கள் தங்குதற்கான கோட்டைகளையும், அழகு செய்கின்றனவாம். எமது மன்னார் தலைவனும் மதி கெட்டவனாக இருக்கிறானாம். துரோகிகள் கூட்டம் நக்கி, நக்கி பறங்கியர் பின் தொடர்ந்து காட்டிக் கொடுத்து, அவர்கள் வேரூன்றி எம்மண்ணை ஆக்கிரமிக்க துணை புரிகின்றார்களாம். இப்படியே விட்டுவிட்டால், யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக்கண் சுருங்கி, யாழ்ப்பாணத்திற்குமே பங்கம் ஏற்படலாம். எனவே உடனே அவர்களைத் துரத்த போர்செய்ய வேண்டும். இதற்கு என்ன சொல்கிறீர்கள்.?

**த.மு:** (எழுந்து நின்று) மன்னா! போர் என்றால் போர் என்று கர்ச்சித்து சிங்கம் போல் சீறிப்பாய்ந்து அழித்தொழித்து வெற்றி கொண்டுவரும். சங்கிலி மன்னவா? காலங்கள் எப்பொழுதும் ஒருவாறு இல்லை. மாரி,கோடை, வெய்யில் மழை, பகல் இரவு இவ்வாறு மாறி மாறித்தான் வரும் இது இயற்கை. இயற்கையை மாற்ற முடியாது அதுபோல் .....

**சங்:** அதுபோல் ...

த.மு: பறங்கியர் கோவையில் பலத்துடன் இருக்கிறார்கள். கொழும்பில் கோட்டை கொத்தளங்களுடன் இருக்கிறார்கள். சிங்களவர் துணை அவர்களுக்கு உண்டு. உள்நாட்டின் சதிகாரர்களும் அவர்களுக்கு உதவலாம். எனவே அவசரப்படாது ஆலோசித்துவிட்டுத் தான் முடிவெடுக்க வேண்டும்..
(அரசன் ஆழந்த யோசனையுடன் அங்குமிங்கும் செல்கின்றான்)

அரகே: அரசே! மந்திரியார் கூறுவதும், சரியாகத் தான்படுகிறது.

அடியா: பறங்கியர் வந்து விடுவார்கள். என்ற அபாயம் பல நாளாக இருந்தது, தடுப்பதற்கான நடவடிக்கைகள் அப்பொழுதே எடுத்திருக்க வேண்டும். இப்பொழுது உடனே போர் செய்யப்படுவதற்கு முன்பாக சில ஆயத்தங்களைச் செய்யவேண்டும்.

சங்கிலி: என்ன ஆயத்தங்கள்?

அடியா: உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்காது விவேகத்திற்கு இடம் கொடுக்க வேண்டும்.

சங்கலி: விவேகம் என்று கூறுவது ....

அடிநா: பல பக்கத்தாலும் தொல்லை கொடுப்பது தான்.

சங்கிலி: அப்படியானால் ...............

அ.நா: முழுப்பலமும் ஒரு இடத்தில் புறப்படாது சிதறும் அப்போது இலகுவில் வெற்றியைப் பெற்று விடலாம்.

சங்கிலி: தொல்லை கொடுப்பது பற்றி உங்கள் ஆலோசனை.

அ.நல:: வடக்கே தஞ்சை நாயக்கருக்கு ஓலை அனுப்பி அவர்களோடு சண்டை செய்யப்பண்ணவேண்டும்.கள்ளிக்கோட்டையினையும் அப்படியே செய்யும்படி தூண்ட வேண்டும் நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளில் புத்தர்களும், சைவர்களும் மதமாற்றக் கொடுமையால் புழுங்கி கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் தூண்டி விடவேண்டும்.

சங்கிலி: மந்திரியாரே! நீங்கள் செய்வதும் சரிதான் சபையோர்களே! கலகத்தை மூட்டும் வழிவகைகளை எடுப்போமா?

அப்.மு: மன்னரே! பறங்கியரின் வலிமையை நாம் பெரிதாகக் கொள்ளத் தேவையில்லை அவர்கள் வியாபாரத்திற்காக ஒரு சில கப்பல்களை வைத்திருக்கிறார்கள். எல்லாம். போர்க்கப்பல்கள் இல்லை பெரிய படை அணி கிடையாது. மன்னாரில் எதிர்ப்பு இருக்காததினால் கால் ஊன்றி இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தரசுக்கிருக்கும். கடற்படை வலிமை மறந்து விட்டீர்களா?

நாயக்கரின் கடற்படையோடு எங்கள் கடற்படை திருவடி நிலைக்கப்பாற் சண்டை செய்து பெற்ற வெற்றியை மறந்து விட்டீர்களோ? சூட்டோடு சூடாக பறங்கியருக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும். நாம் மன்னாருக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும். நாம் மன்னாருக்குப் படையெடுத்துச் செல்லுவதே சரி.

**சங்கிலி:** என்ன எல்லோரும் அமைதியாக இருக்கிறீர்கள் நீங்கள் எல்லோரும் அப்பா முதலியார் சொன்னதைச் சரியென்று எற்றுக் கொள்கீறீர்கள் போலத் தோன்று கிறது..எனவே இமையாணனாரே பறங்கியரோடு சண்டை செய்ய ஆயத்தம் செய்யும்.

**இமை:** நாளைக் காலையிலேயே படையுடன் புறப்பட்டு விடலாம் அரசே!.

**சங்கலி:** வீரமாப்பாணரே நீரும் ஆயத்தங்களைச் செய்யும்.

**வீரமா:** ஆம் அரசே!

SWAMI ABRAHAM
community centre
SOMAMANKAL-MALLAKAM.
Regd. No: J/VC/21/844

திரை

# அங்கம் ~ 8

## *வன்னியன் மாளிகை ஊர்வாகவற்றுறை*

**பாத்திரங்கள்: காக்கைவன்னியன், சிங்களமுதலியார், பறங்கியர்**

**பின்னணி:**

தமிழராற் தோற்கடிக்கப்பட்ட பறங்கியரும் சிங்களவரும் தங்களுக்கேற்பட்ட தோல்வியைக்கண்டு தமிழர்களின் ஒற்றுமையைக் குலைத்து வெற்றி பெற இராஜதந்திரத்தை கைக்கொள்ளுகிறார்கள்.

**காக்.வ:** நீங்கள் யார்?

**சிங்.மு:** சிற்றரசே நான் குமாரபண்டா என்ற சிங்கள முதலி, இவர் கோட்டை இராச்சியத்துப் பறங்கிப் பிரபு.

**காக்.வ:** மழை விட்டும் தூவானம் மாறவில்லை. சகோதர பாசத்துடன் தமிழன் உங்களோடு நடந்து கொண்ட தவறல்லவா தமிழன் இராச்சியத்தைக் கவர நினைத்தது..

**சிங்.மு:** சிற்றரசே! எமது அறியாமைக்கு வருந்துகிறோம். மன்னிக்கவேண்டும்.

காக்.வ: மன்னிப்பு! யார் யாரை மன்னிப்பது? மரபு தெரியாத உங்களையா நாம் மன்னிப்பது.

சிங்முத: நாசகாலம் விபரீதபுத்தி அதை நாம் உண்மை என நம்பினோம் .......

காக்.வ: பரம்பரை பரம்பரையாக நீங்கள் தமிழனுக்குச் செய்த துரோகத்தை என்னால் மறக்க முடியாது! இப்போது நீங்கள் என்னை நாடி வந்த காரணம் ......

சிங்.மு: தமிழ்ப் பெருந்தலைவா! தமிழினத்தின் உயர்விற்காகத் தங்கள் ஒத்துழைப்பை நாடி வந்திருக்கிறோம்.

கா.வ: தமிழினத்தின் உயர்வு .... (அலட்சியமாகச் சிரிக்கிறான்) அதற்காக நீங்கள் தோண்ட வேண்டிய குழிகளை இனிமேலும் தோண்டாதிருந்தாலே போதும்.

சிங்.மு: முடிசூடா மன்னனே! உங்களது உயர்விற்கும் தமிழினத்தின் வாழ்விற்குமாகவே தங்கள் ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.

கா.வ: எனது உயர்வுக்காக நீங்கள் சிரத்தை கொள்கிறீர்களா? என்ன திடீர் மாற்றம்? அதுவும் இந்த வன்னியனிடம்.

சிங்,மு: பேடி முன் தலைவணங்குவதை விட வீரனிடம் அடையும் அவமானம் உயரந்தது.

கா.வ: அஞ்சா நெஞ்சம் படைத்த வீரத்தமிழ் மரபில் ........... பேடியா? ஆஹா என்ன வார்த்தை என்ன நெஞ்சுரம் உங்களுக்கு!

சிங்.மு: வீரம் படைத்த தமிழினத்திற்கு வீரன் ஒருவன் முடி மன்னனாக விளங்கினால் அது நமது நாட்டிற்கும் கௌரவம்!

கா.வன்: எந்தக் கண்ணியில் யாரை விழுங்கி எந்த வாள் ருசி பார்க்க இந்தத்திட்டமோ?

சிங்.மு: வீரனைப் போற்ற வேண்டியது. எம் கடமை.

கா.வன்: வீரனை எதிர்த்தது எந்தச் சதி?

சிங்.மு: வேந்தன் கட்டளை

காக்.வ: நேர் நின்று எதிர்க்க முடியவில்லை மறை முகத்தே வஞ்சிக்கத்திட்டமா?

சிங்.மு: மன்னன் ஒருவனுக்கு வீரம் மட்டும் இருந்து என்ன பயன்? உங்கள் வீரம். பிறந்த உண்மை சிறந்த அரசியல் ஞானம். மக்கள் உங்களிடம் கொண்டுள்ள அபிமானம் இவ்வளவும் இருக்கும் போது நீங்கள் ஏன் அடங்கி வாழ வேண்டும்.

கா.வ: தமிழினத்தைக் கருவறுக்க இதைவிட சிறந்த வழி உங்கள் சிந்தனையில் படவில்லையா?

சிங்.மு: எமது வேந்தனும், பறங்கியத்தளபதியும் கூறியதைத் தங்களிடம் சொல்ல வந்தோம்.

கா.வ: அவர்கள் என்ன கூறினார்கள்.

சிங்.மு: தமிழரும், சிங்களவரும் இணைந்து வாழ வேண்டுமானால் உயர் குணமும் வீரபராக்கிரமும் வாய்ந்த காக்கை வன்னியனே வேந்தனாக வேண்டும் 'குறுகிய மனப்பான்மையும், இதயத் துடிப்புமுள்ள சங்கிலி வேந்தன் காலத்துக்குக் காலம் சிங்கள நாட்டின் மீது படையெடுத்து எம்மை நசுக்குவான்! காக்கை வன்னியன் அரசனாக வரவிரும்பினால் சிங்களவரும், பறங்கியரும் தங்கள் பூரண உதவிகளைச் செய்வர்' என்று கூறும்படி எமது வேந்தன் கட்டளையிட்டார். சிற்றரசே!

கா.வ: வீரர்களைப் பிரித்து விட்டால் வெற்றி காண்பது மிக இலகு. நல்ல திட்டம் போட்டிருக்கிறீர்கள்!

சிங்.மு: தமிழினத்துடன் நமக்குப் பகைமை ஏதுமில்லை. மறத்தமிழ் வேந்தன் சங்கிலியன் இன்று உங்களைக் கௌரவித்ததாக எண்ணலாம் ஆனால் ...

சிங்.மு: அதே வீரனை ஒப்புயர்வற்ற தலைவனை ஒரு சிற்றரசு பதவி கொடுத்து காட்டுப்புறத்துக்கு விட்டா கௌரவிப்பது?

கா.வன்: தளபதிக்கும் வேந்தனுக்கும் இடையே உள்ளது. சிற்றரச பதவி தானே! தளபதியாக இருந்தேன். இன்று சிற்றரசனாக இருக்கின்றேன்.

சி.மு: உண்மைதான்! சிற்றரசு பதவி தந்தும் யாழ்ப்பாணத்தில் இருக்க விடவில்லையே! மக்களின் செல்வாக்கு இன்று உங்களிடம் அதிகரித்திருப்பதை எண்ணி எதிர்காலம் தனது அரச பதவிக்கு ஆட்டங்கொடுத்து விடுமென்ற வஞ்சனையால் அல்லவா வேந்தன், தங்களை இத்திசை நோக்கி அனுப்பினான்.

கா.வன்: இது வஞ்சனை என்பது எப்படி?

சிங்.மு: பொய் சொல்ல வேண்டிய காரணமில்லை சிற்றரசே.

கா.வன்: ஆம்! இவை சிந்திக்க வேண்டிய கட்டம் தான். எனது சகாக்களுடன் சிந்தனை செய்து சில நாட்களுள் பதில் கூறுவேன். நீங்கள் சென்று வாருங்கள்.

பறங்: சிற்றரசே தங்கள் உயர்விற்கும், தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படப்பறங்கியர் படை என்றும் தயாராக இருக்கின்றது..

கா.வ: சங்கிலி அரசன் சபையினரின் உதவியின்றி எமது திட்டத்தை நிறைவேற்ற முடியாது.

பறங்: சங்கிலி மன்னன் அண்ணன் பரநிருபசிங்கனும், மந்திரி அப்பாமுதலியும்,மகன் பரராசசிங்கனும் எங்கட பக்கம். அவர்கள் அரண்மனை இரகசியங்களை எங்களுக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உதவியையும் பெற்று விட்டால் காக்கைவன்னியனே நீர்தான் வேந்தன்.

கா.வ: எதற்கும் விரைவில் பதில் காண்போம்.

பறங்: சிற்றரசே! கோவையிலிருந்து பிறகன்சா என்ற தேசாதிபதி பலம் வாய்ந்த படையுடன் தளபதியாகி வந்திருக்கிறார். தங்களின் முடிவை அறிந்து வருமாறு சொன்னார்.

கா.வ: யாழ்ப்பாண அரசனாக நான் வரவிரும்பினால் நீங்கள் என்ன உதவி செய்வீர்கள்?

பறங்: பலமான போர்த்துக்கல், சிங்கள படைகளும், நவீன போர்த்துக்கீய சிங்கள படைகளும், நவீன போர்க்கருவிகளும் தருவோம். போரை நடத்தும் பொறுப்புத் தங்களைச் சேர்ந்தது..

கா.வ: எனது தாயகத்தின் மீது நான் தலைமை தாங்கிப்படையெடுக்க வேண்டு மென்பது தான் உங்கள் உதவித் திட்டமா?

பறங்: அப்படியானால், பிறகன்சா தலைமை தாங்கி போரை நடத்துவான். நீங்கள் படை உதவி செய்வதுடன், எமது போர்க்கருவிகளை உங்கள் நாட்டில் ஒளித்து வைக்க உதவி செய்தும், ஒற்றர்கள் நடமாடவும் வழி செய்து தரவேண்டும்.

கா.வ: வேந்தனும், வீரமாப்பணனும், இமையாணனும், கரைப்பிட்டி வன்னியனும், வேளக்காரப்படையும் இருக்கும் வரை போரிட்டு வெற்றி காண்பது அரிது. சதித்திட்டத்தாலே தான் நமது இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும்.

பறங்: காலத்தை எதிர்பார்த்தால் காரியம் சிதறிவிடும்.

சிங்.மு: காலம் போகப்போகச் சங்கிலியன் படைப்பலம் பெருகிவிடும் போர்த்துக்கர் எவ்வளவு காலம் மறைந்து வாழ முடியும்? போருக்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களும் செய்து விட்டோம்.

கா.வன்: பறங்கியர் இந்நாட்டில் நடமாட வேந்தனிடம் அனுமதி பெற வேண்டும்.அதை முதலில் செய்யவேண்டும்.

பறங்: எப்படிப் பெறுவீர்கள்?

கா.வன்: வியாபாரிகள் என்ற தோரணையிலே அனுமதி பெற்று விட்டால் எதற்கும் இலகு. இன்று இரவு உங்கள் போர்க்கருவிகளைக் கொண்டு வாருங்கள். பின்னைக் காட்டிலே அதை மறைத்து வைப்பதற்கு எனது வீரர்கள் உதவி செய்வார்கள். இன்றிரவு. அதனை முடித்து விடுங்கள் மீண்டும். நாளை சந்திப்போம்.
(எல்லோரும் செல்கிறார்கள். வன்னியன் தனிமையில்)

மனச்: நில் ... அரச மரபினன் ஒருவன் தான் வேந்தனாக இருக்கலாம்.

கா.வன்: வஞ்சக வேந்தனை நான் ஏன் வஞ்சிக்க கூடாது.

மனச்: தமிழினத்தைப் பிரித்து விடும் சூழ்ச்சிக்கு ஏமாந்து விடாதே!

வன்: சூழ்ச்சியால் ஏமாந்து விடமாட்டேன். ஆனால் ............ வேந்தன் செய்யும் திட்டமிட்ட துரோகத்தையும் விடமாட்டேன்.

மனசா: ஏமாந்து இதைக் கருவறுத்து விடாதே?

மனச்: தமிழினத்திற்கு நாசகாலம்

கா.வன்: மணி முடிதாங்கி வேந்தனாக வேண்டும்.

மனச்: மணிமுடி தரித்து மன்னனாவதே முதல் வேலை பதவி ...பதவி ..மன்னர் பதவி ஆஹா...

திரை

SWAMI ABRAHAM
community centre
PULAMANKAL-MALLAKAM.
Regd. No: JVC/21/844.

# அங்கம் - 9

### அப்பாமுதலியார் வீடு

பாத்திரங்கள் :- காக்கவன்னியர், அப்பாமுதலி

(சதித்திட்டத்தைப் போடுவதற்கு அப்பாமுதலியார் வீட்டிற்கு விருந்தினர் போல் காக்க வன்னியன் வருதல்)

கா.வன்: அறுசுவையுடன் அமுதமான விருந்தை அளித்ததற்காக முதலில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அப்.மு: வன்னியதலைவனே விருந்தினராக வரவேற்றதில் என் மாளிகை பெருமையடைகிறது. வன்னியரே.

கா.வன்: நன்றியை நீர் ஏற்காவிடினும் நன்றி கூறுவது என் கடமை. மேலும் முதலியாரே! உமக்கு நான் வேறோர் விதத்திலும் கடமைப்பட்டுள்ளேன்.

அப்.மு: வேறோர் விதத்திலா எவ்விதத்தில்?

கா.வன்: என்ன தெரியாதவர் போல பேசுகிறீர்! மன்னர் சங்கிலியன் எம்மீது போர் தொடுக்கத் திட்டமிட்டுள்ளதை என் ஒற்றர் மூலம் அறிவித்தவர் தாங்கள் தானே? மேலும் எதிர்த்துப் போரிடுவதற்கு சந்தர்ப்பம் சரியில்லை. வந்து சமாதானம் செய்து கொள்வதே நல்லது என வழி கூறியவரும் நீங்கள் தானே.

அப்.மு: (மிகவும் சந்தோஷத்துடன்) வன்னியரே! நீர் எமக்குச் செய்து தர வேண்டியவை சிலவுண்டே. உமது நன்றியை அவற்றின் மூலம் செலுத்தலாமே.

கா.வ: இல்லை முதலியாரே அவற்றின் மூலம் நன்றியைச் செலுத்த முடியாது?

அப்.மு: பின் .........

கா.வ: (மனதில் வெறும் வெளி வேடமாக கேட்டுக்கொண்டு) உரிமையுடைய இளைஞன் ஒருவன் அநியாயமாக அரசுரிமை பறிக்கப்பட்டு இருக்கும் போது அவனுக்குதவி அவனைச்சிம்மாசனத்தில் அமரவைப்பது என்கடமை என எண்ணுகின்றேன். பரராசசிங்கனை யாழ்ப்பாணத்தின் மன்னனாக்குவது நமது கடமை முதலியாரே. அந்த இலட்சியத்தையடைய நாம் முயல்கின்றோம்

அப்.மு: அதுவும் ஒரு விதத்தில் சாதகம் தான்.

கா.வ: முதலியாரே! நீரும் நானும் விரும்பினால் மட்டும் பரராசசிங்கன் மன்னனாகி விடுவான் என எண்ணக் கூடாது! சங்கிலி செகராசசேகரன் இன்று மன்னன். அவன் கைகளில் அதிகார மிருக்கிருக்கிறது. தனக்கெதிராக சதி செய்வதாக அறிந்தால் நாங்கள் தூக்கில் தான்! ஆகவே நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்பக்கம் சேர்க்கக் கூடியவர்களை இரகசியமாகச் சேர்த்து நம்பக்கத்தைப் பலப்படுத்துவது நமக்கு நல்லது.

அப்.மு: பயப்படத்தேவையில்லை. என் போன்ற மந்திரிகள் பலர் எம்பக்கம். அது மட்டுமன்று. பரராசசிங்கனின் தாயார் பரநிருபனின் தேவியார் மாதவி, நமது திட்டம் நிறைவேறுவதற்காக எதையும் செய்யத்தயாராக இருக்கிறார். அது மட்டுமன்று பரநிருபசிங்கனும் நம் பக்கம் தான்.

கா.வன்: இதையும் அறிந்தேன். மனைவி தடுத்தும், மகனுக்குரிய அரசைத் தம்பிக்களித்தவர் பரநிருபர். அப்படியான அவர் எதற்காக சங்கிலிக்கு எதிரானார்.

அப்.மு: 'இல்லாள் சிரித்தால்தான் இல்லறமும் சிரிக்கும்' வன்னியரே! பரநிருபனின் மனைவி மாதவி தேவியார் தனது கணவனுடன் முகம் கொடுத்துப் பேசுவதேயில்லை. பழையபடி இருக்கப் பரராசசிங்கன் மன்னனாக வேண்டுமாம்? நாளாந்தம் மனைவியின் வார்த்தைகளினால்.,கரைக்கப்பட்டு வருகிறான். பரநிருபன், தான் செய்தது பிழையென்பதைப் படிப்படியாக உணர்ந்து வருகிறான். எப்போதாவது பரராசசிங்கனை மன்னனாக்குவ தாகவும் வாக்களித்துள்ளான்.

கா.வன்: எப்படியிருந்தாலும் தம்பியாரின் அன்பிலிருந்து விடுபட வேறு காரணங்களும் இருக்க வேண்டும்.

அப்.மு: சரியாகச்சொன்னீர்? சங்கிலியன் அரசனான பின்னர். தமையன் கூறுவது எதையும் ஏற்றுக் கொள்வது இல்லை. அத்துடன் அவர் மந்திரியாக இருந்தாலும் மந்திரிக்குரிய இடம் அளிக்கப்படுவதும் இல்லை. இதனால் வெறுப்புகள் நாளாந்தம் விருட்சமாகி வருகிறது.
வன்னியரே! அரச குடும்பத்திலேயே பிளவையுண்டாக்கினால் முடிவு நமக்குச் சாதகமாகி விடும். இல்லையா?

கா.வன்: பிளவுண்டாகி விட்டது! அதைப் பெரிதாக்குவது நமக்குதவும். என்ன தான் இருந்தாலும், சங்கிலி சிறந்த வீரமுடையவன், எத்தகைய எதிர்ப்பையும் சமாளிக்கக் கூடியவன், எதற்கும் மனந்தளராதவன். அவனைக் கண்டபோதே நானுணர்ந்து கொண்டேன். ஆதலால் நாம் இப்படிச் செய்தாலென்ன?

அப்.மு: எப்படி?

கா.வ: படைப்பலம் மன்னன் கைகளில் இருக்கும் போது நாம் சிலர் எதைச் சாதித்து விடமுடியும்? நமது இலட்சியம் நிறைவேற இதைவிட வேறு வழியேயில்லை. இங்கு வர்த்தகம் புரிய இடமளித்தால் போர்த்துக்கேயர் எமக்காக எதையும் செய்வார்கள். என்ன கூறுகிறீர்கள்.?

அப்.மு: நான் ஏற்கனவே பறங்கியருக்கு ஒத்துழைப்பைத்தருகிறேன் என தெரிவித்து விட்டேன்.

கா.வ: போரினாலும் பார்க்க, இரத்தமின்றி, கத்தியின்றி சதித்திட்டத்தால் தான் வெற்றிபெற முடியும். அதற்கு உன்பங்கு மிக முக்கியமானது.

அப்.மு: உடனே கூறுங்கள்.

கா.வ: உனது மகள் அமுதவல்லிக்கும்,அரசனுக்கும் இடையே உறவு இருப்பதாக அறிந்தேன்.

அப்.மு: அது கடைசிவரை நடைபெறாது. நான் பரராசசிங்கனுக்குத்தான் திருமணம் செய்து கொடுக்கவிருக்கிறேன்.

கா.வ: நீர் அவசரப்படுகின்றீரே. அவர்கள் உறவை நாம் சாதகமாக்கிக்கொள்ள வேண்டும். சங்கிலியன் வெற்றிக்கு முக்கிய காரணம் படைத்தளபதி இமையாணன்தான். எனவே அரசனுக்கும் இமையாணனுக்குமிடையில் வேற்றுமையை ஏற்படுத்திவிட்டால் அரசை கவிட்டு விடலாம். சங்கிலியனை ஒழித்துக் கட்டலாம்.

அப்.மு: அது எவ்வாறு?..

கா.வ: 'சங்கிலியனை பறங்கியரிடம் காட்டிக் கொடுத்து அரசை இமையாணன் பெற சதித்திட்டம் இடுகிறான்' என உமது மகள் மூலம் சொல்லுவித்தீரெனில் அவன் நம்பி விடுவான். இருவருக்கம் இடையில் பிளவு வந்து விடும். எமது சதிக்கு பெரும் வெற்றியாகிவிடும்.

அப்.மு: சரி இன்றே ஆரம்பிக்கின்றேன்.

திரை

# அங்கம் ~ 10

**பாத்திரங்கள்: பரநிருபசிங்கன், பரராசசிங்கன், அப்பாமுதலியார், காக்கைவன்னியர், பிறகன்சா**

**பின்னணி**

சேர, சோழ, பாண்டியரெனக் காலத்துக்குக் காலம் பரந்து வளர்ந்தோங்கிய தமிழினம் ஒரே இனமென்றெண்ணி ஆட்சி செய்திருந்தால் இன்று தமிழினத்தின் பெருமை இந்த உலகம் முழுவதும் பரந்திருக்கும். பதவி பட்டத்திற்காக தன் இனத்தின் பண்பாட்டை மறந்து, கலைகலாச்சாரத்தை இழந்து பதவி மோகம் கொண்டவர்களினால் எமது நாடு சீர்கெட்டது, உருக்குலைந்தது. நாடு சுருங்கியது. யாழ்ப்பாண இராச்சியத்தின் சங்கிலி அரசனின் முடியைப் போடுவதற்காக, காட்டிக் கொடுத்து பதவி பெறுவதற்காக ........... இதோ ..........

(முதலில் பரநிருபன் வருகிறார்)

'நானே முடிக்குரிய மன்னன் தந்தை சொல் காப்பாற்ற என் முடியை இழந்தேன். என் உயிருக்குப் பயந்து முடியைக்கொடுத்தேன். இன்று அவன் உயிருடன் தானே இருக்கின்றான். மனைவியின் வெறுப்பைப் பெற்றேன். மகனின் வெறுப்பைப் பெற்றேன். நான் இன்று அரசனாக இருந்தால், என் கட்டளைக்கு கீழ் இருக்க வேண்டிய சங்கிலியன்,எனது சொல்லுக்கே இடங்கொடாதவனாக இருக்கின்றான். நான் எப்படியும் மன்னனாக வேண்டும். நான் மன்னனாகி விட்டால்

பறங்கியருடனும், காக்கைவன்னியனுடனும் சேர்ந்து சங்கிலியனைக் காட்டிக் கொடுத்து .... நானே மன்னனாவேன் நானே மன்னன் நானே மன்னன்.

(பரநிருபசிங்கன் மேடைவிட்டுக் விலக பரராசசிங்கன் மேடைக்கு வருதல்')

நான் பரநிருபசிங்கனின் மகனாக இருந்தும், எனக்கு வரவேண்டிய உரிமையான முடி வேறு இடம் சென்றுவிட்டது.. என் தந்தை பரநிருபசிங்கன் அரசனாக வந்தால் நானே அடுத்த முடிமன்னன். பறங்கியருக்கு நான் செய்யும் ஒத்துழைப்பாலும், காக்கவன்னியனுடன் நான் செய்யும் சதித்திட்ட உதவியினாலும் நானே விரைவில் அரசனாவேன். நானே அரசன்...... நானே அரசன்.

(பரராசசிங்கன் மேடைவிட்டு விலக அப்பாமுதலி மேடைக்கு வருதல்)

சங்கிலியனின் மந்திரியாக, வெறும் சேவகனாக நான் இருப்பதா? பரராசசிங்கனே அரசனாவான். அவனுக்கு என் மகள் அமுதவல்லியை மணம் முடித்துக் கொடுத்தால் அவளே பட்டத்து இளவரசி. காக்கைவன்னியனுக்கு நான் செய்யும் சதித்திட்ட உதவிக்கும், பறங்கிருக்கும் நான் கொடுக்கும் இரகசியத்தகவலுக்கும் பரராசசிங்கனை அரசனாக்குவார்கள்.அதன் பின்நானே அரசன்! நானே அரசன்.

(அப்பாமுதலி மேடைவிட்டு விலக காக்கவன்னியன் வருதல்)

யாழ்ப்பாண இராச்சியத்தின் வெற்றிகள் என் வாள்வீச்சிலும், வீரத்திலும் தங்கி இருக்கிறது. இன்று சங்கிலியன் தனித்துவிட்டான். நான்வெறும் சிற்றரசனாக ஏன் இருக்க வேண்டும். என்னிடம் மன்னனாவதற்கு, வீரம் இல்லையா! விவேகம் இல்லையா! ஆதரவு இல்லையா! அப்பாமுதலியார், அவர் கூட்டங்கள் எல்லோரும் ஆதரவு தந்துள்ளார்கள். அவர்களுடன் வந்து வெற்றி பெற்று அரசனாவது திண்ணம். நானே அரசன்........ நானே அரசன்.

(காக்கை வன்னியன் செல்ல பிறகன்சா வருதல்)

இந்த நாடு செல்வங்கொழிக்கும் நாடு. முத்து, யானை, வைரம் நிறைந்த நாடு எங்கள் மதம் பரப்பி இந்த நாட்டைப் பிடிக்கக்கிடைத்தவர்கள் காக்கவன்னியன், பரநிருபசிங்கன், பரராசசிங்கன், அப்பாமுதலி நாடுபிடிக்கும் மட்டும் இவர்கள் தான் மன்னர்கள். நாடு பிடிக்கு மட்டும்இவர்கள் தான் மன்னர்கள்.

திரை

# அங்கம் - 11

*அரச மாளிகை*

பாத்திரங்கள்: செங்கமலம், இராசமாதேவி, அமுதவல்லி,

**செங்க:** தேவி, வீரமாகாளி அமமன்கோயிலில் பூசை கட்டிவந்துள்ளேன். அரசர்க்கும் தாங்கள் கூறிய படி அர்ச்சனை செய்துள்ளேன். கோயில் ஐயர் பிரசாதம், திருநீறு, சந்தணமும் தந்துள்ளார். திருநீற்றைப் பூசி சந்தணத்தையும் போடுங்கோ

(திருநீற்றைப் பூசி சந்தணமும் போடுகிறார் இராசமாதேவி)

**இராச:** அரசன் மன்னார் போருக்குப் போய் இன்று பத்து நாட்களாகிவிட்டன. என்ன நடந்ததோ தெரியவில்லை. எல்லாம் வீரமாகாளி அம்மனும்,சட்டநாதரும் தான் காப்பாற்ற வேண்டும்.

**செங்க:** தேவி, நீங்கள் அநாவசியமாக யோசித்துக்கோண்டு இருக்கிறீர்கள் எங்கள் அரசனைக் கண்டவுடனேயே எதிரிகள் ஓடியிருப்பார்கள். எதற்கும் எனது இரண்டு விரல்களில் ஒன்றை வீரமாகாளி அம்மனை நினைத்துக்கொண்டு தொடுங்கள் (தனது கைகளை நீட்டுகிறாள்)

(இராசமாதேவி ஒரு விரலைத் தொடுகிறாள்)

**செங்க:** இராசாவுக்கு வெற்றி! வெற்றி! வெற்றியை நினைத்த விரலையே நீங்கள் தொட்டுவிட்டீர்கள்.

## விருத்தம்

தஞ்சமென் றுன்ன டிகள் தாயேய டைந்தனன்
  தருணமிதி லன்பு பொழியும்
தன்மைசேர் கண்களால் தமியேனை நோக்கியே
  தந்தருளு நின்கருணையை
அஞ்சலென் றடியேனை ஆதரிக்காவிடின்
  ஆரெனைக் காக்க வல்லார்.
அருமைமிகு மன்னையர் மகவுசெய் குற்றங்க
  ளன்புடன் பொறுத்திடுவரால்
வஞ்சனை மிகந்துள வைரிகள் புரிந்திடு
  மறுக்கஞ் சகிக்ககில்லேன்
வாதோடு சூதுபுரி மாந்தர்கைத் தப்பிடும்
  வகைதனைக் கூறியருளாய்
மிஞ்சழகு மாடங்களானவை மிளிர்ந்துமே
  மேவிடும் காமர் பதியாம்
வீசுபுக ழோங்குநல் லூர்தன்னி லுறைகின்ற
  வீரமா காளியம்மே.

(சங்கிலி பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நூலிலிருந்து)

இராச: அவர் வெற்றி பெறுவார் என்பது என் எண்ணமாக இருந்தாலும், மனம் அல்லல் பட்டதனால் உன்னை நினைந்து விரலைத் தொட்டேன். வீரமாகாளி அம்மாளே வெற்றி என்று தெரிவித்துவிட்டாய். உன் அருள் என்றும் பொய்த்தது இல்லையே.

செங்க: நல்ல அறிகுறி கிடைத்து விட்டது தானே. இந்தாருங்கள் பால் அருந்துங்கள்.

இராச: அரசர் நல்லவர், வல்லவர், ஆனால்....(மனதில் கவலை கொண்டவளாக)

செங்க: ஆனால் ........ என்ன?

இராச: பெண்கள் விடயத்தில் தான் ............

செங்க: அமுதவல்லியை நினைந்து கொண்டுதானே கூறுகிறீர்கள்.

இராச: கண்ணால் கண்டது அது.. காணாதது எத்தனையோ?

செங்க: அப்படியெல்லாம் அரசரைக் கூறாதீர்கள். உங்களைத்திருமணம் செய்ய முன்னே அமுதவல்லியுடன் காதல் கொண்டவர் அவர். எனினும் அவள் அரச பரம்பரையைச் சேராதவராகையால் அரசர் சற்று காதலை நிறுத்தியிருந்தார்.

இராச: உனக்கு எப்படித் தெரியும்?

செங்க: அரசரின் தங்கை பரவை ஒரு நாள் இவ்விடயங்களை யாரிடமாவது சொல்ல வேண்டாம் என்று கூறினாள். அதனால் உங்களிடம் கூறவில்லை. இப்பொழுது தெரிவிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

இராச: இன்னொரு பெண்ணைக் காதலித்துக்கொண்டா என்னை திருமணம் செய்தார்.

செங்க: தேவி! நீங்கள் பிழையாக எண்ணாதீர்கள். உங்களைத்திருமணம் செய்த பின் அவள் காதலை விட்டுவிட்டாராம். ஆனால் சந்தரப்ப வசத்தினால் அவர் கொஞ்சக் காலம் பழைய காதலைப்புதுப்பித்து விட்டார். அவ்வளவு தான்.

இராச: ஆண்களே இப்படித்தான்.

செங்க: அவர்களின் இயல்பை மாற்றுவது கஷ்டம் எனவே இப்படியான காரியங்களில் குறையை சுமத்துவது ஆகாது.

இராச: அப்படியானால் இந்த விடயத்தில் அரசரிலோ, அமுதவல்லியிலோ குற்றம் இல்லை என்று சொல்லுகிறாயா?

செங்க: நிச்சயமாய் அமுதவல்லி மேல் குற்றமே இல்லை.
(அமுதவல்லி மெல்லென உள்ளே வருகிறாள்)

இராச: (சினத்தோடு) ஆரங்கே! அப்பாமுதலி மகள் அமுதவல்லியோ! உன் காதலைத் தெரிவிக்க என்னிடம் வந்தாயோ! அல்லது உரிமை கேட்க எனனிடம் வந்தாயா, கட்டிய மனைவி இருக்க கள்ளக்காதல் புரிந்து என் கணவனைக் களவாடிக் கொண்டு துணிவாக இங்கு வந்திருக்கிறாய். நீ ஏன் வந்தாய். காவலாளி இல்லையா! நீ என்முன் நில்லாதே. வந்த வழியே போ .......... போ ..............

அமுத: தேவி! நான் செய்தது குற்றம் தான். என்மேல் கோபிக்க வேண்டாம்..அரசன் என்னை விரும்பும் போது நான் அவருக்கு என் விருப்பத்தை தெரிவிக்காவிட்டால் என் உயிருக்கே ஆபத்தாகும். இது உங்களுக்கும் தெரியும். நான் செய்த பிழையை பொறுத்தருளுங்கள். நான் இங்கு வந்தது வேறு ஒரு விடயமாக. அது அரச இரகசியம்.

இராச: அப்படியென்ன இரகசியத்தைக்கொண்டு வந்து என்னை ஏமாற்றப்பார்க்கிறாய்.

அமுத: நீங்கள் என்னைத்தூற்றாலாம். ஆனால் நான் அரச விசுவாசம் கொண்டவள். தேவி! மகாராசாவுக்கு எதிராக சூழ்ச்சிகள் நடக்கிறது. என்னால் பொறுக்க முடியாது ஒளித்து வந்தேன். நண்பர்களாக பழகி, நன்மைக்காகப் பாடுபடுபவர்கள் போல நடிப்பவர்கள் எல்லோரையும் நம்ப வேண்டாம் என்று அரசனுக்கு கூறுங்கள்.

இராச: அமுதவல்லி! பயப்படாதே! ஏன் அப்படிச் சொல்கிறாய்.

அமுத: (தயங்கிக்கொண்டு) எல்லாம் என் வீட்டில் தான் நடக்கிறது. காக்கவன்னியன், எனது தந்தை, பரநிருபசிங்கருடன் சேர்ந்து விட்டார்கள்.மிகவும் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்கள்.

இராச: அப்படியா?

அமுத: தேவி! இவ்விடயத்தை நான் தெரிவித்ததாக யாருக்கும் சொல்லிவிடாதீர்கள். என்னைக் கடுங்காவலில் வைத்திருக்கிறார்கள் ஒளித்து வந்தேன்.

இராச: ஒன்றுக்குப் பயப்படாதே!

அமுத: இனி நான் போகவேண்டும்.

இராச: செங்கமலம், அமுதவல்லியை சற்றுத்தூரத்திற்கு கூட்டிச்சென்று விட்டுவிட்டு வா.
(செங்கமலம் அமுதவல்லியை கூட்டிச்சென்றுவிட்டு திரும்பி இராசமா தேவியிடம் வருதல்)

இராச: நாம் அமுதவல்லியை கெட்டவளாக எண்ணினோம். அவள் நல்லவள். சந்தர்ப்பம் சூழ்நிலை சிலரை சில விடயங்களில் கெட்டவராக ஆக்கிவிடுகிறது..

திரை

SWAMI ABRAHAM
community centre
MANKAL-MALLAKAM
JNC/21/844

# அங்கம் ~ 12

*அரசன் அவைக்களம்*

பாத்திரங்கள்: - சங்கிலியன், தனிநாயகமுதலியார், மெய்க்காப்பாளன், வீரமாப்பாணன், தளபதி, இமையாணன்.

(சங்கிலி, பரநிருபசிங்கன், தனிநாயகமுதலி, அரசகேசரி, அப்பாமுதலி, தளபதி இமையாணன், வீரமாப்பாணன், ஆகியோர் இருக்கையில் அமர்ந்திருக்கின்றனர்.)

சங்கிலி – சபையோர்களே! அரசுக்கு அச்சுறுத்தல் பறங்கிச்சரு குகளினால் ஏற்பட்டிருக்கிறது.. நான் வேட்டையாடி விட்டு கடலோரத்தினால் சென்றபோது அதிர்ச்சியான காட்சியைக் கண்டேன்.

தனிமுத – அப்படி என்ன அதிர்ச்சியான காட்சி அரசே!

சங்கிலி – பறங்கிகளின் கோட்டைகளையும் கொடிகளையும் கண்டேன். (சிவந்த கண்ணுடன் ஆத்திரத்துடனும்) புறத்தே வந்த துணைவரை நோக்கி இஃதென்னவென்றேன். அது பறங்கிகளின் உறைவிடமென்றான். கோட்டை வாயிலில் பறங்கித்தலைவன் எதிர்ப்பட்டான். யாது செய்தனை என்றேன்; கோட்டைகட்ட அனுமதி தந்தது யார் என்றேன். திமிர்பிடித்த அந்தப்பறங்கி, நீதானே தாந்தாய் என்றான். இக்கணத்தே இடித்து விடக்கடவையென்றேன். அவனோ இடிக்க மறுக்கிறான். பறங்கிகளின் கொட்டம் உடன் அடக்கவேண்டும்.

தனிமுதலி – அன்று பறங்கிகள் வந்து "நாங்கள் வர்த்தகர்கள் மகாராசாவுடைய அனுமதி பெற்று இந்நாட்டில் பண்டங்கள் விற்கவும், பண்டங்கள் கொள்ளவும் எண்ணிச் சமூகத்தை அடைந்தோம்" என்று அவர்கள் விண்ணப்பித்த போது "நீங்கள் கூறிய வார்த்தைகளை நினைவு படுத்திப்பார்க்கும் பொழுது ......."

சங்கிலி – என்ன நான் கூறினேன்.

தனிமுதலி – நீங்கள் தீர்க்கதரிசி. அரசியல் விற்பன்னர். நீங்கள் அன்று கூறியிருந்தீர்கள். பறங்கிகள் அன்னிய தேசவாசிகள். வர்த்தகர் என்ற போர்வையில் எமது நாட்டுக்குள் பிரவேசிக்கப் பார்ப்பார்கள். அவர்களுக்கு வியாபாரம் செய்யவும் இடங்கொடுக்கக்கூடாது என்றீர்கள். உங்கள் கருத்து வேறாயிருக்கலாம் என்று, அவையினருக்கு கூறினீர்கள். அப்படியே செய்திருந்தால் இந்த அச்சுறுத்தல் வந்திருக்காது.

சங்கிலி - அரசியலுக்கு அண்ணன் தம்பி உறவோ, இளமை, முதுமை என்ற வேறுபாடோ, இருக்கக்கூடாது என்பதை அறிந்து கொண்டேன். என் அண்ணன் பரநிருபசிங்கனும், மந்திரி அப்பாமுதலியும் சேர்ந்து பறங்கிகளுக்காக வக்காளத்து வாங்கியதினாலேயே நாம் பகையைத் தேடிக் கொண்டோம்.

"இவர்கள் கொழும்புக் கோட்டையை அரசு செய்யும் பறங்கிகள் அல்லர். இவர்கள் வர்த்தகர்களே இவர்கள் எமது நாட்டில் வர்த்தகம் செய்யின் எமது நாட்டுக்கு நன்மையுண்டு என்று ஆலோசனை வழங்கி எனது தீர்ப்பை மாற்றி விட்டார்களே என்ன? மந்திரியார் அப்பா முதலியாரே முழிக்கிறீர்கள்.

தனிமுத - அரசே! பறங்கியர் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் துரோகிகள் என்பதை நாம் அப்பொழுதே தெரிந்திருக்க வேண்டும்.

சங்கிலி - ஏன் உள்வீட்டிலேயே உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்பவர்களைக் காணமுடியும் போல் தோன்றுகிறது. (சங்கிலி அப்பா முதலியையும், பரநிருபசிங்கனையும், பார்க்கின்றார். அவர்கள் தலைகுனிகிறார்கள்)

தனிமுத - அரசே! பண்டசாலை கட்டஎன உத்தரவு வாங்கியவர்கள் கோட்டைகட்டி கொடியும் இட்டு இருக்கிறார்களா? பறங்கியர் இங்கு வந்தது வியாபாரத்துக்கன்று எமது நாட்டைப்பிடித்து எம்மை அடிமைகளாக்கவே. அவர்கள் தந்திரத்தை முன்னரே அறியாது போனோம்.

சங்கிலி - இனியும் சும்மா இருக்கமுடியாது. அவர்களிடம் பறித்த மருந்துகளும் பீரங்கிகளும் எங்களிடம் உண்டு. எமது வாள், அம்பு வில்லுகளுடன் அவர்கள் நேர் நின்று போரிட முடியாது. நாம் எதற்காக அஞ்சவேண்டும் அவையோரே போரே பறங்கியரின் திமிருக்கு மருந்து.

வீரமாப் - அதுவேசரி, இம்முறை அவர்களுக்கு நல்ல பாடம் படிப்பித்தே ஆகவேண்டும்.

அரசகேச - அரசே! தாங்கள் போரை நிகழ்த்துவதாகத் தீர்மானித்தால், பகைவர் வலுவடைய முன் அவரை விரைந்து தாக்குதல் வேண்டும். அப்பொழுதுதான் இலகுவாக வெற்றி கொள்ளலாம்

(இமையாணன் உள்ளே வருகிறான்)

சங்கிலி - தளபதி இமையாணனே! என்ன அவசரமாக ................ ஏதோ சொல்ல முனைகிறீர் போலும்...........

இமையா - அரசே! போர்த்துக்கீசர் போருக்கு ஆயத்தமாகி விட்டார்கள். படையெடுத்துவரும் போர்த்துக்கேயப் பறங்கிகள் படையில் சுமார் ஆயிரத்தியிருநூறு போர்வீரர் மட்டிலிருக்குமென நம்மொற்றர்களால் மதிப்பிடப்பட்டிருக்கிறது. தொண்ணூற்றிரண்டு மரக்கலங்களுடன் கோவையிலிருந்து படை புறப்பட்டு விட்டதாம் ............... மேலும் ............

சங்கிலி - மேலும் ...................

இமையா - மேலும் கொச்சித்துறைமுகத்தில் ஏழு போர்க் கப்பல்கள் தொண்ணூற்றிரண்டு மரக்கலங்களுடன் சேர்ந்துள்ளனவாம்.

சங்கிலி - வேறு?..........

இமையா - நூற்றுக்கணக்கான பீரங்கிகளும், துவக்குகளும் அவர்கள் படையிலிருப்பதாக அறியமுடிகிறது.
(சங்கிலியன் குறுக்கும் நெடுக்கும் நடத்தல், திட்டம் வகுப்பவன் போல் ஆலோசித்தல். அதன்பின்)

சங்கிலி - தளபதியாரே! எதிரிகளின் படைகள் எங்கு வந்திறங்குமென எதிர்பார்க்கிறீர்கள்.?

இமையா - தலைநகரத்திற்கு கிட்டத்தட்ட பெரும்பாலும் இறங்குவார்கள். நாற்றிசைப்படைக்காவற் தலைவர்களுக்கும் செய்தியனுப்பியுள்ளேன். அவர்கள் தேவையான ஆயத்தங்கள் செய்திருப்பார்கள். வடகீழ் மேல் திசைகளில் எதிரிகள் கால் பதிக்க முடியாது? போதிய வீரர்கள் அங்குள்ளனர். ஆகவே அவர்கள் பண்ணைத் துறையினுள்ளே வந்துதான் இறங்குவார்களென எதிர்பார்க்கின்றேன். அவர்கள் அப்படி வந்திறங்கினால் நிச்சயமாக வெற்றி நம்முடையதே.

சங்கிலி - தளபதியாரே நீங்கள் எண்ணுவது போலவே நானும் நினைக்கின்றேன். ஆகவே கொழும்புத்துறையிலிருந்து பண்ணைத்துறைவரை நமது படைகளை அணிவகுத்து நிறுத்துங்கள். எதிரிகளை பண்ணைத்துறையில் இறங்க விட்டுவிட்டால் நான்கு பக்கமும் நம் படைகள் தானே நெடுந்தீவிலிருந்து வரும். நம் கப்பற்படையினாலும் வடதிசையிலிருந்து வரும் காங்கேயருடைய படையினாலும் வேலணை, நாரந்தனையிலுள்ள நம்படைகளினாலும், ஊர்காவற்றுறையிலுள்ள நமது படையினாலும் சுற்றி வளைக்கப்பட்டு எதிரிகள் பண்ணைத்துறையினுள் சிக்கிக் கொள்வார்கள். திரும்ப வழியில்லாது, தரையில் கால் வைத்தால் கரையிலுள்ள குட்டைக்காடுகளில் மறைந்துள்ள நம்வீரர்களின் தாக்குதலுக்குள்ளவார்கள்.

(அப்பாமுதலி, உடல் நலம் சரியில்லை என்றுவிட்டு அவசர அவசரமாக சபையை விட்டு பதுங்கிப்பதுங்கி விலகல்)

இமையா - நாங்கள் திட்டப்படி போரை நடத்துவோம்.

திரை

# அங்கம் ~ 13

*அப்பா முதலியார் வீடு*

பாத்திரங்கள் :- அமுதவல்லி, அப்பாமுதலியார்

(அமுதவல்லி எதிர்பார்க்க, தந்தையார் அப்பாமுதலி வந்து கொண்டிருக்கிறார்)

அமுதவ - தந்தையே! சிலநாட்களாக சரியான வேலை போல இருக்குது. சரி இருங்க ........ பால் கொண்டு வருகின்றேன்.

(அமுதவல்லி, பாலை மூக்குப் பேணிக்குள் கொண்டுவந்து கொடுக்கிறாள்)

அமுதவ - தந்தையே! நாரதர்க்கு ஒரு நாளைக்கு ஒரு பொய்யாவது சொல்லா விட்டால் தலை வெடித்துவிடும். தங்களுக்கு ஒருநாளைக்கு ஒரு இரகசியமாவது அறிந்து சொல்லாவிட்டால் நித்திரையே வராதாம் என்று சொல்லுகிறார்கள்.

அப்பா - அப்படி ஒன்றுமில்லை..................... (பதட்டத்தோடு)

அமுதவ - எமது யாழ்ப்பாண இராச்சியத்தை அடிமையாக்கத் துரோகிகள் சிலர் பறங்கியரோடும் வன்னியர்களுடனும் சதித்திட்டம் போடுகிறார்களாம்.

அப்பா - தனக்குரிய அரசைக் கவர்ந்தவர்கள் மீது பரநிருபசிங்கன் வஞ்சந் தீர்க்க தவறுவானா?

அமுதவ - பரநிரூபசிங்கன் மனமுவந்து கொடுத்த அரசாச்சே. பரநிரூபசிங்கன் இன்று ஆட்சியில் இருந்திருந்தாலும் எப்பவோ அன்னிய ஆட்சியாக மாறியிருக்காதா?

அப்பா - நெருக்கடி ஏற்படும் பொழுது மக்கள் ஒன்றுபட்டு பரநிரூபசிங்கன் கட்டளையை ஏற்கத் தயாராகவே இருப்பர்.

அமுதவ - இவ்வளவு திட்டங்களை வகுத்து தஞ்சை இராமநாதபுரம் முதலிய இடங்களிலிருந்து படைகளை வரவழைத்து அவர்கட்கு மீண்டும் பயிற்சி கொடுத்து வைத்திருப்பாரா? கடந்த போரிலே இராச்சியம் அழிந்திருக்காதா?

அப்பா - எதைச் செய்தும் என்ன? மக்கள் இன்று சங்கிலிவேந்தன் ஆட்சியை வெறுக்கிறார்கள்.

அமுத - அந்நியர் ஆதிக்கத்தை எதிர்க்க முடியாத கோழைகளும், வஞ்சக நெஞ்சினரும் வெறுப்பார்கள்.

அப்பா - வெறுப்பது மட்டுமல்ல. சமயம் வரும்போது உள்நாட்டிலேயே குழப்பமும் செய்வார்கள். ஆட்சிமாறப் போகும் விதியை மாற்ற முடியாததால் தான். இவ்வித ஆபத்தான சூழ்நிலைகள் உருவாகவேண்டி இருக்கிறது. இதனை உணர்ந்துதான் வேடிக்கையாக அன்று சங்கிலி வேந்தனின் அரசுரிமையை மாற்றி அமைக்க வேண்டுமெனக் கூறினேன்.

அமுத - தந்தையே! நீங்களும் இவ்வாறு கூறுவீர்கள் என்று எனக்கு எப்பவோ தெரியும். எமது இராச்சியம் அழிவதில் நீங்களும் மகிழ்ச்சி கொள்ளப் போகிறீர்களா? சங்கிலி வேந்தன் மன்னனாக இல்லாவிடின் நாம் இன்று அடிமைகள். இந்த அடிமைத்தளையை இராச்சியம் தாங்க வேண்டுமென்பது தான் உங்கள் விருப்பமா?

அப்பா - நிலைமை தவிர்க்க முடியாதது தான் இருந்தாலும் தடுக்கப் பல வழிகளுமுண்டு.

அமுத - இமயம் அசையினும், இதயங் கலங்காத யாழ்ப்பாண இராச்சியத்தின் புகழ்மண்டிய வீர சரித்திர ஏடுகளை அடிமை வளையங்களிற்ப் பூட்டிப் பார்க்க எண்ண வேண்டாம். வழியைக் கூறுங்கள்.

அப்பா - பரநிருபனை வேந்தனாக ஏற்றாலும், பறங்கியர் சர்வ சுதந்திரத்தோடு நாட்டில் நடமாடிக் காலப்போக்கில் எமது இராச்சியத்தை அடிமையாக்கியே தீர்வர். அந்த ஆபத்தையும் தடுத்து எமது இராச்சியத்தையும் காக்க வேண்டுமானால் (சிந்தனை செய்கிறார்)

அமுத - ஏன் மௌனம் சாதிக்கின்றீர்கள்?

அப்பா - உன்னாலேதான் அது நிறைவேற வேண்டும்

அமுத - விளையாடுகிறீர்களா?

அப்பா - உண்மையாகவே அமுதா! உன்னாலே தான் முடியும்.

அமுத - அப்படியானால் இராச்சியத்தின் தலைசிறந்த அதிஷ்டசாலி நானேதான். எங்கே அந்த வழியைக் கூறுங்கள்.

அப்பா - மண்ணின் வாழ்வு அன்றேல் அழிவு என்ற இருநிறை கோல்களின் மத்தியில் இன்று நீதான் நடுக்கோலாக நிற்கின்றாய். மண் காக்கப்பட்டால் அமுதாவின் வரலாறு............

அமுத - எமது மண் காக்கப்பட வேண்டுமென்பது தான் எமது ஒரே இலட்சியம். என்னையே இதற்குத் தியாகம் செய்ய வேண்டுமென்றாலும் அதற்குப் பாத்திரமான தந்தையிடமே என்னை ஒப்படைகின்றேன்.

அப்பா - உனது உயிரையோ உதிரத்தையோ தியாகம் செய்ய வேண்டியதில்லை. ஒரு வார்தை மட்டும் கூறினால் போதும்.

அமுத - என்ன வார்த்தை சொல்லுங்கள்.

அப்பா - நீ பரநிருபசிங்கன் மகன் இளவரசர் பரராசசிங்களை திருமணம் செய்ய ஒத்துக்கொள்ள வேண்டும். அதனால் நீ பட்டத்து இளவரசியாகலாம். இதை நிறைவேற்ற எமது சதித்திட்டத்துக்கு உதவவேண்டும். சங்கிலி மன்னனுடன் வைத்திருக்கும் காதலைப் பயன்படுத்தினால் இது உனக்குச் சுலபமாக முடியும். இதற்கு 'ஆம்' என்று ஒரு வார்த்தை சொன்னால் .........

அமுத - தந்தையே! பொறுப்புணர்ச்சியோடு மானங்காத்த தாய்க்குலத்தின் சாதனைகள் எமது மண்ணிற்கு ஒரு தனியான பண்பினைத் தந்ததை நீங்கள் மறந்துவிடமாட்டீகள். சங்கிலி வேந்தனுக்கு எதிராக சதிசெய்ய வேண்டுமென நீங்கள் கூறுவது தகப்பன் மகள் என்ற உறவில் கேட்பது, பெண் குலத்திற்கு நான் வைக்கும் வசை இம்மண்ணிற்கு நான் செய்யும் துரோகம்.

அப்பா - நாமே அரசபீடத்தில் இருந்துவிட்டால் நம்மண்ணைக் காப்பாற்ற முடியும் தானே!

அமுத - நான் வேந்தனைக் காட்டிக்கொடுத்து விட்டால், காக்க வன்னியனை இலகுவாக அரசனாக்கி விடலாம் என்பது தானே உங்கள் சதித்திட்டம்.

அப்பா - பழிகாரி, வாயை மூடு. என் மகளென்று கூறவும் அருகதையற்ற அடங்காப்பிடாரியே, அன்னையை இழந்த உன்னை அரும்பாடுபட்டு வளர்த்தற்காகவா இந்த அபாண்டமான வார்த்தைகளை என்மீது கொட்டுகிறாய் துரோகி.

அமுத - தாய்க்குத் தாயாகி தந்தைக்குத் தந்தையான என்முன்னறி தெய்வமே! ஈன்ற அன்னை இறந்துபடப் பிரிவுடன் பேணி வளர்த்த கற்பகமே! என்னருமை தந்தையே! தங்கள் வார்த்தையை தங்களது கடமையை, தங்கள் அன்பினைத் தணியாத பாசத்தை நான் மறப்பேனா? ஆனால் தங்கள் வேண்டுகோளிலும் பார்க்க என்னை ஈன்ற அன்னையிலும், எனது தாயகத்தை, என்பிறந்த பூமியை மதிக்கின்கிறேன். பரம்பரை பரம்பரையாக வீரவர்க்கம் வாழவேண்டிய மானிடத்திற்கு மாசுதேட மாட்டேன்.

அப்பா - சங்கிலி அரசனை மணம் செய்யும் கபட எண்ணத்திற்கு மண்ணின் பெயரால் மதிப்புக் கொடுக்கிறாயா?

அமுத - மண்ணைக் காப்பது முதற்கடமை மண்ணைக் காத்து வெற்றி விழாக் கண்டோமானால் திருமணம் அதன் அறிகுறி! அற்பவிடயம் .........

அப்பா - அடி ஜாலக்காரி! உன் தந்தைக்கு முன்னின்று தகாத வார்த்தைகள் கூறும் உன் நாவை துண்டிப்பேன். வேந்தன் மாளிகையில் வாழ வைத்ததற்குப் பிரதிபலன் இதுதானா? சமுதாயத்தின் நச்சுப்பாம்பே.

அமுத - தந்தையே! கொடுஞ் சொற்களை உங்கள் குழந்தை மீது கொட்டி ஆனந்திக்கும் அளவிற்கு சிற்றரசன் காக்கை வன்னியன் பதவிமோகம் இருக்கிறதென்றால் வருங்காலத் தமிழ் இராச்சியம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

அப்பா - நீலிக் கண்ணீர் வடிக்கும் மாய்மாலக்காறியே! சிற்றரசன் ஒருவனாலேதான் இன்றைய ஆபத்தைத் தவிர்க்கமுடியும். அவன் வீரத்திலே பொறாமை கண்ட வேந்தனது சதித்திட்டத்தில் சிக்கிய வஞ்சகியே! நலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பே! திருமணம் செய்த வேந்தனை உன் மாயக்கண்ணால் மயக்கி அவன்மேல் மையல் கொண்டு இரண்டாம் மனைவியாக ஆசைகொண்டு என் மரபினை புகழ் கருக மணம் செய்ய எத்தனிக்கும் காமப்பிசாசே! நியாயம் கூறுகிறாயா?

அமுத - கொதித்தெழுந்தால் என் கொள்கையை மாற்றிவிடலாம் எனக்கனவு காண்கிறீர்கள். வன்னியன் சதித்திட்டத்தின் உருவத்தைத் தாங்கள் அறியாதிருக்கலாம். ஆனால் நாடறிந்த விடயம் அது.. ஆசை வார்த்தை கூறியிருப்பான், அதைக்கேட்டு நீங்கள் மயங்கியிருப்பீர்கள். ஆனால் காக்கவன்னியன் இந்த நாட்டில் அரச பதவி வகிக்க முடியாதென்பதை மட்டுமுணர்ந்து கொள்ளுங்கள்.

அப்பா - அடிமைப்பட்டு வாழ்ந்து அழிந்து போக இருந்த எமது இராச்சியத்தை காத்துவைத்த வீரன் சிற்றரசன் ஒருவன்தான். அவன் செய்த நன்றிக்குக் கைமாறு செய்ய முடியாத நீதானா மண்ணின் மானத்தைக் காக்கப் போகின்றாய். காமந்தலைக்கேறி காதல் வேலையிலேகதிகலங்கிய உன்னை உயிரோடு விட்டு வைப்பது ஆபத்தே.

அமுத - என்னை உயிருடன் விடுவதால் இன்றோ, தவறினால் நாளையோ, வன்னியன் உயிர் வானத்தில் வட்டவிடுமென நீங்கள் எண்ணினாலும், எச்சரிக்கையுடன் இருப்போமேயன்றிக் காட்டிக் கொடுக்க மாட்டேன். தந்தையே இதிலும் சந்தேகமடைந்தால் உங்கள் குத்துவாளால் ................ சதிகாரக் கூட்டத்தால் கன்னித்தமிழ் இராச்சியம் காட்டிக்கொடுக்கப் பட்டு அடிமையாகி, நாம் அதிலிருந்து அடிமைகள் என்ற வசையோடு

மரணமடைவதிலும் பெற்ற தந்தையால்கொலை செய்யப்படுவதை வரவேற்கிறேன். தந்தையே கொல்லுங்கள்.. கொல்லுங்கள்.

அப்பா - என்னைக் கொலைகாரனாக்கி என்னையும் இயமனுக்கு பலிகொடுப்பது உனதுதிட்டமோ.

அமுத - (ஆத்திரச்சிரிப்புடன்) நீதிக்கு இயமனாக, மானத்திற்கு இயமனாக, வீரத்திற்கு இயமனாக சுதந்திரத்தின் காலகண்டனாகவுள்ள கருங்காலி வீரன் காக்கை வன்னியனது சோக ஏடுகளிலே அப்பாமுதலி - எனது தந்தையும் ஒரு இதழாகிவிட்ட அவமானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் என்னுடல் அந்த சுதந்திரவேட்கையுடைய சங்கிலியன் அரசனுக்கு உரிமையாகி அவ்வீரனையும் மாசுபடுத்துவதிலும் பார்க்க நான் மரணத்தை அரவணைப்பது இம்மண்ணிற்கு பெருமையாகும்.

அப்பா - கள்ளக்காதலால் கருக்கொண்டவள் நீ.

அமுத - பதவிமோகத்தால் தந்தை தந்த பரிசு.

அப்பா - வேந்தனிடம் முறையிடு போ! ஓடிப்போ பிசாசே போ!

அமுத - அறக்கூடத்திலே பிசாசுகளை புகுந்து வஞ்சநடனம் புரிவதைச் சத்தியம் பார்க்கிறது. வேந்தனிடம் ஏன்போக வேண்டும்? அக்கிரம கூட்டத்திற்கு இந்த மண் தரும் பரிசை நாம் அறிவோம். நாடறியும். துரோகியின் மகளென்ற அழியாப் புகழை நான் தாங்குகிறேன்.

அப்பா - இந்த இராச்சியத்தின் தலைசிறந்த மந்திரியின் புத்திரி தந்தையின் சொல்லைக் காக்கமுடியாத தவப்புதல்வி என் மகளாகப் பிறவாதிருக்கலாம். பிறந்தாலும் உன் அன்னை மரணமான போது நீயும் இறந்திருக்கலாம். உயிர்தாங்கி இருந்து தமிழன் மானத்தை உறிஞ்சும். இடு காட்டின் கல்லறையே! ஓடிப்போ! என்முன் நில்லாதே போ!

அமுத - போகிறேன் தந்தையே! போகின்றேன், வாழ்க்கையின் ஓரத்தே போகின்றேன். "மானம் இழந்தபின் வாழாமை முன் இனிது" என்றெண்ணிப் போகின்றேன். ........................ (ஓடுகிறாள்)

(இருவரும் மேடையிலிருந்து விலகல், அமுதவல்லி திரும்ப மேடைக்கு வருகிறாள்)

அமுத - சதித்திட்டம் பற்றிய முழுவிபரத்தையும் அவசரமாக தேவியிடம் ஓலைச்சுருளில் எழுதி அனுப்பிவிட்டேன். என்வேலை முடித்து விட்டது. காட்டிக்கொடுக்கும் கயவர்கூட்டத்தை இக்கண்களால் காணாமல் போகின்றேன். மண்ணை நேசிக்கும் தமிழரே தரைமட்டமாக்கினார்கள் என்ற, கொடுஞ்சொல்லைக் கேளாது போகின்றேன். துரோகியின் மகளென்ற

நாராசத்தை என் செவிகள் பருகுமுன் போகின்றேன். அமுத மானை தமிழ் இராச்சியத்தை பறங்கியர்க்கும் பகிர்தளிக்கும் போலிக்கூட்டத்தைக் .......... காணக் கூடாதென்று போகின்றேன்.

(கத்தியால் நெஞ்சில் குத்துதல் இரத்தத்துளிகள் வருதல்)
இரத்தத்துளிகளே! கயவர் கூட்டத்தின் இதயங்களைத் திறக்கச் செய்யுங்கள். தமிழன்னையே இதோ என்பலி.

(மண்டபத்தின் கீழ் விழுகிறாள்)

(அமுதவல்லி இறந்ததை அறிந்த சங்கிலியனும் மெய்க்காப்பாளனும் போர் இடைவேளையில் ஓடிவருகின்றனர்)

சங்கிலி - அமுதா! அமுதா மறைந்தாயோ! மறப்போர் செய்து ஆறுநாட்களிலும் வெற்றிவாகை சூடிக் கொண்டு இருக்கும் நான் ஓடோடி வந்து உனக்கு வெற்றியை, இல்லை – இந்த மண்ணின் வெற்றியை கூறுவதற்கு ஆசைப்பட்டு இருந்தேனே! மாணிக்கமே சென்றனையோ! மாசற்ற சோதியே! வீரத்தின் சிகரமே! பெண்மையின் பிறப்பிடமே! மறைந்தாயோ! பதவி மயக்கால் பாழகிப்போகும் இராச்சியத்தைப் பார்க்கபடாதென்றா மறைந்தாய். எங்கே சென்றாய்? இதய வீணையே! நீ எங்கு சென்றாய்! (என்று அலறிக் கொண்டு அமுதாவின் உடலைத் தன்கரங்களில் தூக்கியவாறு) பெற்று வளர்த்த தந்தை உனக்குத் தந்த பரிசு இதுதானா? கல் நெஞ்சனான வஞ்சகத் தந்தைக்குப் பணியாது மண்ணைக் காக்க உறுதிகொண்ட உனக்கு கிடைத்த பலன் இதுதானா? அமுதா! வஞ்சகன் வாய் மொழிக்கஞ்சியா வானம் சென்றாய்?

(அமுதாவின் உடலைக்கீழே வைக்கின்றான்) துரோகிகளே வீரமிருந்தால், ஆண்மையிருந்தால், உங்கள் உடலிலே மானத்துடிப்பிருந்தால், அஞ்சா நெஞ்சமிருந்தால் வாருங்கள் முன்னணிக்கு. (என்று கூடியபடி வாளை எடுக்கின்றான்) திரை மறைவில் சதி செய்த வீரத்திற்கு பதில் தரக் காத்திருக்கிறது இந்தவாள்.

ஆக்கிரமிக்க வந்த பறங்கியரை அழித்து காட்டிக்கொடுப்போருக்கு தகுந்த தண்டனை வழங்கி இப்போரை வெற்றிபெறச் செய்வதுதான் உனக்குச் செய்யும் கடமை. இதோ போருக்குச் செல்கின்றேன். வீரமாப்பாணா வா?

திரை

# அங்கம் ~ 14

## யாழ்ப்பாணம், பறங்கியர் கோட்டை

பாத்திரங்கள்: - பிரகன்சா, பிலிப், அமுறால்,மைக்கல்

பிறகன்சா – சண்டை தொடங்கி பத்துநாட்களாகியும், சுதேசிகள் எப்படி எப்படியெல்லாம் அம்பும், வில்லுடனும் போரிடுகிறார்கள். போர் எப்படித்தான் முடியுமோ? (அங்கும் மிங்கும் நடந்து யோசிக்கின்றார்) தளபதி பிலிப் நீர் என்ன யோசிக்கிறீர்?

பிலிப் – இந்தச் சண்டையில் எங்கட ஆக்கள் ஆயிரக்கணக்கில் இறந்துவிட்டார்களே. நிம்மதியில்லாமல் இருக்கிறது. கோவையிலிருந்து வந்த நாட்களிலிருந்து நித்திரையில்லை. அமுறால் அவர்களே என்ன நினைக்கிறீர் போரைப்பற்றி. (அமுறாலைப் பார்த்து)

அமுறால் – சங்கிலியன் படைக்கு உதவிசெய்ய வந்த வேலணை நாரந்தனைப் பகுதிப்படையையும், ஊர்காவற்றுறையிலிருந்து வர இருந்த படையையும் தடுத்தோம். அப்படியிருந்தும் சங்கிலியன் படையை முறியடிக்க முடியவில்லையே. (பிரகன்சாவைப் பார்த்து) பிரகன்சா தளபதியாரே பெரியகஷ்டம்.

பிறகன்சா – எமக்கு உதவி செய்வதாக இருந்த காக்க வன்னியன், எமது போராட்டத்தில் கலந்து உதவி செய்யவில்லை. அவனைக் கொல்ல வேண்டும்.

(அப்பொழுது மைக்கல் வருகிறான்)

மைக்கல் – தலைவனே! காக்கவன்னியன் நாளைபோரில் எங்களுடன் சேர்ந்து போரிடவருவதாகக் கூறினான் அத்துடன் பரநிருபனும் எங்களுடன் சேர்ந்து களத்தில் போரிட வருவதாக எழுதிய கடிதத்தைக் காக்கைவன்னியன் தந்தார். அத்துடன் ......

பிரகான்சா – அவர்கள் எம்முடன் நின்று போரிட்டாலும் சங்கிலியன் படையில் தளபதியாக நின்று போரை நடத்துகின்ற இமையாணன் இருக்கும் மட்டும் நாம் வெற்றி பெறுவது மிகக் கஷ்டம்.

– சங்கிலியன் எப்படிப் போரிடுகிறான். அவனுடைய அம்பு வீச்சுக்கு எங்கள் படை எதிர்த்தே நிற்க முடியுதில்லையே. நாங்கள் பண்ணையில் வந்து அடைபட்டுப் போனோம்.

மைக்கல் - (பிரகான்சாவை நோக்கி) இன்னுமொரு விடயத்தை காக்கை வன்னியன் தெரிவித்தான் (மைக்கால் காதுக்குள் பிரகன்சாவுக்கு சொல்லுதல்)

பிரகான்சா - 'புத்திமான் பெலசாலியல்லவா' சங்கிலியன்தான் தந்திரமுள்ளவன் என்று எண்ணினேன். எங்கள் ஐந்தாம் படையினரும் புத்திசாலிகள்தான். அவர்கள் திட்டப்படி நாளை செய்து கொள்வோம்.

டீ - ஐந்தாம் படையினரின் திட்டத்தை எமக்குத் தெரிவிக்கலாமா? எல்லாம் நாளை சரியாக நடக்கும் இருந்து பாருங்கள்.

பிரகா - சரி எல்லோரும் வாருங்கள் களைப்பாக இருக்கிறது. ஏதும் குடிப்போம்.

திரை

# அங்கம் - 15

## *நல்லூர் கோட்டையின் மேற்கு வாசல்*

பாத்திரங்கள்: - சங்கிலி, காக்கைவன்னியன், வீரமாப்பாணன், அப்பாமுதலி, பிரகன்சா

(யாழப்பாணத்து நல்லூர் கோட்டையின் மேற்கு வாசற்புறத்து போருக்கு ஆயத்தமாக சங்கிலியன் படையில், சங்கிலியன் இமையாணன் வீரமாப்பாணன், அப்பாமுதல், பரநிருபசிங்கம் ஆகியோர் நிற்கின்றனர். அப்போது காக்கை வன்னியன் சாதாரண உடையில் அரசனிடம் வருகிறான்)

சங்கிலி - என்ன காக்கை வன்னியனே, எதிரிப்படையில் நின்று எனக்கெதிரே சதிசெய்து விட்டு, கபடநாடகமாட வருகிறாயா?

காக்க - நான் எதிரிப்படையில் நின்று உங்களுக்கு எதிராகப் போரிடுவதா? என்ன புதிர் இது. உங்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் மழையையும் பாராமல் படையுடன் வந்தேன். எப்பொழுதும் உங்கள் அரசைக் காப்பாற்ற உதவி செய்யும் உங்கள் தளபதி நான் அல்லவோ.

(வன்னியன் அரசைக்கட்டி அணைப்பது போல கபடநாடகம் செய்து இறுக்கி கட்டிப்பிடித்தல்)

(பறங்கியர் தலைவன் பிரகான்சா கைவிலங்குடன் ஓடி வருகின்றான்) இதை பார்த்த தளபதி இமையாணனுக்கும் பிரகான்சாவுக்கும் வாள்சண்டை நடைபெறுகிறது. இறுதியில். பிரகான்சாவை மடக்கிப்பிடிக்கின்றான். தளை போட்டு கொண்டு செல்ல பறங்கியர் பார்த்து ஓடுகின்றனர்)

சங்கிலி - (காக்கை வன்னியனைப்பார்த்து) வன்னியனே நலமா?

காக்க - மன்னித்துவிடுங்கள்.

சங்கிலி - மன்னிப்பா? (சங்கிலி, அவன் கன்னத்தில் பளார் என அறைந்தான்) துரோகி, என்னைக்காட்டிக் கொடுத்து, மண்ணை அந்நியனிடம் கையளிக்க உடந்தையாக இருந்தாயே. உன்னைப் போன்ற பதவி வெறிப் பிடித்தவனுக்கு நீ நிற்கும் கோலம் பாடமாக அமையட்டும். சங்கப்பலகை அமைத்து, முத்தமிழ் வளர்த்த பரம்பரையில் வந்த எந்தமிழ் மக்களுக்கு, எம்மண்ணை நேசிக்கின்ற எம்மக்களுக்கு, அந்நிய தலையீடின்றி தொடர்ந்து சுதந்திரமாக வாழவேண்டும். என்ற அவாவில் இருக்கும் யாழ்ப்பாண இராச்சிய மக்களுக்கு நீ செய்த தொண்டு நன்று! நன்று!

சங்கிலி - (அப்பாமுதலியைப் பாாத்து) "துரோகி! மந்திரி போல வேசமிட்டு மந்திரியாக தத்திப்பாய்ந்து சொந்த நாட்டையே காட்டிக்கொடுக்கத் துணிந்து விட்டாயே! உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்ய நினைத்த துரோகி நீ. என் அன்புக் காதலியை அனாவசியமாக சாகடித்த கொலை காரன். அவள் இறந்தபொழுதும் வீர சுதந்திரமுடைய மண்ணின் தியாகியாகி! உன் சூழ்ச்சி முழுவதையும் எனக்கு ஓலையில் எழுதி அனுப்பினாள். அதனால் தான் இங்கு நானும் இமையாணனும் கவனமாக இருந்தோம். அதனால்தான் நான் இன்று உயிர்தப்பினேன். பறங்கியர் கையிலிருந்து எமது நாடு தப்பியது. யாழ்ப்பாண இராச்சியம் ஓங்குக! மக்கள் வாழ்க!

இமை - பரநிருப சிங்கனையும் கைது செய்தல் வேண்டும் அரசே!

சங்கிலி - அவரோ எனக்கு முடிதந்த அண்ணர் முடிக்குரியவர் அதைப்பற்றி நான் ஒன்றும் கூறவில்லை. உங்கள் விருப்பம்.
(வீரமாப்பாணன், காக்கவன்னியனைப் பிடிக்க, இமையாணன், அப்பா முதலியை பிடித்துக் கொண்டு செல்கின்றனர்.)

இருவரு - அந்தோ யாழ் இராச்சியமே, உன் இறைமையை சிதற சதி புரிந்து, வரலாற்றில் துரோகி ஆகிவிட்டோம். எங்களுக்கு மன்னிப்பே இல்லையா? நாங்கள் மகாபாவிகள். எங்களுக்கு ஏற்பட்டவரலாறு வேறு யாவருக்கும் ஏற்படக்கூடாது.

திரை

# அங்கம் ~ 16

## நல்லூர் அரசன் அவைக்களம்

பாத்திரங்கள்:- சங்கிலி, தனியாகமுதலி, இமையாணன். வீரமாப்பாணன், அரசகேசரி

(தனியாகமுதலி, அரசகேசரி, இமையாணன் ஆகியோர் தங்கள் இடங்களில் அமர்ந்திருக்கின்றனர். பொதுமக்கள் கூடிநிற்கின்றனர். அரசன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றனர்)

ஏவல - இராசாதிராசன், இராசமாத்தாண்டன், இராசகம்பீரன், சங்கிலி மகாராசா சபைக்கு வருகின்றார். எச்சரிக்கை.

(சங்கிலி அரசன் சாதாரண உடையில் அரசபைக்கு வருகின்றான். அவைக்களத்தில உள்ளோர் எழுந்து நிற்க அரசன் அரசு கட்டிலின் அருகில் சென்று நின்கின்றான். அவனுடன் மெய்க்காப்பாளன் வீரமாப்பாணனும் வந்து நிற்கின்றான்)

சங்கிலி - அவைக்களத்துப் பெரியோர்களே! பெருங்குடி மக்களே! வெற்றிவாகை சூடி, உங்கள் வாழ்த்துக்களையும், மகிழ்வுகளையும் பெற்று வந்து நிற்கின்றேன்.

நான் அரசு கட்டிலேறிய காலத்திலிருந்து உள்ளும் புறமும் பகைமை காட்டினர். எனக்குக்கிடைத்த வீரத்தளபதியின் திறமையும், எனது இராஜதந்திரமும், கேட்டபொழுதெல்லாம் உவந்தளித்த உங்கள் முழு ஆதரவும், பகைவரைத் துரத்தியடிக்க முடிந்தது. இந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் இறைமையைப் பாதுகாக்க முடிந்தது. அந்நியனின் நாடு பிடிக்கும் ஆசைக்கும், மதம் பரப்பும் ஆசைக்கும் இடம் கொடுக்காமல் சுதந்திரமான ஆட்சியை நீதி தவறாவண்ணம் செங்கோல் ஆட்சி செய்ய முடிந்தது.

என் அன்புமிகு பெருமக்களே! பாசம்போல் நடித்து அந்நியனுடன் பாசம் கொண்டு இந்த மண்ணில் அந்நியன் ஆக்கிரமிப்பதற்கு உதவிய எமது அவை அமைச்சர்கள் செய்த சூழ்ச்சிகளை நீங்கள் அறிய வேண்டும்.

- வன்னியனைத் தட்டிவிட்டும், உள்நாட்டு கலகங்களைத் தூண்டிவிட்டும், அரச இரகசியங்களை அந்நியனுக்குத் தெரிவித்தும் பறங்கியருடன் கூட்டுச் சேர்ந்தும் எமக்குப்பல தொல்லைகள் புரிந்தவர்கள் எமது அவைக்களத்திலுள்ளவர்கள். இதோ இரண்டு ஓலைச்சுரள்கள் இருக்கின்றது. ஒன்று அப்பாமுதலியார் செய்த சதியைப்பற்றியது. அவர் மகள் அமுதவல்லி எனது பட்டத்து இளவரசி இராசமாதேவிக்கு அனுப்பிய சுருள், மற்றது. பரநிருபசிங்கன் காக்கவன்னியனுக்கு எழுதிய ஓலைச்சுரள் சபையோர்களே நீங்களே படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.



சங்கிலி அரசன் படையினர், பறங்கியரைப் போரில்
தோற்கடித்து துரத்தும்காட்சி.

இந்த முடி எனது அண்ணா் பரராச சேகரத்திற்கு உரியது. ஆனால் மனம் உவந்தளித்தாலும், இந்த நாட்டின் அபாய வேளையில் நான் அரசனாக வேண்டிய கட்டாக தேவையும் இருந்ததால் நான் முடியை ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் அதன்பின் நடந்த வேதனை மிக்க நிகழ்ச்சிகளினால் அந்த முடியை பறிப்பதற்கு எனது அண்ணரும், அவர்கள் குடும்பத்தினரும் அவர்களுக்கு உதவியாக மந்திரிகள் சிலரும் ஈடுபட்டிருந்ததை அறிந்தீர்கள். நான் முடிதரித்தபின்தான் பொறாமை கொண்டு அவர்கள் முடியைப் பெறுவதற்காக அந்நியனுடனும் தொடர்பு கொண்டார்கள். எனவே இந்த முடி என்னிடம் இருக்கும் வரையும்., அவையில் எனக்கெதிரானவர்கள் அந்நியனுக்குத் துணைபுரிந்து கொண்டே இருப்பார்கள். இது அந்நியன் இந்த நாட்டைப் பிடிக்க ஏதுவாகும். இதை அனுமதிக்கலாகாது. இனிமேலும் இம்முடியைத் தரித்துக் கொண்டு ஆட்சிசெய்வேனாகில் நான் ஒரு சுயநலக்காரனாவேன். எனவே இந்த அரசபாரத்தை முடிக்குரிமையுடைய பரராசசிங்கத்துக்கு கையளிக்கின்றேன். யாழ்ப்பாண அரசு தொடர்ந்து நீடூழி வாழ்க. என் சுதந்திர தாகம் என்றும் தணியாது.

(அவையோர் பெருந்துக்கத்துடன் இருக்க சங்கிலியன் செல்கின்றான்.)

- முற்றும் -

SWAMI ABRAHAM
Community Centre
ULAMANGAL-MALLAKAM
Reg. No. J/VC/2/RA4

## துணை ஆதாரங்கள்

1. நந்திக்கடல் நூல் – செங்கை ஆழியன்
2. சங்கிலி நூல் – பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
3. யாழ்ப்பாண இராச்சியம் நூல் – ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை
4. யாழ்பாண வைபவமாலை நூல் – குலசபாநாதன்
5. ''சங்கிலியன்'' நூல் வித்துவான் கந்தையா
6. நாட்டுக்கூத்து – சொக்கன்
7. ''பொங்கொலி நகரார்'' கையெழுத்துப் பிரதி – திரு. ரதிதரன்

## பின்னிணைப்பு

இயலும் இசையும் இணையும் போது சுவையும், ரசிப்புத் தன்மையும் இருக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது. அந்தவகையில் சங்கிலியன் வசன நாடகத்தை எழுதி அச்சிடும் அதே நேரத்தில் சில பாத்திரங்களுக்கு ஏற்ற பாடல்களை இயற்றி இத்துடன் பின் இணைப்பாக இணைக்கின்றேன்.

**சங்கிலி அரசன் அரசசபையில் மந்திரி தனிநாயக முதலியாரிடம் நாட்டுநடப்பினைத் தெரிவிக்குமாறு கூறும் பாடல்.**

**இராகம்** : பிரிந்தாவன சாராங்கா **தாளம்: ஆதி**

பொங்கு தமிழ் நிலவும் நிலத்தினிலே,
சங்கு பல ஒலித்து சங்காரம் செய்யும்
சங்கிலியன் ஆட்சியிலே பங்கம் ஏதுமுண்டோ!
பாங்காகக் கூறும் தனிநாயக மந்திரியே!

(பொங்கு)

வஞ்சனைகள் செய்வாருண்டோ!
வெறும் வாய்ப் பேச்சில் வீரருண்டோ!
துங்க மனதவர் பங்கமுறத்தகும்
துயரேதும் சிங்கபுரியில் உண்டோ!

(பொங்கு)

பறங்கியன் பக்கம் பார்த்தகதை உண்மையோ!
பாரினில் கலகங்கள் ஓங்கி வளந்தது உண்மையோ?
அந்நியன் சூழ்ச்சியில் அறிவுடையார் புகுவரோ?
அங்கம் குளிர்ந்திட மனம் பொங்கி வழிந்திட

(பொங்கு)

இயல் இசை நாடகம் செந்தமிழ் ஓங்க!
இனிய கவிதைகளைப் பாவலர் பாட
நம்தமிழ் நாட்டில் செங்கோல் ஓங்க!
நாட்டு நடப்பினை நலமாய் கூறும்

(பொங்கு)

- முற்றும் -

**(சங்கிலி அரசன் தனது காமக்கிழத்தி அமுதவல்லியை சந்தித்தபோது ஏற்படும் ஊடல் பாடல்)**

**இராகம்** : கிந்தோளம் **தாளம் : ஆதி**

பல்லவி

சங்: ஆசைக்கிளியே என் ஆருயிர் காதலியே
அவலுடன் காண வந்தேன் அமுதவல்லி கண் பாராய்!

அனுபல்லவி

நேசமாய் உனைநாடி பாசவலை வீசி – தேசம்
புகழ் ராசன் ஓடி வந்தேன் அமுதவல்லி (ஆசை)

சரணம்

திஸ்ரநடை
அமு: ஆசைமொழி பேசி எந்தன் ஆவலையே
தாண்டிவிட்டீர் வேசமதே போடவேண்டாம்

பாசம் கொண்ட காதலன் போல்
தாமதம் ஏனோ? மனம் தவிக்குது வீணே!

சதுஸ்ரநடை

சங்கி: மானே உன் மனக் கோலம் அறிந்து கொண்டேனே
தேனே நாம் மனக் கோலம் காணும் நான் சீக்கிரமே உருவாகி வருகின்ற அரசாங்கத் தொல்லையால் கருவான நம் காதல் கனிய வழி இல்லையே

திஸ்ரநடை

அமு: ஆஹா உம் எண்ணம் தனை அறிந்து கொண்டேனே ஓஹோ என நாம் வாழ வந்தது தடையே பரராசசிங்கன் தனை மணமுடிக்க - தந்தை அன்னையுடன் தந்திரமாய் ஓதி நின்றனரே

சங்கிலி அரசன் அட்சியை வீழ்த்தி, சிம்மாசனத்தைக் கைப்பற்றி அரசனாவதற்கு, அந்நியருடன் இணைந்து சதி செய்யும், யாழ்ப்பாண அரசின் பதவியினரின், விருப்பக் குமுறல்கள் பாடல்களாக மிளிர்கின்றன.

பரநிருபசிங்கன் (சங்கிலியனின் அண்ணன்)

இராகம்:: அசாவேரி தாளம்: ஆதி

மோகம் கொண்டேன் நானே!
அரசசிம்மாசனத்தில் ........... (மோகம்)

ஆகா! நானே இளவரசன், வீணே முடிதுறந்தேன்.
தேடி முடி எடுப்பேன், மனையாள் துயர் துடைக்க
நட ........... நட........... நட................. (மோகம்)

என்மதியோ - சதி இதுவோ - கதிஎதுவோ!
எதிர் இணைவோ - புதிர் எதுவோ - அது சரியோ!
ஆகா! வன்னியனைக் கொண்டு நானும்
அவனைக் கொன்று பதவி ஏற்பேன்
ஆகா ...... நானே இளவரசன். வீணே முடிதுறந்தேன்
தேடிமுடி எடுப்பேன் மனையாள் துயர் துடைக்க
நட ....... நட.......... நட........ (மோகம்)

மகன் பரராசசிங்கனை மகிழ்விப்பேனே!
மனைவி மாதவியை முகம் மலரச் செய்வேனே!
பேரம் பேசிய வன்னியன் என்பக்கம் வருவானே!
பறங்கிச் சதியுடன் இளவரசன் வீணே முடிதுறந்தேன்
தேடி முடி எடுப்பேன் மனையாள் துயர் துடைக்க
நட......... நட.......... நட.............. (மோகம்)

- முற்றும் -

பரராசசிங்கன் (சங்கிலியனின் அண்ணன் மகன்)

இராகம் : அசோவேரி தாளம் : ஆதி

மோகம் கொண்டேன் நானே!
அரச சிம்மாசனத்தில் (மோகம்)

ஆகா! நானெ இளவரசன் தேடிமுடியெடுக்க
பறங்கியனை தேடும் பரராசசிங்கன் நானே!
நட....... நட............. நட........... (மோகம்)

பரராசசிங்கன் மருமகன் ஆவானோ!
பட்டத்து இளைவரசியாக மகள் அமுதவல்லி ஆவாளோ!
மயங்கிய உன்னை மதிகெட வைப்பேனோ!
முடி இறக்கி நான் அரசு ஏற்பேனே!
ஆகா! நானே இளவரசன்
அரசுக்கு சதிசெய்யும் அப்பாமுதலியாரே!
நட ...... நட......... நட.......... (மோகம்)

சங்கிலியன் ரகசியம் அறிவிப்பேன்!
சங்கதிகள் தெரிவிக்கும வன்னியியனை வரவேற்பேனே!
அன்னியன் என் சதியில் வீழ்வானே!
என் ஆசைகள் கரை சேருமே!
ஆகா நானே இவரசன்
அரசுக்கு சதி செய்யும் அப்பாமுதலியாரே
நட........... நட......... நட........... (மோகம்)

- முற்றும் -

காக்கவன்னியன் (சங்கிலியன் ஊர்காவற்றுறைச் சிற்றரசன்)

இராகம் : ஆசாவேரி தாளம்: ஆதி

மேகம் கொண்டேன் நானே
அரச சிம்மாசனத்தில்
ஆகா! நானே இளவரசன், சிற்றரசன்
காக்கைவன்னியனாம்..........
நட.......... நட........... நட.......... (மோகம்)
பறங்கியர் உதவியோ, அப்பாமுதலியார் பதவி ஆசையோ!
பரநிருபன் சதியொ! சிங்களவர் மதியோ!
சிங்கையின் புத்திமதியோ! - முடிதுறக்க

சங்கிலியன் விதியோ! அது என் பதியோ!
ஆகா! நானே இளவரசன் சிற்றரசன்
காக்கை வன்னியனாம் .................. (மோகம்)
சிற்றரசன் இளவரசன் ஆவனோ!
சீர் பெற்ற நல்லூர் ராசதானியின் தலைவனோ?
ஆசை தெரிவித்தவன் பறங்கியரோ?
ஆகா! நானெ இளவரசன் சிற்றரசன்
காக்கை வன்னியனாம்.............. (மோகம்)

- முற்றும் -

## காக்கவன்னியன் அப்பா முதலி வீட்டிலில் சதித்திட்டம் போடுவதற்கு செல்லுமுன் பாடும் பாடல்

இராகம்: சித்துபைரவி நடை தாளம் : ஆதி

யாழ்நகர் அரசின் இறமையைக் காக்க
யான் துணை செய்தேன், யாவரும் அறிவீரே!
காவலாய் நின்ற காக்கவன்னியா!
காவலூரில், சிற்றரசன் என்றாரே!

*சிற்றரசன் என்றாரே*

போதுமென்று நான் பதவியை ஏற்றேன்
வாதுவம்புகள் வழக்குகளின்றி ஆட்சிசெய்தேனே
அங்கம் வகித்திட வந்தனர் பறங்கியர்
சங்கிலி சூழ்ச்சி அறிந்தேனே –

*சூழ்ச்சி அறிந்தேனே*


பொங்கொலி நகரில் சங்குகள் ஊதி
பொன் மொழி தந்தாரே! அப்பா முதலி வழிபல
பறங்கியுடன் சிங்களவரும் துணை
பரநிருபன் சங்கதி சொன்னாரே –

*சங்கதி சொன்னாரே*

சூழ்கிறேன் வீடு அப்பா முதலி
சூழ்ச்சி வகுத்திடவே! ஆட்சிவீழ்திடவே!
செங்கோல் பிடிக்க பங்கம் விளைத்து
சங்கிலி முடியை எடுப்பேனே!

- முற்றும் -

# பூதத்தம்பி



## வரலாற்று நாடகம்

# பூதத்தம்பி

## நாடக மாந்தர்கள்

| | | |
|---|---|---|
| புவிநாயக முதலியார் | - | இராசவாசல் மந்திரி |
| இரணவீரசிங்கன் | - | அழகவல்லி, கைலாயபிள்ளையின் தகப்பனார் |
| வன்கேயன் | - | ஒல்லாந்த கொமுசாறி |
| திசவீரசிங்கன் | - | முன்னாள் கச்சாய் வன்னிமை முதலியார் |
| பால்தேயஸ் | - | ஒல்லாந்த சமயகுரு |
| பூதத்தம்பி | - | இராசவாசல் இரண்டாவது மந்திரி |
| கைலாயபிள்ளை | - | கச்சாய் வன்னிமை |
| புவிநாயகி | - | பூதத்தம்பியின் தங்கையார் |
| அந்திராசி | - | இராசவாசல் முதல் மந்திரி |
| ஜாக்கோப்வன்றீய் | - | பதில் வைஸ் கொமாண்டர் |
| கஸ்பார் பிகாறோ | - | முன்னாள் போத்துக்கேய வைஸ் கொமாண்டர் |
| றிக்கோ | - | ஒல்லாந்த டச்சுக் கொம்பனி தலைவன் |

# பூதத்தம்பி

## வரலாற்று நாடகம்

## அங்கம் ~ 1

*புவிநாயக முதலியார் வீடு*

பாத்திரங்கள் :- புவிநாயகமுதலியார், திசவீரசிங்கன், புவிநாயகி

புவிநா : கச்சாய் வன்னிமை திசவீரசிங்கன் அவர்களே வருக! வருக!

திசவீர : இராசவாசல் மந்திரி புவிநாயக முதலியார் ஐயா அவர்களே வணக்கம்.

புவிந : என்ன இருந்தாப்போல் திடீரென தங்கள் வருகை!

திசவீ : பெரியவரே! அன்று இராசவாசல் விருந்தில் எனக்கு போர்த்துக்கல் நாட்டு பெண்ணை மனைவியாகத் தரும்படி கேட்டுக் கொண்டதற்கு தங்கள் அபிப்பிராயம் என்ன?

புவிநா : என்றாலும் நீ இராசவாசலில் அப்படி ஒரு கோரிக்கையைக் கேட்டிருக்கக்கூடாது.

திசவீ : இல்லை பெரியவரே! நான் அப்படிக் கேட்டத்தில் எதுவித தவறுமில்லை. இந்தப் பூனைக்கண் பறங்கிகள் எங்கள் நாட்டை அடிமைப்படுத்தி வாழ்வதுடன், எங்கள் குலப்பெண்கள் பலரைப் பெண்டாளுகிறார்கள். அதுமட்டும் என்ன நியாயம்? நான் அவர் குலப் பெண்ணைப் பெண்டாளக் கேட்கவில்லை. மனைவியாகத்தான் கேட்டேன். அது நியாயமான கோரிக்கைதான். முன்பு ஒரு விருந்தில் எனக்கு ஒரு குதிரை வேண்டுமென்று கேட்டேன். அவர்கள் தரவில்லையா? தந்தார்கள்.

புவிநா : அது குதிரை, வீரசிங்கா! இது ..................

(திசவீரசிங்கன் அலட்சியச் சிரிப்பு)

புவிந : பறங்கியர் வாளை உருவியதும் நான் பயந்துவிட்டேன். அவ்வேளையிலும் நீ கலக்கமின்றிப் பயமின்றி இருந்தாயே!

திசவீ : அவனால் ஒரு போதும் உருவிய வாளை என்மீது பிரயோகிக்க முடியாது. எந்தப் பறங்கியாலும் என்னை எதுவும் செய்துவிட முடியாது பெரியவரே!

புவிந : தப்பான மதிப்பு போட்டுவிடாதே. கமாண்டர் பசென்டா குறுக்கிட்டிருக்காவிடில் விபரீதம் நடந்திருக்கும். கமாண்டர் நிலைமையை துரிதமாகச் சமாளித்துவிட்டான்.

திசவீ : அவன் நிலைப்பாடி என்னைப் பகைத்துக் கொண்டால் தென்மராட்சி முழுவதும் பறங்கிகளுக்கு எதிராகும்! கச்சாய் வன்னிமை நாதன். நான் மட்டும் எதிரியானால், வன்னியர்கள் வருடாவருடம் செலுத்தும் திறைகளை யார் சேகரித்து வழங்குவார்கள். இப்பொழுதுதே வன்னியர்களுக்கும், பறங்கியர்களுக்குமிடையில் திறை பெறுவதில் இழுபறி! பனங்காமத்துக் கயிலாயவன்னியன் அழைத்தாலும் இராசவாசலுக்கு வருவதில்லை. பறங்கிகளுக்கு என் ஆதரவு தேவை. பகைத்துக் கொள்ளமாட்டார்கள். வருடா வருடம் நூறு யானைகளை வேறுயாரால் சேகரித்து வழங்க முடியும்? அதனால்தான் இறுதியில் வைஸ் - கமாண்டர் பிகாறோ என் கோரிக்கைக்கு இணங்கினான். என்பிடிவாத குணம் அவனுக்கும் தெரியும்.

புவிநா : அவன் சொன்னவை நம்பக்கூடியவையல்ல. அவன் கூறியவற்றில் ஏதோ சூது இருக்கிறது. திசைவீரசிங்கா உனக்கு மனைவியாக ஒரு போர்த்துக்கீசப் பெண் தேவை என்று நீ கூறிய போது மண்டபத்திலிருந்த பறங்கிப் பெண்கள் தம் மானமே அழிந்து போனது போலப் பதறிப் போனார்கள். அவர்கள் பார்வையில் நாங்கள் சுதேசிகள், கீழ்ப்படிவுள்ள ஊழியர்கள்.

திசவீ : (உணர்ச்சியாக) கீழ்ப்படிவுள்ள ஊழியர்கள் அல்லர்; கீழ்ப்படிவுள்ள அடிமைகள் பெரியவரே! எங்கள் நாட்டின் சுதந்திரம் சங்கிலி மன்னனின் மரணத்துடன் சென்றுவிட்டது. நான் பிறக்கும் போதே அடிமை மண்ணில் தான் பிறந்தேன்.

புவிநா : எனக்கு இப்போது அறுபதுவயது .................... நானும் அடிமை மண்ணில் தான் பிறந்தேன் திசவீரசிங்கா ....................

திசவீ : பெரியவரே! என் நண்பன், உங்கள் மகன் பூதத்தம்பி எப்படியிருக்கிறான்? அவனுக்குத் திருமணம் கூட அண்மையில் தானே நடந்தது. அதற்கு நீங்கள் அறிவித்திருந்தும் நான் குதிரையால் விழுந்து சுகயீனமாக இருந்ததால் வரமுடியவில்லை.

புவிநா : என் மகன் பூதத்தம்பியும், மருமகள் அழகவல்லியும் சுகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கின்றது. அவர்கள் இன்று சட்டநாதர் கோவிலுக்குச் சென்றுள்ளார்கள். நீர் என்னவென்றால் அண்மையில் திருமணம் நடந்ததாக கூறுகின்றீரே !

(புவிநாயகி மூக்குப்பேணிக்குள் பால்கொண்டு வந்து கொடுக்கிறாள்)

புவிநா : இவள் எனது மகள் புவிநாயகி.

திசவீ : இவளுக்கு மணமாகிவிட்டதா?

புவிநா : இல்லை நிச்சயமாகி இருக்கிறது. இரணசிங்கனின் மகனும் எனது மருமகள் அழகவல்லியின் சகோதரனுமான கையிலாயபிள்ளையை நிச்சயம் செய்திருக்கிறோம்.

திசவீ : ஒன்றுக்குள் ஒன்று மிகநல்லது சரி பெரியவரே! நான் போய் வருகின்றேன்.

- திரை -

*****

# பின்னணி

(கச்சாய் வன்னிமை திசவீரசிங்கன் பறங்கியரினால் ஏமாற்றப்படுகிறான். இதனால் திசவீரசிங்கன் ஒல்லாந்தருக்குதவி செய்து அவன் உதவியுடன் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் பிடிக்கின்றனர். யாழ்ப்பாண அரசில் நல்ல பதவி தருவோம் என்ற ஒல்லாந்தரின் வாக்குறுதி காற்றில் பறக்கப்படுகிறது. போத்துக்கீசருக்கெதிராக தங்களுக்கு உதவி செய்தது போல், ஒல்லாந்தருக்கு எதிராகவும் இவன் எதிராளிகளுக்கு உதவி செய்வான் என்ற சந்தேகத்தில் திசவீரசிங்கனை தூக்கிலிடுவதற்காக பத்தேவியாவுக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கிறார்கள். அதனால் கச்சாய் வன்னிமை வெற்றிடமாகவுள்ளது.)

SWAMI ABRAHAM
community centre
KULAMANKALMALLAKAM
Regd. No: JN/C/21/844

# அங்கம் - 2

## *இராசவாசல் முதலியார், புவிநாயகமுதலியார் இல்லம்*

**கதாப்பாத்திரங்கள் : புவிநாயகமுதலியார், இரணவீரசிங்கன்**

(புவிநாயக முதலியார் வெளிக்கிட்டு வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரோடு இருந்த மருமகள் அழகவல்லியின் தகப்பனாரான இரணவீரசிங்கனுடன் அளாவுகிறார்)

இரணவீர: என்ன புவிநாயகமுதலியார் உத்தரபஞ்சகச்சமும் அணிந்து சந்தணப் பொட்டுப்போட்டு வெளிக்கிட்டு எங்கயோ பயணம் போல...........

புவிநா: சம்மந்தி இரணவீரசிங்கரே வாருங்கோ! இன்று இராசவாசல் விருந்துக்கு பெரியஒல்லாந்தேசு வன்கோயன் என்னை அழைத்திருக்கின்றான். அதுதான் வண்டியைப் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.

இரணவீர : அதுசரி போத்துக்கீசர் அட்டூழியம் செய்துவிட்டுப் போட்டாங்கள். இவர்கள் எப்படி முதலியார்?

புவிநா : போகப் போகத்தான் தெரியும். இப்ப பார்க்கயிக்க போத்துக்கீசப் பறங்கியிலும் பறுவாயில்லைப் போல இருக்குது.

இணவீர : எனக்கு மிகவும் பயமாக இருக்குது. இவங்கள் அவர்களிலும் பெரிய மாடுதின்னிகளோண்டு.

புவிநா : உது உவங்கட பிறவிக்குணம். போர்த்துக்கீச பறங்கியர் மாடுகளை நெடுந்தீவிலிருந்து இறக்குமதி செய்து திண்டு முடித்தாங்கள். பின் யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் முறை வைத்து ஒவ்வொரு மாடு இராசவாசலுக்குத் தரவேண்டுமென்று கட்டளையிட்டு வாங்கினாங்கள். இவங்களென்னவோ .......................

இரணவீர : முதலியார்! அவர்கள் இட்ட இந்தக்கட்டளையாலதானே எங்கட சைவச்சனங்கள் மாட்டுக் கொலையைத் தாங்கமுடியாது தென்னிந்தியாவுக்கு ஓடிப்போய் வேதாரணியத்திலும், சிதம்பரத்திலும் குடியேறினர்.

புவிநா : ஏன் திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானப்பிரகாசருக்கு, இராசவாசலுக்கு மாடு வழங்கும் முறைவந்தது. இரவோடிரவாக வேதாரணியத்திற்குப் போய் பின் துறவியானவர். உனக்குத் தெரியுமே இராசவாசலில் பெரிய சமயல் இருக்கிறது. அங்கே முழுமாட்டை அப்படியே பொரிக்கக்கூடிய வசதியிருப்பதை நான் கண்டேன். என்ன அநியாயம் ..............

இரண : வண்டில் சத்தம் கேட்குது. சரிநல்லபடி போட்டு வாங்க.

**- திரை -**

*****

# அங்கம் - 3

*இராசவாசல் சபை*

பாத்திரங்கள்: கொமுசாறி வன்கேயன், றுத்தாஸ், அட்றின்வன்லெனன், புவிநாயக முதலியார், பால்தேயஸ் குரு.

(மேடையின் நடு இருக்கை அலங்காரத்துடன் காணப்படுகிறது. ஏனைய இருக்கைகள் வலமும் இடமும் இவ்விரண்டும், சற்றுத்தூரத்தில் இன்னோர் இருக்கையும், தொடர்ந்து பல இருக்கைகளும் காணப்படுகின்றன)

(வன்கோயன் புவிநாயகமுதலியார் தவிர ஏனையோர் தமது இருப்பிடத்திற்கு முன்னால் நிற்க வன்கோயன் சபைக்கு வந்து தனது இருப்பிடத்திற்கு முன்நிற்றல்)

**வன்கோ:** (சபையை எல்லாப்பக்கமும் பார்த்துவிட்டு) யாழ்ப்பாணப் பட்டினத்தின் இராசமுதலியார் அவர்களே! இந்த இருக்கையில் அமரும்படி கேட்கின்றேன்.

(புவிநாயக முதலியார் மேடையில் நடுவில் இருந்த வெற்றுக் கதிரையில் முன் நிற்றல். வான்கோயன் இருந்தவுடன் எல்லோரும் அமருகின்றனர்)

**வன்கோ:** (எழுந்து நின்று சபையில்) யாழ்ப்பாணப் பட்டினப் பிரதானிகளே உங்களுக்குத் துன்பத்தைத் தந்த போத்துக்கீசரை விரட்டி நாங்கள் உங்களுக்கு சேவை செய்ய வந்துள்ளோம். நான்தான் கொமுசாறி வன்கோயன். இவர்தான் கமாண்டர் றூத்தாஸ். இவர்தான் வைஸ் கமாண்டர் அட்றின் வன்லெனன். இவர்தான் வணக்கத்துக்குரிய குரு பிலிப் பால்தேயஸ் எங்கள் நாடு. சிறியநாடுகளில் –, பின்தங்கிய நாடுகளில், இரக்கம் காட்டும் நோக்குடையது. எங்கள் நாட்டிலுள்ள மக்களின் உன்னதமான தரத்திற்கு உங்களையும் ஆக்குவது எங்கள் நோக்கம். இது எப்படியென்றால் உன்னத மதமான புரட்டஸ்தாந்து மதமூலமும் இதைச் செய்யமுடியும். இதற்கு நீங்கள் ஆதரவு தரவேண்டும். இராசவாசல் முதலியாரே தாங்கள் தெரிவிக்கும் விடயம் ஏதாவது இருந்தால் தெரிவிக்கலாம். (இருக்கையில் இருத்தல்)

**புவிநா :** ஒரு விண்ணப்பம் துரை அவர்களே!

**வன்கோ :** சொல்லுங்கள்.

**புவிநா:** தென்மராட்சி முதலியாரே கச்சாய் துறையின் வன்னிமையாகவும் இருப்பது வழக்கம். அதனால் ........................

**வன்கோ :** இல்லை! இல்லை ! இரண்டு பதவிகளையும் ஒருவர் வகிப்பது சரியல்ல. கச்சாய்துறை நமக்கு முக்கியமானது.

**புவிநா :** தாங்கள் சொல்லுவதும் சரிதான். கச்சாய் வன்னிமையே வன்னியர்களிடம் கொண்டுள்ளதோடு இராசவாசலுக்கு அடுத்ததாக பெருவருமானத்தையும் அதிகாரத்தையும் செல்வாக்கையும் கொண்டது. வன்னியர்களிடமிருந்து சுங்கவாதுக்களையும், திறைகளையும் வசூலிப்பது இலகுவான காரியமல்ல.

சிலகாலங்களில் வழங்குவர். சிலகாலங்களில் வழங்காமலும் விட்டு- விடுவார்கள். எனவே நயமாகவும், பயமாகவும் பேசிக்காரியத்தை சாதிக்கும் திறன் உடையவனாகவும் கச்சாய் வன்னிமை இருக்கவேண்டும் துரையே!

**வன்கோ:** தங்கள் உரைகள் இராசவாசல் முதலியாரின் அனுபவத்தையும், அரசியல் முதிர்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது. ஏன் வயதிலும் முதிர்ந்த நீங்கள் வன்னிமைக்கு நல்ல நம்பிக்கையான ஒருவரை தெரியுங்கள்.

**புவிநா :** (சற்று யோசிக்கிறார்) (சபையில் இருந்த பிரசைகள் தலையைக் குனிந்து கொண்டிருக்கின்றனர். இப்பதவியை யாரும் விரும்புவதாகத் தெரியவில்லை) (தன்னை தயார்ப்படுத்திக் கொண்டு) திருநெல்வேலிக் கிராமத் தலைவன் கயிலாயபிள்ளையை இப்பதவிக்கு நியமிக்குமாறு வேண்டுகின்றேன். இவன் எனது மருமகனும் கூட. அதனால் நம்பிக்கைக்குரியவன் .

**வன்கோ :** கைலாயபிள்ளையை கச்சாய் வன்னிமையாக நியமிக்கின்றேன்.

**புவிநா :** இன்னொரு விண்ணப்பம் துரையே!

**வன்கோ :** ம் ..........கூறும்

**புவிநா :** எனக்கு அறுபத்திரண்டு வயதாகிவிட்டது. எனக்கு ஓய்வு தருவதுடன், எனது இடத்திற்கு என் மகன் பூதத்தம்பியை நியமிக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.
(வன்கோயன் காதுகளில் ஏதோ குரு பால்தேஸ் சொல்லுதல்)

**வன்கோ :** முதலியாரே! உமது மகன் பூதத்தம்பி உமக்குப் பின் உமது பதவிக்கு வருவதில் தடையில்லை. முதலியார் பதவி பரம்பரையான பதவி என்பதை நான் அறிவேன்.

**புவிநா :** நல்லது கொமுசாறி அவர்களே!

**வன்கோ :** ஆனால் ........... உம்மைப்போன்று நிர்வாக அனுபவம் அவரிடம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆதலால் பூதத்தம்பியை நல்லூரின் முதலியாராக நியமிக்கின்றேன். இராசவாசல் முதலியாராக யாழ்ப்பாணத்தின் இன்றைய முதலியார் அந்திராசியை நியமிக்கின்றேன்.

(சபையில் சலசலப்பு)

**வன்கோ :** என்ன சலசலப்பு?

**புவிநா :** யாழ்பபாணத்தின் சாதிமுறைதான் சலசலப்புக்குக்காரணம்.
(வன்கோயன் அங்குமிங்கும் நடந்து யோசித்தல்)

**வன்கோ :** என் முடிவில் மாற்றமில்லை. குரு பால்தேயஸ், அந்திராசி இருப்பதையே விரும்புகிறார். எனவே அந்திராசிக்குத் துணையாக பூதத்தம்பியையும் இராசவாசல் முதலியராக நியமிக்கின்றேன்.

**- திரை -**

*****

# அங்கம் ~ 4

## *யாழ்ப்பாணக் கோட்டை*

பாத்திரங்கள் :கொமுசாறி வன்கோயன், பால்தேயஸ் குரு

வன்கோ : அடிகளாரே! தங்களிடம் பாரிய பொறுப்பு தந்துள்ளோம். இந்துக்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் எதிராக பிரசங்கம் செய்து புரட்டஸ்தாந்துகளாக மாற்றும் உம்முடைய பணி மிகவும் மகத்தானதும், பாரிய பொறுப் பானதுமாகும். தெல்லிப்பளைப் பிரசங்கம் எப்படி இருக்கிறது.?

பால்தே : நான் பிரசங்கம் செய்யும்போது புதுமையான கேள்விகள் கேட்கிறார்கள். எங்கள் சமயத்தை முழுமனதுடன் ஏற்றுக்கொள்கிறார்கள்.

வன்கோ சந்தோசமான செய்தி ............ சரி மற்றத்தேவாலயங்கள் பற்றிக் கூறமுடியுமா?

பல்தே : தெல்லிப்பளையிலிருந்து அரைமணி நடைதூரத்தில் மல்லாகம் தேவாலயம் உள்ளது. அங்கு 400 பிள்ளைகள் படிக்கிறார்கள். அயல்க் கிராமமான மயிலிட்டியில் கடற்கரையில் ஒரு தேவாலயம் உண்டு. அங்கு மீன், நண்டு, இறால் என்பன அதிகம். ஏராளமான முயல்கள் சுற்றாடலில் உள்ளன. தெல்லிப்பளையிலிருந்து இரண்டு மணி நேர நடைதூரத்தில் அச்சுவேலியில் தேவாலயம் இருக்கிறது. இங்கு முயல்களும், மான்களும் அதிகம் காட்டுப் பன்றிகளுமுள்ளன. வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலும் தேவாலயங்கள் உள்ளன. மானிப்பாயில் 200 மந்தைகளைக் கொள்ளத்தக்க பெரிய தேவாலயமும் வண்ணார் பண்ணையில் ஒரு தேவாலயமும் உண்டு. வடமராட்சிப் பகுதியில் மூன்று திருச்சபைகளும், பச்சிலைப்பள்ளியில் நான்கு தேவாலயங்களும் இருக்கின்றன. புலோப் பளையில் பலமானதாகவும் அமைக்கப்படுகிறது.

வன்கோ : கோட்டைக்கு அருகில் இருக்கும் சுண்டிக்குளியில் சமயத்தொண்டுகள் எப்படியிருக்கிறது ?

பால்தே: றோமிற்கு அருகில் இருப்பவர்களே கிறிஸ்தவப் பற்றுக் குறைந்தவர்கள் என்பர். அது மாதிரிச் சுண்டிக்குளியில் வாழ்பவர்கள் உள்ளனர். பெரிய தேவாலயமாக இருந்தபோதிலும் மக்கள் அக்கறை குறைந்தவர்கள். இங்குள்ள பாடசாலைகளில் 400 பிள்ளைகள் உள்ளனர். ஆனால் அவர்களில் பலர் பெற்றோருடன் மீன்பிடிக்கச் சென்று விடுகின்றனர். பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை ..............................

வான்கே : நல்லூரில் ஒரு தேவாலயம் அமைப்பதற்கு முயலவில்லையா?

பால்தே : (தயக்கத்துடன்) நல்லூரில் பழைய பெரிய சைவக்கோயில் ஒன்றை போர்த்துக்கீசர் இடித்து தரை மட்டமாக்கியிருக்கிறார்கள். இவ்விடத்தில் தேவாலயத்தை அமைக்க முயன்றோம். இரவோடு இரவாக அமைத்த கட்டடிடத்தை மக்கள் தகர்த்துவிட்டனர். இப்போது மண்ணினாலும், கிடுகுகளினாலும் ஒரு சிறிய தேவாலயம் கட்டியிருக்கின்றோம். காவலுமிட்டிருக்கிறோம்.

வன்கோ : முதலியார் பூதத்தம்பி பாதுகாப்பளிக்கவில்லையா?

பால்தே : பூதத்தம்பியும் சிறந்த சைவன். பூதத்தம்பிக்கு மக்களிடம் மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. நல்லூர் சைவ மக்களின் கோட்டமாக இருக்கிறது. நெற்றியில் சாம்பலைப் பூசிக்கொண்டு பெரிதாகச் சந்தணப் பொட்டுமிட்டு, அவர்கள் எங்களை அலட்சியமாகப் பார்க்கிறார்கள். அங்கே மதம் மாற்றுவது மிக்க மிக்க சிரமமாக இருக்கிறது. கிறீஸ்தவரே முதலியாராக இருக்க வேண்டுமென நாம் சட்டம் கொண்டுவரவேண்டும்.

வான்கோ : அதில் சிரமமிருக்கிறது. மதவிடயத்தில் அளவோடு தலையிட வேண்டும். அதுசரி யாழ்ப்பாணத்தில் சாதி முறையிருப்பது நல்லதுதானே மதத்தைப்பரப்புவதற்கு நாம் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பால்தே : உண்மைதான். தொழில் அடிப்படையில் அவர் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். வெள்ளாளரே சாதியில் உயர்ந்தவர்கள். சாதிப்பிரிவினை எமக்குச் சாதகமாகவே உள்ளது.

வான்கோ : கிராமம் கிராமமாக பிரசங்கம் செய்த நீங்கள், இவர்கள் பண்பாட்டு, பழக்கவழக்கம் எல்லாம் பார்த்திருப்பீர். சற்றுச் சொல்ல முடியுமா?

பால்தே : இவர்கள் காற்சட்டை அணிவது போன்று வேட்டி உடுத்திக் கொள்கிறார்கள். உடுத்திக்கொள்ளும் போது இடுப்பிற்கு முன்புறத்தில் மடியொன்று அமைத்து அதில் வெற்றிலை பாக்கு வைத்துக் கொள்வார்கள். எழுதுவதற்கு இரண்டு ஏடுகளையும் தம்முடன் எடுத்துக் கொள்வர். இடுப்பில் கத்தியும் சிலர் வைத்திருப்பார்கள். ஏராளமான மாடுகள் இவர்களிடம் உள்ளன. இவர்களின் வீடுகள் பெரியவை. துப்பரவானவை. நெல்வயல்கள் தோட்டங்கள் என்பன இவர்களுக்குக்குச் சொந்தமாகவுள்ளன. கிணறுகளிலிருந்து நீர் அள்ளுகிறார்கள். பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய். எடுக்கிறார்கள். தயிர்கடைவது மிகவும் நவீனமானது. பெண்கள் இளமையிலேயே திருமணம் செய்து கொள்வார்கள். பத்து அல்லது பதினொரு வயதில் திருமணம் செய்துவிடுவார்கள். யாழ்ப்பாணப்பகுதியில் இளம் வயதுள்ளவர்கள் பெற்றோர்களின் சம்மதமின்றி ஒன்று கூடுவதற்கு சம்மதிக்க மாட்டார்கள். இது மிகவும் புகழ்ச்சிக் குரியதாகும்..

வான்கோ: நல்ல பழக்கம் தானே! சரி நேரமாகிறது வருகிறகிழமை சந்திப்போம்.

- திரை –

*****

# அங்கம் - 5

## *பூதத்தம்பி வீடு*

பாத்திரங்கள் : பூதத்தம்பி, கைலாயபிள்ளை, அழகவல்லி, புவிநாயகி

(பூதத்தம்பியின் வரவை எதிர்பார்த்து அழகவல்லி அங்குமிங்கும் பார்க்கிறாள். பின்புவந்து இருக்கிறாள். பின்பும் வாசல் பக்கம் போய் பார்க்கிறாள்)

அழக : நன்றாக இருட்டிவிட்டது. இன்னும் அவரைக் காணவில்லையே. நிலவு என்றுவிட்டு வரத்தாமதிக்கிறாரோ! (தன்னைத்தானே கேட்டுவிட்டு இருக்கிறாள். வண்டிச் சத்தமும் மாட்டுச்சலங்கை ஒலியும் கேட்கிறது)

புவிநா : அண்ணி, அண்ணி அண்ணா வாறார் (சிரித்தபடி)

அழக : நீ தூங்காமலா இருந்தாய், புவிநாயகி!

புவிநா : சிரித்தபடி 'ஓ' ......... (வெட்கமாகத்தலைகுனிதல்)

அழக : அப்படியென்றால் சிலவேளைகளில் என் அண்ணன், கச்சாய் வன்னிமை கைலாயபிள்ளையாரும் வருவார் என்று எதிர்பார்க்கிறாயோ? நீ எதிர்பார்த்தால் அண்ணன் நிச்சயமாக வருவார் என்னடி .................... உனக்குச் செய்தி வந்ததா?

புவிநா : போங்க அண்ணி .................. (வாசலுக்கு இருவரும் ஓடுகின்றனர்)

அழக : அண்ணா ................ (கைலாசபிள்ளையை வரவேற்கிறாள். ஆனால் பார்வை பூதத்தம்பி மேல் இருக்கிறது)

புவிநா : அண்ணா .................. (பூதத்தம்பியை வரவேற்கிறாள் பார்வை கைலாயப் பிள்ளை மேல் இருக்கிறது)

(அழகவல்லி பூதத்தம்பியின் பக்கம் சென்று) ஏன் இவ்வளவு நேரம் தாமதித்து ..................

பூதத்த : ஏன் கவலையாய் இருக்கிறாய்?

அழகவ : அப்படி ஒன்றுமில்லை.

பூதத்த : அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களே ஏதோ கவலையாக இருக்கிறாய்.

அழகவ : வீட்டிலே ஒரு உயிர் பார்த்துப் பார்த்து ஏங்கித்துடிக்கும் என்று நினைத்தால்தானே? உதவி அமைச்சர்பதவி ஏற்றது முதல் என்னை

மறக்கிற அளவில் பெரிய உத்தியோகம் .................... பெரிய உத்தியோகம் (கலக்கமாகச் சொல்லுகிறாள்)

**பூதத்த :** நீ என்மேல் எதற்காக ஆத்திரப்படுகிறாய் என்பதை நான் அறிவேன். (அழகவல்லியைப் பார்த்து) எல்லாம் நீ என்மேல் வைத்திருக்கும் அன்பினால்தான். அந்த அன்புதான் எதையும் செய்து வெற்றியிடத் தூண்டுகிறது.

**அழகவ :** ஆமாம் ............ இப்போ அதற்குத்தான் பஞ்சமாச்சே.

**பூதத் :** இப்படியெல்லாம் மூடிமறைத்துப் பேசவேண்டாம், முதலியார்மாரின் கூட்டம் நடந்தது. அதனால் தாமதித்து வந்துவிட்டேன், இதற்கு நீ கோபப்படலாமா?

**அழகவ :** அதற்கு இவ்வளவு நேரமா?

**கைலாய :** அதுமட்டுமல்ல தங்கச்சி. இன்றைக்கு அரேபிய சோனகர் குதிரைகள் கொண்டு வந்துள்ளனர். எட்டு உயர்ந்த சாதிக் குதிரைகள் கோட்டைக்கு வந்திருக்கின்றன. அதனால் மைதானத்தில் பெரிய ஒல்லாந்தேசுவும் ஏனையோரும் குதிரைகளில் ஓடிப்பார்த்தனர்.

**புவிநா :** நீங்கள் அவர்கள் குதிரைச் சவாரி செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்களாக்கும். (கிண்டலாகக் கேட்டல்)

**கைலா :** என்ன மச்சான் (பூதத்தம்பியைப் பார்த்து) இண்டைக்கு இரண்டுபேரும் ஏதோ கலகம் செய்வதென்று நிற்கிறார்களே!

**பூதத்த :** (சிரித்தபடி) அவர்களுக்குப் பசி எங்களுக்காக காத்திருக்கிறார்கள் பாவம் ........................................

**கைலாய :** அழகவல்லி உன்கணவன் இப்படிக் குதிரையில் திறமையாக சவாரி செய்வாரென எதிர்பார்க்கவில்லை. அடங்காத முரட்டுக்குதிரையை அடக்கி சவாரி செய்தார். சின்ன ஒல்லாந்தேசு அதே குதிரையில் சவாரி செய்த பொழுது, அக்குதிரையோ தனது பின்னங் கால்களை உயர்த்தி எழுந்து அப்படியே அவனைத்தூக்கி எறிய, நிலத்தில் விழாது உன்கணவன்தான் காப்பாற்றினார். (பூதத்தம்பியை கைலாயபிள்ளை கட்டி அணைத்து சந்தோசம் கொண்டாடல்)

**பூதத்த :** சின்ன ஒல்லாந்தேசு மிகவும் வித்தியாசமானவர். என்னிடம் மிகவும் நட்பாகப் பழகுகிறார்.

**அழகவ :** அப்படியா? (அழகவல்லி சந்தோசப்பூரிப்பு) .............(பூதத்தம்பி வீட்டுக்குள் புகுதல்)

அழகவ : (கைலாயனைப்பார்த்து) அதுசரி அண்ணா! நீ வருவாய் என்பது புவிநாயகிக்கு எப்படித் தெரியும். செய்தி அனுப்பினாயா? (புவிநாயகி வெட்கப்படுதல்)

கைலா : இல்லையே.

அழக : இவளுக்கு நீ வருவது தெரிந்திருக்கிறது. இன்று மாலையிலிருந்து உன்னைப் பார்த்த படியே இருந்தாள்.

புவிநா : நானா அண்ணி? நீங்கள்தான் அண்ணனை எதிபார்த்துத் தவம் இருந்தீர்கள்.

அழகவ: ஆண்களுக்காகக் காத்திருப்பதுதான் இந்த யாழ்ப்பாணத்துப் பெண்களின் வழக்கமாகிவிட்டது. வருகிற நேரம் வரட்டும் என்று மனம்கோணாது இருக்க மனசு கேட்டால்தானே?
(பூதத்தம்பி வீட்டுக்குள் இருந்து வெளியே வரல்)

கைலா : சரி தங்கச்சி கிணற்றடிக்குப் போட்டுவாறன்.

புவிநாய : நான் கிணற்றில் தண்ணி அள்ளிக் கொடுத்துவிட்டுவாறன்.

பூதத்த : இவர்களின் கலியாணத்தை கெதியில முடித்துவிட வேண்டும்.

அழகவ : நானும் அதைத்தான் சொன்னேன். (அழகவல்லி பூதத்தம்பியின் அருகில் சென்று, பூதத்தம்பியைப் பார்த்து) நீங்கள் இரவினிலே தாமதித்து வருவதை நிறுத்திவிடுங்கள். நான் தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது. மகன் சோதிநாதனும் பொழுது கருக நித்திரையாகிவிடுவான் . இன்று நானும் மகன் சோதிநாதனும் சட்டநாதர் கோவிலுக்குப் போய்வரும் வழியில் ................

பூதத்த : வரும் வழியில் ............

அழகவ : என்னை பின் தொடர்ந்த ஒருவன் என்னைப் பார்த்து எதைஎதையெல்லாம் சொல்லி என்னை வர்ணித்துக்கொண்டு என் அருகில் வந்தான். நான் என் செருப்பைக் காட்டினேன். வாயில் வந்த மாதிரி பேசினேன். ஓடிவிட்டான்.

பூதத்த : நீ அவனை அப்படி ஏசியிருக்கக்கூடாது. பாதணியைக் கழற்றி அடிக்க முயன்றிருக்கக் கூடாது. ஒரு குடும்பப் பெண்ணுக்கு அது அழகல்ல.
(அழகவல்லி கண்ணீர் விட்டு அழுகிறாள்)

பூதத்த : அசடே அசடே ! இதோ பார் அழகவல்லி நீ பொற்சிலை மாதிரி அழகாக இருக்கிறாய். உன்னை ஒரு தடவை பார்த்தால் மறுதடவையும் பார்க்கத்தூண்டும் அழகு, கவர்ச்சி உன்னிடமிருக்கிறது. உன்னிடம் இப்படிக் கொள்ளை அழகை வைத்திருக்கும் போது, பார்ப்போரை குறைசொல்லி என்ன பயன். நிலவை ரசிக்காதவர்கள் யார்? அதனால் நிலவிற்கு ஒரு களங்கமும் ஏற்படுவதில்லையே!

அழகவ : நிலவை எட்டிப்பிடிக்க முடியாது. என்னைச்சுலபமாக எட்டிப் பிடித்து விடலாமே. நீங்கள் எதை எதையெல்லாம் பொருத்தமில்லாமல் பேசுகிறீர்கள். சீ .....சீ.......... என்ன ஆண்கள். கழுத்தில் தாலி இருக்கும் பெண்ணை அப்படியா முறைப்பார்கள். கையில் குழந்தை இருக்கும் பெண்ணை அப்பிடியா பார்ப்பார்கள்.

பூதத் : நீ ஒரு குழந்தைக்குத் தாயான பெண் போலவா இருக்கிறாய். அழகவல்லி! உன்னை இப்போதும் புதுப்பெண்ணாக மணவறையில் இருத்தலாம். (அழகவல்லி சிரிக்கிறாள்) அழகவல்லி என் இதயத்தின் இன்பராணியே! என் உள்ளத்தைக் கவர்ந்த கனிமொழியே!! என் சிந்தனைக் கனவுகள் நனவாகும் இன்பப் பெருக்கே ............

அழக : ம் ......................

பூதத் : நீ வீணையாய் இருக்கலாம் - ஆனால் அதில் பிறக்கும் இன்ப ராகங்கள் நான்தான், நீ மோகினி வடிவமாயிருக்கலாம் - ஆனால் மோகனம் பாடி உன்னை மோனநிலைக்கு கொண்டு வருபவன் நான்தான்.

அழகவ : ஆகா................ நல்லாயிருக்கிறது உங்கள் கவிப்புலமை .

பூதத் : அழகவல்லி உனக்கு ஒரு விசயம் தெரியுமா? திசைவீரசிங்கன் தப்பிவிட்டானாம். திசவீரசிங்கனை ஒல்லாந்தர் கப்பலில் பத்தேவியாவுக்கு அனுப்பியபோது, அவன் கப்பலிலிருந்து, போத்துகீச வைஸ் கமாண்டருடன் தப்பிவிட்டானாம். தப்பிய திசவீரசிங்கன் இங்கே வந்துவிட்டானாம்.

அழக : யார் சொன்னது (ஆச்சரியத்துடன்)

பூதத் : மச்சான் கைலாயபிள்ளைதான். அவன் கச்சாயில் கையிலாயபிள்ளையைச் சந்தித்திருக்கின்றான். என்றாலும் பெரிய ஒல்லாந்தேசு இப்படி ஏமாற்றி இருக்கக்கூடாது.

அழக : அது அரசியல் விஷயம். அதைப்பற்றி பேச வேண்டாம். இப்போதே கந்தவேள் கோட்டத்தில் கிறிஸ்தவ தேவாலயம் கட்ட நீங்கள் எதிர்ப்பு என்று பேசிக்கொள்கின்றார்கள். திசைவீரசிங்கனோடு தொடர்பு என்றால் அது வினையாகிவிடும்.

பூதத் : அவன் தப்பி வந்தது பெரிய ஒல்லாந்தேசுவுக்குத் தெரியாது. இந்தியாவுக்குத் தப்பி ஓடும்படி கைலாயபிள்ளை புத்தி சொல்லியிருக்கிறான். ஆனால் மறுத்துவிட்டானாம். ஒல்லாந்துகளை பழிவாங்காமல் எங்கும் போகமாட்டானாம்.

அழக : அவன் வீட்டுப் பக்கம் வந்தால் அவனிடம் இங்குவந்து எங்களுக்கு இடஞ்சல் தரவேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிடுங்கோ. சரி சாப்பிடுவோம் வாருங்கோ.

(கைலாசபிள்ளைக்கும், பூதத்தம்பிக்கும் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருக்கிறாள் அழகவல்லி.)

அழக : அந்திராசி முதலியார் எப்படியிருக்கிறார்.

பூதத் : நான் எதிர்பார்த்ததிலும் நல்லவன். நிர்வாகவிடயங்களில் நல்ல பரிச்சயம் இருக்கிறது. கிறிஸ்தவன், அதனால் அவர்களிடம் செல்வாக்கிருக்கிறது. ஆனாலும் ..............

அழகவ : ஏன் இழுக்கிறீர்கள்.

பூதத்த : பெண்கள் விடயத்தில் பலவீனமானவனாக இருக்கிறான். அதில் பிழையிருப்பதாகவும் தெரியவில்லை. பெண்ணாசை யாரைத்தான் விட்டது ............... என்ன மச்சான் (கைலாயபிள்ளைப் பார்த்து)

கைலாய : நீ ஏன் என்னை இழுக்கிறாய்?

அழகவ : அவரோடு சேர்ந்து நீங்களும் அந்தப் பழக்கம் பழகிவிடாதீர்கள்.
(சாப்பிட்டுக் கொண்டு இருப்பவர்களிடம் அழகவல்லி)
இன்னம் கொஞ்ச சோறு ..........................

பூதத் : அழகவல்லி ஒரு முக்கியவிடயம் கூறமறந்துவிட்டேன். இன்று பகல் நானும் இராசவாசல் முதலியார் அந்திராசியும், ஊர்நிலவரங்களைக் கண்டறிய ஊர் ஊராகச் சென்று விசாரித்துள்ளோம். அவ்வேளையில் நாளைக்கு மத்தியானம் எங்கள் வீட்டில் விருந்துக்கு வரும்படி கேட்டேன். ஒருவாறு சம்மதித்துள்ளார். ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் அழகவல்லி.

அழகவ : எங்கள் வீடுகளில் சாதி குறைந்தவர்களை ................

பூதத் : நிறுத்து .......... என்ன சொல்லப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். இதோபார் அழகவல்லி நீ சாதி ஆசாரம் பார்க்கிறாய். காலத்திற்கேற்ப நம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு இராசவாசல் முதலியார் எங்கள் வீட்டில் விருந்துண்பது எமக்குப் பெருமையென்று எண்ணவேண்டும்.

அழகவ : எனக்கேனோ மனம் ஒப்பவில்லை.

பூதத : நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். அவன் வருவது எங்களுக்குப் பெருமை. சரி கையைக் கழுவிவிட்டு வந்து வெத்திலையைப் போடுவம்.

– திரை –

*****

# அங்கம் - 6

## *பூதத்தம்பி வீடு*

**பாத்திரங்கள் : பூதத்தம்பி, அந்திராசி, அழகவல்லி**

(பூதத்தம்பி வீட்டுவாசலுக்கு வெளியே திசைவீரசிங்கன் சென்று கொண்டிருக்கிறான். அப்போது பூதத்தம்பி வீட்டுக்கு விருந்துக்காக அந்திராசி வந்து கொண்டிருக்கிறான். அப்போது அந்திராசி தனது மனத்துக்குள் எண்ணுவது)

"அதோ போய்க்கொண்டிருப்பவன் முன்னாள் கச்சாய் வன்னிமை முதலியார் திசைவீரசிங்கனல்லவா? தூக்கிலிட பத்தேவியாவுக்கு அனுப்பப்பட்டவன் எப்படித் தப்பினான். போர்த்துக்கீசரைத் தோற்கடித்து ஒல்லாந்தரை வெற்றி பெறச் செய்த நீ இப்போது மறைந்து நின்று ஒல்லாந்தருக்குச் சதி செய்கின்றாய் போலும். பூதத்தம்பி வீட்டிலிருந்து செல்லும் நீ அவனுடன் சேர்ந்து சதித்திட்டமிடுகின்றாயா. விருந்து வேட்டையில் இவனும் சிக்கிக் கொண்டான். எனது திட்டத்திற்கு இதுவும் சாதகம்தான். எதற்கும் எதுவும் தெரியாதவன் போல் விருந்தை முடித்துக் கொண்டு திசைவீரசிங்கனைப் பிடிப்பதற்கு திட்டமிடவேண்டும்."

(சற்றுநடந்து பூதத்தம்பி வீட்டுவாசலுக்கு அந்திராசி செல்கின்றான். பூதத்தம்பி அந்திராசியை வரவேற்கிறான்)

பூதத் : வணக்கம் வாருங்கள்,
வராமல் இருந்துவிடுவீர்களோ என பயந்து ...............

அந்திரா : அந்திராசி சொன்ன சொல் தவறமாட்டான் . பூதத்தம்பி அதுவும் இன்றைய நாளில் இங்குவந்தது ...................... (அந்திராசி கள்ளப்பார்வையுடன் முழியைப் பிரட்டிக்கொண்டு) மிகவும் நல்லது. நீங்கள் சாதி ஆசாரம் பார்ப்பது போல நான் தகுதி ஆசாரம் பார்ப்பவன் அல்லவே.
(அந்திராசி சிரித்துக்கொண்டு சொல்ல, பூதத்தம்பியின் முகம் கறுத்தோடியது)

பூதத் : அழகவல்லி ................................ விருந்தாளி இராவாசல் முதலியார் நண்பர் அந்திராசி வந்திருக்கிறார். இங்கே வாரும்.
(அழகவல்லி வருதல் )

பூதத் : இவள்தான் என் மனைவி அழகவல்லி.
(அந்திராசி நினைப்பில்)

'சாதித்திமிர் பிடித்த இவளை வஞ்சம் தீர்க்கவல்லோ நான் வந்தேன். ஆனால் இவள் அழகுதான் என்ன? இப்படிப்பட்ட அழகியை நான் கண்டதில்லையே! இவளை நான் ரசித்து, ருசிக்க வேண்டும். அப்படியும் எனது வஞ்சத்தைத் தீர்த்துவிடலாம்"

பூதத் : என்ன கடுமையாக யோசிக்கிறீர்கள்........................ அது...........



அந்திராசி தண்ணீர் கேட்க, அழகவல்லி பூதத்தம்பியிடம்
செம்பைக் கொடுக்கும் காட்சி.

அந்தி: இல்லை .................. உன் மனைவிபோல் எனக்கு ஒரு தங்கை இருந்து இறந்துவிட்டாள். அவள் ஞாபகம் வந்துவிட்டது.

பூதத் : சரி உள்ளே சென்று விருந்துண்டுவிட்டு வந்து பேசிக்கொள்வோம்.

அந்தி : அதுவும் சரிதான் - சாப்பிடுவோம்.
(உள்ளே சென்று விருந்துண்டுவிட்டு வெளிவரல்)

அந்தி : சாப்பாடு மிகப் பிரமாதம் அறுவகை சுவையோடு பரிமாறினீர்கள்.

பூதத் : என் மனைவி சமையற் கலையை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கின்றாள்.

அந்தி : வாய்க்கு மட்டும் விருந்து மட்டுமல்லாமல், கண்ணுக்கும் நல்ல விருந்தாக உள்ளதே.

பூதத் : நீங்கள் சொல்வது விளங்கவில்லையே.

அந்தி: இல்லை ................ இல்லை .................. அது.......... நான் அப்படிக்கூறுவதென்னவென்றால் உங்கள் வீட்டுக்குள்ளே நன்றாக அழகான சிலைகளும் அலங்காரங்களும் இருக்கின்றன. அதைத்தான் ..........................

பூதத் : அது என் மனைவிதான் எல்லாவற்றையும் அழகாக வைத்திருக்கிறாள். அழகவல்லி..............., மந்திரியார் விருந்து வெகுபிரமாதம் என்று பாராட்டுகின்றார்.
(அந்திராசி, அழகவல்லியின் ஒடுங்கிய இடையையும் திரண்ட மார்பையும் விடாமல் பார்க்கிறான்)

அழக : நன்றி ......... (கூறிவிட்டுச்செல்ல)

அந்தி : நண்பரே தண்ணீர் வேண்டும்.

பூதத் : அழகவல்லி தண்ணீர் செம்புக்குள் கொண்டுவாரும்.

அழக : எடுத்துவருகிறேன்.
(பூதத்தம்பியின் கையில் தண்ணீர் செம்பை அழகவல்லி கொடுக்க பூதத்தம்பி செம்பை அந்திராசியிடம் கொடுத்தல், அந்திராசியின் பார்வை மீண்டும் அழகவல்லிமேல்)

அந்தி: நண்பரே இன்றுமுதல் நாம் நெருங்கிய நண்பர்களாகிவிட்டோம். உடலால் வேறுபட்டாலும் உள்ளத்தால் நாம் ஒருவரே! உங்கள் குடும்பத்தில் அக்கறை எனக்கு எப்பொழுதும் இருக்கும். நான் புறப்படலாமா?

பூதத் : மிக்க மகிழ்ச்சி வாருங்கள்.

**- திரை —**

# அங்கம் – 7

*அந்திராசி மாளிகை*

**பாத்திரங்கள் : அந்திராசி, இரண்டு சிப்பாய்கள்**

**அந்திராசி:** நான் பூதத்தம்பியின் விருந்தழைப்பை ஏற்று அவரின் மனைவி அழகவல்லியின் சாதித்திமிரை அடக்க வேண்டுமென்றல்லவோ சென்றேன். ஆனால் அவளைப் பார்த்த பிறகு, கெஞ்சியாவது கொஞ்சவேண்டும் போல் அல்லவா தோன்றுகிறது. அவள் அழகுதான் என்ன? இருண்ட மேகம் வந்து சுருண்டு கிடப்பதுபோல் அவள் கொண்டை, திரண்ட கொங்கைகளின் பாரத்தால் இடையொடிந்துவிடுமோவென அவள் இடை, செந்தாமரையின் நிறத்தைப் பழிக்குமாப்போல் அவள் சிவந்த உடல், அவள் சிரிப்போ .................. முத்துக்களின் வரிசைகளான பற்களின் சீரமைப்பில் இருந்து வந்த பிரகாசம் ......... இப்படியான ஒரு அழகியை வாழ்நாளில் சந்திக்கவில்லையே. இவளை நான் மனைவியாக்கிவிட்டால் புவிநாயமுதலியார் குடும்பத்தின் சாதித் திமிரை அடக்கிவிடலாம். அதே நேரத்தில் உயர்குடும்பத்திலுள்ள ஒரு பெண் மாற்றானுடன் ஓடிச் சென்றுவிட்டாள் என்ற அவப்பெயரைக் கொடுத்துவிட முடியும். ஒரே கல் எறிய இரண்டு காய் ............ ஆ .................... ஆ .................. என்னே எனது திட்டம் ஆ ...................... ஆ ........................

பூதத்தம்பி நீ என்னை அன்று விருந்துக்கு அழைத்திருக்காவிட்டால், திசைவீரசிங்கன் விரோதியைக் கண்டு இருக்கவும் முடியாது. அவனை இன்று சிறைபிடித்திருக்கவும் முடியாது. பூவும் பொட்டுமாக வாழும் உன்னை தாரமாக ஏற்று கணவன் மனைவியாய் வாழவேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அன்று விருந்துபசாரத்தின் போது நீ எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் சலங்கை ஒலிப்பது போல் ஒலிக்கிறது. அழகவல்லி அன்று கம்பன் மகன் அம்பிகாவதி, அமராபதியை அடைவதற்கு அரசன் விதித்தது போன்று நூறு பாட்டுக்கள் பாடினான். நான் உன்னை அடைவதற்கு நூறு பாட்டென்ன ஆயிரம் பாட்டே பாடிமுடிப்பேன். கண்ணே அழகவல்லி இதோ அச்சாரமாக என் முதலாவது முத்தான கவிதையைப் பொறிக்கின்றேன் கேள். தென்னங்காற்றின் வாத்திய இசையோடு, தென்றல் காற்று என்பாடலை உன் காதுகளில் கொண்டுவரும். நிச்சயம் கொண்டுவரும்.

**பாட்டு**

ஆசையுண்டாகத் தடையோ!
அழகவல்லியைக்கண்டால் (ஆ)

ஆகா அவளைக்கண்டு
நானும் மையலேகொண்ட ஆகா
அட அட அட (ஆ)

SWAMI ABRAHAM
community centre
KUMARAKAL-MALLAKAM
Reg. No. JVC/21/84

காமனது பாரியோ
பூவையது நாரியோ
பூமுதல் கொன்றலோ ஆகா
அட அட அட (ஆ)

குயிலோ புகையோ கூந்தல்
அயிலோ கயலோ கண்கள்

குவிந்த தாமரை மலரே! அது
சிவந்த றோசாவின் இதழோ
அட அட அட (ஆ)

ஆகா மாம்பழநிறமும் மதிமுகமும் கொண்ட அந்த மின்னலிடை அழகவல்லி அந்த அப்பாவி பூதனுக்கு மனைவியா! சேச்சே .......... என் அழகென்ன ............ என்கெம்பீரமென்ன............ எனக்கல்லவா அவள் மனைவியாக இருப்பது பொருத்தம் எனக்கு அவள் மனைவியாக இருந்தால் ............ இரவு முழுவதும் நித்திரையே வரவில்லையே ............ இவளை எப்படியடையலாம் (அங்குமிங்கும் நடந்துவிட்டு) பொன்னாசையூட்டி பெண்ணாசை தீர்க்க வேண்டும் என்பார்கள். சரி அழகவல்லிக்கு விலையுயர்ந்த முத்துக்கள், வைரம் பதித்த ஆபரணங்களைக் கொடுத்து அவளை என்பக்கம் சேர்த்துவிடவேண்டும். யாரங்கே ........................ (சிப்பாய் இருவர் ஓடிவருதல்)

சிப்பாய்கள் : ஆமாம் இருவருமே வாருங்கள். உங்களை நன்றாக அவதானித்திருக்கின்றேன். ராஜவிசுவாசத்துடன் சேவை செய்கின்றீர்கள். உங்களைப்பற்றி பெரியதுரையிடம் நன்றாகச் சொல்லியிருக்கின்றேன். உங்கள் படியை உயர்த்தவும் எண்ணியிருக்கின்றேன். நீங்கள் இருவரும் தூது செல்ல வேண்டும்.

மு.சிப் : தூது செல்லவேண்டும். சரி .................. யாரிடமென்று சொல்லவில்லையே.

அந்தி : நல்லகேள்வி. நீ குறிப்பறிந்து கேட்டுவிட்டாய். எட்டிய அளவில் உன்புத்தி எங்கே போய்விட்டது. முட்டாளே.

இ.சிப் : எஜமான், அண்ணை ஒருவகுப்பில் இரண்டு வருடங்கள் படித்தவர். என்னைவிட வயதிலும் கூடியவர். அவருக்கு என்னைவிட புத்தி அதிகம்தான்!

அந்தி : டேய் சிப்பாய்களே ! இதில் யார்கூட குறையவென்பது இப்போது அவசியமில்லை. நான் சொல்லுமிடத்திற்கு இருவருமே செல்லவேண்டும். செல்லவேண்டிய இடம் வேறுயாரிடமுமில்லை பூதத்தம்பியைத் தெரியுந்தானே.

மு.சிப் : பூதத்தம்பி ஐயாவையா! நல்லாகக் கேட்டீர்கள். அவரை நல்லாகவே தெரியுமே! அப்படியானால் அவரிடம் தூது செல்லவேண்டும் என்கிறீர்கள்.

இ.சிப் : எஜமானே! அவர்தானே உங்கள் இரண்டாவது மந்திரியாராச்சே. நீங்கள்தான் அவருடன் அடிக்கடி பழகுகின்றீர்களே. இராசவாசலில் இருவரும் சந்திப்பது வழமையாச்சே !

அந்தி : முட்டாளே நான் சொல்லி முடிப்பதற்குள்ளே எனது ஆசைக்கு முற்றுப் போட்டு கதைக்கின்றீர்களே! நான் சொல்ல வந்தது பூதத்தம்பியிடமல்லடா. அவன் மனைவி அந்த இனிய நெல்லி அழகுவல்லியிடம் செல்ல வேண்டும்.

மு.சிப் : (பயத்துடன்) எங்களுக்குப் பயமாக இருக்கிறது. மேலிடத்து விஷயம். பூதத்தம்பி அறிந்தால் (தலையில் கைவைத்தல்)

அந்தி : (கோபத்துடன்) பூதத்தம்பியும் கீதத்தம்பியும் முட்டாள்களே நான் முதல்மந்திரியாக இருக்கும் போது பூத்தம்பிக்கோ அல்லது யாழ்பாணத்து கொமுசாறி வான்கோயனுக்கோ அல்லது சின்னலாந்தேசுக்கோ நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

இ.சி : எஜமான் அப்படியென்றால். அழகவல்லியிடம் தூது போய் நாங்கள் என்னதான் சொல்லவேண்டும்?

மு.சிப் : ஆமாம் எஜமான் அழகவல்லியிடம் என்னதான் கதைக்க வேண்டும்?

அந்தி : தூதுவர்களே! அன்று பூதத்தம்பியின் வீட்டில் எனக்கு நடந்த விருந்துபசாரத்தின் போது அழகவல்லியைக் கண்ட அன்று முதல் இன்றுவரைக்கும் என் கண்களுக்கு உறக்கமில்லை. மனதுக்கு நிம்மதியில்லை.

இ.சிப் : கொஞ்ச நாளாக குளிப்புமில்லை.

அந்.தி : கிண்டலா பண்ணுகின்றாய்.

ம.சிப் : இல்லை எஜமான். உங்கள் வசனத்தோடு நானும் ஒன்றைச் சொல்லிப்பார்த்தேன்.

அந்தி : என் நிலைமையை அவளுக்கு எடுத்துக்கூறுங்கள். அழகவல்லியை நினைந்து தவிக்கின்றேன் என்று கூறுங்கள்.

இ.சிப் : அழகவல்லி கலியாணம் முடிச்சவளாச்சே.

அந்தி : இருந்தாலும் அவளைக்கண்ட நாள் தொடக்கம் என்னால்........

மு.சிப: டேய்........... அந்திராசி ஐயா பாவம் .......... (மற்றச்சிப்பாயைப்பார்த்து) நாங்கள் பூதத்தம்பி இல்லாத நேரம் போய்ச் சொல்லுவம்.

அந்தி : அதுதான் மிகமுக்கியம்.

இ.சிப் : உங்கட கையால ஒரு காதல் கடிதம் எழுதித் தாங்கோவென். ..............................

அந்தி : முட்டாளே! நான் எழுதும் கடிதம் அழகவல்லியின் கைக்குச் சேராது வேறு யாரிடமாது கிடைத்து விட்டால் எத்தனையோ விபரீதங்கள் ஏற்பட்டுவிடும். அதுதான் நம்முன்னோர்கள் கழுத்தைக் கொடுத்தாலும் எழுத்தைக் கொடாதே என்று சொல்லியிருக்கிறார்கள். சிப்பாய்களே நீங்கள் இருவரும் கொஞ்சம் பேசிக் கொண்டு இருங்கள். நான் இதோ வந்து விடுகிறேன் (அந்திராசி உள்ளே செல்லுகிறான்)

முசிப் : எடதம்பி உனக்குக் காச்சல் மட்டுந்தானே அடிக்குது. எனக்கு என்னவோ எல்லாம் செய்யுது. ஒரு மாதிரி நீ மட்டும் போட்டுவாவன்.

இ.சிப் : அண்ணை நீதான் வயதுக்கு மூத்தனி. நல்ல காரியத்துக்கு நீதான் போறது நல்லது.

மு.சிப் : தம்பி ஆளை ஆள் காட்டாமல் இரண்டுபேரும் போவம்.

இ.சிப் : அண்ணா உள்ளே போன எஜமான் இன்னும் வந்துசேரவில்லை.

மு.சிப் : ஓமடா தம்பி ஒருவேளை அழகவல்லிக்கு சித்திரம் வரைகிறாரோ தெரியவில்லை................

இ.சிப் : அண்ண ஒருக்கால் எட்டிப்பார் ஐயா என்ன செய்கின்றார் என்று. (எட்டிப்பார்க்கிறார்கள்)

மு.சிப் : தம்பி டேய் எஜமான் ஏதோ பெரிய சாமானாகக் கொண்டுவருகிறார்.

இ.சிப் : நீ சொன்னமாதிரி ஒரு பெட்டகம் கொண்டு வருகிறார்.

அந்தி : தூதுவர்களே என்ன யோசிக்கிறீர்கள். இதோ இந்தப் பெட்டகத்துக்குள் நிறைய தங்க நகைகளும் பொன் பொருள் முத்துக்களும் இருக்கின்றன.

மு.சிப் : எஜமான் தம்பி பயப்படுகின்றான். நான்மட்டும் தனியாகப் போய் வாறன். முழுவதையும் எனக்கே தந்துவிடுங்கள். நான் பார்த்து தம்பிக்கும் ஒண்டிரண்டைக் கொடுக்கின்றேன்.

அந்தி : முட்டாள்களே! இவைகளெல்லாம் உங்களுக்கல்லடா. அழகவல்லிக்கு நான் தரும் காதற்பரிசுகள். இதை ஏற்றுக் கொள்ளும்படி கூறிவிடுங்கள்.

இ.சிப் : அண்ண அப்ப நான் நிற்கின்றன். நீ மட்டும் போட்டுவாவன்.

அந்தி : இரண்டுபேரும் போய் வெற்றியுடன் வாருங்கள். காரியம் வென்றால் இதைவிட உங்களுக்கு அதிகமாகத் தருகின்றேன்.

மு.சிப் : எஜமான் நல்ல முடிவுடன் வருகின்றோம். தம்பி பெட்டகத்தை தூக்கு (இருவரும் பெட்டகத்தை தூக்கிக் கொண்டு போதல்)

அந்தி : அழகவல்லி என் காதல் கரும்பே! கவிஞர்களின் கற்பனைக் கெட்டாத தத்துவமே! என்னை உன்பித்தாக்கிய விருந்தே! என் உள்ளத்தில் பதிந்துவிட்ட சொத்தே! இரணவீரசிங்கன் எனக்கழித்த அருமருந்தே! நீ இன்றி எனக்கு வாழ்வில் இன்பம் ஏது. என் காதற் பரிசை ஏற்றுக்கொண்டு என் துன்பத்தை நீக்கி இன்பவெள்ளத்தில் மிதக்க சீக்கிரம் வந்தடைவாய் கண்ணே.

(உள்ளே செல்லுதல்)

**- திரை —**

******



அந்திராசி அழகவல்லிமேல் மையல் கொண்டு அவளுடைய சம்மதத்தைப் பெறுவதற்கு, தமது தூதுவர்களிடம் விலையுயர்ந்த ஆபரணங்களையும், மற்றும் விலையுயர்ந்த பொருட்களையும் கொடுத்தனுப்ப, அவர்கள் சுமந்துசெல்லும் காட்சி.

# அங்கம் ~ 8

## *பூதத்தம்பியின் வீடு*

பாத்திரங்கள் : பூதத்தம்பி, அழகவல்லி, சிப்பாய்கள் இருவர்.

பாட்டு

இராகம் : ஹிந்தோளம் தாளம் : ஆதி

பல்லவி

பூதத் : சங்கீதமே சாம் ராஜ்யமே
சரச மோகன நவரசமே (சங்கீத)

அனுபல்லவி

பூதத் : குழலில் பிறந்தது நாதம்
குரலில் பிறந்தது கீதம்
நாத கீதமே சங்கீதம்
நானே வீணையின் நாதம் (சங்கீத)

சரணம்

அழக : கீதத்தில் பிறந்ததே இன்பரசம்
இராகத்தின் முழுமையே ஏழுஸ்வரம்
பூதத் : இராக பாவமே நவரசம்
தாள லயமே மனோலயம் (சங்கீத)

வேறு

அழகவ : கண்ணனின் குழலில் ஹிந்தோளம்
கன்னியர் மயங்கும் இன்பலோகம்
மந்தையை மேய்க்கும் மா்மலோகம்
விந்தையாய் இயங்கும் சொர்க்கலோகம் (சங்கீத)

அழக : அத்தான் இசைக்கு எத்தனை எத்தனை வல்லமையுள்ளது. உங்கள் இசையுடன் என்குரலும் இணைய நான் பாக்கியசாலிதான்.

பூதத் : என் இசையுடன் உன்குரல்மட்டுமா இணைகின்றன? என் இதயத்திலும் நீ இணைந்தல்லவா இருக்கின்றாய். நான் கற்ற அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கிலும் இன்பப் பொக்கிசம்தான் கண்ணே, அன்பே பேரழகி அழகவல்லி ........................

அழக : அத்தான் தேன் சொட்டும் இன்பகீதமே தங்கள் கீதம். எனது இதய-கீதத்தை மீட்டிவிட்ட பேரரசே இந்த ஒரே ஒரு நிமிஷம் நான் அனுபவித்த பேரின்பம் வாழ்நாள் முழுவதும் முத்திரை பதித்த முத்தமாகிவிட்டது.

பூதத் : என் பத்தரை மாற்றுத்தங்கமே நீ என்ன குறைவா? நான் பாடும் போது நீ சேர்ந்து பாடினாயே! என்னகானம் ........................ என்னகானம். சரி கடமை என்னை அழைக்கின்றது நான் சென்று வரட்டுமா கண்ணே.

அழக : சென்று வாருங்கள்
(பூதத்தம்பி வெளியே செல்லுதல், அந்திராசியின் தூதுவர்கள் சிப்பாய்கள் அழகவல்லியை சந்திக்க வருதல்)

இ.சிப் : அண்ணை அந்திராசியார் சொன்னமாதிரி பூதத்தம்பியார் வீட்டுக்கு வந்தாச்சு. அதுசரி கெதியாக வந்திட்டோம். நீ வந்த பாதை எனக்குப் புதிசாக இருக்குது.

மு.சிப் : பட்டணம் விட்டு இப்போ செட்டித்தெருவழி வந்து, சோனியர் வீதிவந்து, நல்லூரிலுள்ள பூதத்தம்பி ஐயா வீட்டுக்கு வந்துள்ளோம்.

இ.சிப் : எங்கயண்ண அழகவல்லி அம்மாவைக் காணவில்லை.

மு.சிப் : தம்பி எங்கட அந்திராசிக்கு வேலையில்லையென்னடா? அம்மாவிற்குமா வேலையில்லை. உள்ளுக்கு ஏதும் வீட்டு வேலை செய்துகொண்டிருப்பா. கொஞ்சம் பொறு கூப்பிட்டுப்பார்ப்பம்.
அம்மா.......... அம்மா ..................

இ.சிப் : எங்கை அண்ணை ஒரு சத்தத்தையும் காணல்ல. அந்திராசி ஐயா இந்தப் பெட்டகத்தையும் அதுக்குள் பொன்னும் பொருளும் வைத்து அம்மாட்ட கொடுக்கச் சொன்னாரே, எப்படியண்ணை கொடுப்பது உன்னாணை சொல்லு.

மு.சிப் : அட பெக்கோக கையாலதாண்டா கொடுக்கிறது.

இ.சிப் : கொடுக்கலாமண்ணை. ஆனால்............. கலியாணம் முடிச்ச மனிசியிட்ட என்னண்டு அவரின்ர காதலைப்பற்றி எப்படியண்ணை சொல்லுறது?

மு.சிப் : சத்தம் கேட்குது. அம்மா வாறாபோல இருக்குது. பெட்டகத்தை நீகொடு நான் காதலைப்பற்றிச் சொல்லுறன்.
(அழகவல்லி உள்ளேயிருந்துவரல்)

அழக: யாரப்பா நீங்கள்.

இ.சிப்: நாங்கள் அந்திராசி வீட்டு சிப்பாய்கள்.

அழக : ஆமாம் நீங்கள் ஏன் வந்தீர்கள்.

மு.சிப் : பூதத்தம்பி ஐயா இருக்கிறாரே!

அழக: அவர் எப்பொழுதோ சபைக்குச் சென்று விட்டார். இங்கு அவர் இல்லை.

இ.சிப் : உங்களிடம் தான் வந்தனாங்கள்

அழக : அவரில்லாத வேளையில் என்னிடம் என்னத்திற்கு வந்தீர்கள். என்ன விசயம்.?
(சிப்பாய்கள் முழிபெயர்த்துக்கொண்டும் பயப்பிட்டுக் கொண்டு நிற்றல்)

மு.சிப்: ஒண்டுமில்லையம்மா எங்கட பெரிய மந்திரியார் இருக்கிறாரே! அவர்தான் எங்கட அந்திராசி ஐயா — உங்களிடம் கொடுக்கச் சொன்னார்.

அழக : என்னிடமா அல்லது மந்திரியாரிடமா?

இ.சிப் : பூதத்தம்பி ஐயா வீட்டில்இல்லாத நேரமாய் பார்த்து உங்களிடம் தானம்மா. உங்களுக்குத் தான்.

அழக : எனக்கா ஏன்? எதற்கு?

இ.சிப் : அண்ண சொல்லன் அண்ண.

மு.சிப் : இல்லத்தம்பி உன்னாணை நீதான் சொல்லு.

இ.சிப் : இல்லையண்ண நீதான் சொல்லு

மு.சிப் : அம்மா ....... அந்திராசி ஐயா இங்கே வந்தாராம்; உங்களைக் கண்டாராம்; உங்களிடம் மயங்கிவிட்டாராம். உங்களைக் காதலிக்கிறார் என்று சொல்லி இதை தன்ர காதற் பரிசாகக் கொடுக்கச் சொன்னார்.

அழக : கேவலம் அவரும் ஒரு மந்திரியா? பிறர் மனைவிமேல் காதல் கொள்ளும் துரோகி. செத்த தவக்கையையும், மாடு, மீன் முதலாம் மச்சங்களையும் திண்ட கொழுப்பால் திணரும் வஞ்சகன். தன் சாதிக்கேற்ற புத்தியைக் காட்டிவிட்டான். மந்திரிக்கேற்ற தூதுவர்கள். உங்களுக்கே வெட்கமில்லையா இப்படியெல்லாம் தூதுவர.

மு.சிப்: அம்மா! அவருடைய உப்பைத்திண்டு வளர்ந்த நாங்கள், அவர் எதைச் சொன்னாலும் செய்யத்தான் வேணும். எங்களை ஒண்டும் செய்திடாதேயுங்க அம்மா.

அழக : என்னடா அது (பொட்டகத்தைப் பார்த்துக்கேட்டல்)
(பொட்டகத்தைத் திறந்து சிப்பாய்கள் காட்டுதல்)

அழக: அப்படியா விசயம் கொஞ்சம் பொறுங்கள் வருகின்றேன்.
(அழகவல்லி உள்ளே சென்று விளக்குமாறும், செருப்பும் கொண்டுவருதல்)

மு.சிப் : அங்கபாரடா................. விளக்குமாறடா..................... (நடுங்குதல்)

இ.சிப் : அண்ண அண்ண விளக்குமாறுமட்டுமல்ல செருப்பும் வருகுது அண்ண. (நடுங்குதல்)

அழக : (செருப்பாலும், விளக்குமாறாலும் தூதுவர்களுக்கு அடித்துவிட்டு, பொட்டகத்துக்குள் விளக்குமாறும், செருப்பும் வைத்து மூடுதல்)
முட்டாள்களே! காதற்பரிசு கொண்டுவந்தீர்கள். நான்தந்த இந்த பரிசையும் கொண்டு போய் காட்டுங்கள். உங்கள் மந்திரிக்கு, தவக்கை தின்னிக்கு. ஓடுங்கடா இந்தப் பொட்டகத்துடன் ஓடுங்கள். இந்த பக்கமும் பாராமலே ஓடுங்கள்.

— திரை —

*****

# அங்கம் - 9

அந்திராசியின் மாளிகை

பாத்திரங்கள் : அந்திராசி, இரண்டுசிப்பாய்கள்

(அந்திராசி அங்குமிங்குமாக நடைபோட்டு தூதுவர்களை எதிர்ார்த்துக் கொண்டு நிற்கிறான்)

மனச்சாட்சி: நில் ....... ஆ ....... சிரிப்பு ....... நில்......... ஆ .........சிரிப்பு
நில் ....... ஆ ....... சிரிப்பு ....... நில்......... ஆ .........சிரிப்பு
(அந்திராசி சுற்றிச் சுற்றிச் சுழன்று பார்க்கிறான்)

அந்திராசி : யாரவன் கோழை; மறைந்து நின்று கொண்டு என்னை நிற்கச் சொல்வது.

மனச் : கோழை என்பது நீயா அல்லது நானா?

அந்தி : நீ கோழை என்பதனால்தானே மறைந்து கொக்கரிக்கின்றாய்.

மனச் : முட்டாள்! வஞ்சியை உன் மஞ்சத்துக்கு அழைத்துவிட்டடாய். பஞ்சனையென்றெண்ணி. வஞ்சகனாம் உன் உள்ளத்தில் மனச்சாட்சி நான், இடங்கொள்வேனா? அதனாற்தான் மறைந்து கொண்டேன். மறைந்து அறிவுறுத்துகின்றேன். என் அறிவு உனக்குக் கொக்கரிப்பது போன்றா தோன்றுகிறது. கொக்கரிப்பேன்; தவறினால் உன்னைக் கொலையும் செய்வேன்.

அந்திரா: என் மனச்சாட்சியா என்னைக் கொலை செய்யப்போறது. கொலை (சிரிப்பு) கொலை (சிரிப்பு) என்னைக் கொலை செய்ய யாருக்குத்தான் சக்தியுண்டு. மன்னனுக்குண்டா? மாபெரும் தலைவனுக்குண்டா? அல்லது மண்டியிடும் மக்களுக்குத்தான் உண்டா? ஆமாம் என்மீதுள்ள குற்றச்சாட்டு ...............

மனச்: செய்யாத குற்றத்திற்காகவல்ல. நீ செய்த குற்றத்திற்காகத்தான் தண்டனை.

அந்தி: குற்றம், எது குற்றம்? நான் செய்த குற்றம்தான் என்ன?

மனச்: அந்திராசி! எதுவெண்டு கேட்கின்றாய்! நீ செய்த குற்றம் எதுவென்றா கேட்கிறாய்! உன் நண்பனின் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றாய் அவள் அழகவல்லியைக் கண்டாய், கண்டதும் காதல் கொண்டாய் தவறில்லையா?

அந்தி: இதிலும் பார்க்கத் தவறுகள் இடம்பெற்றபொழுது எங்கே போய் இருந்தாய்? என்னை முதன் மந்திரியாக நியமித்த பொழுது, புவிநாயக்க முதலியாரும் அவர் குடும்பங்களும் என்னைச் சாதியில் குறைந்தவன் என்று கூறி

அவமானப்படுத்தினாரே! அப்பொழுது நீ எங்கே போயிருந்தாய்? பரம்பரைப்பதவி என்று கொக்கரிக்கும் இவர்கள் என் பதவிக்கு எப்பொழுதும் எதிரிகள் என்பதை நீ அறிவாயா? நான் விரும்பும் அழகவல்லியை என் மனைவியாக்கிவிட்டால் நானும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுவிடுவேனே, இதை நீ அறிவாயா? இப்பொழுது சொல்..... அழகவல்லியை கண்டது குற்றமா? காதல் கொண்டது குற்றமா? இப்பொழுது அவளில்லாமல் என்னால் வாழ முடியாது..

மனச்: எதுவாக இருந்தாலும் அவள் மாற்றான் மனைவியென்பதை மறந்து விட்டாயா?

அந்தி: மறக்கவில்லை. ஆனால் அவள் மாற்றான் மனைவி என அறிந்தும் என்மனம் அவளை நாடுதென்றால் அது யார் செய்த குற்றம். என்மனத்தின் குற்றமா? அவளை வஞ்சிக்கத்தான் சென்றேன். ஆனால் அவள் அழகுசிலையாய், என் அன்பின் விலையாய், அவள் காட்சி தந்தது அவள் குற்றமா? அல்லது அவள் அழகைக் கண்டு கொண்ட என் கண்களின் குற்றமா?

மனச்: அந்திராசி குற்றம் புரிந்துவிட்டு மற்வைகளைக் குற்றம் காட்டுவது பெருந்தவறு. அவளின் மேல் நீ ஆசை கொண்டால் அதை அடக்க வேண்டியது உன்கடமை. அதை விடுத்துத் தூதுவரை அழைத்து பொன்னும், பொருளும், மணியும் கொடுத்தனுப்பினாயோ, உன் காதலை எடுத்துக்கூற இவற்றையெல்லாம் பூதனின் மனைவி ஏற்பாள் என்றா, பரிசாக அனுப்பினாய். அவள் பண்பின் இருப்பிடம். நீ ஏமாறப்போகின்றாய். அந்திராசி நீ ஏமாற்றம் அடையத்தான் போகின்றாய். (பேய்ச்சிரிப்பு)

அந்தி: போதும்! போதும்! நானா ஏமாறப் போகின்றேன். எனக்கு முழுமாறான மனச்சாட்சியே மறைந்துபோ!
(அந்திராசி களைத்துப் போய் நிங்கின்றான். பின்வீட்டுக்குள் செல்லல்)
(தூதுவர்கள் இருவரும் வருதல்)

இ.சிப்: அண்ணே அங்கே பாரண்ணை மந்திரியார் உள்ளே போகிறார். எப்படியண்ணா சொல்வது?

மு.சிப்: தம்பி நான்வாறன் நீ பயப்பிடாமல் முன்னுக்குப் போ.

இ.சிப்: முன்னுக்குப்போகப் பயமாக இருக்கு. ஏன் அண்ண பயப்படாத நீ முன்னுக்போவன்.

மு.சிப்: தம்பி நான் பெரிய மனிசன்பார் சின்னவன் முன்னுக்குப்போக, அவர் ஏதும் செய்தால், பெரிய மனிசன் நான் எல்லாம் கவனிக்கிறன்.

இ.சிப்: கவனிப்பாய், கவனிப்பாய் எனக்கு முன்னுக்கு உதைவிள நீ பின்னால் ஓடுவாய். அப்படித்தானே கவனிக்கப்போறாய்.

மு.சிப்: எடதம்பி இப்படிப்பயந்து சாகிறதிலும் பார்க்க பயமில்லாமல் முன்னுக்குப் போய் செத்தாலும் பறுவாயில்லை,

இ.சிப்: வாங்கிறதை இரண்டுபேரும் வாங்குவம். இரண்டுபேரும் முன்னுக்குப் போவம்,

மு.சிப்: தம்பிடேய் உண்ணானை மந்தியாரைக் கூப்பிடு.

இ.சிப்: அண்ணை கூப்பிட வாய்விடாதாமண்ணை என்ர அண்ணையில்ல நீ கூப்பிடு. உனக்குத் தானே பெரிய அகண்ட வாய்.

மு.சிப்: பிரபு! பிரபு! (பயத்துடன்)

இ.சிப்: எஜமான்! எஜமான்!

(அந்திராசி வருகை)

அந்தி: வந்துவிட்டீர்களா! (மிகவும் ஆவலுடனும், அவசரமாகவும்) வந்துவிட்டீர்களா! நான் சிந்தைகலங்கி ஏக்கதில் இருந்து விட்டேன். என் அழகவல்லியைக் கண்டீர்களா?

இருவரும் : கண்டோம்.

அந்தி: அவளிடம் என் காதலை எடுத்துரைத்தீர்களா?

இருவரும் : உரைத்தோம்.

அந்தி: சபாஸ்........ பரிசைக் கொடுத்து பக்குவமாக நடந்து கொண்டீர்களா?

இருவரும் : கொடுத்தோம்.

அந்தி: சம்மதித்தாளா? சன்மானங்களை ஏற்றுக் கொண்டாளா?

மு.சிப்: அழகவல்லி உங்களுக்கு .........................

அந்தி: உடனே தந்தாளா? அழகவல்லி நீயும் என்மேல் ஆசை கொண்டுதான் இருந்திருக்கிறாய்.

இ.சிப்: அவள் உங்களுக்குப் பரிசு தந்திருக்கிறாள்.

அந்தி: எனக்கும் பரிசு கொடுத்தாளா? இப்பொழுது தான் மனம் குளிர்கிறது. என்னை அவள் பார்த்த பார்வையிலிருந்து அன்றே கணித்துக்கொண்டேன். அந்த அன்புப் பரிசை எடுங்கள்.

முசிப்: பிரபு வேண்டாம், வேண்டாம் பாக்க வேண்டாம்.

அந்தி: டேய் ஏனடா வேண்டாமென்கிறாய் எனக்குத் தந்த பரிசை நான் பார்க்கக் கூடாதா?

முசிப்: தம்பி நீ தான் திறவடா.
(முதல்சிப்பாய் பெட்டகத்தை திறத்தலும், அந்திராசி ஆவேசத்துடன் கோபப்படலும்)

அந்தி: என்னடா இது?

இ.சிப்: செருப்பு.

அந்தி: என்னடா அது?

இ.சிப்: விளக்குமாறு (சிரிக்கிறான்) ஏன் எஜமான் இது கூடவாத் தெரியவில்லை.

அந்தி: நான் தந்த பெட்டிக்குள் இது எப்படியாடா வந்தது?

இ.சிப்: எஜமான், உண்மையைச் சொல்லிவிடுகிறம். பெட்டியைக் கொடுத்தோம். விடயத்தையும் சொன்னோம் செருப்பாலும், விளக்குமாறாலும் தூதுவராகப் போனதற்கு அடித்து அனுப்பிவைத்தாள் பிரபு.

அந்தி: அப்படியா?

முசிப்: நீங்கள் அனுப்பிய பரிசை அந்த அழகவல்லி அம்மா எடுக்காமலே, செருப்பையும் விளக்குமாறையும் வைத்து எங்களை எடுத்துக் கொண்டு ஓடச் சொன்னா.

இ.சிப்: அதுமட்டுமா?

அந்தி: வேறு என்ன செய்தாள்?

இ.சிப்: உங்களை தவக்கை தின்னி என்றார் அம்மா.

அந்தி: தவக்கை தின்னி என்றாளா?,

முசிப்: சாதிப்புத்தியைக் காட்டிவிட்டான் என்றார் அம்மா.

அந்தி: சாதியை இழுத்தாளா?

இ.சிப்: ஏழை என்றார் அம்மா.

அந்தி: ஏழையென்றாளா?

முசிப: மீன்திண்டு கொழுப்பேறிய நஞ்சன் என்றார் அம்மா.

## விருத்தம்

அட்டகிரியசையினும் துட்டர்படை சருவினும்
அமரரோடு அசுரர் வரினும்
அண்ட முகடிடியினும் கொண்டலிடி பொழியினும்
அந்திராசி அசையவருமோ
கெட்டியிது கெட்டியிது தொக்கிலே விடுவனோ
கேட்டு மவளறியவிலையோ!
கெறுவதைடக்கியவள் உறுதி நிலை குலையவும்
கேடுவினை செய்குவித்தே
பொட்டெனச் சிறையதனில் இட்டவன் கலங்கிடப்
புவியுளோர் மிக நகைக்கப்
பூதனுயிர் மாழவும் சேதமது பண்ணுவேன்
புங்கவன் தன்னாணை நீர்
திட்டமொடு முத்திரை யெடுத்துமது மார்பினில் சேரவே தானணிந்து
சென்றிடுந் தீவிரங்கன்றிடாதும் மனம் திண்ணமிது திண்ணமிதுவே.

(பூதத்தம்பி விலாசம்)

அந்தி: சாதியை இழுத்துப் பேசிய இவளை சும்மாவிடக் கூடாது. அழகவல்லி, அழகுக்கேற்ற பெயர் இருந்தும், பெயருக்கேற்ற ஆணவம் உன்னிடம் சேர்ந்திருக்கிறது என்று உணர்த்திவிட்டாயே! உன்கணவனும் என்னைப் போன்ற மந்திரியென்ற மமதையா? அல்லது உன் கணவனுக்குக் கைலாயபிள்ளையின் உதவியுண்டென்ற கர்வமா? அல்லது உன் கணவனுக்குத் தளபதி சின்னலாந்தாசின் பக்கபலமுண்டென்ற தலை வீக்கமா? சீ...... சீ...... இனியும் உன்னிடம் உறவாட நினைக்கலாமா? நீ என்னை அவமானப்படுத்திவிட்டாய். உன் உடல், புழுக்கள் நிறைந்த புண்ணைக் கண்ணுக்குத் தெரிகிறது. நீயும் வேண்டாம். உன் உடலும் வேண்டாம். இன்று முதல் நீ என் எதிரி. அழகவல்லி பார்! நன்றாகப் பார்! நாளை தொடக்கம் நான் நடத்தும் நாடகத்தில் நீயும், உன் கணவனும் தப்பிக்கவே முடியாது. தப்பிக்கவே முடியாது (பயங்கரச்சிரிப்பு)

- திரை -

# அங்கம் ~ 10

*கோட்டை இராசவாசல்*

பாத்திரங்கள்: கொமுசாறிவன்கோயன், பூதத்தம்பி, அந்திராசி

வன்கோயன்: அமைச்சர்களே! கைதிகளைப் பாதுகாக்க கடலுக்குள்ளே கோட்டை ஒன்று கட்ட வேண்டுமென்று கொழும்பிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அதுவும் ஆறுநாளைக்குள் முடியவேண்டும். பொருத்தமான துறை எதுவென்று சொல்லுங்கள்.

பூதத்தம்பி: ஆம் கொழும்புத்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை

அந்தி: இல்லை, இல்லை, ஆறுநாட்களுக்குள் கட்டிமுடிக்க வேணடுமானால் அதற்குப் பொருத்தமான துறை ஊர்காவற்றுறையே.

வன்கோ: நல்லது உடனே வேலையை ஆரம்பிக்க வேண்டும். கச்சாய் துறையின் கவறுகள் நாளையதினம் வந்து சேரும்படி செய்தியனுப்புங்கள்.

அந்தி: நாமிருவரும் பொறுப்பேற்கின்றோம்.

வன்கோ: நல்லது

அந்தி: பூதரே! மிகவேகமாக நாம் இயங்கவேண்டு மல்லவா? கச்சாய் துறைக்கு செய்தி அனுப்பவேண்டும். கடிதத்தைநான் எழுதுகின்றேன். உமது கையொப்பத்தை மட்டும் வைத்துவிட்டு கோட்டைக்குச் சென்று படகுகளைத் தயார் செய்யுங்கள் ..........
(வெறும் கடதாசியில் பூதத்தம்பி கையொப்பமிடல்)

அந்தி: நன்றி பூதத்தம்பி நீர் ஆயத்தங்களைச் செய்யவும்.
(பூதத்தம்பி செல்கிறான்)

அந்தி: நான்போட்ட திட்டத்தில் முதல்கட்டம் சரியாக நிறைவேறிவிட்டது. சிக்கிக் கொண்டான் பூதத்தம்பி. வெற்றுக் கடுதாசியில் ஒல்லாந்தருக்கெதிராக சூழ்ச்சி செய்வதாக ஒரு கடிதம் வரையவேண்டும். அதைப் பார்த்து கொமுசாறி கோபப்படவேண்டும். அதனால் பூதன் தூக்கிலிடப்படவேண்டும். என்னை அவமானப் படுத்திய பூதன் மனைவி அழகவல்லி பொட்டு இழந்து, பூவிழந்து தலைகுனிய வேண்டும். சாதித்திமிர் பிடித்த பூதன் குடும்பத்தை சூழ்ச்சியால் நானும் அழிக்கின்றேன். இந்த அந்திராசி போட்ட திட்டம் என்றும் பலிக்காமல் போகாது.

**- திரை —**

# அங்கம் ~ 11

*இராசவாசல் கோட்டை*

**பாத்திரங்கள்:** கொமுசாறி வன்கோயன், ஜாக்கோப்வன்றீய், அந்திராசி, பூதத்தம்பி, அழகவல்லி கஸ்பார்பிகாறோ, றிக்கோ, திசவீரசிங்கன், சேவகர்.

(கொமுசாறிவன்கோயனும், பதில் கொமாண்டர் ஜாக்கோப்வன்றீய், அந்திராசி சபையில் இருக்கிறார்கள்)

**வன்கோ:** என் அன்பு பிரஜைகளே! அறிவிற் பெரியோர்களே! மந்திரி பிரதானி முதலானோர்களே! நான் வெள்ளைக்காரனாயிருந்தும், யாழ்ப்பாணப் பிரதேச கொமுசாறி ஆக்கப்பட்டேன். இப்பிராந்தியத்தில் வாழும் உங்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் வகையிலும், தமிழ்மொழியின் ஆழத்தை அளந்து கொள்ளும் வகையிலும், உரையாடும் மொழியாக உணர்ந்து கொள்ளும் வகையிலும், தமிழ் மொழியை யவ்னா பண்டிதர்களிடம் கற்றேன். அம்மொழியில் நன்றாகப் பேசக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இன்று இந்த அவசரக்கூட்டம் ஏன்? எதற்காக என்று உங்களுக்குத் தெரியும். சரித்திரமே காணாத, நாடே அறியாத சதி, சூதும், வாதும் தெியாத எனக்கெதிராக சூழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. சூழ்சியில் ஈடுபட்ட கைதிகளில் முதல் நான்கு எதிரிகளையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துங்கள்.

(கஸ்பார் பிகாறோ, றிக்கோ, திசைவீரசிங்கன்,, பூதத்தம்பி ஆகியோரை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தல்)

**வன்கோ:** பதில்கமாண்டர் ஜாக்கோப் வன்றீய், அவர்களே ஒவ்வொரு குற்றவாளிகளின் குற்றப்பத்திரிகையையும் படியுங்கள்.

**வன்றீய்:** யாழ்ப்பாணக் கோட்டையில் ஒல்லாந்தரைக் கொன்று கோட்டையைக் கைப்பற்றிச் சதிசெய்த குற்றவாளிகள் இவர்களாவர். டச்சுக்கம்பனியின் சேவையிலிருந்த "டொன்நூயிஸ்" இந்தச் சதியின் மூலகர்ததா. இவன் உண்மையில் டொன்லூயிஸ் அல்லன். போத்துக்கிச வைஸ் கமாண்டராக் இருந்த கஸ்பர் பிகாறோ என்பவனாவன். இவன் பத்தேவியாவுக்கு சாகும்வரை சிறைவைக்க அனுப்பப்பட்டவன். தப்பித்துவந்து எங்கள் கோட்டைக்குள் கள்ளமாகப் புகுந்து சதித்திட்டமிட்டவன்.

**வன்கோ:** பிகாறோ கடசியாக ஏதும் கூறவிரும்புகிறாயா?

**பிகாறோ:** ஒன்றுள்ளது. என்னை இந்நிலைக்கு உருவாக்கிய பாதகன் வன்கோயனுடன் நான் சண்டை செய்து அவனை அழித்துவிட்டுச் சாகவேண்டும்.

வன்கோ: (பெரிதாகச் சிரித்துவிட்டு) இரும்புக்கூட்டுக்குள் நின்று கொண்டு வீரமா? பேசுகிறாய் பைத்தியக்காரா? என்னுடன் நேருக்குநேர் சண்டை செய்ய உனக்கு என்ன தகுதியிருக்கிறது? கேவலம், டச்சுக்கம்பனியின் அடிமை நீ. (வன்கோவன் றிக்கோவைப் பார்த்தான்)

வன்றீய்: அடுத்த சதிக்காரன் போத்துக்கீச றிக்கோ. இவன் கடவுளுக்கு மாறான பயங்கரச்சதியில் ஈடுபட்டவன். டச்சுக்கம்பனியின் சேவையிலுள்ளவன். முதலாம் எதிரியும், இரண்டாம் எதிரியும் சாட்டப்பட்டிருக்கும் பத்துப்பேருடன் கூட்டாகச் சேர்ந்து யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றவும், அக்கோட்டையிலிருந்த ஒல்லாந்தர் அனைவரையும் கொலை செய்யவும் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாக நிரூபிக்கப் பட்டிருக்கிறது. அதன் விளைவாகப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த இருபது ஒல்லாந்தர்கள் பலியானார்கள். (வன்கோயன் றிக்கோவை ஆத்திரத்துடன் பார்த்தல்)

வன்றீய்: கோட்டைக்குள் பயங்கரச்சதி நிகழ்த்தத்திட்டமிடப்பட்ட அதே வேளையில், கோட்டைக்கு வெளியே எமது சாம்ராச்சியத்தைக் கவிழ்க்க இருபெரும் சுதேசிகள் முயன்றிருக்கிறார்களென சந்தேகிக்கப்படுகின்றனர். அதில் ஒருவனான முன்னாள் தென்மராட்சி முதலியார் திசவீரசிங்கள் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டுள்ளான். இவனுக்கும் பூதத்தம்பிக்கும் தொடர்பிருந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

வன்கோ: ஓ....... முன்னாள் வன்னிமை! பாவம். உன் கதை மிகச் சோகமானது. திசவீரங்கா! நீ பிறக்கும் போதே மரணதண்டனை உனக்கு நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. அதனை அடையச் செய்த முயற்சிகள் இன்றுடன் நிறைவேறிவிடும். எதாவது சொல்லப் போகிறாயா?

திசவீர: பகைவனை என்மண்ணிலிருந்து துரத்த இன்னொரு பகைவனின் உதவியை நாடக்கூடாது என்ற உண்மை எனக்கு இப்பொழுது புரிந்தது. இன்று வெற்றி உங்களுடையதாக இருக்கலாம். ஆனால் இந்த மண்ணின் சுதந்திர வேட்கையை எவராலும் அழித்துவிட முடியாது. வன்கோயா நீ புத்திசாலி. நான் இந்தமண்ணின் மகன். உன்னுடன் போராடி என் பகைவனை அழித்து விட்டு அழிய.

வன்கே : (வன்கோயன் சிரிப்பு) இது நீதிமன்றம். போராட்டக்களமன்று. பைத்தியக்காரா?

பூதத்: துரை அவர்களே! எனக்கு எதுவும் தெரியாது. இந்தச் சதியில் நான் எவ்விதத்திலும் பங்கு கொள்ளவில்லை. தீரவிசாரித்து நீதிவழங்க வேண்டும்.

வன்கோ: பூதத்தம்பி அவர்களே! இப்பொழுது மந்திரியல்ல. ஓர் சாதாரணப் பிரஜை. ஆகவே முதன் மந்திரியாரே (அந்தராசியைப்பார்த்து) நீரே விளங்குவீராக.

வன்கோ: சபையோர்களே! இந்தப்பயங்கரவாதிகளின் இராசதுரோகக் குற்றச் சாட்டுக்கள் தெளிவாக நீரூபிக்கப்பட்டுவிட்டன. இவர்கள் கடும் தண்டனைக்குரியவர்கள் கோட்டையில் படுகொலைகள் புரிந்த பிகாறோவும், றிக்கோவும், கோட்டைக்கு வெளியில் பெரும் சதிசெய்த சுதேசி, திசைவீரசிங்கனாகவும் பெரும் தண்டனைக்குரியவர்கள். இவர்கள் மூவரும் தண்டனை வழங்கும் குற்றச் சட்டத்தில் பொருத்தப்பட்டு. முதலில் கோடரியால் தலை துண்டிக்கப்படுவார்கள். பின்னர் அவர்களின் மார்புகள் பிளக்கப்பட்டு இருதயங்கள் வெளியில் எடுக்கப்பட்டு அவர்களின் நம்பிக்கைத் துரோக முகங்கள் வைக்கப்படும். தலைகள் தடிகளில் குற்றி, சந்தை கூடும் இடங்களில் நட்டுவையுங்கள். ஏனையோர் பத்துப்பேரும் சாகும்வரை தூக்கிலிடப்படுவார்கள். இவர்களின் சடலங்களை மரங்களில் தொங்கவிட்டுப் பறவைகளுக்கு இரையாக்குங்கள். இன்று சூரிய அஸ்தமனத்திற்குள் கோட்டைக்குள் நிறைவேற்றப்படும். இது எனது தீர்ப்பாகும்.

வன்றிய்: யாரங்கே! இவர்களைக் கொண்டு செல்லுங்கள்.
(பூதத்தம்பி தவிர ஏனைய மூவரையும் கொண்டு செல்லல்)

வன்கோ: முதன் மந்திரியாரே பூதத்தம்பியின் விசாரனையை ஆரம்பியுங்கள்.

அந்தி: பூத்துப் பூரித்துப் புனிதத் தமிழ்பேசும் பூதத்தம்பியாரே வருக! வருக! சீறிச் சினந்து சிங்கத்தை போல கர்ச்சிக்காது அவையடக்கத்துடன் உதவி அமைச்சர் என்பதை மறந்து கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் தரவும்.

பூதத்: சிங்கம் சாவிலும் கர்ச்சித்துக் கொண்டேயிருப்பது இயற்கை. ஆமாம் என்னைக் கைதுசெய்ததின் நோக்கம்.

அந்தி: நோக்கமா கேட்கின்றீர்? நெறிதவறிவிட்டு..........

பூதத்: நான் மாற்றான் மனைவிமேல் ஆசைப்பட்டேனா! அலலது பொன் கொடுத்து பெண் ஆசைதீர்க்க முற்பட்டேனா! என்ன நெறிதவறிவிட்டேன்.

அந்தி: இது நீதிமன்றம் கேட்பதற்கு ஏற்ற பதிலைக் கூறும். இதிலிடப்பட்ட கையொப்பம் உன்னுடையது தானா?

பூதத்: கையொப்பம் என்னுடையதுதான். ஆனால் வாசகம் என்னுடையதல்ல.

அந்தி: வினோதமாக இருக்கிறது உன்பதில். சபையோர்களே! இக்கடிதத்தைப் பாருங்கள் கையொப்பத்தில் இடப்பட்ட எழுத்திற்கும் வாசகத்தில் எழுதப்பட்ட எழுத்துக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டாவென்று (சபையோருக்குக் காட்டுதல்)

பூதத்: நான் எழுதவுமில்லை. இன்னொருவர் எனக்காக எழுதவுமில்லை என்றுதான் மீண்டும் கூறுகின்றேன்.

அந்தி: பூதத்தம்பி மீண்டும் இதை நன்றாகப் பார்த்துக் கூறும். வாசகத்துக்கும் கையொப்பத்துக்கும் உள்ள எழுத்தில் வேற்றுமையுண்டா?

பூதத்: இல்லை. இரண்டும் ஒரே மாதிரித்தான் இருக்கின்றது. ஆனால் .....

அந்தி: என்ன ஆனால்

பூதத்: சபையோர்களே! இதில் ஏதோ சூது இருக்கின்றது ஆமாம். இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது. அன்றொருநாள், ஊர்காவற்றுறையில் கடலுக்குள் ஒரு கோட்டை கட்டவேண்டும் என்றும் அதற்கு இதே மந்திரியாரும் நானும் சேர்ந்து செய்வதாக ஒப்புக்கொடுக்க ஓர் கடிதம் எழுதவேண்டும் என்றார். நானும் சம்மதித்தேன். கையொப்பம்மட்டும் இட்டாற்போதும் என்றார். நானும் மறுப்பில்லாமலேயே கையெழுத்திட்டேன். இப்பொழுது அதைப் பயன்படுத்தியிருக்கிறார். இதே மந்திரியார் வாசகமும் இவருடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும்.

அந்தி: பூதத்தம்பி என்ன கதையே மாறுகிறது.

பூதத்: கதை மாறவில்லை அந்திராசி நீதான் மாறிவிட்டாய்.

அந்தி: இதுசபை பூதத்தம்பி இதுசபை நட்புக்கிடமில்லை. நயமாகப் பேசுவதற்கிடமில்லை. நல்லபடி சட்டத்துக்குத்தான் இங்கே இடமுண்டு. ஆகவே மந்திரியார் என்றழை.

பூதத்: சட்டம், யார் யாருக்கு வகுத்த சட்டம். சேருவது சேர்ந்து கெடுப்பது முடியாவிட்டால் சேர்ந்தோர் எல்லோரையும் மாட்டுவதா சட்டம்.

அந்தி: இப்போது யார் யாரை மாட்டிவிட்டோம். விசாரணை உன்னைப்பற்றியதுதானே நீ தானே பதில் கூற வேண்டியவன்.

பூதத்: என்னைப் பற்றியதா? குற்றச்சாட்டுப் பத்திரத்தையே இன்னும் வாசிக்கவில்லை. அதற்குள் குற்றவாளி என்றோர் சொல். விசாரணைக்கென்றோர் குழு, நன்றாய்யிருக்கிறது உங்கள் சபையின் நீதி.

அந்தி: உன்னைப்பற்றி மட்டும்தான் விசாரணை.

பூதத்: இல்லவேயில்லை விசாரிக்கவேண்டியவர்களில் நானொருவன். சாட்சிக்கு மற்றொருவன் என் நண்பன் சின்னவாந்தஸ். அதைவிடுத்து என்னை மட்டும் குற்றச்சாட்டக்கூடிய மாதிரிக்கு இக்கடிதம் தயாரித்த நீயுமொருவன்.

அந்தி: நானுமொருவனா? நன்றாயிருக்கிறது உன் எதிர்வாதம். விசாரிக்க வேண்டிய என்னையே குற்வாளிக்கூண்டில் நிறுத்தப்பார்க்கின்றாயே!

பூதத்: அந்திராசியாரே! மந்திரியென்ன நீதிபதி யென்றாலும் குற்றம் புரிந்தால் கூண்டில் நிற்கவேண்டியதுதான் தர்மம்.

அந்தி: என்னைக்கூண்டில் நிறுத்தும் அதிகாரம் இங்கு எவருக்குமேயில்லை.

பூதத்: ஏன் நீர் மட்டும் அரசருக்கரசரோ?

அந்தி: அரசர்க்கரசரல்ல நான். ஆனால் இப்பிராந்தியத்துக்கே முதல் அமைச்சராய் நியமிக்கப்பட்டவன் என்பதை மறந்துவிடாதே.

பூதத்: அந்த இறுமாப்பினாற்தானா இப்படியெல்லாம் நாடகம் ஆடுகின்றாய்? சர்வாதிகாரமும் செலுத்துகின்றாய்.

அந்தி: நாடகம் ஆடவில்லை பூதரே! அதிகாரம் செலுத்தவேண்டி ஏற்பட்டால் அதில் நான் சிறிதேனும் தயங்கமாட்டேன். ஆமாம் சின்னலாந்தோஸை விளங்க வேண்டும் என்று கூறினாயே. அப்படியோர் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் உடனடியாக அதுவும் கவனிக்கப்படும். நீ சொல்லியல்ல. (சபையோர்களை நோக்கி) சபையோர்களே குற்றச்சாட்டுப்பத்திரத்தை வாசிக்காமல் விளக்கம் நடக்கிறதென்று பூதத்தம்பி கேட்டார். அது எங்கள் மாட்சிமை தங்கிய கொமுசாறிக்குத் தெரியும். இப்பொழுது அவருடைய அனுமதியுடன் வாசிக்கின்றேன்.

மாட்சிமை தங்கிய,
போத்துக்கீசத் தளபதி,

பிரபு,

யாழ்ப்பாணத்தில் இன்று ஆட்சி செய்து கொண்டிருக்கும் கொமுசாறி முதல் மந்திரியார் அந்திராசி போன்றவர்கள் இருக்கும் வரைக்கும் உங்கள் ஆட்சியை செலுத்தி ஏகாதிபத்திய ஆட்சியை நிறுவும் சந்தர்ப்பம் இருக்கவே இருக்கிறது. இங்கே நானும், இரண்டாவது மந்திரி பதவியில் இருக்கும் பொழுது யாழ்ப்பாணப் பிராந்தியத்திற்கு தளபதியாக சின்னலாந்தஸ்சும் இருக்கையில் தங்கள் ஆட்சிக்கு அத்திவாரம் அமைப்பதில் நாங்கள் எதுவித தடையும் இல்லை. இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பையும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த எதுவித தாமதமுமின்றி படையுடன் புறப்பட்டுவரவும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் படைமுழுவதும் தற்பொழுது ஊர்காவல் துறையிலேயே தங்கியிருக்கின்றது.

இங்ஙனம்
தங்கள் நல்லாசியை விரும்பும்,
புவிநாயகர் முதலியார் மகன்,
பூதத்தம்பி,
படைத்தளபதி சின்னலாந்தஸ்.

வன்கோ: பூதத்தம்பி இப்பொழுது இக்கடிதத்திற்கு என்ன சொல்லப் போகின்றாய். உனக்கும் போத்துக்கீசருக்கும் தொடர்பு இருந்ததா? இல்லையா?

பூதத்: இல்லை.

வன்கோ: உன் நண்பன் சின்னலாந்தஸ்சுக்கும் போர்த்துக்கீசருக்கும் தொடர்பிருக்கவில்லையா?

பூதத்: இது அவரிடம் கேட்க வேண்டிய கேள்வி. என்னையல்ல.

வன்கோ. இக்கடிதம் எழுதியது?

பூதத்: நானல்ல.

வன்கோ: இக்கடிதத்தின் கீழ் கையொப்பமிட்டது நீதானே?

பூதத்: ஆமாம் நானேதான்.

வன்கோ: தளபதி சின்னலாந்தசு உன் வீட்டுக்கு ஒரு கிழமைக்கு முன் வந்தது உண்மைதானே?

பூதத்: வீட்டுக்கு பலர் வரலாம் அதைக்கேட்க.........

வன்கோ: அதைக் கேட்க அதிகாரமில்லையென்கிறாயா? பூதனே! இது அரசபை என்பதை மறந்துவிடாதே. முடியை அவமதிப்பது பெரிய குற்றம். நீ நம் முடிக்கு அடிபணிய வேண்டும். பூதத்தம்பி, கேள்விக்குப் பதில் சொல்லு. சின்னலாந்தஸ் வீட்டுக்கு வந்தாரா இல்லையா?

பூதத்: வந்திருந்தார்.

வன்கோ: வந்ததின் நோக்கம் ..............

பூதத்: என்னைக் காண்பதற்கு ..........

வன்கோ: உன்னைக் காணாமல் உன்பாட்டனைக் காணவா வந்திருப்பான். எனது கேள்வி, ஏன் என்பதுதான்.

பூதத்: எங்கள் நட்புத்தான் காரணம்.

வன்கோ: பிறநாட்டவனுக்கும் உனக்கும் அவ்வளவு நெருங்கிய நட்பா?

பூதத்: ஏன் அதற்கும் சட்டமுறுப்பா அரசே? நண்பனாயிருப்பது ஒரு குற்ற மென்றால், மனைவிக்கு கணவன் கணவனாயிருப்பது ஒரு குற்றம், தந்தைக்கு மகன் மகனாயிருப்பது மற்றுமொருகுற்றம் நாட்டுக்கு அரசன் அரசனாயிருப்பது மாபெரும் குற்றம் வெள்ளைக்காரன் கறுப்பனுடைய நாட்டில் புகுந்தது தவிர்க்கமுடியாத குற்றம்.

வன்கோ: வெள்ளைக்காரன் கறுப்பனுடைய நாட்டில் புகுந்தது நட்புக் கொள்ளவும், வியாபாரத்தை வளர்க்கவும்.

பூதத்: இல்லை. நட்பென்ற பெயரால், நம்மவருக்கு நப்பாசை காட்டி, வியாபாரம் என்ற விளம்பரத்தால், நம் நாட்டையே ஏப்பம்விடவே, வெள்ளைக்காரன் கறுப்பனுடைய எமது இலங்கையில் புகுந்த குற்றங்களெல்லாம் துரோகக் குற்றமல்லவா?

வன்கோ: பூதத்தம்பி இது அரசியல். அதைப்பற்றிப் பேசாதே.

பூதத்: ஏன் அருவருப்பாயிருக்கிறதா?

வன்கோ: இங்கே அவையடக்கம் வேண்டும்.

பூதத்: உங்கே வாயடக்கம் வேண்டும்.

வன்கோ: பூதனே! உன்னை ஓர் சாது என்றெண்ணியிருந்தேன்.

பூதத்: நானோர் சாதுதான். எந்தநேரம் அநியாயமாக விலங்கிட்டு என்னை அழைத்தாயோ! அதே நேரம் தொடக்கம் சீறிச் சினக்கும் சிங்க மெனமாறிவிட்டேன். சாது மிரண்டால் விண்ணையும் சாடுவான் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆமாம் மறந்துவிடாதீர்.

வன்கோ: திசவீரசிங்கனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு.

பூதத்: அவனுக்கும் எனக்கும் எந்தத் தொடர்புமில்லை.

வன்கோ: அந்திராசியை விருந்துக்கழைத்த நாளில், உன் வீட்டிலிருந்து திசைவீரசிங்கன் வெளியே வந்தது உண்மைதானே?

பூதத்: உண்மைதான்.

வன்கோ: அப்படியானால் உனக்கும் அவனுக்கும் தொடர்பு இருக்கவில்லை என்கிறாயா?

பூதத்: அன்றுமட்டும் வந்தான். அவனைவரவேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டேன். அதன்பின் எனதுவீட்டிற்கு அவன் வருவதில்லை.

வன்கோ: நீ சொல்வது எல்லாம் பொய். திசவீரசிங்னுடன் தொடர்பு வைத்திருந்தாய் என்பதுதான் உண்மை. திசவீரசிங்கன் கஸ்பார் பிகாறோவுடன் தொடர் வைத்திருந்தான். எல்லோரும் சதித்திட்டம் தீட்டியிருக்கின்றீர்கள். பூதத்தம்பி இராசதுரோகம் செய்துவிட்டாய். நீ இரண்டு குற்றம் செய்துவிட்டாய். போத்துக்கீசருக்கு கடிதம் எழுதி எங்களைக் காட்டிக் கொடுக்கத் திட்டமிட்டாய். மற்றது திசவிரசிங்கனுடன் தொடர்பு கொண்டு சதித்திட்டம் தீட்டியிருக்கிறாய். ஆகவே உன்னைச் சிரச்சேதம் செய்ய கட்டளையிடுகின்றேன்.
(அந்திராசி தவிர ஏனைய அரசசபையினர் உள்ளே செல்லல்)

அந்தி: கொண்டு செல்லுங்கள் இவனைக் கொலை களத்திற்கு சிங்காரத்தமிழ் பேசியவன் அங்கே சின்ன ஓனாய்போல் அடங்கட்டும்.
(இப்பொழுது சபை கலைகிறது. பூதத்தம்பியை ஏவலர்கள் கையில் வைத்திருத்தல்)

பூதத்: இங்கே நடக்கும் வெள்ளைக்காரர்களின் ஆட்சியைப் பயன்படுத்தி அங்கே அங்கம் வகிக்கும் நம்மவரில், நம்மினத்தவரில் சிலர் ஆட்சியினருக்கு தூபம் காட்டி, கைகால்வருடி, பல்லிழித்துப் பக்குவமாக நடக்கிறார்கள். யாவும் எதற்கு? பதவியை கட்டிக்காப்பதற்காக சுயகௌரவத்தையெல்லாம் இழக்கிறார்கள். ஏன்? சின்னச் சின்ன ஆசைதீர்க்கும சுயநலத்தைக் கருதியே. ஆனால் அவர்கட்கு ஏற்பட்ட நப்பாசையால் நசுக்கப்படுபவர்கள் யார்? என்னைப்போன்ற அப்பாவிகள் பலர்தான். நான் மடிந்தாலும், என் ஆவி பல ஆவியாகி பல சுதந்திரபுருஷர்களை உருவாக்கும். இது என் ஆணை.
(சேவகர்கொலைக் களத்திற்கு பூதத்தம்பியை அழைத்துச் செல்கின்றனர். அந்திராசி மேடைக்கு வருதல்)

அந்தி: அழகவல்லி! உன் உடலை வெந்த புண்ணாக அருவருப்படைந்தேன். ஆனால் இன்று என் ஆத்திரம் குறைந்துவிட்டது. நான் போட்டதிட்டம் வெற்றியாக நிறைவேறி விட்டது. நீயும் தனித்துவிட்டாய். இனி அந்திராசியின் மனைவிதானே. நீ எங்கே ஓடப்போகிறாய். யாரிடம் சொல்லப்போகிறாய். என் மடியில் தவளப்போகும் இன்பரசியை ஒருமுறை பார்த்துவிட வேண்டும். அதோ அவளே வருகிறாள்.
(அழகவல்லி தலைவிரித்த கோலத்தில் அந்திராசி முன்வந்து நிற்றல்)

அந்தி: (வேதனை வியப்புடன்) இது என்ன கோலம்.

அழக: கணவன் கைதியானதும் மனைவி வேறு எந்தக் கோலத்திலிருப்பாள். அவர் கைதியானதினால் நான் கண்ணகியானேன். அவர் உங்களால் துரோகியானார். நான் துரொபதையானேன். விசாரணைக்கு இங்கே ஓடோடி வந்தேன். எங்கே அவர்.

அந்தி: விசாரணை முடிந்து விட்டது.

**அழகு:** விசாரணை முடிந்துவிட்டதா? தீர்ப்புக்கூறியுமாகிவிட்டதா? துரோகனே தீர்த்துக் கட்டிவிட்டீர்களா? என்கணவனுக்கு தீராப்பழியை மூட்டிவிட்டீர்களே! (அழுகிறாள்) ......................

**அந்தி:** யாவும் முடிந்து விட்டது.

**அழகு:** என்ன யாவும் முடிந்து விட்டதா?

**அந்தி:** ஆமாம்.

**அழகு:** என்ன தீர்ப்பு.

**அந்தி:** சிரச்சேதம்.

**அழகு:** ஐயோ................ சிரச்சேதமா? சிரச்சேதம் செய்யக்கூடிய அளவுக்கு அவர் செய்த துரோகம் தான் என்ன? காதல் புரிந்தாரா? அல்லது உன்னைப் போன்று காட்டுமிராண்டித்தனமாக நடந்தாரா?

**அந்தி:** என் சாதிப்புத்தி, உன்னை என் மனைவியாக்கிவிட்டால் நானுமே நீயும் ஒரு சாதிதானே. என் ஆசையை இனியாவது தீர்த்துவிடு.

**அழகு:** மூடனே, மதிகெட்டவனே! என்னை யாரென்று இன்னமும் புரியாமலா இருக்கின்றாய். கட்டியகணவன் இறந்துபட்டுக்கிடக்க உன் ஆசைக்கு நான் இரையாவதா?
(பூதனைக் கொண்டு சென்ற ஏவலர்கள் வருதல்)

**சேவகன்:** மந்திரியாரே பூதத்தம்பி ஐயாவை முடித்துவிட்டோம்.

**அழகு:** எனது குங்குமம் அழிந்துவிட்டதா? எனது மாங்கல்யம் அறுந்துவிட்டதா? போய்விட்டீர்களா? இந்த உலகத்தைவிட்டுப் போய்விட்டீர்களா? (அழுதல்)

**அந்தி:** தொலைந்தானா பூதத்தம்பி நல்லதோர் செய்தி. (ஆணவத்துடன் பேய்ச் சிரிப்புடன் உள்ளே செல்லல்)

**அழகு:** அந்திராசி நீயிங்கே இருப்பாயானால், உன்னைப்பிணமாக்கி என் இரத்த வெறியைத் தீர்த்திருப்பேன். அந்திராசி ஒன்றுமட்டும் சொல்லுகின்றேன். இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் என் ஆவி உன்னைக் கொன்றே தீரும். உன்னை ஆனை அடியாதோ? அலியன் அடியாதோ? ஐயோ.............. எனக்கு மயக்கமாக இருக்கிறதே (கையை நெஞ்சில் வைத்துக் கொண்டு மயங்குகிறாள்) ஆ....... அத்தான்....... அத்தான் ... இதோ உங்களிடம் வந்து சேருகின்றேன். எம்மை யாராலும் பிரிக்கமுயாது. சாவிலும் சந்திப்போம்.

**- திரை —**

*****

## துணை ஆதாரங்கள்


1. கடல்கோட்டை நூல் - செங்கை ஆழியான்
2. பூதத்தம்பி விலாசம் - சு.க.கந்தையாப்பிள்ளையால் விவேகாநந்தயந்திரசாலை பதிப்பு – 1924
3. யாழ்ப்பாண வைபவமாலை – யாழ்ப்பாணம் 1958 முதலியார் குல. சபாநாயகம்
4. பூதத்தம்பி நாடகப்பாடல்கள் - சங்கரதாஸ் சுவாமிகள்
5. பூதத்தம்பி வசன நாடகக் கையெழுத்துப்பிரதி – கலாபூசணம் பொலிகண்டி பாலசிங்கம் அவர்களினால் கையளிக்கப்பட்ட எம். மகாதேவனின் பிரதி.
6. யாழ்ப்பாணச் சரித்திரம் : அ . முத்துத்தம்பிப்பிள்ளை – நான்காம் பதிப்பு.
7. பல அறிஞர்களின் ஆலோசனைகள்


***

## பூதத்தம்பி இசைநாடகப்பாடல் இணைப்பு

இந்த நாடகத்தை நெறியாள்கை செய்பவர்கள் தமது கற்பனைக்கும், பார்வையாளர் ரசனைக்கும் ஏற்ப இடைக்கிடை பாடல்களை அமைத்து நாடகத்தைக் கொண்டு செல்வது மேலும் சுவையாக இருக்கும் என்பது எனது எண்ணம்.

அவ்வாறு பாடல்களை இடைக்கிடை சேர்க்கும் போது சில நெறியாளர் சினிமாப்பாடல் இசையமைப்புக்கேற்ப பாடல்களைச் சேர்த்துக் கொள்வார்கள்.

ஆனால் சில நெறியாளர்கள் மரபுரீதியாக இசைநாடகத்தில் உள்ள பாடல்களையே சேர்த்துக் கொள்ள விரும்புவார்கள். ஏனெனில் இப்பாடல்கள் மிகவும் அற்புதமானவை. எனவே பூதத்தம்பி விலாசத்திலுள்ள சிலபாடல்களை இணைத்துள்ளேன்.

**1) (அந்திராசி அழகவல்லியைக் கண்டு மையல் கொண்டு பாடும் பாடல்)**

இராகம்:- அசாவேரி    தாளம் - ஆதி

**பல்லவி**

ஆகா இவளைக் கண்டு ஓகோ மையலேயான்கொண்டு
ஆறுதில்லையே மனமே

**அனுபல்லவி**

ஆகா இவளழகுக் கோகோசரியான் சொல்ல
வாகாா்பதும மின்னம் போபோ நிரல்லவே .................. (ஆகா)

### சரணங்கள்

குயிலோ புகையோ கூந்தல் அயிலோகயலோக கண்கள்
கொவ்வைக்கனியோயிதழ் செல்வித்தனங்குடமோ
ஆ! ஆ! குவிந்த தாமரைமலரோ சிவந்த கோங்கின்மலரோ
குழைந்து வளர்ந்து எழுந்து
கோலவாரினை மீறியே சீறியதாலமெல்லிலையோயவள் தன்வயி - (ஆகா)

காந்தன் மலரோகைகள் மாந்தளிர்தானோ மெய்சொல்
கனியோவ மிர்தோதேனோ பனியோ சீனியோ பாகோ
ஆ! ஆ! கனிந்து மகிழ்ந்து சிறந்து
கண்டு சர்க்கரையோ முகைமுல்லையோ அண்டுபற்களுமாரமதாகுமோ - (ஆகா)

துடியோமின்னலோ நூலோ கொடிய மதனோ இடை
தும்பியோ நடையல்குல் கொம்பிற்தேன் கூடோசில்லோ
ஆ!ஆ! சுவலந்தனிரோடமோ உவரிக்கடலோ குளம்போ
துவண்டு மருண்டு பரந்த
சோதியால நல்வட்டமோ மாமயில் காதல் சேரிவன் சாயலெனத்தகும் - (ஆகா)

(பூதத்தம்பி விலாசத்திலிருந்து)

2. **(அந்திராசியின் சிப்பாய்கள் அழகவல்லியிடம் தூதராகச் சென்ற போது)**

இராகம் - மலையாமி தாளம் - அட

மந்திரியாகிய அந்திராசி தந்த அந்தவுரக்க மதைத் தோழா
மங்கையிடஞ் சென்று இங்கிதமாகவே வாய் மொழி கேட்போமோ

எந்தவிதத்திலுஞ் சுந்தரமாதினைத் தந்திரஞ் செய்வோமே தோழா
என்னதான் செய்வாளோ பொன்னைக் கண்டபோதே யேந்திழையாள் தா

பட்டணம்விட்டு நாம் எட்டி நடந்திப்போ செட்டித்தெரு வந்தோம் அந்த
பாணியால் சீலை நெய் சேணியார் வீதியைப் பார்வைகள் செய்தோமே

மட்டில்லா நல்லூரிலிட்டமாயிப்போது கிட்டியே வந்தோமே எங்கள்
மந்திரியாருடைய விந்தைசேர் வீட்டினின் மாட்சியைக் கண்டோமே

கொல்லைவழியாகக் கள்ளக்கதவினாற் கோதையிடஞ் சென்று நாம்
குற்றம் வராமலே பற்றுதலாகக் கொடுத்திடுவோம் தோழா

எப்படிமோசங்களேந்திழை செய்வாளோ ஏங்குதே என் நெஞ்சம் ஆகில்
என்னை வெளியே விட்டுன்னி நடந்துள்ளே ஏகிடுவாய் நீ தோழா

3. (அந்திராசி கொடுத்தனுப்பிய தூதர்களை விழித்து அழகவல்லி பாடுவது)

கந்தார்த்தம்
என்னையுமதித்திடா மலிக்கொடுநினைவு கொண்டு
தன்னையு மறிந்திடாதப்பிலிக் ...............
பொன்னையே கொடுத்தனுப்பிப் பொது மகளென நினைந்து

பல்லவி
சன்ன செய்தனுப்பினானோ சண்டாளக் .........
சன்னை செய்தனுப்பினானோ

அநுபல்லவி
சன்னைகள் பின்னிய அன்னியனந்திராசி
சென்னியை யரிந்து நான் இந்நிலம் வீழ்த்துவேன் - (சன்)

போக்கிலித்தனமாயென் மேற் பொங்கியமையல் கொண்டு
சாக்கிரத் தோடேயும்மைத் தந்திரஞ்செய்யவிட்ட
ஆக்கத்தின் செருக்குக் கொண்ட அன்னியன் வலைஞனுக்கு - (சன்)

பல்லவி
நாக்குடனே மூக்கரிவிப்பேன் அடகேளடா தூதரே
நாக்குடனே மூக்கரிவிப்பேன்.

அநுபல்லவி
நாக்கதை நாய்கிரை யாக்கியேயவனையும்
தூக்குவித்தேயுயிர் போக்குவிப்பேனே (நாக்)

செத்திடும் தவளையோடு சேல்கயல் முதலாம் மீன்கள்
சூத்திரத்துடனே நின்று கொடுவிலை வீசிப்பற்றுஞ்
சுத்தமில்லாதவஞ்சன் சுறுக்கினிலுமை விடுத்த (நாக்)

பல்லவி
அத்தத்தின் செருக்குத்தானோ அடகேளடா தூதரே
அத்தத்தின் செருக்குத்தானோ

அனுபல்லவி
ஈனமாம் வார்த்தை பேசியென்னிடமுமைவிடுத்த
மானமில்லாத அந்த வலைஞனுமறியவிப்போ
ஊன மாமாறு கொண்டு உங்களை விடுத்திப்போது (அத்த)

பல்லவி
தானவனிடம்விடுப்பேனே அடமூடரேகேடரே
தானவனிடம் விடுப்பேனே

**அனுபல்லவி**

தானவனிடம் விடுப்பேன் மானபங்கம் பண்ணியுங்களை
தந்தவன் னொந்தகம் வெந்துவருந்திட
விந்தை செறிந்திடு சந்து அழுந்திடத் - (தான)
செருக்குடனுமை விடுத்த தப்பிலிக் .............. காண
உருக்க மாயுகந்து நீங்களொப்புடன் கொண்டுவந்த
விருப்பமாமுரக்கத்தோடு மின்னனையாளுந்தாற (தான)

**பல்லவி**

செருப்புடன் விளக்குமாறும் அதிவேகமாகவே
சேரவே கொடுப்பீர்தானே

**அனுபல்லவி**

செருப்புடன் விளக்குமாறுங் கருத்துடனேகட்டித்தாறேன்
சென்றவன் முன்றினில் நின்று புகன்றுநீர்
துன்றியவன் மணங் கன்றிடவேகுவீர் (செரு)

4. **(அந்திராசியிடம் தூதுவர்கள் அழகவல்லி கூறியதைச் கூறுதல்)**

இராகம் - தன்னியாசி தாளம் : ஆதி

**பல்லவி**

வசை சொன்னாளே மாது வசை சொன்னாளே

**அனுபல்லவி**

வசை சொன்னாளும் திசையறியாமலே
வலைகுனென்றான் மிகச்சிலை நுதலாளும் - (வசை)

**சரணங்கள்**

செத்திடுதவளை நத்தை அட்டை தின்னமன்னியனெனவே
அத்தனை கெறுவுடன் கத்தினாள் சிறுக்கியின்
ஆண்மைதனைச் சொல்ல நாணுதேமனமும் - (வசை)

சோட்டுடன் மாறுதனை எடுத்துத் தூருத்தியேயெமையடித்து
நாட்டுளோர் நகைத்திடக் காட்டியே செருப்புடன்
நல்கினன் துடைப்பமும் சொல்லுவதென்னையா (வசை)

மானமழிந்துவிடில் உயிரேன் மயிருக்கோ மந்திரியே
ஈனஞ்செய்தவள் கெறுத் தானடக்காவிடில்
எங்கள் முத்திரைதாறோம் தங்காமலேற்றிடும் - (வசை)

5. (அழகவல்லியால் துரத்தப்பட்ட தூதுவர் சொன்ன முறைப்பாட்டால் ஆத்திரமடைந்த அந்திராசி பாடும்பாட்டு)

இராகம் - சுருட்டி தாளம் - அட

பல்லவி

என்னவசை பேசிவிட்டாளோ அந்ததக்கன்னியவள்
ஏதுவசை பேசிவிட்டாளோ.

அனுபல்லவி

என்னை வசை சொன்னவந்தக் கன்னியவளே கலங்கப்
பின்னிதமில்லாமலே நான் சின்னபின்னமாக்கி வைப்பேன் (என்)

சரணங்கள்

ஏழையென்று தானினைத்தாளோ அந்தமங்கையை நான்
வாளுக்கிரையாக்குவிப்பேனே
இப்படிச் செய்திட்ட பெண்ணைக்கைப்பிடியதாய்ப்பிடித்துச்
செப்பமுடன் நாக்கதனை யிப்பொழுதரிவிப்பேனே ................ (என்)

தவளை தின்னியென்றுஞ் சொன்னாளோ அந்தத்தையலை நான்
பவுள் சுகுலைத் தீனஞ் செய்வேனே
சாற்றரும் வசை கடன்னைத் தூற்றிவைத்த பெண்ணையிப்போ
சீற்றத்துடனே பிடித்து மாற்றருஞ் சிறைவைப்பேனே (என்)

செருப்புமாறனுப்பிவிட்டாளோ அந்தச்சிறுக்கியை நான்
வருத்தவகை தானறியேனோ
செப்புறு பணிவிடையை ஒப்பருமவள் கணவன்
எப்போதுமென் கீழ்ப்புரித லிப்பொழுதறியாள்தானோ (என்)

6. (அந்திராசி அழகவல்லியிடம் தூதுவர்களை அனுப்பி தனது காதலைத் தெரிவித்தபின், பூதத்தம்பியிடன் முறையிட்டபின், இருவருப்பாடும் பாடல்)

இராகம் - காபி தாளம் - திரிசர

பூதத்: ஆசைகண்மணி எந்தன் அன்பே நீயிப்படிச்
சொல்லுவதெப்படி (ஆசை)
மாசில்லாமணியாகிய கோமள
வஞ்சியேயுன் முகம்துஞ்சுவதென்னடி — (ஆசை)

அழக : அன்புநேசனே துயராரிடஞ்சொல்லிநானாறிடுவேனையோ (ஆசை)
வம்பனாகிய அந்திராசி மந்திரி
வலைஞனாலென் மனமலைகுதென்ன செய்வேன் (அன்)

பூதத் : கன்னே அன்னமேயிந்தக்காரியமென்னடி பாரிநீ
சொல்லடி - (கண்)
எண்ணி மன தினிலேங்கியிராதே நீ
யே தாயிருந்தாலும் மாதே நீ சொல்லடி (கண்)

அழக : ஆசையென் மீதுகொண்டந்திராசி பொன்னையனுப்பினான் தூதரிடம்
நீசப் பயலுக்குமாறுஞ் செருப்பும் நான்
காசுடனே கட்டிவேசியனுப்பினேன் (ஆசை)

பூதத் : கன்னலின் மொழி உந்தன் கற்பினுக்கோரழிவற்ப
முமில்லையே (கன்)
பின்னை நீயந்தப்பத்தன் செயலினைப்
பேசவேண்டாம் ராசவால் நான் போய்வாறேன் (கன்)

அழக : மாறுபேசிடேன் ராசவாசல் போய்க் கொண்டந்திராசி- யாமல்மாறு
நீறுபூத்த நெருப்பெனக் கோபத்தை
நெஞ்சுக்குள் வைத்திரும் வஞ்சப்பயலவன்

**7. (பூதத்தம்பியிடம் தந்திரமாக வெற்றுக்கடதாசியில் கையெழுத்தை வாங்கிய அந்திராசி பாடும் பாடல்)**

இராகம் - நாட்டை தாளம் - அட

சிக்கிக்கொண்டானே பூதன் கைக்குள்
சிக்கிக் கொண்டானே

**அனுபல்லவி**

சிக்கிக் கொண்டான் எந்தன் கைக்குள்ளே பூதனும்
சீக்கிரமாகவே தூக்குவிப்பேனே — (சிக்கி)

**சரணங்கள்**

கையொப்பம் வைத்தான் அவனை நான் பொய்யாய் வஞ்சித்தேன்
கடிதமொன்றுண்டாக்கித் திடமுடனவனை நான்
காவலன் தன்னாலே கோபம் பிறப்பிக்க (சிக்கி)

நாட்டைப்பிடிக்க பகைவராம் போட்டுக்கீசருக்கு
நம்பிக்கையாய்ப் பூதத்தம்பி கையெழுத்தாக
நாட்டியே வாசகம் தீட்டுறேன் பாராய் (சிக்கி)

பூதன் மனைவி என்னைமுன் தீது சொன்னானே
பூட்டி விலங்கினை மாட்டியவளை நான்
பூரணமாயச்சிறை தாரணி வைப்பேனே (சிக்கி)

8. (அந்திராசியும் பூதத்தம்பியும் வாதிடல்)

இராகம் - மோகனம் தாளம் - ஆதி

ஏதடா பூதா நீதானிழிமொழிபேசுகின்றாய்
சூதடா செய்தானென்று சொல்லவும் நியாயந்தானா
பாதகஞ் செயநினைந்து பரதேசியானாய் நீயும்

பல்லவி

வாது பேசலாமோ சொல்லடா அட்டடாபூதா
வாது பேசலாமே சொல்லடா

அனுபல்லவி

வாதுகள் பேசிய பாதகாயுனையுமிப்
போதினிலே நானுஞ்சேதமே பண்ணுவேன் (வாது)

இராகம் - தோடி தளம் - அட

கண்ணிகள்

பூத்த: என்னடா நீ மெத்தயிழிவாகப் பேசுறாய்
முன்னை நீ வலைவீசி முதன்மைகொண்டாயோ
அந்தி: கொண்ட முதன்மை தன்னைக்குறித்து நீயறியாயோ
சண்டித்தனமாகச் சாற்றாதே போடா
பூதத் : போடா வாடா என்று புகழ்ச்சியாய்ப் பேசாதே
கேடாகவெனை நீயும் கெடுத்திட்டாய் பாவி
அந்தி : பாவியென்று மெத்தப் பரிகாசம் பண்ணாதே
கூவிய முதிடக் கொலை செய்விப்பேன்
பூதத்: கொலை செய்விப்பேனென்று கூசாமற் பேசுகிறாய்
வலைஞனுக்குள்ள தோர்மதியிதுதானோ
அந்தி : மதியுடையோனென்று மகிழ்ச்சியாய் பேசுகிறாய்
சதி செய்ய நினைத்திருஞ்சண்டிவேளாள.
பூதத் : சண்டித்தனமாயுந்தன் சாலத்தைக்காட்டாதே
பண்டுயிர் மீன்களைப்பறித் திட்ட -
அந்தி : ....................னென்று சொன்ன பரதேசி வேளாள
துள்ளி நீ பேசத்துணிவுனக்கேதோ.
பூதத் : ஏதடா கூனி இறாலைக் கொடுத்து நீ
பாதகமாப் பணம் தேடும்பரவா
அந்த : பரனென்று சொன்ன பரதேசிவேளாள
இரவலர் போல நீயென் கீழிருந்தாய்
பூதத் : கீளிபிறிக்கத் தலைகிழிய மரத்தடியால்
மாளவடி பட்ட வலைஞனியறிவேன்
அந்தி : அறிவேனறிவேனுன்னை யரைகொடிதன்னிலே
குறியாமல் நீ மெத்தக்குளறாதே போடா

முற்று

***

SWAMI ABRAHAM
community centre
SUDAMANKAL-MALLAKAN
Regd. No. J/VC/21/84

SWAMI ABRAHAM
community centre
[illegible]MANKAL-MALLAKAM,
[illegible] J/VC/21/844

அன்பளிப்பு
"E. P. D. P."
யாழ் மாவட்டம்



இந்நூலின் ஆசிரியர் செல்லையா மெற்றாஸ் மயில்
" ராஜபாட்" வேடம் பூண்டு
பொன்விழா கொண்டாடவிருக்கும்
"வேழம்படுத்த வீராங்கனை"
ஆட்ட நாட்டுக் கூத்தில் சின்னவன்னியனாகத்
தோன்றும் அரசதோற்றம்.